# சங்கத் தமிழ்

# 2

நற்றிணை
குறுந்தொகை
ஐங்குறுநூறு

முனைவர் ச. அகத்தியலிங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Cankat Tamil -2 |
| Author | : | Dr.S.Agathiyanlingom<br>(Late) Former Director<br>Centre of Advanced Study<br>in Linguistics<br>Annamali University. |
| Publlisher & © | : | International Institute of Tamil Studies II Main Road, C.I.T.Campus<br>Chennai- 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 641 |
| Language | : | Tamil |
| Edition | : | Second, First 1983 |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy. |
| Printing type used | : | 10 point |
| No. of Pages | : | xx+268 |
| No. of Copies | : | 1000 |
| Price | : | RS.100/-(Rupees Hundred Only) |
| Printed by | : | Bharathi Printers<br>Triplicane, Chennai-5. |
| Subject | : | The Language of Sangam Literature |

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

சங்கத்தமிழ் 2 வினையியல் (தன்மை முன்னிலை விகுதிகள் குறித்த இந்த ஆய்வுநூல் தமிழறிஞர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களால் 1983இல் முதற்பதிப்பாக அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழக வெளியீடு (22) ஆக வெளிவந்தது. இந்நூல் சுமார் 25 ஆண்டுகள் கழித்து எமது நிறுவனத்தால் மறுபதிப்பாக வெளிவருகிறது. சங்கத்தமிழ் வரிசை என எம் நிறுவனப் தொடர்ந்து வெளியிட்டு வருவதில் இந்நூல் பழந்தமிழ் நூல்களின் மொழி நிலையை ஆராய முற்படுவதாக அமைகிறது.

ஒருமை-பன்மை வரிசைமுறை விளக்கும் போது தொல்காப்பியர் தன்மையில் முதலில்

*அவைதாம்,*
*அம், ஆம், எம், ஏம் என்னுங் கிளவியும்*
*உம்மொடு வரூஉங் கடதற என்னும்*
*அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்*
*பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே* **(687)**

என முதலில் பன்மை விகுதிகளைத் தந்து அதன் பின்னரே

*க ட த ற என்னும்*
*அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு*
*என்ஏன் அல்என வரூஉம் ஏழும்*
*தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே* **(688)**

எனக் கூறுவதும், இதே போன்று அஃறிணையிலும்

*அ ஆ வ என வரூஉம் இறுதி*
*அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை* **(701)**

என முதலில் பன்மையைக் கூறி அதன் பின்னர்

*ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த*
*குன்றிய லுகரத்து இறுதி யாகும்* **(702)**

என ஒருமையைக் கூறுவதும் நினைவுகூரத்தக்கது. ஆனால் முன்னிலைப் படர்க்கை ஆண், பெண்பால் போன்றவற்றில்

ஒருமையே முன்னர்க் கூறப்படுகின்றது. இதன் காரணம் விளங்கவில்லை. ஆனால் இந்நூலின்கண் ஒருமை முன்னரும், பன்மை பின்னருமே கூறப்படுகின்றன. (ப.28)

நூலாசிரியர் இதன் காரணம் குறித்து நம்மிடம் முன்வைக்கும் ஆய்வுக்குரிய பொருளாகவே நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. இதுபோன்ற ஆய்வுக்குரிய தேடல்களை முன்வைக்கும் பொறுப்பினை நம் தமிழ்ச் சமூகத்துக்கு முன்வைத்துப் பயணிக்கும் பணியை முன்னோக்கி எடுத்துச்செல்ல வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

இறப்பில்கால இடை நிலைகளுக்குப் பின்னர்ப் பழந்தமிழ் இலக்கியங்களில் சில இடங்களில் வல்வினைகள் (strong verbs) அவற்றை அடுத்துக் குகரம் வர மெல்வினைகள் (weak verbs) கால இடைநிலைகளைக் கொண்டு நிற்கக் காணுகிறோம். 'கொடுப்பேன்' என இருக்கவேண்டிய இடங்களில் கொடுக்குவன்! என வகர ஒற்றுப் பெற்று வரும் இடங்கள் பலவற்றைக் காணமுடியும். இந்நிலைகளைப் பல இலக்கியங்களில் நாம் காணுகிறோம்.

| | | |
|---|---|---|
| கிழக்குவன் | இழந்துவிடுவேன் | ஐங்.269-5 |
| திகைக்குவன் | மறுப்பேன் | ஐங். 118-3 |
| விடுக்குவென் | விடுப்பேன் | அகம். 396-11 |
| பெயர்க்குவென் | பெயர்க்குவேன் | நற். 362-9 |

எனப் பல இலக்கண விதிகளுக்குத் தமிழ் இலக்கியங்களிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் தந்து பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் நூல் முழுதும் விளக்கியுள்ளார். பட்டியல்கள் பல தந்தும் எடுத்துக்காட்டுக்கள் பல தந்தும் இலக்கணத்தை இலக்கியம் பயில்வதுபோல் நூலாக்கியிருப்பது சங்கத் தமிழ் பயில்வோர் இன்புறத்தக்கதும் பயன்கொள்ளத்தக்கதும் ஆவன.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் ***நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்*** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் ***மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்*** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் ***தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.*** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாரதி அச்சகத்தார்க்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# முன்னுரை

"சங்கத் தமிழ்" என்ற வரிசை நூல்களில் இது இரண்டாவது நூல். முதல் நூல் பழந்தமிழ் நூல்களின் வரிசை முறை, குகைத் தமிழ், தொல்காப்பியம், சங்க நூல்கள், சங்கம் மருவிய நூல் கள் ஆகியவற்றின் காலப்பிரிவு, முன் பழந்தமிழ், பின் பழந்தமிழ் என்ற பகுப்பு என்றின்னோரன்ன பலவேறு செய்திகளை விளக்கி நின்ற நிலையில் இந்நூல் பழந்தமிழ் நூல்களின் மொழி நிலையை ஆராய முற்படுவது.

பழந்தமிழில் பலவேறு இலக்கணக் கூறுகள் காணப்படு கின்றன என்பதும் அவ்விலக்கணக் கூறுகளைத் தெள்ளத் தெளிய விரிவாக ஆராய்வதே இவ்வரிசை நூல்களின் நோக்கம் என்பதும் முதல் நூலிலேயே கூறப்பட்டது. இந்நிலையில் தமிழ் வினை முற்றுக்களில் காணப்படும் விகுதிகளே முதன் முதல் ஆராய எடுத்துக்கொள்ளப்படுகின்றன. விகுதிகளும் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றிடத்தனவாய் உள்ளமை நாம் அறிந்த செய்திகளே.

பழந்தமிழ் நூல்களில் காணப்படும் தன்மை, முன்னிலை விகுதிகளின் விளக்கமே இந்நூலின் கருவாக உள்ளது. (படர்க்கை விகுதிகள் பற்றிய ஆய்வு அடுத்து வெளிவந்துள்ள மூன்றாவது நூலில் ஆராயப்படுகின்றது.) இவ்விகுதிகளின் எண்ணிக்கை, அவை வரும் இடங்கள், அவற்றில் காணப்படும் சிக்கல்கள், அவை பற்றித் தொல்காப்பியம் கூறும் கூற்றுக்கள், உரையாசிரி யர்களின் விளக்கங்கள், அவர்களையொட்டிப் பின்னர் வந்த இலக்கணிகளின் எண்ணங்கள், மொழியியல் அறிஞர்களின் ஆய்வில் கண்ட பலவேறு உண்மைகள் இவையெல்லாம் நன்கு விளக்கப்படுகின்றன. பழந்தமிழ் நூல்களில் காணப்படும் இவ் விட விகுதிகளின் போக்கு எவ்வாறு உள்ளது என்பது பற்றிப் பரக்க ஆராயப்படுகின்றது. இவ்வாராய்ச்சி, பழந்தமிழ் மொழி

யின் அமைப்பை நன்குப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளமை இந்நூலைப் படிப்போருக்கு நன்குத் தெரியவரும்.

சங்க இலக்கியங்கள் அனைத்துக்கும் ஒட்டுமொத்தமான பரந்த ஒரு இலக்கணம் இல்லையே என்ற குறையை நீக்கும் ஒரு சிறு முயற்சியாகவே இவ்வரிசை நூல்கள் அமைந்துள்ளன. ஆங்கிலம் போன்ற மொழிகளுக்குக் காணப்படும் விளக்கங்கள் பண்டைத் தமிழ் மொழிக்கும் வேண்டும் என்ற ஆவலில் பூத்த நூல்களே இவ்வரிசை நூல்கள்.

பழந்தமிழ் நூல்களின் மொழி நிலையை விளக்கும்போது பண்டைத் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியச் சூத்திரங் களைச் சுட்டிக் காட்டி வேறுபாடுகள் இருப்பின் அவையும் விளக்கப்படுதல் காணலாம். தொல்காப்பியச் சூத்திரங்களைத் தரும்போது விரிவான விளக்கமோ அல்லது வேறுபாடுகளோ தந்து விளக்கப்படுவதில்லை. அவ்வாறு விளக்குவது இந்நூலின் நோக்கமும் அன்று. ஆங்காங்கே சுட்டிக் காட்டித் தொல் காப்பியம் சொன்னவற்றுள் பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லாதன எவை, புதிதாகத் தோன்றியவை எவை என்று சுருக்கமாக கூறிச் செல்லுவதுதான் நோக்கமேயன்றி விரிவான ஆராய்ச்சியில் செல்லுவது நூலின் நோக்கமன்று.

தொல்காப்பியம் ஒரு பழந்தமிழ் இலக்கணம் என்ற முறை யில் அது பயன்படுத்தப்படுகின்றதே யன்றி, பிற்கால இலக்கண நூல்கள் பற்றி எதுவும் பேசப்படுவதில்லை. பிற்கால இலக் கணங்கள் இடைக்காலத்தில் தோன்றியவை என்பதும் அவற்றைக் கொண்டு பழந்தமிழை ஆராய்வது பொருத்தமற்றது என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கனவாகும். இடைக்காலத் தமிழ் பற்றிப் பேசும் போது இவ்விலக்கணங்களின் கருத்துக்கள் கூறப்படுவதே பொருத்தமாகும்.

தொல்காப்பியச் சூத்திரங்களைச் சுட்டும்போது அவற்றிற்கு உரையாசிரியர்கள் தந்த உதாரணங்களும் இந்நூலில் தரப்படு கின்றன. பழந்தமிழ் நூல்களில் காணப்படும் சொல்லாட்சி யுடன் ஒப்பிட இது உதவும். இதைப்போன்றே நூலுக்குத்

தொடர்புடைய சில அறிஞர்களின் பொருத்தமான கருத்துக் களும் எடுத்தாளப்பட்டுச் சுருக்கமாக ஆராயப்படுகின்றன. இவை விரிவாக ஆராயப்பட்டால் அதுவே ஒரு தனி நூலாகி விடும். உரையாசிரியர்களின் நுண்மாணுழைபுலம் பழந்தமிழ் மொழியாராய்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவும் என்பதை நன்குப் புரிந்து கொள்ள முடிகின்றது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவருமே கைவந்த இலக்கண அறிஞர்கள். அவர்களின் உரையும் விளக்கமும் இன்றேல் இன்று தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்ளுவதே கடினமாக இருந்திருக்கும். அவர்களின் உரைகளால்தான் பொருத்தமான விளக்கமும் சில நேரங்களில் புதிய எண்ணங் களும் நம்மிடையே எழுகின்றன. அவர்கள் வாழ்ந்த காலத்தை யெண்ணும்போது அவர்களின் அறிவும் உழைப்பும் துறைபோகிய இலக்கணக் கோட்பாடுகளும் நம்மை எளிய நிலைக்குக் கொண்டு செல்கின்றன. மொழியியல் கோட்பாடுகள் வளர்ந்துவிட்ட நிலையிலும் அவர்களின் எண்ணங்களும் விளக்கங்களும் நம்மைப் புல்லரிக்க வைக்கின்றன.

உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில் சிறந்து விளங்குகின்றனர். இளம்பூரணர் முதல் உரையாசிரியர் என்ற நிலையில் வெளிப்படையாகத் தோன்றும் பொருளைப் பொருத்தமாக ‘நறுக்கு தெறித்தாற்போல்’ சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார். சிக்கல்கள் எதுவும் இன்றித் தெளிந்த நீரோடை போன்று தெளிவாக உரை எழுதிச் செல்லும் பெற்றி உடையவர் அவர். நூலாசிரியர் கருத்தைத் தெளிவாகச் சுருக்க மாகக் கூறுவது அவருடைய கைவந்த கலையாகும். இது போன்றே குறைந்த அளவில் உதாரணங்களைத் தந்து, ஆனால் அதே நேரத்தில் விளங்க வைத்துச் செல்வதே அவருடைய பண்பாகும்.

சேனாவரையர் நல்ல தமிழ் அறிவோடு வடமொழி அறிவும் பெற்றவர். தருக்க எண்ணமும் எதையும் வினவிச் செல்லும் பண்பும் கொண்டவர். வடமொழிக் கருத்துக்களை ஆங்காங்கு

தந்து விளங்க வைக்கும் ஆற்றல் உடையவர். மேலும் பலவேறு விளுக்களை எழுப்பி, அவற்றிற்கு விடையும் தந்து நிற்பார் அவர். எத்தனையோ நூற்பாக்களில் இவருடைய தடையும் விடையும், கொள்கையும் கோட்பாடுகளும் விளங்கக் காணலாம். ஆரீறு அல்லது மாரீறு போன்ற எண்ணங்கள் இவர் தம் சிந்தனையில் பூத்த செல்வங்களே.

மேலும் இளம்பூரணர் உரையிலிருந்தும் செம்மையாக உரை வகுத்து உதாரணங்கள் தருவார். "னஃகான் ஒற்றே" என்ற நூற்பாவுக்கு இளம்பூரணர் "உண்டான்" போன்ற ஆன் ஈற்று உதாரணங்கள் மட்டுமே தர சேனாவரையர் உண்டனன், உண்டான் போன்ற உதாரணங்களையும் தருகிறார். "னஃகான் ஒற்று" என்பது இவ்விரண்டையும் அடக்கும் என்பதும் வினையியலில் அன், ஆன் எனத் தொல்காப்பியம் கூறுவதும் இளம்பூரணரே வினையியல் சூத்திரத்துக்கு உண்டனன் போன்ற உதாரணங்களைத் தருவதும் இங்கு நினைவு கூரற்பாலன.

நச்சினார்க்கினியர் சேனாவரையரைப் பின்பற்றிச் செல்லி னும் அவரது இலக்கியப் புலமையால் இலக்கியங்களினின்று எடுத்துக்காட்டுக்களைத் தருவதும் உதாரணங்களை அதிகமாகத் தந்து எல்லாச் சூழல்களையும் தருவதும் குறிப்பிடத்தக்கன.

அவருக்குப் பின்னர் வந்த தெய்வச்சிலையாரோ தனக் கெனத் தனியொரு பாணியை வகுத்துக் கொண்டவர். பிற உரையாசிரிகளினின்றும் மாறுபட்டுப் புதுப் பொருள் கண்டு நிற்பார். பல இடங்களில் அவர் காணும் விளக்கங்கள் புதுமை யாகவும் பொருத்தமாகவும் இருக்கும். தன்மையைப் பற்றிக் கூறும் போதும் "தன் வினையைத் தானே உரைப்பது" எனக் கூறுவது நயம் மிக்கது. புதிய கண்ணோட்டத்தில் புதுப் பொருள் காண விழைபவர் இவர்.

இத்தகைய உரையாசிரியர்களின் எண்ணங்களையும் கருத் துக்களையும் ஆங்காங்கே "இலைமறை காயாக"க் குறிப்பிட்டுச் சென்றுள்ளேன். இதுவும் பழந்தமிழ் இலக்கியங்களின் மொழி நிலையை உணரத் துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

நூலின்கண் புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு இலக்கணக்கூறு எத்தனை அளவுக்குப் பலவேறு நூல்களில் இடம்பெற்றுள்ளன என்பதை அடிப்படையாக வைத்து மொழி நிலையைக் காண முயன்றுள்ளேன். அவற்றின் வரவு எண்ணிக்கையும் நூல்களின் காலத்தையும் இலக்கணக் கூறுகளின் வாழ்வையும் வரலாற்றையும் அறுதியிட உதவும் என்பது முன்னரே (அகத்தியலிங்கம், 1983a) விளக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தான் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்படுகின்றது. இவ்வெண்ணிக்கை ஓரளவு தோராயமாக உள்ளனவே யன்றி மிகமிகத் துல்லியமாக இல்லை என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

எல்லாப் பழந்தமிழ் நூல்களினின்றும் எடுத்துக்காட்டுக்கள் தரப்படுகின்றன. ஏதாவது மாற்றம் இருந்தாலன்றி ஒன்றுக்கு மேல் எடுத்துக்காட்டுக்கள் தரப்படுவதில்லை. எடுத்துக்காட்டு கள் குறிப்பிட்ட நூலிலிருந்து தரப்படவில்லையானால் அந் நூலில் எடுத்துக்காட்டு இல்லை எனக் கொள்ளல் வேண்டும்.

முன்னர்க் குறிப்பிட்டபடி பண்டைத்தமிழ் மொழியின் அமைப்பை அறுதியிடுவதே இவ்வரிசை நூல்களின் நோக்கம். எத்தனையோ இலக்கணக் கூறுகள் எத்தனையோ சூழல்களில் வரும் நிலை. இவற்றையெல்லாம் ஓரிரு நூல்களில் சொல்லுவது முடியாத ஒன்றாகும். மேலும் ஒன்றை ஆராயும் போது எத்தனையோ புதிய உண்மைகளும் எண்ணங்களும் பளிச்சிடும். விகுதிகளை ஆராயும்போது அதிலும் குறிப்பாகப் பன்மை விகுதி களை ஆராயும்போது உயர்வு ஒருமை விகுதிகளாக அவை சங்க இலக்கியங்களில் பெருவாரியாக வருதல் கண்டேன் இந்நிலை யில் "உயர்வு ஒருமை" எனத் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் புதிய ஒரு இலக்கணக்கூறு அவசியம் என்பதை உணர்ந்தேன். இந்நிலையில் ஆய்வின் அளவும் அதிகமாகும் நிலை. புதிய எண்ணங்களும் உண்மைகளும் பளிச்சிடும்போது நூலின் அளவும் எண்ணிக்கையும் அதிகமாக லாம். எனவேதான் எத்தனை வரிசை நூல்கள் எனத் திட்ட வட்டமாகக் கூறமுடியாத ஒரு நிலையையும் காண்கின்றேன்.

பண்டைத் தமிழின் அமைப்பினை இன்றைய மொழியியல் அறிவோடு ஆராயும் இம்முயற்சி ஒரு கூட்டு முயற்சியேயாகும். எத்தனையோ அறிஞர்கள் தங்கள் அயராத உழைப்பினாலும் நுண்மாணுழைபுலத்தினாலும் உருவாக்கிய டாக்டர் பட்ட ஆராய்ச்சி ஏடுகள், அவற்றிற்கு உதவியாக அவர்கள் உருவாக்கிய சொல்லட்டவணை ஏடுகள், நூல்கள், அறிஞர்கள் பலரின் ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள் போன்றின்னோரன்ன பல கருவூலங்கள் இம்முயற்சிக்குத் துணையாக நிற்கின்றன. அவை யில்லையெனில் இத்தகைய நூல்கள் உருவாக முடியாது. இவற்றை உருவாக்கிய அறிஞர் பெருமக்களுக்கு என் நன்றி என்றும் உண்டு.

இதைப் போன்றே இந்நூல் உருவாவதற்கு இரவு பகலாக உழைத்த மாணவர்கள் பலர்; உடனுறையாசிரியர்கள் பலர்; எப்போதும் உடன் கலந்துரையாடி கருத்துக்கள் பல தோன்ற வும் தோன்றிய கருத்துக்களுக்குத் தெளிவு பெறவும் இவர்கள் உதவினர். அவர்களின் பெயரையெல்லாம் தரின் அதுவே ஒரு பெரும் பட்டியலாக மாறும்.

எனினும் ஒரு சிலர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் பேராசிரியர் டாக்டர் செ. வை. சண்முகம், டாக்டர் குமாரசாமி ராஜா, டாக்டர் பாலசுப்பிரமணியன், டாக்டர் ஜெயபால் டாக்டர் ஜீன்லாரன்ஸ், டாக்டர் சுசீலா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுக்கு என் நன்றி.

இவர்களைப் போன்றே ஆய்வுமாணவர்கள் பலரும் அவ்வப் போது கைகொடுத்து உதவினர். அவர்களுள் ப. பத்மனாப பிள்ளை, மா. கணேசன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இரவு பகலெனப் பாராது அச்சுக் கூடங்களுக்குச் சென்று அச்சுப் பிரதிகளை அவ்வப்போது திருத்தி உதவினர். இவர்களுக்கும் என் நன்றி. இந்நூலினைக் குறுகிய காலத்தில் நன்கு அச்சிட்டுத் தந்தனர் வேலன் அச்சகத்தினர்; அவர்களுக்கும் என் நன்றி.

இந்நூலின்கண் இடம்பெறும் ஒரு சில கட்டுரைகள் மொழி யியல், புலமை ஆகிய இதழ்களில் முன்னமேயே வந்துள்ளன.

இவற்றை இந்நூலின்கண் இணைத்துக்கொள்ள ஒப்புதல் தந்த ஆசிரியர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்! இது என் தாய்க் கழகம். என்னை ஊட்டி வளர்த்து உருவாக்கிய – நல்லதொரு குடும்பம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்தில் நான் மாண வனாக வந்தபோதே இதன் மடியில் தவழும் பேறு பெற்றேன். ஊட்டி என்னை உருவாக்கியதோடு மட்டுமன்றி என்னை அரவணைத்து ஆசிரியனாக்கிப், பேராசிரியனாக்கி என் இன்றைய நிலைக்கு வளர்த்துப் பெருமைப்படுத்திய பெரும் கழகம் இது. என் வாழ்விலும் வளத்திலும் வேரும் விதையுமாக நின்று வெற்றிக்கு வழிவகுத்துநின்ற காமதேனு. இப்பல்கலைக் கழகத்துக்கு என்றும் என் நன்றியைக் கூறியாக வேண்டும். குறிப்பாக இவ் வரிசை நூல்களை வெளியிட அனுமதி தந்து ஆசீர்வதித்த அண்ணாமலையரசரின் கலைக் கழகத்திற்கு என் நன்றியைக் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதில் உண்மையிலேயே பெருமையும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

புதிய எண்ணங்களுக்கும், புதிய ஆராய்ச்சிக்கும், அறிவுக்கும் தமிழ் நாட்டில் என்றுமே வரவேற்பு உண்டு என்பதை அனு பவத்தால் கண்டவன் நான். என்னால் எழுதப்பட்ட நூல்கள் அனைத்திற்கும் தமிழகம் தந்த ஆதரவு என் நெஞ்சில் நீங்காது வேரூன்றி வித்திட்டு நிற்பதைக் காண்கிறேன். இந்நிலையில் இவ்வரிசை நூல்களும் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் என்ற நம்பிக்கை உண்டு. இந்நம்பிக்கையே நம்மவரின் சொத்து.

# சொற் சுருக்க அடைவு

| | |
|---|---|
| அகம் | அகநானூறு |
| இளம் | இளம்பூரணர் |
| உ. ஒருமை | உயர்வு ஒருமை |
| எழுத்து | எழுத்ததிகாரம் |
| ஐங் | ஐங்குறுநூறு |
| கல் | கல்லாடனார் |
| கலி | கலித்தொகை |
| குறள் | திருக்குறள் |
| குறு | குறுந்தொகை |
| சிலம்பு | சிலப்பதிகாரம் |
| சூத் | சூத்திரம் |
| சேனா | சேனாவரையர் |
| சொல் | சொல்லதிகாரம் |
| தெய்வ | தெய்வச்சிலையார் |
| தொல் | தொல்காப்பியர் |
| நச் | நச்சினார்க்கினியர் |
| நற் | நற்றிணை |
| பத்து | பத்துப்பாட்டு |
| பதி | பதிற்றுப்பத்து |
| பரி | பரிபாடல் |
| புறம் | புறநானூறு |
| பொருள் | பொருளதிகாரம் |
| மணி | மணிமேகலை |

# உள்ளுறை

முன்னுரை

சொற் சுருக்க அடைவு

உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | வினைச்சொல்லும் விகுதிகளும் | 1—19 |
| 1.0 | மொழி அமைப்பு | 1 |
| 1.1 | பண்டைத் தமிழ் மொழியின் அமைப்பு | 1 |
| 1.2 | உருபன் இயல் | 1 |
| 1.2.1 | வினையியல் | 2 |
| 1.2.1.1 | வினைச்சொல் | 2 |
| 1.2.1.1.1 | பொருள் அடிப்படை விளக்கம் | 2 |
| 1.2.1.1.2 | அமைப்பு அடிப்படை விளக்கம் | 4 |
| 1.2.1.2 | இலக்கணக் கூறுகள் | 9 |
| 1.2.1.3 | விகுதிகள் | 9 |
| 1.2.1.3.1 | பதிலிடுபெயர்களும் விகுதிகளும் | 10 |
| 1.2.1.3.2 | தன்மைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும் | 10 |
| 1.2.1.3.3 | முன்னிலைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும் | 11 |
| 1.2.1.3.4 | படர்க்கைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும் | 11 |
| 1.2.1.3.5 | உயர்வு ஒருமைப் பதிலிடுபெயர்கள் | 12 |
| 1.2.1.3.6 | புறநிலைக் கூறு | 13 |
| 1.2.1.3.6.1 | எழுவாயின் பிரதிபலிப்பு: எழுவாயே அடிப்படை | 13 |
| 1.2.1.3.6.2 | சில மொழிகளில் இல்லாமை | 14 |
| 1.2.1.3.6.3 | ஒரே மொழியில் எல்லா இடங்களிலும் இல்லாமை | 15 |
| 1.2.1.3.6.4 | ஒரு சில இடங்களில் மறைந்து விடுதல் | 15 |
| 1.2.1.3.7 | உருபனும் உருபுகளும் | 16 |
| 1.2.1.3.8 | வினைமுற்றும் வினையாலணையும் பெயரும் | 17 |

| | | |
|---|---|---|
| 1.2.1.3.9 | மாற்றுவிதியால் வருவனவே | 18 |
| **2** | **தொல்காப்பியமும் விகுதிகளும்** | **20—29** |
| 2.1 | தொல்காப்பிய நூற்பாக்கள் | 20 |
| 2.2 | கிளவியாக்கமும் வினையியலும் | 21 |
| 2.3 | கிளவியாக்கத்தில் தன்மை முன்னிலை குறிப்பிடாமை | 22 |
| 2.4 | வினையிலா அல்லது பெயரிலா | 23 |
| 2.5 | ஒருமை - பன்மை வரிசை முறை | 27 |
| 2.6 | தொல்காப்பியத்தில் இவ்விகுதிகளின் வரவு | 28 |
| **3** | **பண்டைத் தமிழில் விகுதிகள்** | **30—34** |
| 3.0 | பண்டைத் தமிழ் நூல்கள் | 30 |
| 3.1 | மூவிடம் | 31 |
| 3.2 | ஈரெண் | 31 |
| 3.3 | இருதிணை | 32 |
| 3.4 | ஐம்பால் | 32 |
| 3.5 | வினைச்சொல்லில் விகுதிகள் | 34 |
| **4** | **தன்மை ஒருமை** | **35—80** |
| 4.0 | தன்மையும் தன்மை ஒருமையும் | 35 |
| 4.0.1 | தன்மை ஒருமைப் பதிலிடுபெயர்கள் | 35 |
| 4.0.2 | பழந்தமிழ் தன்மை ஒருமை விகுதிகளும் தொல்காப்பியமும் | 36 |
| 4.0.3 | தொல்காப்பியப் பயிற்சி | 36 |
| 4.0.4 | பெரும்பான்மை விகுதி | 36 |
| 4.1 | விகுதிகள் | 37 |
| 4.1.1 | -ஏன் | 37 |
| 4.1.1.1 | உரையாசிரியர்கள் | 37 |
| 4.1.1.2 | சூழல்கள் | 38 |
| 4.1.1.2.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 39 |
| 4.1.1.2.2 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 39 |
| 4.1.1.2.2.1 | ககர இடைநிலைக்குப் பின்னர் | 40 |
| 4.1.1.2.3 | நிகழ்கால இடைநிலை -கின்று- க்குப் பின்னர் | 41 |
| 4.1.1.2.4 | -டு- எதிர்மறைக்குப் பின்னர் | 41 |

| | | |
|---|---|---|
| 4.1.1.2.4.1 | எதிர்மறையும் கால இடைநிலைகளும் | 42 |
| 4.1.1.2.5 | -ஆத்-, -அல்-, -இல்- ஆகிய எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர் | 42 |
| 4.1.1.2.5.1 | இறந்தகால எதிர்மறை | 43 |
| 4.1.1.2.6 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 45 |
| 4.1.1.2.7 | வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர் | 46 |
| 4.1.2 | -என் | 47 |
| 4.1.2.1 | உரையாசிரியர்கள் | 48 |
| 4.1.2.2 | சூழல்கள் | 49 |
| 4.1.2.2.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 50 |
| 4.1.2.2.2 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 50 |
| 4.1.2.2.3 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 51 |
| 4.1.2.2.4 | -அல்- எதிர்மறைக்குப் பின்னர் | 52 |
| 4.1.2.2.5 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 52 |
| 4.1.2.2.6 | வினையாலணையும் பெயர் விகுதி -ø-க்குப் பின்னர் | 52 |
| 4.1.3 | -அல் | 53 |
| 4.1.3.1 | உரையாசிரியர்கள் | 53 |
| 4.1.3.2 | சூழல் | 54 |
| 4.1.3.2.1 | இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர் | 54 |
| 4.1.3.3 | எதிர்மறையா ? எதிர்ப்பதமா ? | 55 |
| 4.1.4 | -கு | 55 |
| 4.1.4.1 | உரையாசிரியர்கள் | 56 |
| 4.1.4.2 | சூழல்கள் | 56 |
| 4.1.4.3 | தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் | 57 |
| 4.1.4.3.1 | காலம் | 60 |
| 4.1.4.3.2 | தோற்றமும் மாற்றமும் | 60 |
| 4.1.4.3.2.1 | சுப்பிரமணிய சாஸ்திரி | 60 |
| 4.1.4.3.2.2 | மீனாட்சிசுந்தரன் | 61 |
| 4.1.4.3.3 | வினையெச்சமா ? | 61 |
| 4.1.5 | -அன் | 64 |
| 4.1.5.1 | உரையாசிரியர்கள் | 64 |
| 4.1.5.1.1 | -அல், -அன் | 64 |

| | | |
|---|---|---|
| 4.1.5.2 | சூழல்கள் | 66 |
| 4.1.5.2.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 67 |
| 4.1.5.2.2 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 67 |
| 4.1.5.2.3 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 67 |
| 4.1.5.2.4 | -அல்-, -இல்- எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னர் | 68 |
| 4.1.5.2.5 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 69 |
| 4.1.5.3 | -அன் விகுதியின் தோற்றம் | 69 |
| 4.1.6 | -ø (-இசின்) | 71 |
| 4.1.6.1 | தொல்காப்பியம் | 71 |
| 4.1.6.2 | மூன்றிடம் | 72 |
| 4.1.6.3 | அசைச்சொல் | 72 |
| 4.1.6.4 | -ø | 72 |
| 4.2 | முடிபு | 73 |
| 4.3 | பட்டியல்கள் | 75 |
| **5** | **தன்மைப் பன்மை** | **81-141** |
| 5.0 | தன்மையும் தன்மைப் பன்மையும் | 81 |
| 5.0.1 | தன்மைப் பன்மைப் பதிலிடுபெயர்கள் | 81 |
| 5.0.2 | பழந்தமிழ்த் தன்மைப் பன்மை விகுதிகளும் தொல்காப்பியமும் | 83 |
| 5.0.3 | தொல்காப்பியப் பயிற்சி | 83 |
| 5.0.4 | பெரும்பான்மை விகுதி | 84 |
| 5.1 | விகுதிகள் | 84 |
| 5.1.1 | -எம் | 84 |
| 5.1.1.1 | உரையாசிரியர்கள் | 85 |
| 5.1.1.2 | சூழல்கள் | 86 |
| 5.1.1.2.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 86 |
| 5.1.1.2.2 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 87 |
| 5.1.1.1.3 | -ø- எதிர்மறைக்குப் பின்னர் | 89 |
| 5.1.1.2.4 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 90 |
| 5.1.1.2.5 | வினையாலணையும் பெயர் விகுதி -ø-க்குப் பின்னர் | 91 |
| 5.1.2 | -அம் | 91 |

| | | |
|---|---|---|
| 5.1.2.1 | சூழல்கள் | 93 |
| 5.1.2.2.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 93 |
| 5.1.2.2.2 | இறந்தகால இடைநிலை -இன்- னிற்குப் பின்னர் | 94 |
| 5.1.2.2.3 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 94 |
| 5.1.2.2.4 | -அல்-, -இல்-, எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னர் | 97 |
| 5.1.2 2.5 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 98 |
| 5.1.2.2.6 | வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர் | 98 |
| 5.1.3 | -எம் | 99 |
| 5.1.3.1 | உரையாசிரியர்கள் | 99 |
| 5.1.3.2 | சூழல்கள் | 101 |
| 5.1.3.2.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 102 |
| 5.1.3.2.2 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 102 |
| 5.1.3.2.3 | இறப்பில்கால இடைநிலைக்குப் பின்வர் | 102 |
| 5.1.3.2.4 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 103 |
| 5.1.4 | -ஆம் | 103 |
| 5.1.4.1 | உரையாசிரியர்கள் | 103 |
| 5.1.4.2 | சூழல்கள் | 104 |
| 5.1.4.2.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 105 |
| 5.1.4.2.2 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 105 |
| 5.1.4.2.3 | -Ø- எதிர்மறைக்குப் பின்னர் | 105 |
| 5.1.4.2.4 | வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர் | 106 |
| 5.1.5 | -ஓம் | 106 |
| 5.1.5.1 | உரையாசிரியர்கள் | 106 |
| 5.1.5.2 | சூழல்கள் | 107 |
| 5.1.5.2.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 107 |
| 5.1.5.2.2 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 108 |
| 5.1.5.2.3 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 108 |
| 5.1.5.2.4 | வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர் | 108 |
| 5.1.6 | -கும் | 108 |

| | | |
|---|---|---|
| 5.1.6.1 | உரையாசிரியர்கள் | 109 |
| 5.1.6.2 | சூழல் | 109 |
| 5 1.6.2.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 110 |
| 5.1.7 | -இகும் | 110 |
| 5.1.7.1 | சூழல் | 110 |
| 5.1.7.1.1 | செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் பின்னர் | 110 |
| 5.1.8 | -தும் | 111 |
| 5.1.8.1 | உரையாசிரியர்கள் | 112 |
| 5.1.8.2 | சூழல் | 112 |
| 5.1 8 2.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 112 |
| 5.1.9 | -டும் | 112 |
| 5.1.9 1 | உரையாசிரியர்கள் | 112 |
| 5 1 9.2 | சூழல் | 112 |
| 5.1.9.2.1 | ணகர ஈற்று வினையடிக்குப் பின்னர் | 113 |
| 5.1.10 | -றும் | 113 |
| 5.1.10.1 | உரையாசிரியர்கள் | 113 |
| 5.1.10.2 | சூழல் | 113 |
| 5.1.10.2 1 | லகர. னகர ஈற்று வினையடிகளுக்குப் பின்னர் | 113 |
| 5.2 | முடிபு | 114 |
| 5.3 | உளப்பாட்டுத் தன்மையும் விலக்கீட்டுத் தன்மையும் | 115 |
| 5.3.1 | தொல்காப்பியமும் உரையாசிரியர்களும் | 116 |
| 5.3.2 | இடைக்கால இலக்கணங்கள் | 116 |
| 5.3.3 | பழந்தமிழ் இலக்கியப் பயிற்சி | 119 |
| 5.3 3.1 | யாம் பதிலிடுபெயரும் பல்வேறு விகுதிகளும் | 119 |
| 5.3 3.1.1 | யாம் ... ... -ஏம் | 119 |
| 5.3.3.1.2 | யாம் ... ... -எம் | 120 |
| 5.3.3.1.3 | யாம் ... ... -அம் | 120 |
| 5.3 3.1.4 | யாம்- ... ... -ஆம் | 121 |
| 5.3.3.1.5 | யாம் ... ... -கு | 121 |
| 5.3.3.1.6 | யாம் பதிலிடுபெயரும் -கும், -டும், -தும் -றும் விகுதிகளும் | 122 |

5.3.3.1.6.1 யாம் ... ... -கும் 122
5.3.3.1.6.2 யாம் ... ... -தும் 122
5.3.3.1.6.3 யாம் ... ... -றும் 123
5.3.3.2 யாங்கள் பதிலிடுபெயரும் பல்வேறு விகுதிகளும் 123
5.3.3.2.1 யாங்கள் ... ... -தும் 123
5.3.3.2.2 யாங்கள் ... ... -அம் 123
5.3.3.2.3 யாங்கள் ... ... -ஏம் 123
5.3.3.3 முற்றெச்சங்கள் 123
5.3.3.3.1 -அம் ... ... -அம் 124
5.3.3.3.2 -அம் ... ... -ஆம் 124
5.3.3.3.3 -ஏம் ... ... -ஏம் ... ... -ஏம் ... ... -தும் 124
5.3.3.3.4 -ஏம் ... ... -அம் 124
5.3.3.3.5 -ஏம் ... ... ஏம் ... ... -அம் 124
5.3.3.3.6 -அம் ... ... ஏம் 125
5.3.3.3.7 -எம் ... ... -அம் 125
5.3.3.3.8 -ஏம் ... ... -தும் 125
5.3.3.3.9 -அம் ... ... -றும் 125
5.3.3.3.10 -எம் ... ... -ஏம் 125
5.3.3.3.11 -அம் ... ... -தும் 125
5.3.3.3.12 -தும் ... -ஏம் 125
5.3.3.4 நாம் பதிலிடுபெயரும் பல்வேறு விகுதிகளும் 126
5.3.3.4.1 நாம் ... -அம் 126
5.3.3.4.2 நாம் ... ... -ஆம் 126
5.3.3.4.3 நாம் ... ... -எம் 126
5.3.3.4.4 நாம் ... ... -தும் 126
5.3.3.4.5 நாம் ... ... -றும் 127
5.3.3.4.6 நாம் ... ... -ஓம் 127
5.3.3.4.7 நாம் ... ... மோ 127
5.3.3.5 இலக்கிய உரையாசிரியர்கள் 127
5.3.3.6 முடிபு 129
5.4 பட்டியல்கள் 131

6 உயர்வு ஒருமை 143-162
6.0 உலக மொழிகளில் உயர்வு ஒருமை 143

| | | |
|---|---|---|
| 6.1 | தமிழில் உயர்வு ஒருமை | 143 |
| 6.2 | உயர்வு ஒருமை பற்றித் தொல்காப்பியம் | 145 |
| 6.3 | பழந்தமிழ் நூல்களில் உயர்வு ஒருமை | 146 |
| 6.3.1 | புறமும் அகமும் | 146 |
| 6.3.2 | பலவேறு இலக்கணக்கூறுகளில் உயர்வு ஒருமை | 147 |
| 6.3.2.1 | இயற்பெயர் | 147 |
| 6 3.2.1.1 | ஆர் விகுதியும் ரகர வொற்றும் | 150 |
| 6.3.2.1.2 | பலர்பால் பெயர் விகுதிகளும், உயர்வு ஒருமையும் | 153 |
| 6.3.2.2 | பொதுப்பெயர் | 154 |
| 6.3.2.3 | முறைப்பெயர் | 156 |
| 6.3.2.4 | பதிலிடுபெயர்கள் | 156 |
| 6.3.2 4.1 | தன்மை | 159 |
| 6.3.2.4.2 | முன்னிலை | 160 |
| 6.3.2.4.3 | படர்க்கை | 161 |
| 6.3.2.5 | வினைமுற்று | 161 |
| 6.3.2.6 | வினையாலணையும் பெயர் | 162 |
| 6.3.2.7 | ஏவல் வினை | 162 |
| **7** | **தன்மை உயர்வு ஒருமை** | **163—187** |
| 7.0 | பழந்தமிழில் தன்மை உயர்வு ஒருமை | 163 |
| 7.0 1 | பதிலிடுபெயர்கள் | 163 |
| 7.0 2 | வினைமுற்று | 165 |
| 7.1 | விகுதிகள் | 166 |
| 7.1.1 | -ஏம் | 166 |
| 7.1.1.1 | சூழல்கள் | 166 |
| 7.1.1.1.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 167 |
| 7.1.1.1.2 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 167 |
| 7.1.1.1.3 | -Ø- எதிர்மறைக்குப் பின்னர் | 167 |
| 7.1.1.1.4 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 167 |
| 7.1.1.1.5 | வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர் | 167 |
| 7.1.2 | -அம் | 168 |
| 7.1.2.1 | சூழல்கள் | 168 |

7.1.2.1.1 -அன்- சாரியைக்குப் பின்னர் 168

7.1.2.1.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் 168

7.1.2.1.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் 169

7.1.2.1.4 -அல்-, -இல்- எதிர்மறை விகுதிகளுக்குப் 169 பின்னர் 169

7.1.2.1.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் 169

7.1.2.1.6 வினையாலணையும் பெயர் விகுதி -∅- க்குப் பின்னர் 170

7.1.3 -எம் 170

7.1.3.1 சூழல்கள் 170

7.1.3.1.1 -அன்- சாரியைக்குப் பின்னர் 170

7.1.3.1.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் 170

7.1.3.1.3 இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர் 170

7.1.4 -ஆம் 171

7.1.4.1 சூழல்கள் 171

7.1 4.1.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் 171

7.1.4.1.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் 171

7 1.4.1.3 -∅- எதிர்மறைக்குப் பின்னர் 171

7.1.5 -கும் 171

7.1.5.1 சூழல் 171

7.1.5.1.1 வினையடிகளுக்குப் பின்னர் 172

7.1.6 -இகும் 172

7.1.6.1 சூழல் 172

7 1.6.1.1 செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் பின்னர் 172

7.1.7 -தும் 172

7.1.7.1 சூழல் 172

7.1.7.1.1 வினையடிகளுக்குப் பின்னர் 172

7.1.8 -டும் 172

7.1.8.1 சூழல் 172

7.1.8.1.1 வினையடிகளுக்குப் பின்னர் 173

| | | |
|---|---|---|
| 7.1.9 | -றும் | 173 |
| 7.1.9.1 | சூழல் | 173 |
| 7.1.9.1.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 173 |
| 7.1.10 | -ஓம் | 173 |
| 7.1.10.1 | சூழல் | 173 |
| 7.1.10.1.1 | இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 173 |
| 7.1.10.1.2 | இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர் | 173 |
| 7.2 | முடிபு | 173 |
| 7.3 | பட்டியல்கள் | 174 |
| 7.4 | உயர்வு ஒருமை வரும் இடங்கள் | 182 |
| **8** | **முன்னிலை ஒருமை** | **188—216** |
| 8.0 | முன்னிலையும் முன்னிலை ஒருமையும் | 188 |
| 8.0.1 | முன்னிலை ஒருமைப் பதிலிடுபெயர்கள் | 188 |
| 8.0.2 | முன்னிலை ஒருமை விகுதிகளும் தொல்காப்பியமும் | 189 |
| 8.0.3 | முன்னிலையும் ஏவலும் | 189 |
| 8.0.4 | தொல்காப்பியப் பயிற்சி | 191 |
| 8.0.5 | பெரும்பான்மை விகுதி | 191 |
| 8.1 | விகுதிகள் | 192 |
| 8.1.1 | -ஐ | 192 |
| 8.1.1.1 | உரையாசிரியர்கள் | 193 |
| 8.1.1.2 | சூழல்கள் | 194 |
| 8.1.1.2.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 194 |
| 8.1.1.2.2 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 195 |
| 8.1.1.2.3 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 195 |
| 8.1.1.2.4 | -அல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர் | 196 |
| 8.1.1.2.5 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 197 |
| 8.1.1.2.6 | வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர் | 197 |
| 8.1.2 | -ஆய் | 198 |
| 8.1.2.1 | உரையாசிரியர்கள் | 199 |
| 8.1.2.2 | சூழல்கள் | 200 |
| 8.1.2.2.1 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 200 |
| 8.1.2.2.2 | பிற இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 200 |

8.1.2.2.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் 201
8.1.2.2.4 -ø- எதிர்மறைக்குப் பின்னர் 202
8.1.2.2.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் 204
8.1.2.2.6 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர் 204

8.1.3 -இ 205
8.1.3.1 தகர ஒற்றும் காலமும் 205
8.1.3.2 உரையாசிரியர்கள் 207
8.1.3.3 சூழல்கள் 207
8.1.3.3.1 தகர இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர் 207
8.1.3.3.2 தகர இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் 208

8.1.4 -ஓய் 208
8.1.4.1 தொல்காப்பியம் 208
8.1.4.2 உரையாசிரியர்கள் 208
8.1.4.3 சூழல்கள் 209
8.1.4.3.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் 209
8.1.4.3.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் 209
8.1.4.3.3 -ஆத்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர் 210
8.1.4.3.4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் 210
8.1.4.3.5 வினையாலணையும் பெயர் விகுதி -ø-க்குப் பின்னர் 210

8.2 பட்டியல்கள் 212

9 முன்னிலைப் பன்மை 217—232
9.0 முன்னிலையும் முன்னிலைப் பன்மையும் 217
9.0.1 முன்னிலைப் பன்மைப் பதிலிடுபெயர்கள் 217
9.0.2 முன்னிலைப் பன்மை விகுதிகளும் தொல்காப்பியமும் 218
9.0.3 முன்னிலையும் ஏவலும் 218
9.0.4 உயர்திணையும் அஃறிணையும் 220
9.0.5 தொல்காப்பியப் பயிற்சி 220
9.0.6 பெரும்பான்மை விகுதி 220
9.1 விகுதிகள் 221
9.1.1 -இர் 221

| | | |
|---|---|---|
| 9.1.1.1 | உரையாசிரியர்கள் | 221 |
| 9.1.1.2 | சூழல்கள் | 222 |
| 9.1.1.2.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 223 |
| 9.1.1.2.2 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 223 |
| 9.1.1.2.3 | வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 223 |
| 9.1.1.2.4 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 224 |
| 9.1.1.2.5 | -அல்-, -ஆ அல்- ஆகிய எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர் | 225 |
| 9.1.1.2.6 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 225 |
| 9.1.1.2.7 | வினையாலணையும் பெயர் விகுதி -ϕ- க்குப் பின்னர் | 226 |
| 9.1.2 | -னர் | 226 |
| 9.1.2.1 | உரையாசிரியர்கள் | 226 |
| 9.1.2.2 | சூழல்கள் | 227 |
| 9.1.2.2.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 227 |
| 9.1.2.2.2 | இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர் | 227 |
| 9.1.2.2.3 | -அல்-, -ϕ- எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர் | 228 |
| 9.1.2.2.4 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 228 |
| 9.1.2.2.5 | வினையாலணையும் பெயர் விகுதி -ϕ- க்குப் பின்னர் | 229 |
| 9.2 | பட்டியல்கள் | 230 |
| 10 | முன்னிலை உயர்வு ஒருமை | 233—243 |
| 10.0 | பழந்தமிழில் முன்னிலை உயர்வு ஒருமை | 233 |
| 10.0.1 | பெயர்களும் பதிலிடுபெயர்களும் | 233 |
| 10.0.1.1 | பெயர்கள் | 233 |
| 10.0.1.2 | பதிலிடுபெயர்கள் | 234 |
| 10.0.2 | வினைமுற்றுகள் | 235 |
| 10.1 | விகுதிகள் | 236 |
| 10.1.1 | -இர் | 236 |

| | | |
|---|---|---|
| 10.1.1.1 | சூழல்கள் | 236 |
| 10.1.1.1.1 | -அன்- சாரியைக்குப் பின்னர் | 236 |
| 10.1.1.1.2 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 237 |
| 10.1.1.1.3 | வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 237 |
| 10.1.1.1.4 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 237 |
| 10.1.1.1.5 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 237 |
| 10.1.1.1.6 | வினையாலணையும் பெயர் விகுதி -∅- க்குப் பின்னர் | 237 |
| 10.1.2 | -ஈர் | 238 |
| 10.1.2.1 | சூழல்கள் | 238 |
| 10.1.2.1.1 | -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் | 238 |
| 10.1.2.1.2 | வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 238 |
| 10.1.2.1.3 | இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் | 238 |
| 10.1.2.1.4 | -∅- எதிர்மறைக்குப் பின்னர் | 239 |
| 10.1.2.1.5 | குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் | 239 |
| 10.1.2.1.6 | வினையாலணையும் பெயர் விகுதி -∅- க்குப் பின்னர் | 239 |
| 10.2 | பட்டியல்கள் | 239 |
| 10.3 | முன்னிலை உயர்வு ஒருமை வரும் இடங்கள் | 242 |
| | பயன்படுத்திய இலக்கிய இலக்கண நூல்கள் | 244 |
| | உதவிய நூல்களும் கட்டுரைகளும் | 247 |
| | பொருளடைவு | 252 |

# 1. வினைச்சொல்லும் விகுதிகளும்

## 1.0 மொழி அமைப்பு

உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று. ஒவ்வொரு மொழியும் வேறு மொழிகளிலிருந்து வேறுபட்டவை. எல்லா மொழிகளும் மனிதனால் பேசப்படுவன ஆயினும் வெவ்வேறான அமைப்புக் களையும் வெவ்வேறான விதிகளையும் கொண்டவை. தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கானது அன்று. இதன் அமைப்பு பிற மொழிகளின் அமைப்பிலிருந்து வேறுபட்டது. இதனை ஒலி இயல் (Phonetics), ஒலியன் இயல் (Phonology), உருபன் இயல் (Morphology), தொடர் இயல் (Syntax) போன்ற எல்லா நிலைகளிலும் காண முடியும்.

## 1.1 பண்டைத் தமிழ்மொழியின் அமைப்பு

மொழிகள் தம்மிடையே அவற்றின் அமைப்பு வேறுபட் டிருப்பதைப் போலவே வளரும் ஓரே மொழியின் அமைப்பும் காலந்தோறும் மாறி வரக் காணலாம். மொழிகள் தம்மிடையே காணப்படும் அளவுக்கு இவ்வேறுபாடுகள் இல்லையாயினும் பல வேறுபாடுகளை ஒரே மொழியின் பலவேறு கால நிலைகளுக் கிடையேயும் காணலாம். தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக் கன்று. பிற மொழிகளைப் போன்று அத்துணை வேறுபாடுகள் இல்லையாயினும் வேறுபாடுகள் பலவற்றை நன்குக் காண முடியும். இந்நிலையில் பண்டைத் தமிழ் மொழியின் அக அமைப்பினை ஆராய்வதே இவ்வரிசை நூல்களின் நோக்கம்.

## 1.2 உருபன் இயல்

முதன் முதல் பண்டைத் தமிழின் உருபன் இயல் இங்கு ஆராயப்படுகின்றது. பண்டைத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள்

தமிழ்ச் சொற்களைப் பாகுபடுத்தும்போது அவற்றைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் (Parts of Speech) பாகு படுத்தினர் என்பதை (காண்க: அகத்தியலிங்கம், 1979) நாம் அறிவோம்.

இச்சொற்களின் அக அமைப்பினை (Internal Structure) ஆராய்வதே தமிழ் உருபன் இயல் அல்லது தமிழ்ச் சொல்லியல் எனப்படும். பெயர்ச்சொற்களின் அக அமைப்பு, வினைச் சொற்களின் அக அமைப்பு போன்ற இவற்றின் அக அமைப்புக்கள் தமிழ் மொழியின் அமைப்பை நன்குக் காட்டுவனவாக அமையும். இவ்வகை அமைப்பு, அமைப்பு மொழியியல் (Structural Linguistics) அடிப்படையில் ஆராயப்படுகின்றது.

### 1.2.1 வினையியல் (Verb Morphology)

தமிழ் வினைச்சொற்களின் அமைப்பு இங்கு ஆராயப் படுகின்றது. தமிழில் காணப்படும் சொல் வகைகளுள் பெயரும், வினையும் மிக முக்கியமானவை. இதனால்தான் தொல் காப்பியரும்

"'சொல்லெனப்படுப பெயரே வினையென்
றாயிரண்டென்ப அறிந்திசினோரே"

என்று கூறிச் சென்றார்.

#### 1.2 1.1 வினைச்சொல் (Verb)

##### 1.2.1.1.1 பொருள் அடிப்படை விளக்கம்

வினைச்சொற்கள் ஒரு செயலினைக் காட்டும் என்பது இலக்கண அறிஞர்களின் கொள்கையாகும். இக்கருத்தினைத் தான் பிளேட்டோ (429–327 B.C.) போன்ற அறிஞர்களும் கொண்டிருந்தனர்.

"'Verbs' were terms which could express action".

(Lyons, 1971:10)

என அவர் கூறியிருப்பது இங்குக் கூறத்தக்கது. வினைச்சொற்கள் பொதுவாகத் தொழிலுடன் தொடர்புடையன என்பது உலக அறிஞர்களின் எண்ணம். இதே எண்ணத்தினைத் தமிழ் இலக்கண அறிஞர்களிடையேயும் காண்கிறோம். இதனால்தான் இவர்கள்

வினைச்சொல்லைத் "தொழிற்சொல்" (தொல். 156), "தொழில்" (தொல். 618) என்றெல்லாம் கூறிச் சென்றனர். தெய்வச்சிலை யாரும் "வினை என்பது தொழிலை உணர்த்தும் சொல்லா தலின்" (தெய்.192) எனக் கூறுவதும் காண்க. தொழிலைக் கூறு முகத்தான் இலக்கண விளக்க ஆசிரியரும்

"பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப் பதுவே" (இ.வி.227)

எனக் கூறிப் போந்தார் எனக் கருதலாம். பல வினைகள் பொருட்புடை பெயர்ச்சியைக் குறிப்பனவே. நட, நகர் போன்ற வினைகள் பொருட்புடை பெயர்ச்சியைக் குறிப்பனதான் எனினும் வேறுபல வினைகள் பொருட்புடை பெயர்ச்சியைக் குறிப்பிடுவதில்லை இந்நிலையில் வினைச்சொல் தொழிலைக் காட்டுவது எனக் கூறுவது ஓரளவுக்கேனும் பொருந்தும் என்று கருதுவர் பலர். நினை, எண்ணு, மற போன்ற வினைகள் புடை பெயர்ச்சியைக் காட்டுவதில்லை. மேலும் சில வினைகள் பொருள் களின் நிலையைக் (State) குறிப்பிடுவனவாக உள்ளன. குளிர், பசி போன்ற வினைகள் இத்தகையனவாகும். எனவே எல்லா வினை களின் பண்பையும் விளக்கும் நிலையில் ஒரு விளக்கத்தைக் காண்பது அத்தனை எளிதன்று. ஜெஸ்பர்சன் (1955:86) போன்ற இலக்கண ஆசிரியர்கள் வினைச்சொல் வேறு சில பண்புகளையும் கொண்டன என்பர்.

"As for their meaning, verbs are what Sweet calls phenomenon words and may be broadly divided into those that denote action (he eats, breathes, kills, speaks, etc.) those that denote some process (he becomes, grows, loses, dies, etc.) and those that denote some state or condition (he sleeps, remains, waits, lives, suffers, etc.) though there are some verbs which it is difficult to include in any one of these classes (he resists, scorns, pleases)".

எனவேதான் பொதுவாக வினைச்சொல் ஒரு தொழிலைக் காட்டுவது எனப் பலர் கூறிப் போந்தனர். இத்தகைய விளக்கம் வினைச்சொற்களின் பொருளை அடிப்படையாகக் கொண்ட தாகும்.

### 1.2.1.1.2 அமைப்பு அடிப்படை விளக்கம்

அமைப்பு அடிப்படையிலும் ஒரு சில விளக்கங்களைத் தந்து நிற்பர் இலக்கண ஆசிரியர்கள். வாக்கியங்களின் பயனிலையாக வருவது வினை என்று கூறுவர் சிலர். பிளேட்டோ தன்னுடைய விளக்கத்தில்

> "Verbs were terms which could express the action or quality predicated"
>
> (Lyons, ibid.p.10)

என்று கூறுவார். அமைப்பு அடிப்படை என்றாலே எல்லா மொழிகளுக்கும் பொருந்த வேண்டும் என்ற நியதி இல்லை. ஒவ்வொரு மொழியும் தனித்தனி அமைப்பைக் கொண்டது. எனவே ஒரு மொழிக்குப் பொருந்துவது இன்னொரு மொழிக்குப் பொருந்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கிரேக்க மொழியைப் பொறுத்தமட்டில் இவ்விளக்கம் பொருந்தலாம். தமிழில்

அவன் கண்ணன்

நான் அண்ணன்

போன்ற வாக்கியங்களில் கண்ணன், அண்ணன் போன்றவற்றையே பயனிலையாகக் கருதுகிறோம். இதை பெயர்ப் பயனிலை என்கிறோம். எனவே பயனிலையாக வருவன அனைத்தும் வினையாக இருக்க வேண்டியதில்லை எனக் கருதலாம். இதே நிலையினைத்தான் வேறுபல விளக்கங்களிலும் காண்கிறோம். பால் காட்டும் விகுதிகளையும், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களைக் காட்டும் விகுதிகளையும் ஏற்று வரும் என்ற விளக்கங்களெல்லாம் இத்தகையனவே.

எனினும் பொதுவாக வினைகள் காலம் காட்டும் தன்மையன என்பதை நாம் அறிவோம். உலக மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளில் காணப்படும் வினைச்சொற்கள் காலம் காட்டி நிற்கின்றன. தனிநிலை மொழிகள் (Isolating) எனக் கருதப்படும் ஒரு சில மொழிகளில் மட்டுமே இப்பண்பு காணப்படுவதில்லை.

எனவேதான் மேனாட்டு அறிஞர்களும் கீழை நாட்டு அறிஞர்களும் காலம் காட்டுதல் வினைச்சொல்லின் பண்பு என எண்ணி அதனை அதன் விளக்கமாகக் கொடுத்துள்ளனர். கிரேக்க இலக்கணியான திரேக்ஸ் (Dionysius Thrax) என்பார்

"The verb is a part of speech without case inflections, admitting inflections of tense, persons and number, signifying an activity or a being acted upon".

(Lyons, ibid. 319)

எனக் கூறிப் போந்தமை உணரத்தக்கது. இந்த விளக்கமே பெரும்பாலான மேனாட்டு இலக்கணிகளால் ஒத்துக் கொள்ளப் பட்ட ஒரு விளக்கம்.

இதே நிலையினைத்தான் கீழை நாட்டு இலக்கணங்களிலும் காண்கிறோம். தொல்காப்பியர்

"வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" (683)

என்ற நூற்பாவில் "வினைச்சொல் வேற்றுமையை ஏற்காது என்றும், காலத்தைக் காட்டும்" என்றும் குறிப்பிடுகிறார். இச்சூத்திரத்துக்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர்கள் இந்நூற்பாவே வினையின் பொது இலக்கணம் உணர்த்துகின்றது எனக்கருதுகின்றனர்.

"உணர்த்தப்படும் வினைச் சொற்கெல்லாம்
பொதுவிலக்கண முணர்த்தியவாறு"

எனச் சேனாவரையரும், அவரைப் பின்பற்றி

"இச்சூத்திரம், வினைச் சொற்கெல்லாம் பொது
இலக்கணம் உணர்த்துகின்றது"

என நச்சினார்க்கினியரும்,

"இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின்
வினைச்சொல் இலக்கணம் பொதுவகையான்
உணர்த்துதல் நுதலிற்று"

எனத் தெய்வச்சிலையாரும் கூறுதல் காண்க. எனவே தொல்காப்பியர் இச்சூத்திரத்திலேயே வினைச்சொல் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தந்து நிற்கிறார் எனக் கருதலாம். இதனால்தான் தொல்காப்பியரும் வினையைக் ''காலக்கிளவி'' (692) எனக் கூறிப் போந்தார்.

பொருள் அடிப்படையில் இது தொழிலைக் குறிக்கும் என்ற விளக்கத்தைத் தரவில்லையே என்ற எண்ணம் நமக்கு எழுவது இயற்கையே. இந்நிலையில்தான் சிலர் வேற்றுமை மயங்கியலில் காணப்படும்

''வினையே செய்வது செயப்படுபொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபயன் ஆக வென்னும்
அன்னமரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட்டென்ப தொழில் முதல் நிலையே''
(தொல். 596)

என்ற சூத்திரத்தின் மூலம் விளக்கம் தந்துள்ளார் எனக் கருதுவர். நன்னூலாரும் இது கருதியே

''செய்பவன் கருவி நிலஞ் செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே''
(நன். 320)

எனக் கூறிப் போந்தார். வினை என்பது மேற்கூறிய ஆறையும் தருவது என்பது அவர் கருத்து. இக்கருத்து பொருந்தாது என்பதைப் பலரும் (கோதண்டராமன், 1972: 205) ஆங்காங்கே விளக்கியுள்ளனர். ஒரு வினைச்சொல் பயனிலையாக வர மேற்கூறிய எட்டும் வரலாம் என்பதே இச்சூத்திரத்தின் பொருள் எனக் கருதலாம். இதனால்தான் நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் மேலே கண்ட சூத்திரம் வேற்றுமைப் பொருள் உணர்த்துகின்றது எனக் கூறி நிற்கின்றனரே அன்றி வினைச்சொல் என்றால் என்ன என்ற விளக்கத்தைத் தந்து நிற்கிறது எனக் கூறவில்லை.

''இது வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் கூறுகின்றது'' (113) என நச்சினார்க்கினியரும், ''எழுவகை

வேற்றுமையிலும் காரக வேற்றுமை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று'' எனத் தெய்வச்சிலையாரும் (109) கூறாநிற்பர். ஆனால் இளம்பூரணரோ இச்சூத்திரம்

''வினைச் சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று''(108) எனக் கூறுவார். இதனால்தான் இவரைப் பின்பற்றும் நன்னூலாரும் (இன்னதற்கு, இதுபயன் ஆகிய இரண்டையும் விடுத்து) ''செய்பொருள் ஆறும் தருவது வினையே'' என வினைக்கு இலக்கணம் கூறுவது போலக் கூறி நின்றார் எனக் கருதலாம்.

தொல்காப்பியருக்கு இது கருத்தாயின் பெயருக்கு இலக்கணம் கூறிய அதே பாணியில் (''பெயரெனப்படுவது'' எனக் கூறியது போன்று) வினைக்கும் ''வினையெனப்படுவது ...'' எனக் கூறியிருக்க மாட்டார்.

மேலும் தொல்காப்பியர் பெயரெச்சம் பற்றிக் கூறும்போதும் இன்னதற்கு, இது பயன் இரண்டையும் விடுத்து

''நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே''

(தொல். 719)

என்ற நூற்பாவில் பெயரெச்சம் கொண்டு முடியும் பெயர்களின் வேற்றுமைத் தொடர்புகளைக் கூறுகிறார். இதற்குக் காரணம் பெயரெச்சங்கள் பெரும்பாலும் இவற்றையே கொண்டு முடிவது தான் (விளக்கம்: கோதண்டராமன், 1972:205இல் காண்க). வினையின் இலக்கணம் முந்திய சூத்திரத்தில் கூறியிருப்பாராயின் அதே இலக்கணம் எச்சங்களுக்கும் பொருந்தும். எச்சங்களும் வினையே.

எச்சத்திற்கு, இன்னதற்கு, இதுபயன் ஆகியவற்றை விடுத்துக் கூறியிருப்பதிலிருந்தே வினையிலக்கணத்தை 'வினையே...'' என்ற சூத்திரத்தில் கூறவில்லை என்றும், அதில் வினையோடு வரும் வேற்றுமைகள் பற்றியே கூறியுள்ளார் என்றும் எண்ணலாம்.

ஆனால் நன்னூலார் இச்சூத்திரத்தை அடிப்படையாக வைத்து இன்னதற்கு, இதுபயன் இரண்டையும் விடுத்து இந்த ஆறு பொருளையே தன்னுடைய சூத்திரத்தில் கொண்டு வினையின் விளக்கம் போலக் கூறியுள்ளார் எனக் கருதலாம்.

ஆனால் நேமிநாதம் தொல்காப்பியத்தை நன்கு புரிந்த நிலையில்தான் எட்டையும் தருவது வினை என்ற விளக்கத்தைக் கொள்ளாமல் வினையை

''இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்கள் ஏற்றும்
குறிப்பும் உருபேற்றல் கூடாத்-திறத்தவுமாய்
முற்றெச்ச மென்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றிடத்து
நிற்கும் வினைச்சொற்கள் தேர்ந்து'' (நேமி. 63)

எனக் கூறி நிற்கிறது. தொல்காப்பியம் கூறிய காலம் ஏற்றல், உருபேலாமை ஆகியவற்றோடு எச்சம், முற்று என்ற பகுப்பையும் கொண்டு மூவகையினதாய் மூன்றிடத்திலும் வரும் எனச் சிறிது விளக்கி நிற்கும்.

இலக்கண விளக்க ஆசிரியர் தொல்காப்பியர் கருத்துடன் ஒன்றி

''வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்
பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப்பதுவே''

(இ.வி. 227)

எனக் கூறியுள்ளமை பொருள் அடிப்படையிலும் இலக்கணம் வகுத்தல் வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே ஆகும். நச்சினார்க்கினியரும் ''தொழிலாவது பொருளினது புடைப் பெயர்ச்சி'' (202) எனக் கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

எனவே இதுகாறும் கூறியவற்றால் தமிழ் இலக்கணங்கள் வினையைப் பொருள் அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் விளக்க முற்பட்டுள்ளன என்பதும் அந்நிலையில் உலக இலக்கணிகளிடம் ஒரு ஒருமைப்பாடு உள்ளது என்பதும் நன்கு விளங்கும்.

### 1.2.1.2 இலக்கணக்கூறுகள் (Grammatical categories)

சொல் வகைகளைப் போலவே மொழிகளில் பலவேறு இலக்கணக்கூறுகளும் உள்ளன. சொற்கள் பலவேறு இலக்கணக்கூறுகளைக் காட்டுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக "வந்தான்" என்ற சொல் வருதல் தொழிலைக் காட்டுவதுடன் அத்தொழில், சொல்லுவதற்கு முன்னால் செய்யப்பட்டது என்றும், அதனைச் செய்தது ஒரு ஆண் என்பதையும் காட்டுகின்றது. எனவே இவ்விரண்டையும் இலக்கணக்கூறுகள் என்கிறோம். பொதுவாக இலக்கணக்கூறுகள் அடிச்சொற்களால் காட்டப்படுவதில்லை. ஒட்டுக்களாலும் பிறவற்றாலும் காட்டப்படும். தமிழ் வினைச் சொற்களில் பலவேறு இலக்கணக்கூறுகளைக் காண்கிறோம்.

பால், காலம், எச்சம், நிபந்தனை, (காண்க: அகத்தியலிங்கம், 1982) போன்ற பலவேறு இலக்கணக்கூறுகளைக் காணலாம். இவையனைத்தும் தமிழ் மொழியில் பெரும்பாலும் ஒட்டுக்களாலேயே காட்டப்படுகின்றன. இவற்றையெல்லாம் காட்டிடப் பலவேறு ஒட்டுக்கள் தமிழ் மொழியில் உள்ளன. எனவேதான் தமிழை ஒரு ஒட்டு மொழி (agglutinative) என்று கூறுகிறோம்.

### 1.2.1.3 விகுதிகள்

தமிழ் வினைச்சொற்களில் காணப்படும் இலக்கணக்கூறுகளில் பால்காட்டும் விகுதிகளும் அடங்கும். உலக மொழிகள் பலவற்றில் இப்பால்காட்டும் விகுதிகளைக் காணலாம். திராவிட மொழிகளில் மலையாளம் நீங்கலாக உள்ள பிற மொழிகள் அனைத்திலும் இவ்விகுதிகள் உள்ளமை கண்கூடு. மலையாள மொழியில் இன்று வினைமுற்றுக்களில் விகுதிகள் காணப்படாவிடினும் வினையாலணையும் பெயர்களில் உள்ளன. பழைய மலையாள மொழியில் இவ்விகுதிகள் இருந்தன என்றும் காலப் போக்கில் மறைந்துவிட்டன என்றும் கருதுவர். இது போன்றே ஒரு சில மொழிகளும் முன்னால் இவ்விகுதிகளைக் கொண்டிருந்தன என்பதும், பின்னர் அவற்றை இழந்து விட்டன என்பதும் அம்மொழிகளின் வரலாற்றைப் படிப்போருக்குத் தெரிய வரும். இதற்குக் காரணம் இவ்விகுதிகள் இன்றியே கருத்துக்களை

உணர்த்த முடிவதுதான் என எண்ணலாம். எடுத்துக்காட்டாக இன்றைய ஆங்கில மொழியில்

He came She came

போன்ற வாக்கியங்களில் விகுதிகள் இல்லை. விகுதிகள் இன்றியே எழுவாயின் உதவியால் வந்தது யார் என்பதை நம் மால் உணரமுடியும். எழுவாய் இல்லாத நிலையில்தான் விகுதி களின் உதவி தேவைப்படுகின்றது.

வந்தான் வந்தாள்

போன்ற சொற்களில் காணப்படும் விகுதிகளால் வந்தது ஆண் அல்லது பெண் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். ஆனால் எழுவாய் இருந்துவிட்டால் விகுதியின் தேவை இல்லாமல் ஆகி விடுகின்றது.

### 1.2.1.3.1 பதிலிடுபெயர்களும் விகுதிகளும்

பொதுவாக வினையில் காணப்படும் விகுதிகள் பதிலிடு பெயர்களைப் பிரதிபலித்து நிற்பவைகளாகவே உள்ளன. தமிழில் காணப்படும் பதிலிடுபெயர்களுக்கும் விகுதிகளுக்கு மிடையே மிகுந்த தொடர்பு இருப்பதைக் காணலாம். தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிடப் பெயர்களை நாம் பிரிப்ப தும், அவற்றையும் பின்னர்த் தன்மை ஒருமை, தன்மைப்பன்மை, முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை எனப் பலவேறு வகை களாகப் பிரிப்பதும் இங்கு நினைவுகூரத்தக்கன. இத்தகைய பிரிவினைக்கும் வினையில் காணப்படும் விகுதிகளுக்குமிடையே ஒரு தொடர்பினைக் காண முடிகிறது.

### 1.2.1.3.2 தன்மைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும்

தன்மையில் ஒருமை, பன்மை எனப் பிரித்துப் பின்னர் பன்மையை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (inclusive plural) என்றும், விலக்கீட்டுத் தன்மைப் பன்மை (exclusive plural) என்றும் பிரிப்பர். இன்றைய தமிழில் நான், நாம், நாங்கள் என்பவை முறையே இவற்றைக் காட்டும் பதிலிடுபெயர் களாகும். பண்டைத் தமிழில் யான், நாம், யாம் என்பவை முறையே இவற்றைக் காட்டும் என்பர்.

"யான் யாம் நாம்என வரூஉம் பெயரும்" (647) என்பது தொல்காப்பியம். இதற்கு உரை எழுதப் போந்த நச்சினார்க் கினியர் "யான் என்னும் தனித்தன்மைப் பெயர் ஒன்றும், யாம் என்னும் படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும், 'நாம்' என்னும் முன்னிலை உளப்பாட்டுத் தன்மைப் பெயர் ஒன்றும்" என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இப்பெயர்களின் பிரதிபலிப்பையே நாம் தன்மை விகுதிகளில் காண்கிறோம்.

தன்மை ஒருமை, தன்மைப் பன்மை விகுதிகள் வினைச் சொல்லில் காணப்படுகின்றன தன்மைப் பதிலிடுபெயர்கள் ஆண், பெண் வேற்றுமை காட்டுவதில்லை. இவற்றைப் போன்றே தன்மை விகுதிகளும் ஆண், பெண் வேற்றுமை காட் டாமல் எண் வேற்றுமையையே காட்டும். தன்மைப் பன்மை யில் (விகுதியில்) உளப்பாட்டுத் தன்மையும் விலக்கீட்டுத் தன்மை யும் சங்ககால இலக்கியங்களில் அழிந்துவிட்ட நிலையைக் காண்கிறோம் (பிரிவு 5. 3). ஆனால் பழந்திராவிட மொழியில் இருந்ததாக எண்ண இடம் உண்டு (இது பற்றிப் பின்னர் விளக்கமாகக் காண்போம்). எனவே பதிலிடுபெயர்கள் எவ்வாறு உள்ளனவோ அவ்வாறே விகுதிகளும் அமைந்துள்ளன எனக் கருதலாம்.

### 1.2.1.3.3 முன்னிலைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும்

தன்மையைப் போன்றே முன்னிலையும் காணப்படுகிறது. முன்னிலையில் ஒருமை, பன்மை என்ற எண் வேற்றுமையைக் காண்கிறோம். நீ, நீர், நீயிர் ஆகிய முன்னிலைப் பெயர்களைப் பிரதிபலிப்பனவாக முன்னிலை விகுதிகளும் உள்ளன. விகுதி யிலும் ஒருமை, பன்மை வேற்றுமையே உள்ளது. ஆண், பெண் வேற்றுமை இல்லை.

### 1.2.1.3.4 படர்க்கைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும்

படர்க்கையில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் பதிலிடுபெயர்களையே தமிழ் மொழியில் காண்கிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் | இவன் | உவன் | — | ஆண்பால் |
| அவள் | இவள் | உவள் | — | பெண்பால் |
| அவர் | இவர் | உவர் | — | பலர்பால் |
| அது | இது | உது | — | ஒன்றன்பால் |
| அவை | இவை | உவை | — | பலவின்பால் |

படர்க்கை வினைகளில் வரும் விகுதிகளும் இவற்றையே பிரதி பலித்து நிற்கின்றன

### 1 2.1.3.5 உயர்வு ஒருமைப் பதிலிடுபெயர்கள்

சில பன்மைப் பெயர்கள் உயர்வு காட்டி நிற்கின்ற நிலையில் அவற்றைப் பிரதிபலித்து நிற்கும் பன்மை விகுதிகளும் உயர்வு ஒருமையைக் காட்டுவனவாக உள்ளமையும் இங்கு நினைவு கூரத்தக்கது. தற்காலத் தமிழில்

| | |
|---|---|
| அவர் வந்தார் | இவர் வந்தார் |
| நீர் வந்தீர் | நீங்கள் வந்தீர்கள் |
| தாங்கள் வந்தீர்கள் | நீர் வாரும் |
| நீங்கள் வாருங்கள் | தாங்கள் வாருங்கள் |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பைக் காட்டும். பண்டைத் தமிழிலும் இத்தகைய உயர்வு ஒருமை விகுதிகளைக் காண முடியும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் வினையில் காணப்படும் விகுதிகள்பெயர்ச்சொற்களில் காணப்படும்திணை, பால்பகுப்பைப் பிரதிபலித்து (பதிலிடுபெயர்களை அடிப்படையாக வைத்து) நிற்பவை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இத்திணையின் பகுப்பும் பதிலிடுபெயரை அடிப்படையாகக் கொண்டது என்பதும் உணரற்பாலது. எனவேதான் விகுதிகள் இவற்றைப் பிரதிபலித்து நிற்கின்றன எனக் கருதுகிறோம்.

எனினும் பதிலிடுபெயர்களில் காணப்படும் எல்லாப் பகுப்பும் வினையில் பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எடுத்துக்காட்டாக அவன், இவன், உவன் என்ற மூன்று பகுப்பு இருப்பினும் (சங்ககாலத் தமிழில்) வினையில் இவை

அனைத்தையும் விகுதிகள் பிரதிபலிப்பதில்லை. அண்மை, சேய்மை, இடைமை என்ற பகுப்பை வினைச்சொல்லில் காண முடிவதில்லை. எல்லாவற்றிற்கும் பொதுவாகவே ஆண்பால் விகுதிகள் உள்ளன.

அவன் வந்தான்/வந்தனன்
இவன் வந்தான்/வந்தனன்
உவன் வந்தான்/வந்தனன்

இதே நிலையினைத்தான் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் விகுதிகளிலும் காண்கிறோம். நீங்கள், தாங்கள் என்ற இரு பெயர்களும் தம்முள் வேற்றுமை உடையவை. ஆனால் அவை ஒரே விகுதியையே எடுக்கும்.

நீங்கள் வந்தீர்கள் தாங்கள் வந்தீர்கள்

எனவே பதிலிடுபெயர்களில் வருவன அனைத்தும் வினையில் பிரதிபலிக்க வேண்டியதில்லை. ஆனால் வினையில் இருக்கும் வேறுபாடுகள் பொதுவாகப் பதிலிடுபெயர்களில் இருக்கும். இதற்கு விதிவிலக்காகத் தான், தாம் என்பது பண்டைத் தமிழில் காணப்படுகின்றன.

### 1.2.1.3.6 புறநிலைக்கூறு

#### 1.2.1.3.6.1 எழுவாயின் பிரதிபலிப்பு: எழுவாயே அடிப்படை

வினையில் காணப்படும் விகுதிகள் அனைத்தும் புறநிலைக் (surface) கூறுகளே. இவ்விகுதிகள் எழுவாயைப் பிரதிபலித்து நிற்பன என்பதும், அவற்றிற்கேற்பவே அமைகின்றன என்பதும் இங்கு உணரத்தக்கன. இவை அனைத்தும் எழுவாய்க்கேற்ப வருபவையாகும். எழுவாயே இவற்றை நிர்ணயிக்கின்றது. எழுவாய் எது என்று தெரிந்த மாத்திரத்திலேயே விகுதியையும் நிர்ணயித்து விடுகிறோம். எழுவாய் ஆண்பால் ஆயின் விகுதியும் ஆண்பாலாக இருக்கும். எழுவாய் பெண்பால் ஆயின் விகுதியும் பெண்பாலாக இருக்கும்.

ஒரு தொழிலைச் செய்வது ஆண்பால் பெயராயின் எந்த வித ஐயப்பாடுமின்றி ஆண்பால் விகுதியை இணைத்து

விடுகிறோம். பெண்பால் ஆயின் பெண்பால் விகுதியை இணைப்போம். எந்த விகுதி என நிர்ணயம் செய்வது எழுவாயே.

கண்ணன் செய்தான் குழலி செய்தாள்

நான் செய்தேன் நீ செய்தாய்

எனவேதான் எழுவாய் அடிப்படையாக (புதைநிலையில்) உள்ளது. அவற்றை ஒட்டியே அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டே வினையில் விகுதிகள் அமைகின்றன என்றும் கூறலாம். இதனால்தான் இவற்றைப் புறநிலைக்கூறு என்று கருதுகிறோம்.

ஒரு இலக்கணக்கூறு இன்னொன்றை நிர்ணயம் செய்யுமாயின் முன்னதைப் புதைநிலைக்கூறு (deep) என்றும் பின்னதைப் புறநிலைக்கூறு (surface) என்றும் கூறலாம்.

### 1.2.1.3.6.2 சில மொழிகளில் இல்லாமை

மேலும் இக்கூறுகள் (விகுதிகள்) எல்லா மொழிகளிலும் காணப்படுவதில்லை. தமிழில் இக்கூறுகள் காணப்பட மலையாள மொழியில் காணப்படுவதில்லை.

நான் வந்தேன் நீ வந்தாய்

அவன் வந்தான் அவள் வந்தாள்

என்றெல்லாம் பலவேறு விகுதிகளுடன் கூறுவதை

{ நான் / நீ / அவன் / அவள் } வந்து

என எந்தவித விகுதியுமின்றிக் கூறிவிடக் காண்கிறோம். எனினும் வந்தது யார் என எழுவாயிலிருந்து அறிந்துகொள்ள முடியும். விகுதிகள் கட்டாயம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எத்தனையோ இன மொழிகளில் இவை இருப்பதில்லை. ஒரே இன மொழிகளிலும் ஒரு மொழியில் இருக்க இன்னொரு மொழியில் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

### 1.2.1.3.6.3 ஒரே மொழியில் எல்லா இடங்களிலும் இல்லாமை

மேலும் ஒரே மொழியிலும் எல்லாவிடங்களிலும் காணப்பட வேண்டியதில்லை.

| | |
|---|---|
| அவன் வரும் | அவள் வரும் |
| அது வரும் | அவை வரும் |

என்பனவற்றில் தனித்தனியாக விகுதிகள் இல்லை என்பதும் எனினும் அவை இலக்கணப் பிழையின்றி உள்ளவை என்பதும் உணரத்தக்கன.

### 1.2.1.3.6.4 ஒரு சில இடங்களில் மறைந்து விடுதல்

ஒரே மொழியிலும் சில காலங்களில் இருந்து மறைந்து விடவும் காணலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களில்

| | |
|---|---|
| அவன் இலன் | அவள் இலள் |
| அவர் இலர் | அது இலது |
| அவை இல | |

என வழங்கியவை இன்று

அவன்<br>அவள்<br>அவர்<br>அது<br>அவை } இல்லை

என வழங்குவது காண்க. இதே நிலையினை மலையாள மொழியிலும் காணலாம். பழைய மலையாள மொழியில் விகுதிகள் இருந்து பின்னர் மறைந்து விட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆனால் எல்லா மொழிகளிலும் எழுவாய் இருக்கும். அதுவே விகுதியை நிர்ணயம் செய்வது. எழுவாய் தெரிந்த மாத்திரத்தில் விகுதி எது என நிர்ணயம் செய்து விடுகிற நிலையில்தான் முன்னதைப் புதைநிலை என்றும், பின்னதைப் புறநிலை என்றும் கூறுகிறோம்.

### 1 2 1.3 7 உருபனும் உருபுகளும்

எழுவாயை அடிப்படையாகக் கொண்டே விகுதி உருபன் களை நிர்ணயிக்கிறோம். எழுவாய் ஆண்பாலாயின் விகுதியில் வருவதும் ஆண்பால் உருபனே. பெண்பாலாயின் பெண்பால் உருபன். பலர்பாலாயின் பலர்பால் உருபன். இதனைக் கீழ் வருமாறு காட்டலாம்.

ஆண்பால் பெயர் வினை → ஆண்பால் பெயர் +
வினை + ஆண்பால் உருபன்

கண்ணன் வந்த் → கண்ணன் வந்த் + ஆன்

உருபன் (morpheme) எது என நிர்ணயம் செய்வது எழுவாயே. ஆனால் உருபுகளை (allomorph) நிர்ணயம் செய்வது எழுவாய் அன்று.

எடுத்துக்காட்டாக, தன்மை ஒருமை வரும்போது விகுதியும் தன்மை ஒருமை உருபனைக் கொண்டு வரவேண்டும். தன்மைப் பன்மையையோ அல்லது பிற உருபனையோ கொண்டு வர முடியாது. நான் என்பது எழுவாய். அதனால் விகுதியும் தன்மை ஒருமையாகவே இருத்தல் வேண்டும். தன்மை ஒருமை உருபுகளாக பண்டைத் தமிழில் -ஏன், -என், -அன், -அல் போன்றவற்றைக் காண்கிறோம். இவற்றுள் எதை எடுப்பது என்பதை நிர்ணயம் செய்வது வினைச் சொல்லில் காணப்படும் பல்வேறு சூழல்களேயன்றி எழுவாய் அன்று. எடுத்துக்காட்டாக -என், -அன் ஆகியவை இறந்த காலத்தைக் காட்டும் இடை நிலைகளுக்குப் பின்னர் -அன்-சாரியை வந்தால்தான் இறந்த காலச் சொற்களில் வரும். இல்லையேல் வராது.

$$\text{வந்த்} + \text{அன்} + \left\{ \begin{array}{c} \text{அன்} \\ \text{என்} \end{array} \right\}$$

இதுபோன்றே -அல் எதிர்காலச் சொற்களில் மட்டுமே வரும்

$$\left\{ \begin{array}{c} \text{வரு} + \text{வ்} \\ \text{கொடுப்} + \text{ப்} \end{array} \right\} + \text{அல்}$$

இதே நிலையைத்தான் பிற விகுதிகளிலும் காண்கிறோம். எனவே உருபனை நிர்ணயிப்பது எழுவாய் என்பதும் (தொடரி

யல்), உருபுகளை நிர்ணயிப்பது வினைச்சொல்லில் காணப்படும் பலவேறு சூழல்கள் (சொல்லியல்) என்பதும் உணரத்தக்கன. இந்நூலின்கண் இத்தகைய சொல்லியல் சூழல்களே விளக்கப் படுகின்றன.

இதே நிலையைத்தான் கால இடைநிலைகள் போன்ற பிற இலக்கணக்கூறுகளிலும் காண்கிறோம். என்ன காலம் என்று நிர்ணயிப்பது வாக்கியத்தில் வரும் நேரக்கிளவிகள் என்பதும், -ந்த்-, -த்-, -இன்- போன்ற இடைநிலைகளில் எதைக் கொள்ளுவது என நிர்ணயிப்பது வினைகளே (verb stem) என்பதும் உணரத்தக்க செய்திகள்.

### 1.2.1.3.8 வினைமுற்றும் வினையாலணையும் பெயரும்

தமிழில் பால்காட்டும் விகுதிகளை வினைமுற்றுக்களிலும், வினையாலணையும் பெயர்களிலும் மட்டுமே காணமுடிகின்றது. பிற வினைக்கூறுகளில் விகுதிகள் வருவதில்லை. முற்றெச்சம் என அழைக்கப்படும் கூறுகளிலும் விகுதிகள் வரக் காண்கிறோம். அவையும் ஒருவகை வினைமுற்றுக்களே.

வந்தான் சென்றான்

என்ற தொடர் வந்து சென்றான் என்று பொருள்பட்டு நிற்பினும் வந்தான் என்பது சொல்லியல் அடிப்படையில் முற்றே. இதே நிலையினைத்தான்

வந்தாள் சென்றாள் வந்தார் சென்றார்

போன்ற தொடர்களிலும் காண்கிறோம்.

பல விகுதிகள் வினைமுற்றுக்களிலும், வினையாலணையும் பெயர்களிலும் வந்தாலும் சில விகுதிகள் வினைமுற்றுக்களில் அதிகமாகவும், இன்னுஞ் சில வினையாலணையும் பெயர்களில் அதிகமாகவும் வரும். -ஓன், -ஒன், -ஓர் ஆகிய ஒட்டுக்கள் வினை முற்றிலும், வினையாலணையும் பெயர்களிலும் வரினும் வினையாலணையும் பெயர்களிலேயே அதிகமாக வருகின்றன.

2

இன்னும் சில ஒட்டுக்கள் வினையாலணையும் பெயர்களில் வருவதில்லை. 'செய்யும்' என்னும் வினைமுற்று முற்றாக வருமேயன்றி வினையாலணையும் பெயராக வருவதேயில்லை. இப்பண்பை வேறு சில ஒட்டுக்களிலும் காணலாம். இவை எல்லாம் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் தன்மையிலும், முன்னிலையிலும் மிகக் குறைவாகவே வினையாலணையும் பெயர்கள் உள்ளன. தன்மை ஒருமை, பன்மை ஆகியவற்றில் பத்துக்கும் குறைவாகவே உள்ளன. முன்னிலையிலும் பன்மையில் குறைவே. ஒருமையில் விளியாகச் சிறிது கூடுதலாக வருகின்றன. ஆனால் படர்க்கையில் அதிகமாக இவை வரும். இதனால் படர்க்கையில் இவை வேறு படுத்தி ஆராயப்பட்டுள்ளன.

### 1.2.1.3.9 மாற்றுவிதியால் வருவனவே

இத்தகைய விகுதிகள் எழுவாய்க்கு ஏற்ப சில விதிகளால் வரும் கூறுகளே. எழுவாய் நிர்ணயிக்கும் நிலையில் அவற்றைச் சில விதிகளால் கொண்டு வருவர் மாற்றிலக்கண ஆசிரியர்கள்.

கண்ணன் நேற்று வந்தான்

என்ற வாக்கியம் கண்ணன் நேற்று வருதலைச் செய்தான் என்ற பொருளில் முதன் முதலாக

கண்ணன் நேற்று வா

என்ற புதைநிலையிலிருந்து

கண்ணன் நேற்று வா + இறந்த காலம்

என்றும், பின்னர்

கண்ணன் நேற்று வா + இறந்த காலம் + விகுதி

என்றும் ஆகிப் பின்னர்

கண்ணன் நேற்று வந்தான்

என ஆகியிருக்கக் காண்கிறோம். எனவே விகுதி, எழுவாய்க்கு ஏற்ப மாற்றுவிதி (transformation) ஒன்றால் வருவதே எனக்

கருதலாம். இதே நிலையைத்தான் பலவேறு கால இடைநிலை களிலும் காண்கிறோம்.

புறநிலையாயினும் இக்கூறுகள் மொழிகளில் முக்கியமான பங்கு வகித்தல் உண்டு. வேண்டாத கூறு எனக் கருதினும் பல மொழிகள் இதனைக் கொண்டிருத்தல் காண்கிறோம். எழுவாய் எது என்று கேட்காவிடினும் ஆண்பால், பெண்பால் என்றெல்லாம் வினையிலிருந்தே அறிந்துகொள்ள முடியும். மொழிகளில் காணப்படும் பல கூறுகள் இப்பண்பினைக் கொண்டவையே. தமிழ் மொழியில் காணப்படும் விகுதிகள், கால இடைநிலைகள் போன்றவை இத்தகையனவே.

மேலும் இத்தகைய மொழிகளில் எழுவாய் புறநிலையில் இல்லாத வாக்கியங்கள் பல இருப்பதற்குக் காரணமும் விகுதிகளே.

| | |
|---|---|
| வந்தேன் | வந்தான் |
| சென்றாள் | சென்றான் |

போன்ற எழுவாய் இல்லாத வாக்கியங்களைக் காணமுடியும். முதலில் எழுவாய் இருந்து பின்னர் விகுதிகள் உண்டாகிப் பின்னால் எழுவாய் மறைந்து விடுவதாலேயே இத்தகைய வாக்கியங்கள் உண்டாகின்றன எனக் கருதலாம்.

யாரோ ஒருவன் வந்த் →
யாரோ ஒருவன் வந்தான் →
வந்தான்

# 2. தொல்காப்பியமும் விகுதிகளும்

## 2.1 தொல்காப்பிய நூற்பாக்கள்

தொல்காப்பியம் பால்காட்டும் விகுதிகள் பற்றிப் பலவேறு இயல்களில் குறிப்பிட்டுச் செல்லும். குறிப்பாகக் கிளவியாக்கம், வினையியல் ஆகிய இயல்களில் இவை பற்றி அதிகமாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. கிளவியாக்கத்தில் ஐந்து சூத்திரங்களும் (488, 489, 490, 491, 492), வினையியலில் பதினைந்து சூத்திரங்களும் இவை பற்றி நேரடியாகப் பேசும்.

கிளவியாக்கத்தில் படர்க்கை விகுதிகள் பற்றியே பேசப் படுகின்றது. முதலில் ஐந்து சூத்திரங்களில் தமிழ்ப் பெயர்ச்சொற் களைத் திணை, பால் அடிப்படையில் பகுத்துப் பின்னர் அவற்றை வினைச்சொல் எவ்வாறு காட்டுகின்றது எனக் கூறும்போது

"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" (488)

போன்ற நான்கு சூத்திரங்களில் இவை பற்றிப் பேசுவார்.

இதைப் போன்றே வினையியலிலும் வினைகளை உயர் திணை வினை, அஃறிணை வினை, விரவுத்திணை வினை (சூத். 686) எனப் பகுத்துப் பின்னர் உயர்திணையைச் சார்ந்த தன்மை வினை, படர்க்கை வினை ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவற்றைக் காட்டும் விகுதிகள் பற்றிக் கூறுவார். உயர் திணையைச் சார்ந்த தன்மை வினை விகுதிகளை மூன்று சூத்திரங்களிலும் (687, 688, 689), ஆண்பால், பெண்பால், பலர்பால் விகுதிகளை மூன்று சூத்திரங்களிலும் (690, 691, 692), ஒன்றன்பால், பலவின்பால் விகுதிகளை இரண்டு சூத்திரங்களிலும் (701, 702), விரவுத்திணையைச் சார்ந்த முன்னிலை விகுதிகளை இரண்டு சூத்திரங்களிலும் (708,709) கூறிச் செல்லுவார். மேலும் 693, 694, 696, 697, 703 ஆகிய சூத்திரங்களும் விகுதிகள் பற்றிப் பேசக் காணலாம்.

## 2.2 கிளவியாக்கமும் வினையியலும்

கிளவியாக்கத்தில் படர்க்கை விகுதிகள் மட்டுமே பேசப்படுகின்றன என்பதும், ஆனால் வினையியலில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இட விகுதிகளும் பேசப்படுகின்றன என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கனவாகும்.

இவை மட்டுமன்றிக் கிளவியாக்கத்தில் உயர்வு ஒருமை (honorific singular) பற்றியும் (சூத்.510) பேசுதல் காணலாம்.

> ''ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
> ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
> வழக்கி னாகிய உயர்சொற் கிளவி
> இலக்கண மருங்கின் சொல்லாறல்ல''

என்ற தொல்காப்பிய நூற்பா இவை "இலக்கண மருங்கின் சொல்லாறல்ல" எனக் கூறிற்று. சங்க இலக்கியங்களில் இத்தகைய உயர்வு காட்டும் விகுதிகள் ஏராளமாக உள்ளன என்பது நினைவுகூரத்தக்கது.

வினையியலிலும், கிளவியாக்கத்திலும் விகுதிகள் பற்றிப் பேசப்படுவது பொருத்தமா என்ற வினாவும் எழுவது இயற்கையே. இதற்குக் காரணம் கூறப் புகுந்த தெய்வச்சிலையார் (சூத்.5), ''அஃதேல் வினையியலுள்ளும், ''அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்-ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே'' (வினைசூ.அ) என ஓதுகின்றாராகலின் ஈண்டுக் கூறுவதற்குக் காரணம் என்னையெனின், "வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் பெயரிற் றோன்று பாலறி கிளவியும் மயங்கல் கூடா'' (சூ.கக) என வழூஉக் காக்கின்றாராகலின் அவை வழுவாமற் கூறுங்கால், அச்சொற்களின் இயல்பு அறிய வேண்டுமென்றே, அதற்காக ஈண்டுத் தோற்றுவாய் செய்தாரென்க. ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் பெயர்ச்சொற்கும், வினைச்சொற்கும் ஈற்றெழுத்துப் பலவுளவாயினும் அவையெல்லாங் கூறாது, னகரவொற்றொன்றனையுங் கூறினமையானும் தோற்றுவாய் செய்தவாறுணர்க. இவ்வுரை முன்வருகின்றவற்றிற்கும் ஒக்கும்.'' எனக் கூறுவது காண்க. இது மட்டுமன்றி வேறொரு

காரணமும் கூறலாம். பெயர்ச்சொற்களை இரு திணை ஐம்பாலாகப் பகுத்த பின்னர் அவற்றை எவ்வாறு தெரிந்து கொள்ளுவது என்ற நிலையிலும் இதனைக் கூற வேண்டிய தாயிற்று எனவும் கொள்ளலாம்.

## 2.3 கிளவியாக்கத்தில் தன்மை முன்னிலை குறிப்பிடாமை

கிளவியாக்கம் தொடர்பு இயைபு பற்றிக் கூறுவது. இந் நிலையில் படர்க்கை மட்டுமன்றித் தன்மையும், முன்னிலையும் பேசப்பட வேண்டும். ஆனால் இவை பற்றிக் கிளவியாக்கம் (தன்மைப் பன்மையில் உயர்திணையும், அஃறிணையும் வந்தால் எவ்வாறு என்பது தவிர, சூத்.43) எதுவும் கூறுவதில்லை. இது பற்றிக் கூறும் சேனாவரையர் (சூத். 11) 'சிறப்புடை பொருளைத் தான் இனிது கிளத்தல்' என்பதால் தன்மை, முன்னிலையையும் கொளல் வேண்டும் என்பார். படர்க்கை சிறப்புடையதால் அது பற்றிப் பேசப்படுகின்றது என்பது அவர் கருத்தாகும். படர்க்கை எத்தனை அளவுக்குச் சிறப்புடையதோ அத்தனை அளவுக்குத் தன்மையும், முன்னிலையும் சிறந்தனவாகும். எனவே இது காரணமாக இருக்க முடியாது. தொல்காப்பியர் முதல் சூத்திரத்தில் பெயர்ச்சொற்களை உயர்திணை, அஃறிணை எனப் பகுத்துப் பின்னர் அவற்றைப் பலவேறு பால்களாகப் பகுத்த நிலையில் அவை பெயர்ச்சொற்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுவனவாக உள்ளன. அப்பெயர்கள் அனைத்தும் படர்க்கை என எண்ணிய நிலையில்தான் படர்க்கைக்குரிய விகுதிகளைத் தந்து சென்றார் எனக் கருதலாம். முன்னிலை, தன்மைப் பதிலிடு பெயர்கள் பற்றி எண்ணாத நிலையில் அவற்றோடு வரும் விகுதிகளையும் அவர் குறிப்பிடவில்லை. உண்மையில் அப்பெயர்ச் சொற்கள் அனைத்தும் படர்க்கையா என்பதும் விவாதத்திற் குரியதாகும். இத்தகைய பெயர்கள் அனைத்தும் இடம் சுட்டாத பெயர்களே அன்றிப் படர்க்கைக்கே உரியன எனக் கூறமுடியாது. படர்க்கைக்கே உரியனவாயின்

நீ கண்ணன் நான் கண்ணன்

போன்ற வாக்கியங்கள் பிழையுள்ளனவாகும்.

ஆனால் பெயரியலில் பெயர்ச்சொற்கள் மட்டுமின்றி எல்லா பதிலிடுபெயர்களும் பேசப்படுகின்றன. இந்நிலையில்தான் அவற்றோடு வரும் விகுதிகள் பற்றி வினையியலில் விரிவாகப் பேசப்படுகின்றது என முடிவு கட்டலாம்.

## 2.4 வினையிலா அல்லது பெயரிலா?

கிளவியாக்கத்தில் கூறப்படும் இவ்விகுதிகள் வினையில் வருவனவா அல்லது வினையிலும், பெயரிலும் வருவனவா என்ற சர்ச்சை இலக்கண அறிஞர்களிடையே உண்டு.

"ஈற்றில்நின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே" (493)

எனத் தெள்ளத் தெளிவாக வினையோடுதான் வரும் என்று தொல்காப்பியர் கூறியபோதிலும் இவை வினையிலும், பெயரிலும் வரும் என்று சில அறிஞர்கள் கருதுவர்.

உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார் ஒழிந்த ஏனைய உரையாசிரியர்கள் அனைவருமே இவை வினையோடுதான் வரும் எனக் கருதுகின்றனர்.

"னஃகான் ஒற்றே......" (488)

என்ற சூத்திரத்திற்கு உதாரணம் கூறப் போந்த இளம்பூரணர் (சூத்.5) உண்டான், கரியன் போன்ற உதாரணங்களைத் தந்து நிற்பார். இது போன்று ளஃகான் ஒற்றுக்கும், "உண்டாள்... கரியள் எனவும் வரும்" என்று கூறுவதோடு "வினையாலும் வினைக் குறிப்பாலும் மகடூவை விளக்கியவாறு அறிக" (இளம்.6) என்று குறிப்பிடுவார்.

இதே போன்று னகர இறுதியைப் பற்றிக் குறிப்பிடும்போதும் "னசர இறுதியாய படர்க்கை வினைமுற்றுச் சொல்லால் உயர் திணை ஆண்பால் உணர்த்தப்படும்" (சூத்.5) என்றும் குறிப் பிடுவார்.

மேலும் பத்தாவது சூத்திரத்தில் "வினையொடு வருமே" எனத் தொல்காப்பியர் ஏன் விதந்து கூறினார் என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையாக "வினையொடு வருமே என்றார்

பெயர்க்கண் திரியவும் நிற்கும், திரியாமையும் நிற்குமாக லான் என்பது. உண்டான் என்றக்கால் திரிவில்லை. கொற்றன் என்பது இருதிணை யொருமைப் பாற்கும் ஏற்கும் என்பது'' என்று கூறுவார். எனவே இளம்பூரணர் இவ்விகுதிகள் அனைத்தும் வினைச்சொல்லிலேயே வந்து நிற்கும் எனக் கருதுவது வெள்ளிடைமலையாகும்.

இவரைப் பின்பற்றியே சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் இத்தகைய உதாரணங்களையே தந்து நிற்பர். இளம்பூரணர் -அன் சாரியைக்குப் பின்னர் வரும் விகுதிக்கு உதாரணம் தராதிருக்க, சேனாவரையர் உண்டனன் போன்ற உதாரணங்களைத் தருவார். இதைப் போன்றே வினைக்குறிப்பிற்கும் கரியான் போன்ற -ஆன் ஈற்றுச் சொற்களையும் தருவார். இத்தகைய வேறுபாடுகளை இவர்களிடையே காணலாமேயன்றி அடிப்படையில் இவை வினையில் வரும் என்பதையே இளம்பூரணரும், சேனாவரையரும், பிறரும் கருதுகின்றனர்.

மேலும் சேனாவரையர் பத்தாவது சூத்திரத்தில் இளம்பூரணரைப் பின்பற்றி ''இவை பெயரொடு வருவழித் திரிபின்றிப் பால் விளக்காமையின் வினையொடு வரும் என்றார்'' என்று கூறுவதுங் குறிப்பிடத்தக்கது.

சேனாவரையரைப் பின்பற்றியே நச்சினார்க்கினியரும் வினை, வினைக்குறிப்பு ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தருவார். சேனாவரையர் கொடுக்கும் அதே உதாரணங்களையே இவரும் தந்து நிற்பார்.

''வினையியலுள் வினைக்கு ஈறு பற்றி ஓதிப் பெயரியலுள் பெயர்கள் தம்மை எடுத்து ஓதினமையாலும், இப் பதினோரீறும் பெயர்க்கண் திரிபுடையவாய் வருதலானும் பெயர்க்கு இவ்வீறுகள் கோடல் ஆகாமை உணர்க'' எனக் குறிப்பிடுவது இவருடைய முடிபைக் காட்டும். அதே நிலையினைத்தான் கல்லாடனாரிடமும் காணுகிறோம்.

ஆனால் தெய்வச்சிலையாரோ இவ்விகுதிகள் வினையிலும், பெயரிலும் வரும் என எண்ணுவார். எனவேதான் இவற்றிற்கு உதாரணம் தரும்போது "உண்டான், உண்ணாநின்றான், உண்பான் இவை வினைச்சொல். கரியன், நெடியன் இவை வினைக்குறிப்பு. பாண்டியன், மாயவன் இவை பெயர்." எனக் கூறுவதிலிருந்து இவை பெயருக்கும் வரும் என எண்ணுவது விளங்கும். இதே போன்றுதான் எல்லா விகுதிகளுக்கும் உதாரணங்களைத் தருவார். எனினும் சில விகுதிகளுக்குப் பெயரில் உதாரணங்கள் தரமுடியாமல் மயங்கி நிற்பதையும் காணலாம்.

"தோற்றந்தாமே வினையொடு வருமே" என்ற அடிக்கு விளக்கம் கூறும் முகத்தான் "தோற்றமாக என்பது "பெரிதாக" என்பது குறித்து நின்றது. எனவே "பெயரொடு வருதல்" சிறுவரவிற்று என்று கொள்ளப்படும்" (சூத்.10) எனக் குறிப்பிட்டுச் செல்லுவார்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோர் இவ்விகுதிகள் வினையொடு வரும் என்றும், தெய்வச்சிலையார் பெயருடனும் வரும் என்றும் கருதுவர் என்று கருதலாம்.

தொல்காப்பியம் முழுதும் ஆராய்ந்து நோக்கின் இவை வினையுடன் வரும் எனக் கருதுவதே பொருந்தும் எனத் தோன்றுகிறது. முன்னர்க் குறிப்பிட்டபடி "வினையொடு வருமே" எனத் தொல்காப்பியர் திட்டவட்டமாகக் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" போன்ற சூத்திரங்களில் காணப்படும் விகுதிகளையே வினையியலில் மீண்டும் தொல்காப்பியர் கூறிச் செல்லுவார். இவ்விகுதிகள் பெயர்களிலும் வரும் எனக் கொண்டால் வினையியலில் கூறியது போலவே பெயரியலிலும் இவ்விகுதிகள் பற்றிப் பேசியிருக்க வேண்டும் தொல்காப்பியர். அல்லது வினையியலிலும் பெயருக்குரிய உதாரணங்களைக் காட்டியாக வேண்டும். அவ்வாறு

காட்ட முடியாத நிலையில் இச்சூத்திரங்கள் வினைச்சொல்லைப் பற்றியே குறிப்பிடுகின்றன எனக் கருதலாம்.

வினைச்சொற்களில் இவ்விகுதிகளை வைத்து அவற்றின் திணை, பாலை நிர்ணயிக்க முடியுமேயன்றி, பெயர்ச்சொல்லில் நிர்ணயிக்க முடிவதில்லை. இளம்பூரணர் குறிப்பிட்டதுபோல் கொற்றன் என்ற சொல் உயர்திணையையும், அஃறிணையையும் குறிக்கும். எனவே திரிபின்றித் திணை, பாலைக் காட்டும் பண்பு வினைச்சொற்களுக்கே உண்டு.

ஒரு சில பெயர்ச்சொற்கள் விகுதியால் திணை, பாலைக் காட்டுவதற்கு முடியுமாயினும் ஆயிரக்கணக்கான பெயர்ச் சொற்கள் எவ்வித விகுதியுமின்றித் திணை, பாலைக் காட்டும். பெயரில் திணை, பாலை அறிவது அவற்றின் விகுதியால் அல்ல என்பதும், அவை காட்டும் பொருளை அடிப்படையாகக் கொண்டது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. அவன் போன்ற சொற்கள் விகுதியால் ஆண்பாலைக் காட்டினும் "அகத்தியலிங்கம்", "மீனாட்சி", "காமாட்சி" போன்ற ஆயிரக் கணக்கான சொற்கள் ஈற்றினால் அல்லது விகுதியினால் திணையைக் காட்டுவதில்லை. இதனால்தான் பெயரியலில்

"இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான" (646)

எனக் கூறிப் போந்தார். இதற்கு உரை எழுதப் போந்த பலவேறு உரையாசிரியர்களும் பலபடக் கூறிச் செல்லுவதைக் காணலாம்.

இளம்பூரணர் அவன், பெண்மகன், சாத்தன் என்ற னகர ஈற்றுச் சொற்களைக் காட்டி இவை முறையே ஆண்பாலையும், பெண்பாலையும், அஃறிணை ஆண்பாலையும் காட்டும் எனக் குறிப்பிடுவார். இதைப்போன்றே பலவேறு பால்களைக் காட்டும் னகர, இகர, உகர ஈறுகளைத் தந்து தன் நிலையை எடுத்துக் காட்டுவார். மேலும் "வினைச்சொற்போல இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து என்னப் பெயர்ச்சொல் ஈறு பற்றியுணர்த்த லாகாமையின், உரியவை உரிய என்றார்" எனக் கூறுவது இங்குக் கருதத்தக்கது. இதே நிலையைத்தான் பிற உரையாசிரியர்

களிடமும் காணலாம். இது பற்றி விளக்கமாக ஆராய்ந்துள்ளார் சண்முகம் (1982).

பெயரோடும் வரும் என்று எண்ணும் தெய்வச்சிலையார் ஈறுகளுக்கு உதாரணம் தரும்போது தடுமாறுகின்ற நிலையைக் காண்கிறோம். பகர இறுதிக்குப் பெயரில் உதாரணம் தர முடியாது "பகர இறுதி அஃறிணைப் பெயராலல்லது வாராது" எனக் கூறுவதும், ஒன்றன்பாலில் அது, ஒன்று, இரண்டு என றகரத்திற்கும், டகரத்திற்கும் எண்ணுப்பெயர்களைத் தந்து நிற்பதும், பன்மை காட்டும் ஆ, வ என்ற விகுதிகளுக்கு யா, வருவ என்பவற்றைக் காட்டுவதும் இவரது தடுமாற்றத்தினை உணர்த்தும். எண்ணுப்பெயர்களில் நான்கு, ஏழு போன்ற கு, ழு இறுதிகளும் உள்ளன என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. இதைப் போன்றே வருவ என்பது வினையடியாக வருவதாகும். இவ்வீறுகள் வினையில் மாத்திரமே வரும் என்று கொண்டால் இத்தகைய தடுமாற்றத்திற்கு இடம் இராது.

## 2.4 ஒருமை-பன்மை வரிசை முறை

வினையியலில் தன்மை, முன்னிலை, படர்க்கை விகுதிகள் பற்றிக் கூறும்போது தன்மையிலும், அஃறிணையிலும் பன்மை விகுதிகளை முதலில் தந்து, பின்னர் ஒருமை விகுதிகளைத் தருவது வியப்பாகவே உள்ளது. தன்மையில் முதலில்

"அவைதாம்,
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" (687)

என முதலில் பன்மை விகுதிகளைத் தந்து அதன் பின்னரே

"க ட த ற என்னும்,
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...

தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே" (688)

எனக் கூறுவதும், இதேபோன்று அஃறிணையிலும்

"அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை" (701)

என முதலில் பன்மையைக் கூறி அதன் பின்னர்

"ஒன்றன் படர்க்கை த ற ட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதியாகும்" (702)

என ஒருமையைக் கூறுவதும் நினைவுகூரத்தக்கது. ஆனால் முன்னிலை, படர்க்கை ஆண், பெண்பால் போன்றவற்றில் ஒருமையே முன்னர்க் கூறப்படுகிறது. இதன் காரணம் விளங்கவில்லை. ஆனால் இந்நூலின்கண் ஒருமை முன்னரும், பன்மை பின்னருமே கூறப்படுகின்றன.

## 2.5 தொல்காப்பியத்தில் இவ்விகுதிகளின் வரவு

தொல்காப்பியம் பால் காட்டும் பலவேறு விகுதிகளைப் பற்றிக் கூறினும் ஒரு சில விகுதிகளே அதன்கண் வந்துள்ளன. தன்மை ஒருமை விகுதிகளாகக் கு, டு, து, று, என், ஏன், அல் என்ற ஏழு விகுதிகளை அது கூறியிருப்பினும் இவற்றுள் எதுவும் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. இது ஒரு குறையோ அல்லது தவறோ அன்று. ஒரு நூலின்கண் சொல்லப் படும் எல்லா இலக்கணக்கூறுகளுமோ அல்லது எல்லா உருபுகளுமோ அந்த நூலில் வரவேண்டிய அவசியம் இல்லை. ஆசிரியர் எழுதுவது முழு மொழிக்குரிய இலக்கணமேயன்றி தம் நூலுக்குரிய இலக்கணமன்று. ஆனால் அவர் நூலில் வந்து அதுபற்றி அவர் தம் நூலில் குறிப்பிடாமல் இருந்தால் அது குற்றமாகும். எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியத்தில் 'கு' வந்து தன்மை ஒருமை விகுதியாக அது குறிப்பிடப்படாமல் இருந்தால் அது ஒரு சிறந்த இலக்கணம் ஆகாது.

எனினும் நம்மால் எழுதப்படும் இலக்கணங்களில் எல்லாவற்றையும் சொல்லிவிட முடிவதில்லை. காரணம் மொழி என்பது பரந்துபட்ட ஒன்று. ஆனால் இலக்கணங்களோ அவ்வாறு இல்லை. அதனால்தான் மொழிகளுக்குப் புதிய புதிய

இலக்கணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. புதுப்புதுக் கொள்கைகள் உருவாக உருவாக மொழிகளில் காணப்படும் சிக்கல்கள் தெளிவாகின்றன. எனவே சிக்கல்கள் நிறைந்த மொழியின் எல்லாப் பண்புகளையும் எந்த இலக்கணமும் முழுமையாகச் சொல்லமுடியாது. பாணினிக்குப் பின்னரும் பல இலக்கணங்கள் சமஸ்கிருத மொழிக்குத் தோன்றியுள்ளன. இதுபோன்றே எத்தனையோ இலக்கணங்கள் ஆங்கில மொழிக்கும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனினும் ஆங்கில மொழியில் உள்ள எல்லா இலக்கணக்கூறுகளுக்கும் முழுமையான விளக்கம் வெளி வந்துவிட்டது எனக் கூறமுடியாது. இலக்கணியின் இலக்கணக் கொள்கைகள் புதிதாக உருவெடுக்கும்போதெல்லாம் புதிய விளக்கங்கள் தோன்றும். எனவே இலக்கணம் எழுதுதல் என்பது ஒரு ஒய்வு ஒழிவு இல்லாத மனித சமுதாயத்தின் செயலே ஆகும். உலகம் உள்ளவரை, அறிவு வளர வளரப் புதிய புதிய இலக் கணங்களும், கொள்கைகளும் வந்துகொண்டே இருக்கும். இந்நிலையில் எந்த இலக்கணமும் அது எந்தக் காலத்தில் எழுதப் பட்டிருந்தாலும் முடிவான முழுமையான இலக்கணம் ஆகாது. இதற்குத் தொல்காப்பியமும் விதிவிலக்கன்று.

# 3. பண்டைத் தமிழில் விகுதிகள்

## 3.0 பண்டைத் தமிழ் நூல்கள்

தமிழ் மொழியின் வரலாற்றினைப் பண்டைத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்று முன்னரே கண்டோம் (அகத்தியலிங்கம், 1983). பிராமிக் கல்வெட்டுக்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் என்று கருதப்படும் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை ஆகியவையும், சங்கம் மருவிய நூல்கள் என்று கருதப்படும் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் பண்டைத் தமிழ்க் காலத்தைச் சார்ந்தவை என்றும், இவற்றுள் பிராமிக் கல்வெட்டுக்கள், தொல்காப்பியம் ஆகியவை தொல்பழந்தமிழ்க் காலப்பகுதியைச் சார்ந்தன என்றும், ஏனையவை பழந்தமிழ்க் காலத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றுள்ளும் சங்க நூல்களில் பரிபாடல், கலித்தொகை நீங்கிய ஏனைய இலக்கியங்கள் முன்பழந்தமிழ்க் காலப்பகுதியைச் சார்ந்தவை என்றும், பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை பின்பழந்தமிழ்க் காலத்தைச் சார்ந்தவை என்றும் குறிப்பிடப்பட்டது.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பலவேறு இலக்கணக்கூறுகளில் எண், திணை-பால் விகுதியும் ஒன்றாகும். அவையும் முன்னர்க் குறிப்பிட்டபடி பலவேறாக உள்ளன. தன்மை ஒருமை, தன்மைப் பன்மை, தன்மை உயர்வு ஒருமை, முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை, முன்னிலை உயர்வு ஒருமை, ஆண்பால், பெண்பால், பலர்பால், படர்க்கை உயர்வு ஒருமை, ஒன்றன்பால், பலவின்பால் எனப் பிரிவுபட்டு நிற்பதைக் காண்கிறோம்.

### 3.1 மூவிடம்

பண்டைத் தமிழ் வினைகள் அதிலும் குறிப்பாக முற்று வினைகள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங் களைச் சுட்டுவனவாக உள்ளன. இவ்விடப் பகுப்பு முன்னர்க் குறிப்பிட்டபடி பதில்டுபெயர்களை அடிப்படையாகக் கொண் டவை ஆகும். இப்பதிலிடுபெயர்கள், பேசுவோன், கேட்போன், பிறர் என்ற அடிப்படையிலேயே அமைகின்றன. பேசுவோனைக் குறிப்பது தன்மை என்றும், யாரிடம் பேசுகிறோமோ அல்லது நாம் பேசுவதைக் கேட்போர் யாரோ அவரைக் குறிப்பது முன்னிலை என்றும், பிறரைக் குறிப்பது படர்க்கை என்றும் சொல்லப்படும். இப்பிரிப்பின் அடிப்படையிலேயே பதிலிடுபெயர் கள் அமைந்துள்ளன. இதனால்தான் இவற்றைச் சிலர் மூவிடப் பெயர்கள் என அழைத்தனர் (வரதராசன், 1983:156).

பேசுவோனைக் குறிப்பது தன்மை என்றும், யாரிடம் பேசுகிறோமோ அவனைக் குறிப்பது முன்னிலை என்றும், பிறரைக் குறிப்பது படர்க்கை என்றும் அழைக்கப்படும்.

| | |
|---|---|
| யான் வந்தேன் | தன்மை |
| நீ வந்தாய் | முன்னிலை |
| அவன் வந்தான் | படர்க்கை |

### 3.2 எண்

பலவேறு பிறமொழிகளைப் போலவே தமிழ் மொழியிலும் எண் (number) பகுப்பைக் காண்கிறோம். பிற திராவிட மொழி களைப் போன்றே தமிழும் ஒருமை (singular), பன்மைப்(plural) பகுப்பைக் கொண்டுள்ளது. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடச் சொற்களிலும் ஒருமை, பன்மைப் பகுப்பைக் காணமுடியும்.

| | |
|---|---|
| யான் வந்தேன் | தன்மை ஒருமை |
| யாம் வந்தேம் | தன்மைப் பன்மை |
| நீ வந்தாய் | முன்னிலை ஒருமை |
| நீயிர் வந்தீர் | முன்னிலைப் பன்மை |
| அவன் வந்தான் | படர்க்கை ஒருமை (ஆண்பால்) |
| அவள் வந்தாள் | படர்க்கை ஒருமை (பெண்பால்) |

| | |
|---|---|
| அவர் வந்தார் | படர்க்கைப் பன்மை (உயர்திணை) |
| அது வந்தது | படர்க்கை ஒருமை (அஃறிணை) |
| அவை வந்தன | படர்க்கைப் பன்மை(அஃறிணை) |

## 3.3 இருதிணை

மேலே காட்டிய உதாரணங்களில் தன்மை, முன்னிலை ஆகிய இடச்சொற்கள் எந்தவிதத் திணைக் குறியீடுமின்றி நிற்கப் படர்க்கைச் சொற்களோ உயர்திணை, அஃறிணை என்றும், ஆண்பால், பெண்பால் என்றும் கூறப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதற்குக் காரணம் தன்மையும், முன்னிலையும் எண் பகுப்பு மட்டுமே காட்டி நிற்கப் படர்க்கைச் சொற்கள் அதோடு திணைப் பகுப்பையும் கொண்டுள்ளமைதான். படர்க்கைச் சொற்கள் எண் காட்டுவதோடு திணையையும் காட்டி நிற்கின்றன.


எண், திணை ஆகியவற்றுள் திணையே முதல் பகுப்பு. இதுவே பின்னர் ஒருமை, பன்மை என்று எண் பகுப்பு பிரிவுபடக் காண்கிறோம் (பார்க்க: சண்முகம், 1982). படர்க்கைப் பெயர்கள் எல்லாம் முதலில் உயர்திணை, அஃறிணை என்றும், பின்னர் அவை ஒருமை, பன்மை என்றும் பிரிவுபட்டு நிற்கும்.

## 3.4 ஐம்பால்

ஐம்பால் என இலக்கண அறிஞர்கள் குறிப்பிட்டுச் செல்வது நாம் அறிந்த செய்தி. ஐம்பால் என்பது ஐந்து பிரிவு எனப் பொருள்படும். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவையே இவை. ஒருமை, பன்மைப் பகுப்பின் பின்னர் பெயர்கள் பல பால்களாகப் பிரிவுபட்டு நிற்கின்றன.

| | |
|---|---|
| அவன் சாத்தன் | ஆண்பால் |
| அவள் சாத்தி | பெண்பால் |
| அவர் நாடார் | பலர்பால் |
| அது எருது | ஒன்றன்பால் |
| அவை பறவை | பலவின்பால் |

இவ்வாறு பலபடப் பிரிவு பட்டு நிற்கும் வகைப்பாட்டினைக் கீழ்வருமாறு காணலாம்.


இடம்
தன்மை
முன்னிலை
படர்க்கை
ஒருமை
பன்மை
ஒருமை
பன்மை
உயர்திணை
அஃறிணை
ஒருமை
பன்மை (பலர்பால்)
ஒருமை (ஒன்றன் பால்)
பன்மை (பலவின் பால்)
ஆண்பால்
பெண்பால்

## 3.5 வினைச்சொல்லில் விகுதிகள்

மேலே கூறிய பிரிவுகளையே தமிழ் வினைமுற்றுக்களும் பிரதிபலித்து நிற்கின்றன. வினைமுற்றுக்கள் இப்பிரிவினைக் காட்டும் விகுதிகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. இவற்றை வைத்துக்கொண்டு தமிழ் வினைமுற்றுக்களைப் பாகுபடுத்துவது பொருத்தமில்லையாயினும் இவற்றைப் பிரதிபலித்து நிற்கின்றன எனக் கூறுவதில் தவறு எதுவும் இல்லை. இந்நிலையில்தான் தமிழ் வினைமுற்றுக்களில்

| | |
|---|---|
| தன்மை ஒருமை | தன்மைப் பன்மை |
| முன்னிலை ஒருமை | முன்னிலைப் பன்மை |
| ஆண்பால் (ஒருமை) | பெண்பால் (ஒருமை) |
| பலர்பால் | அஃறிணை ஒருமை |
| | அஃறிணைப் பன்மை |

ஆகியவற்றைக் காட்டும் விகுதிகளைக் காண்கிறோம்.

இவை தவிர உயர்வு ஒருமை விகுதிகளும் உள்ளன என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களிலும் உயர்வு ஒருமை காணப் படுகின்றது. பன்மை விகுதிகளே உயர்வு ஒருமையையும் சுட்டுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் இவை ஏராளமாகக் காணக்கிடக்கின்றன.

# 4. தன்மை ஒருமை

## 4.0 தன்மையும் தன்மை ஒருமையும்

பேசுபவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடுவதே தன்மை எனப் படும். இதனை ஆங்கிலத்தில் 'First person' என அழைப்பர். பேசுபவன் இன்றிப் பேச்சு நிகழ்வதில்லை. எனவேதான் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து 'First person' என அழைத்தனர் எனக் கருதலாம். பேசுபவன் ஒருவனையே குறித்து வருமானால் அது தன்மை ஒருமை எனப்படும். "தன்வினையைத் தானே உரைப்பது" என்பார் தெய்வச்சிலையார்.

### 4.0.1 தன்மை ஒருமைப் பதிலிடுபெயர்கள்

தன்மைப் பதிலிடுபெயர்கள் எண் மட்டுமே காட்டும். பால் காட்டுவதில்லை. யான், நான் ஆகியவை தன்மை ஒருமைப் பதிலிடுபெயர்கள். இவற்றுள் யான் என்பது பழமையானது. நான் என்பது பின்னர்த் தோன்றியது. இவை ஒருமையை (எண்) மட்டுமே காட்டிநிற்கும். பால் காட்டுவதில்லை. எனவேதான் இவற்றைப் பிரதிபலிக்கும் தன்மை விகுதிகளும் எண் காட்டுமேயன்றிப் பால் காட்டுவதில்லை. இந்நிலை பிற எல்லா விகுதிகளுக்கும் பொருந்தும். பதிலிடுபெயர்கள் எந்த எந்தப் பண்புகளைக் காட்டி நிற்குமோ அந்தந்தப் பண்புகளை விகுதி களும் காட்டி நிற்கும் என்பதை முன்னரே கண்டோம்.

'யான்' என்ற தன்மைப் பதிலிடுபெயர் எழுவாயாக நிற்க அதைப் பிரதிபலித்துதான் தன்மை ஒருமை விகுதிகள் வினைச் சொல்லில் வரும்.

யானோ தேறேன் யான் தெளியேன் குறு 21-5

போன்றவற்றில் இதனைக் காணலாம். 'யான்' மறைந்து நிற்கும் நிலையிலும் தன்மை ஒருமை விகுதிகளைக் காணமுடியும்.

### 4.0.2 பழந்தமிழ் தன்மை ஒருமை விகுதிகளும் தொல்காப்பியமும்

பழந்தமிழில் -ஏன், -என், -அல், -கு, -அன், -∅ (-இசின்) ஆகிய விகுதிகள் (பட்டியல் 1) தன்மை ஒருமை விகுதிகளாகப் பயன்படுகின்றன. தன்மை ஒருமையினைக் கூறவந்த தொல்காப்பியம்

> "க ட த ற என்னும்
> அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொ(டு)
> என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
> தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே" (688)

எனக் கூறும். தொல்காப்பியம் -அன் விகுதி பற்றி எதுவும் கூறவில்லை. எனினும் பத்துப்பாட்டு, பரிபாடல் தவிர அனைத்துப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் இவ்விகுதி காணப் படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும் (பட்டியல் 1). இதுபற்றி உரையாசிரியர்கள் பலபடக் கூறுவர். இது பற்றி -அன் உருபின் கீழ் காண்க.

### 4.0.3 தொல்காப்பியப் பயிற்சி

ஏழு தன்மை ஒருமை விகுதிகளைக் கூறிச்செல்லும் தொல்காப்பியத்தில் -∅ (-இசின்) ஈறு மட்டுமே வந்துள்ளது.

நுவன்றிசின் தொல் 102

### 4.0.4 பெரும்பான்மை விகுதி

மேலே கூறிய விகுதிகளில் -ஏன் விகுதியே பழந்தமிழ் இலக்கியங்களில் அதிகமாக வரக் காண்கிறோம். பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இவ்விகுதி மிகவும் பெரும்பான்மையாக உள்ளது. இதே நிலையினை இடைக்காலத் தமிழிலும் காணமுடியும்.

| | -ஏன் | பிற விகுதிகள் | | -ஏன் | பிற விகுதிகள் |
|---|---|---|---|---|---|
| பதி | 3 | 30 | நற் | 61 | 76 |
| ஐங் | 16 | 37 | குறு | 32 | 57 |
| அகம் | 37 | 77 | புறம் | 59 | 105 |

| | -ஏன் | பிற விகுதிகள் | | -ஏன் | பிற விகுதிகள் |
|---|---|---|---|---|---|
| பத்து | 4 | 6 | குறள் | 43 | 13 |
| பரி | 8 | 4 | சிலம்பு | 99 | 27 |
| கலி | 193 | 69 | மணி | 144 | 27 |

பழந்தமிழில் -ஏன், என் ஆகிய இரண்டும் பெருவழக்காக உள்ளன. -ஏன் விகுதியை அடுத்து -என் அதிகமாக வருகின்றது. -ஏன் எதிர்மறையிலும், -என், -அன் சாரியையை அடுத்தும் பெரும்பான்மையாக வரும். இச்சூழலில் இவை துணை நிலை வழக்கில் (complementary distribution) உள்ளன. ஆனால் வேறு பல இடங்களில் இவை இரண்டும் பதில்நிலை வழக்கில் (free variation) வரும்.

### 4.1 விகுதிகள்

#### 4.1.1 -ஏன்

##### 4.1.1.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கான எடுத்துக்காட்டுக்களைத் தரும் இளம் பூரணர் (சூத். 200)

| | |
|---|---|
| உண்டேன் | உண்குவேன் |
| உண்ணாநின்றேன் | |

போன்றவற்றையும், சேனாவரையர் (சூத். 203. 215)

| | |
|---|---|
| உண்டேன் | உண்பேன் |
| உண்ணாநின்றேன் | கரியேன் |

போன்றவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 205, 217)

| | |
|---|---|
| உண்டனேன் | உண்கின்றேன் |
| உண்டேன் | உண்ணாநின்றிலேன் |
| உண்டிலேன் | உண்கின்றிலேன் |
| உண்டேன் அல்லேன் | உண்பேன் |
| உண்ணாநின்றனேன் | உண்குவேன் |
| உண்ணாநின்றேன் | உண்மேனன் |
| உண்கின்றனேன் | கரியேன் |

போன்றவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 196)

| | |
|---|---|
| உண்டேன் | உண்பேன் |
| உண்கின்றேன் | உண்ணேன் |

போன்றவற்றையும் கல்லாடனார் (சூத். 206, 217)

| | |
|---|---|
| உண்டேன் | உண்ணேன் |
| உண்டிலேன் | உண்டேனல்லேன் |
| உண்ணாநின்றேன் | அல்லேன் |
| உண்கின்றேன் | உடையேன் |
| உண்ணாநின்றிலேன் | நிலத்தினேன் |
| உண்கின்றிலேன் | பொன்னன்னேன் |
| உண்பேன் | கரியேன் |
| உண்குவேன் | |

போன்றவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தருவர்.

### 4.1.1.2 சூழல்கள்

பழந்தமிழ் நூல்களில் இவ்விகுதி பலவேறு சூழல்களில் (environments) வருதல் காணலாம்.

1. இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடை நிலைகளுக்குப் பின்னரும்
3. நிகழ்கால இடைநிலை -கின்று- க்குப் பின்னரும்
4. -ழ- எதிர்மறைக்குப் பின்னரும்
5. -ஆத்-, -அல்-, -இல்- ஆகிய எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னரும்
6. பலவேறு குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
7. வினையாலணையும் பெயர் விகுதி -ழ- க்குப் பின்னரும்

வருதல் உண்டு. இந்நிலையினைப் பல்வேறு இலக்கியங்களிலும் நன்குக் காணமுடியும் (பட்டியல் 2).*

---

* வினையாலணையும் பெயர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக வருவதால் பட்டியல்களில் அவை தனியாகத் தரப்படவில்லை.

### 4.1.1.2.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| பெயர்தத்தேன் | மீள்வேனாயினேன் | ஐங் 118-4 |
| நயந்தேன் | விரும்பினேன் | அகம் 260-15 |
| ஈன்றேன் | ஈன்றுபாதுகாத்தேன் | நற் 198-12 |
| உணர்ந்தேன் | உணர்வேன் ஆயினேன் | குறு 297-7 |
| கண்டேன் | கண்டேன் | புறம் 198-10 |
| வந்தேன் | வந்தேன் | பத்து 4-461 |
| மறந்தேன் | மறந்தொழிந்தேன் | பரி 19-60 |
| தங்கினேன் | தங்கினேன் | கலி 93-7 |
| பெயர்ந்தேன் | பெயர்ந்தேன் | குறள் 1187 |
| அறிந்தேன் | அறிந்து கொண்டேன் | சிலம்பு 7-2-4 |
| அஞ்சினேன் | அஞ்சிக் கிடக்கின்றேன் | மணி 24-74 |

எல்லா இலக்கியங்களிலும் -ஏன் காணப்படினும், பதிற்றுப்பத்தில் இறந்தகாலத்திற்குப் பின்னால் காணப்படவில்லை. முன்னர்க் குறிப்பிட்டபடி -ஏன், -ῼ- எதிர்மறையில்தான் அதிகமாக வரும். சங்ககால இலக்கியங்களில் -என் விகுதி -அன்- சாரியைக்குப் பின் அதிகம் வர -ஏன் விகுதி -ῼ- எதிர்மறைக்குப் பின்னர் பெருவழக்காக வரும். எடுத்துக்காட்டாக -ஏன் புறநானூற்றில் இறந்தகாலத்தில் பத்து இடங்களில் வர, -ῼ- எதிர்மறைக்குப் பின்னர் இருபத்தேழு இடங்களில் வரக்காணலாம். குறுந் தொகையில் இந்நிலை 1:4 எனக் காணப்படுகிறது. ஆனால் பரிபாடலில் 4:1 ஆக உள்ளது. இது பற்றிப் பின்னர்க் காண்போம்.

### 4.1.1.2.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உரைப்பேன் | கூறித்தெளிவிக்க முடியும் | பதி 73-17 |
| செல்வேன் | செல்வேன் | அகம் 14-17 |
| தொழுவேன் | தொழுகிற்பேன் | நற் 198-5 |
| அறிவேன் | உணர்கின்றேன் | குறு 352-6 |
| பெயர்வேன் | பெயர்வேன் | புறம் 161-26 |
| அறிவேன் | அறிந்திருப்பேன் | கலி 120-17 |

| | | |
|---|---|---|
| உள்ளுவேன் | கருதாநிற்பேன் | குறள் 1136 |
| தீர்த்தத்துறை படிவேன் | தீர்த்தமாடுவேன் | சிலம்பு 9-38 |
| ஆகுவேன் | ஆகுவேன் | மணி 22-97 |

ஆகிய எடுத்துக்காட்டுக்கள் இறப்பில்கால இடைநிலைகளை யடுத்து இவ்விகுதி வருதலைக் காட்டும். ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு, பரிபாடல் ஆகிய நூல்களில் -ஏன் இறப்பில்கால இடைநிலைகளையடுத்துக் காணப்படாவிடினும், இதற்கெனத் தனியொரு காரணம் எதுவும் கிடையாது. இந்நிலையினைப் பிற இலக்கணக்கூறுகளிலும் காணமுடியும்.

### 4.1.1.2.2.1 ககர இடைநிலைக்குப் பின்னர்

பழந்தமிழில் கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய மூன்று நூல்களிலும் ககரக் கால எழுத்துடன் -ஏன் விகுதி சில இடங்களில் வரக் காண்கிறோம். ககரம் பொதுவாகக் கால எழுத்தாக இலக்கண ஆசிரியர்களால் கருதப்படுவதில்லை.

சிலப்பதிகாரத்தில் நான்கு இடங்களில் -ஏன் விகுதி ககரத்துடன் வருதல் குறிப்பிடத்தக்கதாகும். களைகேன் (15-68), நாடுகேன் (19-69), படர்கேன் (27-104), பெறுகேன் (9-44) ஆகிய சொற்களில் இந்நிலையைக் காண்கிறோம். சிலம்பில் காணப்படுவது போன்றே மணிமேகலையிலும் ஒன்பது இடங்களில் -ஏன் விகுதி ககரத்துடன் வருவதைக் காணலாம். உண்கேன் (10-39), உணர்கேன் (18-156), உரைக்கேன் (12-34,117; 16-113), செய்கேன் (16-36, 25-233), படர்கேன் (17-74), போகேன் (18-171) ஆகிய சொற்கள் ககரத்துடன் வருகின்றன. இந்நிலையில் இதனைப் பின்பழந்தமிழின் ஒரு கூறாகக் கருதலாம். கலித்தொகையிலும் ஆற்றுகேன் (140-14) என்ற சொல் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுள் போகேன் (18-171) என்ற சொல் எதிர்மறையைக் காட்டி நிற்கும். இந்நிலையில் தான் ககரத்தைக் கால எழுத்தாகக் கொள்ளப் பண்டை இலக்கண ஆசிரியர்கள் தயங்கினர் போலும்!

ககரம் தன்மைப் பன்மை விகுதியாகிய -அம் என்பதுடன் பெருவாரியாக வருதல் காணலாம். சேறுகம் (பதி 49-1), ஆடுகம்

(ஐங் 412-4), ஆடுகம் (நற் 63-5), அயர்கம் (குறு 80-3), பாடுகம் (புறம் 32-6), அயர்கம் (பத்து 8 232), ஏத்துகம் (பரி 15-18), பாடுகம் (கலி 41-1), காண்கம் (குறள் 1301), பாடுகம் (சிலம்பு 24-7-4) ஆகிய சொற்கள் இந்நிலையினை நன்றாகக் காட்டும். பழங்கால இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் எழுபதுக்கும் அதிகமான இடங்களில் ககரத்துடன் -அம் வருதலைக் காண முடியும். இந்நிலையில் இதனை ஒரு கால இடைநிலையாகக் கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை எனக் கருதலாம். சேனாவரையர் (சூத். 202) ககர ஒற்றுப்பெறுதல் குறித்துக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. ''பாடுகம், செல்கம் என ஏற்புழிச் சிறுபான்மை ககரவொற்றும் பெறுதலுங் கொள்க'' என்பது சேனாவரையம். நச்சினார்க்கினியர் (சொல். 204) ''இனி, 'அம் ஈறு வருங்கால் அந்தணாளனை நகுகம் யாமே' எனவும், 'பாடுகம் வம்மின் போதுகம்' எனவும், 'பாடுகம் வா வாழி தோழி' எனவும் ககரம் எதிர்காலமும் உணர்த்தி வரும்.'' என்பார்.

### 4.1.1.2 3 நிகழ்கால இடைநிலை -கின்று- க்குப் பின்னர்

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் மணிமேகலையில் மட்டுமே ஒரு இடத்தில் நிகழ்கால இடைநிலை -இன்று- க்குப் பின்னர் -ஏன் விகுதி காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| உறைகின்றேன் | உறைகின்றேன் | மணி 17-68 |

இடைக்காலத் தமிழ் நூல்களான அப்பர் தேவாரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் போன்றவற்றில் நிகழ்கால இடைநிலைச் சொற்கள் அதிகமான எண்ணிக்கையில் வரக்காணலாம்.

### 4.1.1.2.4 -ø- எதிர்மறைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வாரேன் | வந்தேன் இல்லை | பதி 61-11 |
| அறியேன் | அறிகின்றிலேன் | ஐங் 296-4 |
| உணரேன் | உணர்ந்திலேன் | அகம் 48-4 |
| அஞ்சேன் | அஞ்சுகிற்பேன் அல்லேன் | நற் 397-7 |
| இரங்கேன் | வருந்துகின்றேன் இல்லை | குறு 175-5 |

| | | |
|---|---|---|
| கூறேன் | சொல்லேன் | புறம் 139-6 |
| வாரேன் | வருவேன் அல்லேன் | பத்து 9-220 |
| அறியேன் | அறியேன் | பரி 12-63 |
| உண்ணேன் | உண்ணுதலும் செய்யேன் | கலி 23-7 |
| அறியேன் | அறியேன் | குறள் 928 |
| பொறேன் | பொறுக்ககில்லேன் | சிலம்பு 28-174 |
| வாழேன் | வாழ்கிலேன் | மணி 25-153 |

### 4.1.1.2.4.1 எதிர்மறையும் கால இடைநிலைகளும்

முன்னர்க் குறிப்பிட்டதுபோல சங்ககால இலக்கியங்களில் -ஏன் பெரும்பான்மையாக எதிர்மறையில் (-ø-) வருதல் கண்கூடு. ஆனால் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் இந்நிலை மாறிவருதல் உண்டு. கால இடைநிலைக்குப் பின்னர் அதிகமாக வருதலைப் பின்பழந்தமிழின் ஒரு பண்பாகக் கருதுவதில் தவறில்லை.

-ஏன்

| | -ø- எதிர் மறை | கால இடைநிலை | | -ø- எதிர் மறை | கால இடைநிலை |
|---|---|---|---|---|---|
| பதி | 1 | 1 | பரி | 1 | 4 |
| ஐங் | 6 | 6 | கலி | 29 | 116 |
| அகம் | 23 | 6 | குறள் | 11 | 25 |
| நற் | 28 | 14 | சிலம்பு | 21 | 61 |
| குறு | 13 | 12 | மணி | 17 | 100 |
| புறம் | 27 | 14 | | | |
| பத்து | 1 | 1 | | | |

### 4.1.1.2.5 -ஆத்-, -அல்-, -இல்- ஆகிய எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர்

எதிர்மறையில் -ஆத்-, -அல்- ஆகிய இடைநிலைகளுக்குப் பின்னரும் -ஏன் காணப்படுகிறது. -ø- எதிர்மறையே அதிகமாயினும் இந்த எதிர்மறை இடைநிலைகளும் பழந்தமிழில் வருதல் உண்டு. -ஆத்- இடைநிலை ஏழு இடங்களிலும்

(அகம் 1, நற் 1, குறு 1, கலி 2, சிலம்பு 2), -அல்- இடைநிலை பதினொரு இடங்களிலும் (நற் 2, புறம் 2, பத்து 1, கலி 6) வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| வாழலேன் | வாழ்ந்திலேன் | நற் 117-9 |
| உள்ளலேன் | நினைப் பதிலனாயினேன் | புறம் 395-32 |
| ஆற்றலேன் | வருந்தாநின்றேன் | பத்து 8-29 |
| வாழலேன் | வாழேன் | கலி 47-15 |
| அறிகலேன் | அறிந்திலேன் | நற் 206-11 |
| அறிகலேன் | அறிதலைச் செய்யேன் | கலி 62-4 |
| துஞ்சாதேன் | துயிலேன் | அகம் 45-19 |
| துஞ்சாதேன் | துயிலேன் | குறு 6-4 |

இவற்றைப் போன்றே -இல்- இடைநிலையும் எதிர்மறைப் பொருளைக்காட்டும். பிற இலக்கியங்களில் -ஏன் விகுதியுடன் இவ்விடைநிலை வராவிடினும் கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் வருதல் காணலாம்.

| | | |
|---|---|---|
| அறிகிலேன் | அறியேன் | கலி 47-17 |
| காண்கிலேன் | கண்டிலேன் | சிலம்பு 18-12 |
| உரைக்கிலேன் | உரைக்கிலேன் | மணி 27-278 |

### 4.1.1.2.5.1 இறந்தகால எதிர்மறை

மேலும் இறந்தகாலத்தைக் குறிக்கும் வகையில் இது இறந்த கால வினையெச்சத்தின் பின்னர் வருவதைப் பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் காண முடிகிறது. சங்ககால இலக்கியங்களில் திட்டவட்டமாக இறந்த காலத்தைக் குறிப்பிட வேண்டின் 'அல்லேன்' என்ற குறிப்பு வினைமுற்றினைப் பலவேறு வினைமுற்றுக்குப் பின்னர் இணைத்துக் கூறுவது வழக்கம். இந்நிலை சங்ககால இலக்கியங்களில் அதிகமாகக் காணப்படாவிடினும்

மருண்டனென் அல்லேன் பதி 74-23

போன்ற சில இடங்களில் காணலாம். ஆனால் பரிபாடல், கலித் தொகை, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களில்

| | | |
|---|---|---|
| அறிந்திலேன் | அறிந்துகொண்டேன் இல்லையே | பரி 8-60 |
| இழந்திலேன் | இழந்த தன்மை யுடையேன் அல்லேன் | கலி 146-19 |
| கண்டிலேன் | கண்டிலேன் | சிலம்பு 16-209 |
| வைத்திலேன் | வையாது விடுத்தேன் | மணி 29-44 |
| கண்டிலேன் | கண்டிலேன் | மணி 24-52 |
| தெளித்திலேன் | தெளிவித்திலேன் | மணி 22-95 |

என வருதல் காண்கிறோம்.[1] இவ்வாறு இறந்தகால எதிர் மறையைக் காட்டும் நிலை, சிலம்பு, மணிமேகலை காலத் திற்குப் பின்னர்தான் அதிகமாகக் காணப்படுகிறது. தேவார, திருவாசகப் பாசுரங்களில் இத்தகைய சொற்களை அதிகமாகக் காண முடியும். எனினும் காலப்போக்கில் இந்நிலை மறைந்து தற்காலத் தமிழில் முன் இல்லாத ஒரு நிலையைக் காணுகிறோம்.

வரவில்லை — செய்யவில்லை

போன்ற சொற்களையே எதிர்மறைச் சொற்களாகப் பயன் படுத்துகிறோம். இச்சொற்களும் மூன்று காலங்களுக்கும் பயன் படும் நிலையில் உள்ளன.

நான் நேற்று வரவில்லை — நான் நாளை வரவில்லை
நான் இன்று வரவில்லை

---

1. குறுந்தொகை, புறம், குறள் ஆகிய மூன்று இலக்கியங் களிலும்

| | |
|---|---|
| மெலிந்திலள் | குறு 182-7 |
| போர்ப்பித்திலது | புறம் 286-5 |
| கற்றிலன் | குறள் 414 |

ஆகிய மூன்று இடங்களில் படர்க்கையிலும் வரக்காண் கிறோம். மீதி இலக்கியங்களில் இப்பண்பைக் காண முடிவதில்லை.

போன்ற வாக்கியங்கள் இந்நிலையை நன்குக் காட்டும். எனினும் இன்றைய மலையாளத்தில் இறந்தகாலத்திற்கு எனத் தனி எதிர்மறை இருத்தலைக் காணலாம்.

ஞான் வந்நில்லா ஞான் செய்தில்லா

போன்ற வாக்கியங்களில் காணப்படும் எதிர்மறை வினைகள்

நான் வந்திலேன் நான் செய்திலேன்

போன்றவற்றோடு ஒப்ப வைத்து எண்ணற்பாலன இந்நிலையில் இடைக்காலத் தமிழில் வழங்கி வந்த இவ்வெதிர்மறை, மலையாள மொழியில் தொடர்ந்து வாழ, தற்காலத் தமிழில் மறைந்துவிட்டது என நம்பலாம்.

இறந்தகாலத்தைக் காட்டுவது போன்றே பிற காலங்களை யும் இரு வினைமுற்றுக்கள் இணைந்து நின்று காட்டும் நிலையினைச் சங்ககால இலக்கியங்களில் காண்கிறோம்.

விடுக்குவென் அல்லேன் அகம் 396-11

என்ற தொடர் இந்நிலையினைக் காட்டும். காணேன், வாரேன் போன்ற எதிர்மறைச் சொற்களோடு இத்தகைய சொற்களும் இலக்கிய வழக்கில் இருந்தன என நம்பலாம்.

### 4.1.1.2.6 பலவேறு குறிப்புவினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| அல்லேன் | அல்லேன் | பதி 74-23 |
| அல்லேன் | அல்லேன் | ஐங் 66-1 |
| இலேன் | இல்லேன் | அகம் 369-9 |
| (அருள்)இலேன் | அருள்செய்யப் பெறேனாயிரா நின்றேன் | நற் 289-9 |
| உடையேன் | உடையேன் | குறு 230-4 |
| கோலேன் | கோலையுடையேன் | புறம் 72-12 |
| ஒருவனேன் | ஒருவன் | கலி 140-12 |

| | | |
|---|---|---|
| மெய்யேன் | உடம்பையுடையேன் | பத்து 2-68 |
| அல்லேன் | அல்லேன் | பரி 20-82 |
| ஒருவனேன் | ஒருவன் | கலி 140-12 |
| இலேன் | இலேன் | குறள் 1226 |
| உடையேன் | உடையேன் | சிலம்பு 10-59 |
| வேட்கையேன் | அவாவுடையேன் | மணி 11-118 |

ஆகிய உதாரணங்கள் இந்நிலையை நன்குக் காட்டும்.

4.1.1.2.7 **வினையாலணையும் பெயர் விகுதி -ரி-க்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| இறந்தேன் | கடந்துவந்த எனக்கு | ஐங் 328-4 |
| விட்டேன் | விட்டேன் போல | கலி 63-7 |
| தோன்றினேன் | தோன்றின எனக்கு | கலி 139-24 |
| கிடந்தேன் | கிடந்தயான் | குறள் 1187 |
| உற்றேன் | எய்திய என்னோடு | சிலம்பு 9-53 |
| எழுவேன் | எழுந்திருப்பேன் | புறம் 150-8 |
| நீக்குவேன் | தீர்க்குவேன் | கலி 121-3 |
| அலைப்பேன் | அடிப்பேன் | கலி 128-19 |
| வேவேன் | வேகின்ற என்னுடைய | மணி 11-10 |
| ஒன்றேன் | ஒழுகாதேன் | குறு 208-1 |
| அறியாதேன் | அறியாமை உடையேன் | நற் 144-10 |
| வாளேன் | வாய்திறந்து சொல்லேன் | கலி 65-15 |
| அறியாதேன் | மெய்மறந்தேன் | கலி 37-19 |
| தோளேன் | தோளையுடையேன் | அகம் 82-18 |
| நாவினேன் | நாவினேன் | அகம் 356-10 |
| பரிசிலேன் | பரிசிலேன் | புறம் 209-11 |
| நெஞ்சினேன் | நெஞ்சினையுடையயான் | கலி 134-12 |
| அடியேன் | அடியேன் | சிலம்பு 16-113 |
| இயல்பினேன் | தன்மைஉடையேன் | சிலம்பு 21-2 |

| | | |
|---|---|---|
| அறிவினேன் | அறிவாற்றல் | மணி 23-93 |
| ஆயினேன் | உடையேன் | |
| மனத்தேன் | மனத்தையுடையேன் | மணி 9-65 |

### 4.1.2 -என்

இவ்விகுதி ஒருசில இடைக்கால இலக்கியங்களில் வரினும் இதனைப் பழங்காலத் தமிழின் விகுதியாகவே கருதலாம். பழங்காலத் தமிழிலும்கூட பின்பழந்தமிழில் அதிகமாகக் காணப் படுவதில்லை. மேலும் இவ்விகுதியும், -அன் விகுதியும் பதில் நிலை வழக்கில் உள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பழந்தமிழில் இவ்விகுதி பெரும்பாலும் -அன்- சாரியைக்குப் பின்னரே வருகிறது. இவ் -அன்- சாரியையும் -இன்- ஒழிந்த ஏனைய இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் வருதல் கண்கூடு. எனவே -ஏன், -∅- எதிர்மறைக்குப் பின்னரும், -அன், -என் என்பவை கால இடைநிலைகளுக்குப் பின்னரும் பொதுவாக வரும். -ஏன், -என் என்பவற்றின் இப்பண்பினைக் கீழ்வரும் பட்டியல் நன்கு காட்டும்,

| | | -ஏன் | -என் |
|---|---|---|---|
| புறம் | எதிர்மறை | 27 | 3 |
| | காலம் | 14 | 30 |
| அகம் | எதிர்மறை | 23 | 6 |
| | காலம் | 6 | 28 |

ஆனால் மேற்கூறிய விகிதநிலை பின்பழந்தமிழில் மாறி விடக் காண்கிறோம் (பட்டியல் 2 & 3). சிலப்பதிகாரத்தில் -ஏன் விகுதி ஐம்பது இடங்களில் இறந்தகால இடைநிலையோடும், பதினொரு இடங்களில் இறப்பில்கால இடைநிலையோடும் வர, இருபத்தொரு இடங்களில் மட்டுமே எதிர்மறையுடன் வரக் காண்கிறோம். இந்நிலையைத் திருக்குறள், மணிமேகலை ஆகிய நூல்களிலும் காணலாம்.

| | | -ஏன் | -என் |
|---|---|---|---|
| குறள் | எதிர்மறை | 11 | 0 |
| | கால இடைநிலை | 25 | 0 |

| | | | |
|---|---|---|---|
| சிலம்பு | எதிர்மறை | 21 | 0 |
| | கால இடைநிலை | 61 | 4 |
| மணி | எதிர்மறை | 17 | 0 |
| | கால இடைநிலை | 101 | 1 |

பழந்தமிழ்க் காலத்தின் பிற்பகுதியிலேயே -என் விகுதி வழக்கற்றுவிடக் காண்கிறோம். இதனால்தான் வீரசோழியம் -என் (சூத். 78) விகுதிபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. எனினும் உரைக்காரர் -என் விகுதியை -ஏன் விகுதியிலிருந்து தருவிக்கிறார். -பென், -வென் என்பவற்றை முறையே -பேன், -வேன் என்பவற்றிலிருந்து வருவித்துக் கொள்ளுகிறார். இறப்பில் காலத்திற்கு இது பொருந்துமாயினும் இறந்தகாலத்திற்கு இது பொருந்தாது. -என் விகுதி இறந்தகாலத்தில் -அன்- சாரியையோடு வருவதும், -ஏன் விகுதி அதனுடன் வாராமையும் இங்கு உணரத்தக்கது.

-ஏன் விகுதியைப் போலவே இவ்விகுதியும் பலவேறு சூழல்களில் முன்பழந்தமிழ் நூல்களில் வரும் (பட்டியல் 3).

4.1.2.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கான எடுத்துக்காட்டுக்களைத் தரும் இளம்பூரணர் (சூத். 200, 201, 210)

| | |
|---|---|
| உண்டனென் | உண்குவென் |
| உண்ணாநின்றனென் | உடையென் |

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 203, 204, 215)

| | |
|---|---|
| உண்டனென் | உண்குவென் |
| உண்ணாநின்றனென் | கரியென் |

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 205, 206, 217)

| | |
|---|---|
| உண்டனென் | உண்கின்றிலென் |
| உண்டிலென் | உண்பெண் |
| உண்டனெல்லென் | உண்குவென் |

| | |
|---|---|
| உண்ணாநின்றனென் | உண்ணலென் |
| உண்கின்றனென் | கரியென் |

போன்றவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 196)

| | |
|---|---|
| உண்டனென் | உண்குவென் |
| உண்ணாநின்றனென் | |

போன்றவற்றையும், கல்லாடனார் (சூத். 206, 217)

| | |
|---|---|
| உண்டனென் | உண்ணலென் |
| உண்டிலென் | உடையென் |
| உண்ணாநின்றனென் | நிலத்தினென் |
| உண்கின்றனென் | பொன்னன்னென் |
| உண்பென் | கரியென் |
| உண்குவென் | அல்லென் |

போன்றவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தருவர்.

சங்ககாலத் தமிழில் இறந்தகால, இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரே -என் விகுதி பயின்று வந்துள்ளது. ஆனால் நிகழ்கால எடுத்துக்காட்டுக்களையும் எல்லா உரையாசிரியர்களும் தந்து நிற்கின்றனர். இறந்தகால இடைநிலைகளுள் ஒன்றான -இன்- னிற்குப் பின்னர் இவ்விகுதி வருவதைச் சங்க இலக்கிய நூல்களில் பல இடங்களில் காண்கிறோம். உரையாசிரியர்கள் இச்சூழலில் எடுத்துக்காட்டுக்கள் தராமலேயே விட்டுச் சென்றுள்ளனர்.

### 4.1.2.2 சூழல்கள்

1. வினைச்சொல்லில் வரும் -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. இறந்தகால இடைநிலைகளில் ஒன்றான -இன்- னிற்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. எதிர்மறை இடைநிலையாகிய -அல்- லிற்குப் பின்னரும்

5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்

6. வினையாலணையும்பெயர் விகுதி -ρ- க்குப் பின்னரும் வரும்.

4.1.2.2.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

இவ்விகுதி -அன்- சாரியைக்குப் பின்னர் அதிகமாக வந்துள்ளது. புறநானூற்றில் இச்சூழலில் இருபத்துநான்கு இடங்களில் வர, பிற சூழல்களில் பன்னிரண்டு இடங்களில் மட்டுமே இந்நிலையில் வந்துள்ளது. -ஏன் விகுதியும், -என் விகுதியும் துணைநிலை வழக்கில் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| வந்தனென் | வந்தேன் | பதி | 76-9 |
| இரந்தனென் | விண்ணப்பம் கூறுகின்றேன் | ஐங் | 492-4 |
| என்றனென் | என்று கூவினேன் | அகம் | 356-7 |
| வந்தனென் | வந்துளேன் | நற் | 267 8 |
| வந்தனென் | வந்தேன் | குறு | 114 2 |
| கண்டனென் | கண்டேன் | புறம் | 23-17 |
| வந்தனென் | வந்தேன் | பத்து | 2-129 |

பொதுவாக -என் விகுதி -அன்- சாரியையை அடுத்தே இறந்த காலத்தில் வர, அகநானூற்றில் ஒரு இடத்தில் இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் வருதல் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| தொடுத்தென் | பற்றிக்கொண்டேன் | அகம் | 396-1 |

-அன்- சாரியை இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரே காணப்படும். ஆனால் அகநானூற்றில் வகரத்திற்குப் பின்னர் -அன்- வருவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். வகரம் வரினும் இறந்தகாலத்திலேயே பொருள் கூறப்படுவது நினைவு கூரத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| விரைவனென் | விரைந்து வந்தனென் | அகம் | 16 14 |

4.1.2.2.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

இச்சூழலில் -என் விகுதி வருதல் காணலாம். இந்நிலையில் இதுவும், -ஏன் விகுதியும், -அன் விகுதியும் பதில்நிலை வழக்காக உள்ளமை கண்கூடு.

| | | | |
|---|---|---|---|
| எய்தினென் | அடைந்துள்ளேன் | அகம் | 268-14 |
| அஞ்சினென் | அஞ்சினேன் | நற் | 53-1 |
| உள்ளினென் | கருதினேன் | குறு | 99-1 |
| ஏத்தினென் | பாராட்டினேன் | புறம் | 383-5 |
| புல்லினென் | புல்லினேன் | கலி | 62-6 |
| அரற்றினென் | புலம்பினேன் | சிலம்பு | 30-37 |

### 4.1.2.2.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

பழந்தமிழ் இலக்கியங்களில் சில இடங்களில் வல்வினைகள் (strong verbs), அவற்றை அடுத்துக் குகரம் வர மெல்வினைகள் (weak verbs) கால இடைநிலைகளைக் கொண்டு நிற்கக் காணு கிறோம். 'கொடுப்பென்' என இருக்கவேண்டிய இடங்களில் 'கொடுக்குவென்' என வகர ஒற்றுப் பெற்று வரும் இடங்கள் பலவற்றைக் காணமுடியும். இந்நிலையினைப் பல இலக்கியங் களில் நாம் காணுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| இழக்குவன் | இழந்து விடுவேன் | ஐங் | 269-5 |
| தகைக்குவன் | மறுப்பேன் | ஐங் | 118-3 |
| விடுக்குவென் | விடுப்பேன் | அகம் | 396-11 |
| பெயர்க்குவென் | பெயர்க்குவேன் | நற் | 362-9 |
| மறக்குவென் | மறப்பேன் | புறம் | 175-5 |
| நிறுக்குவென் | நிறுத்துவேன் | கலி | 58-23 |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பினை நன்குக் காட்டும். மேலும்,

| | | | |
|---|---|---|---|
| அறிவென் | அறிவேன் | அகம் | 256-8 |
| ஆகுவென் | உய்குவேன் | நற் | 152-9 |
| அலப்பென் | வருந்தாநிற்பேன் | குறு | 41-6 |
| காண்பென் | காண்பேன் | சிலம்பு | 20-15 |
| அஞ்சுவென் | அஞ்சுகின்றேன் | மணி | 8-27 |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் -என் விகுதி இறப்பில்கால இடை நிலைக்குப் பின் நேரடியாக வருவதைக் காட்டும்.

### 4.1.2.2.4 -அல்- எதிர்மறைக்குப் பின்னர்

குறுந்தொகை, புறநானூறு போன்ற ஐந்து இலக்கியங்களில் -அல்- விகுதிக்குப் பின்னர் இது வருதல் காணலாம். -இல்- இடைநிலைக்குப் பின்னரும் வருவதற்குரியதாயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் எடுத்துக்காட்டுக்கள் எதுவுமில்லை. நச்சினார்க் கினியர் (சொல். 205) உண்டிலென், உண்ணாநின்றிலென், உன்கின்றிலென் ஆகிய உதாரணங்களைத் தரினும் அது பொருத்தமாக இல்லை.

| | | | |
|---|---|---|---|
| பிரியலென் | பிரிந்துறையேன் | ஐங் | 18-4 |
| செப்பலென் | கூறினேன் அல்லேன் | அகம் | 356-11 |
| பொறுக் கல்லென் | ஆற்றாதேன் ஆகின்றேன் | குறு | 224-6 |
| நீயலென் | பிரிப்பேன் | குறு | 36-3 |
| கொள்ளலென் | கொள்ளேன் | புறம் | 159-23 |
| பிரியலென் | பிரியேன் | கலி | 21-7 |

ஆகிய எடுத்துக்காட்டுக்கள் -என்- விகுதி, -அல்- உடன் வருவதைக் காட்டும்.

### 4.1.2.2.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

ஐங்குறுநூறு, அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்களில் மட்டுமே இதற்குரிய எடுத்துக்காட்டுக்கள் காணக்கிடக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| அளியென் | அளிக்கத்தகுவேன் | ஐங் | 460-5 |
| உடையென் | உடையேன் | அகம் | 376-1 |
| காதலென் | விரும்பாநின்றேன் | குறு | 51-4 |
| கல்வியென் | கல்வியறிவுடையேன் | புறம் | 346-3 |

### 4.1.2.2.6 வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| இயைவென் | இயைந்திருந்தேன் | அகம் | 369-1 |
| பரிசிலென் | பரிசிலேன் | புறம் | 217-7 |

### 4.1.3 -அல்

இவ்விகுதியும் பழங்காலத் தமிழில் மிகவும் பயின்று வருகிற ஒரு விகுதியாகும். காரைக்காலம்மையார் புராணம், அப்பர் தேவாரம், பெரிய புராணம் ஆகிய நூல்களில் இது காணப் படுவதில்லை என்பதும், வில்லிபாரதம் கம்பராமாயணம் போன்ற ஒரு சில இடைக்கால நூல்களில் காணப்படினும் மிக அருகியே உள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க செய்தி களாகும். ஆயினும் வீரசோழியம் தவிர பிற இலக்கண நூல் கள் அனைத்துமே இவ்விகுதியையும் தன்மை ஒருமை விகுதி களில் ஒன்றாகக் குறித்துச் செல்லக் காணலாம். வீரசோழிய உரைக்காரர் இதனை -அன் விகுதியிலிருந்து வந்ததாகக் கருது வார். ஆனால் -அன் விகுதி எல்லாக் கால இடைநிலைகளோடும் வர, -அல் விகுதியோ இறப்பில்காலத்தோடு மட்டும் வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் இதனை -அன் விகுதி யிலிருந்து உருவாக்குதல் பொருத்தமுடையதாகத் தெரிய வில்லை. மேலும் பழந்தமிழ் இலக்கியங்களில் -அன் விகுதியை விட -அல் விகுதி அதிகமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பரிபாடல் ஒழிந்த ஏனைய இலக்கியங்கள் அனைத்திலும் இவ்விகுதி வருதல் உண்டு (பட்டியல் 4).

#### 4.1.3.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு உதாரணங்கள் தரவந்த இளம்பூரணர் (சூத். 200) உண்பல், தின்பல் ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 203) உண்பல், வருவல் ஆகியவற்றையும், நச்சினார்க் கினியர் (சூத். 205) உண்பல், வருவல், உண்ணாநிற்பல், ஒழிவல், தவிர்வல் ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 197) உண்பல் என்னும் எடுத்துக்காட்டினையும், கல்லாடனார் (சூத்.206) உண்பல், தின்பல், உண்ணாநிற்பல், ஒழிவல், தவிர்வல் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தந்து செல்வர்.

சங்ககாலத் தமிழில் இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரே -அல் விகுதி வரக் காண்கிறோம். ஆயினும் நச்சினார்க்கினியரும், கல்லாடனாரும் நிகழ்கால எடுத்துக் காட்டுக்களையும் தந்து சென்றுள்ளனர். "உண்ணாநிற்பல் எனச்

சிறுபான்மை நிகழ்காலமும் பெறும்'' என்பார் நச்சினார்க்கினியர். தருகுவல் (ஐங் 474-4), கிளக்குவல் (பத்து 6-20/) போன்ற குகரம் பெற்று வரும் எடுத்துக்காட்டுக்களைச் சங்க காலத் தமிழில் காண்கிறோம். உரையாசிரியர்கள் இவற்றைக் குறிப்பிடாமலே விட்டுச் சென்றுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவ்விகுதி பற்றிப் பேசும் இளம்பூரணர் -அல் விகுதியே -அன் விகுதியாயிற்று என்ற பொருள்படக் கூறுவதும் (சொல்.200) சிந்திப்பதற்குரியது.

முன்னர்க் குறிப்பிட்டபடி -அல் ஈறு எதிர்காலத்திலேயே பயின்று வருதல் சிந்தனைக்குரியதாகும். இவ்விகுதி பற்றிப் பேசும் சுப்பிரமணிய சாஸ்திரி(1934:158) ஒரு சில இடங்களில் இறந்தகாலத்திலும் இது வரும் எனக்கூறி

| | | | |
|---|---|---|---|
| கண்டனென் வருவல் | கண்டு வந்தேன் | புறம் | 23-17 |
| உவகையொடு வருவல் | உவகையோடு வந்தேன் | புறம் | 165-14 |

ஆகியவற்றை உதாரணங்களாகக் காட்டுவார். இவற்றை இறப்பில்காலமாக எடுப்பினும் பொருள் சிதைவுறாது.

### 4.1.3.2 சூழல்

பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்விகுதி இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் மட்டுமே வருகின்றது.

#### 4.1.3.2.1 இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| காண்குவல் | கண்டேன் | பதி | 73-16 |
| காண்பல் | காண்கின்றேன் | பதி | 77-12 |
| தருகுவல் | கொணர்வல் | ஐங் | 474-4 |
| அஞ்சுவல் | அஞ்சுகின்றேன் | அகம் | 300-12 |
| செறிப்பல் | செறிப்பல் | நற் | 206-9 |
| இறப்பல் | செல்வேன் | குறு | 151-6 |
| வருவல் | வந்தேன் | புறம் | 23-17 |
| வருவல் | வந்தேன் | புறம் | 165-14 |
| அஞ்சுவல் | அஞ்சுவேன் | புறம் | 83-2 |

| | | | |
|---|---|---|---|
| அறிவல் | அறிவேன் | பத்து | 1-291 |
| கிளக்குவல் | கூறுவன் | பத்து | 6-207 |
| அஞ்சுவல் | அஞ்சுவேன் | கலி | 48-22 |
| அறிவல் | அறிவேன் | குறள் | 1129 |
| காண்குவன் | காண்பேன் | சிலம்பு | 25-140 |
| போதுவல் | செல்வேன் | சிலம்பு | 10-50 |
| போகுவல் | செல்வல் | சிலம்பு | 11-149 |
| செய்குவல் | செய்துவிடுவல் | மணி | 23-40 |

மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக்களில் சில குகரம் பெற்று வருதலும் காணலாம். மேலும் 'கிளக்குவல்' என வல்வினை வகரம் பெற்று வருதலும், பகர ஒற்றை எடுத்து வருகின்ற சில இடைவினைகள் (middle verbs) (காண் போன்றவை) வகரம் பெற்று வருவதும் காணத்தக்கன.

### 4.1.3.3. எதிர்மறையா ? எதிர்ப்பதமா ?

-அல் ஈறு பற்றிக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர் ஒழிவல், தவிர்வல் என்ற இரு எடுத்துக்காட்டுக்களைத் தந்து (சூத். 205) எதிர்மறை வாய்பாடு என்பார். "ஒழிவல், தவிர்வல் என வரும் மறை வாய்பாடும் அறிக" என்பார் அவர். இங்கு எதிர்மறை வினையடியில் உள்ளதேயன்றி ஒட்டினால் காட்டப்படுகின்ற ஒன்று அன்று என்பது நினைவுகூரத்தக்கது. இது எதிர்ப்பதமேயன்றி எதிர்மறையன்று.

### 4.1.4 -கு

பொதுவாக இதனைக் குகர விகுதி என்றே தமிழ் இலக்கண நூலோர் குறிப்பிட்டுச் செல்வர். இதன்கண் காணப்படும் ககரம் எதிர்காலத்தைக் காட்டுவதாகக் கருதலாம் (ககர ஒற்று எதிர் காலம் காட்டுவது பற்றிப் பின்னர்க் காண்போம்). உகரம் தன்மை ஒருமையைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். இங்ஙனமே பலரும் கொண்டுள்ளனர். இது நமக்கு உடன்பாடே. எனினும் தொல்காப்பியர் கருத்துப்படி குகரம் என்றே இங்கு கையாளப்படுகிறது. இடைக்காலத் தமிழ் நூல்களில் ஒரு சில இடங்களிலேயே இது வந்துள்ளது. எனினும் முன்னர்க்

குறிப்பிட்டபடி வீரசோழியம் தவிர ஏனைய இலக்கண நூல்களெல்லாம் இவ்விகுதியையும் தன்மை ஒருமை விகுதிகளில் ஒன்றாகக் குறிப்பிட்டுச் செல்லுவதும், உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுக்கள் தருவதும் பழமையைப் போற்றுவதாகவே கருதப்படவேண்டும். -கு, -டு, -து, -று ஆகிய நான்கு விகுதி களைப் பற்றியும் வீரசோழியம் பேசுவதில்லை.

இதன்கண் னகர ஒற்று இருந்து ஒருமையைக் காட்டியது என்றும், அது காலப்போக்கில் மறைந்து விட்டது என்றும் மீனாட்சிசுந்தரன் (1965:4) கூறுவார். பன்மையில் மகரம் இருப்பதை ஆதாரமாக காட்டுவார் இவர்.

இராமஸ்வாமி ஐயர் (1938:757) -கும் போன்றவற்றில் காணப்படும் ககர ஒற்று காலம் காட்டுவது என்றும், -உம் விகுதி என்றும் கூறுவார்.

### 4.1.4.1 உரையாசிரியர்கள்

இளம்பூரணர் (சூத், 200, 201) உண்கு, உண்டு, வருது, சேறு ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத், 203, 204) உண்கு, உண்டு, வருது, சேறு, உரிஞுகு, திருமுகு, காண்கு ஆகியவற்றை யும், நச்சினார்க்கினியர் (சூத். 205) உண்கு, உண்டு, வருது, சேறு, உரிஞுகு, திருமுகு ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 197, 198) உண்கு, உண்டு, வந்து, சேறு ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத், 206, 207) உண்கு, உண்டு, வருது, சேறு, உரிஞுகு ஆகியவற்றையும் -கு, -டு, -து, -று ஆகிய விகுதிகளுக்கு எடுத்துக்காட்டுக்களாகத் தருவர். இவற்றுள் -கு விகுதி மட்டுமே சங்ககால இலக்கியங்களில் காணப்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பிற பற்றிப் பின்னர்க் காண்போம்.

### 4.1.4.2 சூழல்கள்

குகரம் பொதுவாக வினையடிகளுக்குப் பின்னர் வரும் (பட்டியல் 5).

| | | |
|---|---|---|
| இரக்கு<br>(வாரேன்) | இரந்து<br>வந்தேனில்லை | பதி 61-11 |
| செய்கு | செய்வேன் | ஐங் 133-1 |

| | | | |
|---|---|---|---|
| செய்கு | செய்வேன் | அகம் | 50-14 |
| வருகு | வருவேன் | நற் | 204-2 |
| செய்கு | செய்யவல்லேன் | குறு | 25-2 |
| காண்கு | காண்பேன் | புறம் | 17-33 |
| உண்கு | நுகரக்கடவேன் | பரி | 9-31 |
| புனைகு | புனைவேன் | கலி | 111-9 |
| உரைக்கு | சொல்வேன் | குறள் | 1181 |
| செய்கு | செய்வேன் | சிலம்பு | 7-34-2 |
| செய்கு | செய்வேன் | மணி | 4-84 |

பொதுவாகக் குகரம் வினையடிகளை அடுத்தே காணப் படுகின்றது. சங்ககால இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் அனைத்தும் இந்நிலையிலேயே உள்ளன. ஆனால் குறுந் தொகையில் காணப்படும்

| | | |
|---|---|---|
| அழாற்கு | அழேன்<br>அழாமல் இருப்பேன் | குறு 192-2 |

என்ற சொல்லில் மட்டும் (இதனை -க்கு என எண்ணலாம்) -ஆல்- என்ற எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர்க் காணப் படுகிறது. இந்நிலையில் ககரத்தைக் காலங்காட்டும் இடைநிலை யாகக் கொள்ளுவதற்குச் சிறிது சிரமம் உள்ளது. பொதுவாக எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர்க் காலங்காட்டும் இடை நிலைகள் வருவதில்லை.

| | | |
|---|---|---|
| காணன்மார் | காணாதொழிவார் | நற் 64-13 |
| பாடன்மார் | பாடாதொழிவார் | புறம் 375-21 |

போன்ற சொற்களில் எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர் மகரம் வருதல் பொருந்துமா என்பது ஆராய்தற்குரியது (பார்க்க: அகத்தியலிங்கம், 1983c)

### 4.1.4.3 தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும்

முன்னர்க் குறிப்பிட்டபடி தொல்காப்பியர்,

"க ட த ற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொ(டு)
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ..."

என்ற சூத்திரத்தில், க, ட, த, ற உகரங்களைத் தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளாகக் குறிப்பிடுவார். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கினால் குகரம் பத்துப்பாட்டு ஒழிந்த எல்லா இலக்கியங்களிலும் வருதலைக் காணமுடியும். பிறவற்றைக் (-டு, -து, -று) காணமுடிவதில்லை. ஆனால் -தும், -டும், -றும் ஆகிய பன்மை விகுதிகள் பல இலக்கியங்களில் பயின்று வரக் காணுகிறோம். இந்நிலையில்தான் -து, -டு, -று விகுதிகளையும் தொல்காப்பியர் ஒற்றுமை (uniformity) கருதிக் கூறியிருப்பாரோ என்று எண்ணத்தோன்றும். மேலும் -இசின் என்பதுடன் -து, -டு, -று ஆகிய விகுதிகள் சங்ககால இலக்கியங்களில் (பதிற்றுப்பத்து -8, ஐங்குறுநூறு -1, அகநானூறு -6, நற்றிணை-9, குறுந்தொகை-5, புறநானூறு-9, பத்துப்பாட்டு-1) காணப்படுவதும் இதற்குக் காரணமாக இருக்கலாம் (பட்டியல்7). -இசின் விகுதியோடு இணைந்து இவ்விகுதிகள் வரும்போது இவை இறந்தகாலத்தையே காட்டுவனவாக உள்ள நிலையில் இவை 'கு' என்பதிலிருந்து வேறுபட்டிருக்கவும் காண்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| வந்திசின் | வந்தேன் | பதி | 15-15 |
| தெளிந்திசின் | தெளிந்திருக்கிறேன் | ஐங் | 466-5 |
| சூழ்ந்திசின் | எண்ணியுளேன் | அகம் | 76-13 |
| அறிந்திசின் | அறிந்துகொண்டேன் | நற் | 278-6 |
| சூழ்ந்திசின் | நினைத்தேன் | குறு | 11-8 |
| உவந்திசின் | மகிழ்ந்தேன் | குறு | 351-1 |
| கேட்டிசின் | கேட்டேன் | புறம் | 150-24 |
| ஆன்றிசின் | அமைந்தேன் | புறம் | 151-7 |
| ஆன்றிசின் | அமைந்தேன் | பத்து | 8-35 |

போன்ற இடங்களிலெல்லாம் இறந்தகாலத்தைக் காட்டுவனவாக உள்ளன. இந்நிலையில் இவற்றை -கு, -டு, -து, -று ஆகிய விகுதிளோடு இணைத்துக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. முன்னரே கூறியுள்ளபடி தொல்காப்பிய உரையாசிரியர்கள் இவற்றுக்கெல்லாம் எடுத்துக்காட்டுக்கள் கொடுத்துச் செல்வதைக்காணலாம். இளம்பூரணர் (சொல். 200)

| | | | |
|---|---|---|---|
| உண்கு | உண்பேன் | வருது | வருவேன் |
| உண்டு | உண்பேன் | சேறு | போவேன் |

ஆகிய எடுத்துக்காட்டுக்களைத் தந்து நிற்பார். இவரைப் பின் பற்றிச் சேனாவரையரும் (சொல். 203), நச்சினார்க்கினியரும் (சொல். 205) இதே எடுத்துக்காட்டுக்களைத் தந்து நிற்கின்றனர். தெய்வச்சிலையார் (தொல். 197) றுகர விகுதிக்கு 'சென்று' என்ற எடுத்துக்காட்டைத் தருவார். கல்லாடர் (சொல். 206) இளம்பூரணரைப் பின்பற்றி இருக்கக் காணலாம் (சொல். 200). மேலும் நச்சினார்க்கினியர்

''கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினுந்
தொல்லது விளைந்தென நிலம் வளங்கரப்பினும்''

என்னும் புறப்பாட்டினைத் (சூத். 205) தந்து இதன்கண் காணப்படும் பொழிந்து, விளைந்து என்ற சொற்களைத் துகரத்திற்கு உதாரணமாகத் தருவது சற்றும் பொருந்துவதாக இல்லை. உரையாசிரியர்கள் கருத்துப்படி 'பொழிந்து' என்பது பொழிந்தேன் எனவும், 'விளைந்து' என்பது விளைந்தேன் எனவும் பொருள்படினும் இவற்றை முறையே பொழிந்ததால் எனவும், விளைந்ததால் எனவும் பொருள் கொள்ளுவதில் தவறு இல்லை. இங்கே காணப்படும் துகரம் பொழி, விளை என்ற இரு வினைகளில் இறந்தகால இடைநிலையின் ஒரு பகுதி என்பதும், காண்கு போன்றவற்றில் உள்ளது போல வரும் துகரமாயின் 'பொழிது' 'விளைது' என வினைச்சொல்லை அடுத்து வரவேண்டும் என்பதும் நினைவுகூரத்தக்கன. 'வாழ்தும்', 'வருதும்' போன்றவற்றில் இந்நிலையையே காண்கிறோம். இந்நிலையில் பழந்தமிழ் இலக்கியங்களில் குகரம் ஒழிந்த பிற விகுதிகள் தன்மை ஒருமையில் வருகின்றன எனக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. இராமஸ்வாமி ஐயரும் (1938: 769) சங்க கால இலக்கியங்களில் இவ்விகுதிகள் காணப்படவில்லை என்றே கூறிச் செல்லுகிறார். ஆனால் சுப்பிரமணிய சாஸ்திரி (1935: 160) உரையாசிரியர்களைப் பின் பற்றி 'உண்டு' என்ற சொல்லை எடுத்துக்காட்டாகத் தந்து நிற்பார்.

### 4.1.4.3.1 காலம்

இவ்விரு விகுதிகளைப் பற்றிப் பேசும் உரையாசிரியர்களில் சேனாவரையர் (சொல். 203) இவ்விகுதிகள் எதிர்காலம் காட்டும் எனக் குறிப்பிடுவார். நச்சினார்க்கினியர் பெரும்பான்மையும் இவை எதிர்காலமே காட்டும் என்பார். தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் இது பற்றிப் பேசவில்லை. நன்னூலார் (சூத். 145) இவ்விகுதிகளில் -று, -து ஆகியவை இறந்தகாலத்தை யும், எதிர்காலத்தையும், -டு இறந்தகாலத்தையும், -கு எதிர் காலத்தையும் காட்டும் எனக் குறிப்பிடுவார். இலக்கணவிளக்க ஆசிரியரோ (சூத். 50) இவை அனைத்தும் எதிர்காலத்தையே காட்டும் என்பார். சங்க இலக்கியங்களில் காணப்படும் குகரம் அனைத்தும் எதிர்காலத்தைக் காட்டுவனவாகவே உள்ளன. பதிற்றுப்பத்தில் காணப்படும்

இரக்கு வாரேன் பதி 61-11

என்ற தொடருக்குப் பொருள் எழுதும் உரையாசிரியர் (பதிற்றுப்பத்து, 1973:289) இரந்து வந்தேனில்லை என இறந்த காலத்தில் பொருள் எழுதுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இதையும் எதிர்காலத்தில் பொருள்கூறிக் குகரம் எதிர்காலத்தைக் காட்டுவதே எனக் குறிப்பிடுவதில் தவறெதுவுமில்லை.

### 4.1.4.3.2 தோற்றமும் மாற்றமும்

#### 4.1.4.3.2.1 சுப்பிரமணிய சாஸ்திரி

இவ்விடைநிலையின் மூலத்தைப் பற்றி ஆராய்கின்ற சுப்பிரமணிய சாஸ்திரி (1934: 159) இது -ஏன் போன்ற தன்மை ஒருமை விகுதிகள் மறைந்து பிரிந்தநிலையில் உண்டாகியிருக்க லாம் என எண்ணுவார்.

உண்கேன் → உண்கு வருகேன் → வருகு

உண்கேன், வருகேன் போன்றவை பின்பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆனால் தகர, டகர, றகர உகரங்களுடன் -ஏன் விகுதி காணப்படுவதில்லை. *சேறேன், *வருதேன், *உண்டேன் போன்றவை பொருந்திக் காணப்படுவதில்லை.

### 4.1.4.3 2.2 மீனாட்சிசுந்தரன்

மீனாட்சிசுந்தரன் (1965: 4) தன்மைப் பன்மை விகுதிகளாக வரும் -கும், -டும், -தும், -றும் போன்றவற்றில் காணப்படும் மகர ஒற்றினைப்போன்று தன்மை ஒருமையில் னகர ஒற்று இருந்திருத்தல் வேண்டும் என்றும், காலப்போக்கில் னகர ஒற்று மறைய, -கு, -டு, -து, -று ஆகியவை நிலைத்தன என்றும் குறிப்பிடுவார்.

| | |
|---|---|
| *உண்கும் → உண்கு | *வருதுன் → வருது |
| *உண்டுன் → உண்டு | *சேறுன் → சேறு |

சாஸ்திரியின் விளக்கத்தைவிட இவருடைய விளக்கம் ஓரளவு பொருத்தமாகக் காணப்படினும் உண்மை என ஒத்துக் கொள்வதற்கு கடினமாகவே உள்ளது. இங்கு மட்டும் னகர ஒற்று அழியக் காரணம் எது எனக் கூறமுடியவில்லை.

### 4.1.4.3.3 வினையெச்சமா ?

தன்மை ஒருமை பற்றிப் பேசும் தொல்காப்பியர் 'செய்கு' என்னும் வாய்பாட்டு வினைமுற்று, வினை கொண்டு முடிகின்ற பொழுது முற்றாக உள்ளதா, இல்லை வினையெச்சமாக மாறி யுள்ளதா என்ற வினாவினை எழுப்பி, இந்நிலையில் இதனைத் தன்மை ஒருமை வினைமுற்றாகக் கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடுவார்.

> ''அவற்றுள்,
> செய்குஎன் கிளவி வினையொடு முடியினும்
> அவ்வியல் திரியாது என்மனார் புலவர்'' (689)

என்பது சூத்திரம். 'செய்கு' என்ற தன்மை ஒருமை வினை முற்று வேறு வினைகொண்டு முடிந்தபோதிலும் கூட அதனைத் தன்மை ஒருமை வினைமுற்றாகவே கொள்ளவேண்டும் என்பது இச்சூத்திரத்தின் பொருள். இதற்கு விளக்கம் கூறவந்த உரையாசிரியர்கள் 'உண்கு வந்தேன்' போன்ற எடுத்துக்காட்டுக் களைத் தருவர்.

இதைப்போன்றே -மார் விகுதியும் வினையைக் கொண்டு முடிகின்ற பொழுது பலர்பால் படர்க்கை விகுதியாகக் கருதப்

படவேண்டியதா என்ற வினாவும் எழக் காணலாம். வினையெச்சம் பற்றிய கட்டுரை ஒன்றில் (அகத்தியலிங்கம், 1972:207-232) -மார் விகுதி வினையெச்ச விகுதியாகவும் கருதப்படவேண்டியது என்ற கருத்தினைச் சான்றுகளுடன் நிறுவி உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது (பார்க்க: அகத்தியலிங்கம், 1983c). இதுபோல செய்கு என்பதும் வினைமுற்றாகவே கொள்ள வேண்டும் எனவும் நிறுவப்பட்டுள்ளது. வசதி கருதி மீண்டும் அதுபற்றி இங்கே கூறப்படுகிறது. செய்கு வாய்பாட்டுச் சொல் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் தன்மை ஒருமையைக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. எங்கும் வினையெச்சம் போன்று வந்திலது.

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராய்ந்து நோக்கின் நூற்றொன்பது இடங்களில் செய்கு வாய்ப்பாட்டுச் சொல் வரக் காணுகிறோம். அவற்றுள் நாற்பது இடங்களில் யான் என்ற பெயருடன் பயின்று வருகின்றது.*

| | | |
|---|---|---|
| இரக்கு வாரேன் | பதி | 61-11 |
| காண்கு வந்திசின் | பதி | 90-55 |
| காண்கு வந்தனேன் | பதி | 88-39 |
| காண்கு வந்திசின் | புறம் | 17-33, 125-4, 391-14 |

போன்ற இடங்களில் வினையுடன் வருகின்றது. மேற்காட்டிய இடங்கள் அனைத்திலும் தன்மை ஒருமை வினைச்சொல்லையே கொண்டு முடிதல் இங்குக் கவனித்தற்பாலது. இவை அனைத்திலும் இயைபு நொடிவு (concord break) எதையும் காண முடிவதில்லை. இதனால்தான் தொல்காப்பியர் செய்கு

---

| | | |
|---|---|---|
| * யாங்கென உணர்கோ யானே | அகம் | 273-9 |
| இனியெவன் மொழிகோ யானே | நற் | 224-8 |
| ............ யானெவன் செய்கோ | குறு | 25-2 |
| நோகோ யானே ............ | புறம் | 116-9 |

போன்ற இடங்களில் இப்பண்பைக் காணலாம். மேலும் இவை முற்றெச்சங்களுடனும் பன்னிரண்டு இடங்களில் வருகின்றனவேயன்றி வேறு எந்த வினைமுற்றும் இவ்விதம் வருவதில்லை.

எனும் சொல் வேறு வினையைக் கொண்டு முடிந்தாலும் அதனைத் தன்மை ஒருமை வினைமுற்றாகவே கருத வேண்டும் என அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். ஆனால் -மார் விகுதியோ ஒரு சில இடங்களில் பலர்பால் சொற்களோடு முடியாமல் வேறு பால் சொற்களோடு முடிவதைக் காணலாம். எனவேதான் இந்நிலையில் அதனை வினையெச்ச விகுதியாகக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. இது கருதிதான் அவரும் மாரைக்கிளவி பொதுவாகப் பல்லோர் படர்க்கையைக் காட்டும் எனக் கூறிப் போந்தார். எனினும் சில நேரங்களில் வினையைக் (காலக்கிளவி) கொண்டு முடியும். இந்நிலையில் அதனை வினையெச்ச விகுதியாகக் கொள்ள வேண்டும் எனக் கருதலாம். இதனால்தான் இவர் 'செய்கென்' கிளவி பற்றிக் கூறும்போது 'அவ்வியல் திரியாது' என ஆணித் தரமாகக் கூறுவதும், மாரைக் கிளவியை அவ்வாறு கூறாமையும் இங்குக் குறிப்பிடத்தக்கச் செய்திகள் ஆகும். இவ்விரு சூத்திரங் களுக்கும் உரை எழுதுகின்ற உரையாசிரியர்கள் இவ்வினைச் சொற்கள் பெயர் கொண்டு முடிவதே வலிவுடைத்து என்ற கருத்தில் உரை எழுதிச் செல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரிய வில்லை. இளம்பூரணர் "இனி அவை முடியினும் அமையும். எனவே, பெயர் கொண்டு முடிதலே வலியுடைத்து என்பது போந்ததாம்" (சூத். 201) என்று கூறி

உண்கு யான் உண்கும் யாம்

என்ற உதாரணங்களைத் தருவதும், இவரைப் பின்பற்றியே சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோர் பொருள் கூறுவதும் பொருத்தமாகத் தெரியவில்லை. இது பற்றி "வினையெச்சம்" என்ற கட்டுரையில் (அகத்திய லிங்கம், 1971) விளக்கமாகக் காணலாம்.

-மார் விகுதியைப் போலவே -இயர், -இய, -வான், -பான் போன்ற விகுதிகளும் வினையெச்ச விகுதிகளாக உள்ளமை கண் கூடு.

செய்யியர் வந்தேன் செய்வான் வந்தேன்
செய்யிய வந்தேன் காண்பான் வந்தேன்

ஆகிய எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பினைக் காட்டும்.

## 4.1.5 -அன்

தன்மை ஒருமை விகுதிகள் பற்றிப் பேசும் தொல்காப்பியர் -அன் விகுதி பற்றிப் பேசாமை குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். சங்ககால இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் பொதுவாகப் பத்துப்பாட்டு, பரிபாடல் ஒழிந்த ஏனைய இலக்கியங்கள் அனைத்திலுமே -அன் விகுதி பயின்றுவரக் காணலாம் (பட்டியல் 6).

-அன்

| | | | |
|---|---|---|---|
| பதி | 1 | பரி | 0 |
| ஐங் | 1 | கலி | 7 |
| அகம் | 8 | குறள் | 7 |
| நற் | 19 | சிலம்பு | 11 |
| குறு | 5 | மணி | 15 |
| புறம் | 13 | | |
| பத்து | 0 | | |

### 4.1.5.1 உரையாசிரியர்கள்

தொல்காப்பியர் கூறாவிடினும் உரையாசிரியர்கள் இவ்விகுதி பற்றிக் குறிப்பிடுவர். இளம்பூரணர் (சூத். 200) உண்பன், தின்பன் ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 206) உண்டனன் என்ற எடுத்துக்காட்டையும் தந்து செல்வர். இளம்பூரணர் -அல் விகுதியே -அன் விகுதியாக மாறிற்று என்று கருதுகிறார்.

#### 4.1.5.1.1 அல் - அன்

''அல் - உண்பல், தின்பல் என எதிர்காலம் பற்றி வரும். இப்பொழுது அதனை உண்பன், தின்பன் என அன் ஈறாக வழங்குப என்ப'' (சூத். 200) எனக் கூறுவார். வையாபுரிப் பிள்ளையும் (1954:36) இதனை ஒத்துக் கொள்ளுவார்.

தெய்வச்சிலையார் இதுபற்றி எதுவும் பேசுவதில்லை. கல்லாடர் 'உண்டனன்' என்ற எடுத்துக்காட்டினைத் தந்த போதிலும் இதனுடைய தோற்றம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இது பற்றி விளக்கமாகப் பேசும் சுப்பிரமணிய சாஸ்திரி

1934:159) ஆண்பால் விகுதியாகிய -அன் என்பதுடன் பொருத்திக் காட்டி அந்த -அன் விகுதியே காலப்போக்கில் தன்மை விகுதியாக மாறியிருக்கலாம் எனக் கருதுகிறார். மேலும் அவர் -அன் விகுதி முதன் முதலில் படர்க்கை இடத்திலும், படர்க்கையாகவே தன்மையிலும் பயன்பட்ட ஒரு விகுதியாக இருந்திருக்கலாம் எனவும், பின்னர் இது தன்மை விகுதியாகவும் பயன்படுகிறது என்றும் குறிப்பிடுவார். இவ்விரு விளக்கங்களோடு இன்னும் ஒரு விளக்கத்தையும் அவரிடம் காண முடிகிறது. முன்னர்க் குறிப்பிட்டபடி இளம்பூரணரை ஒட்டி -அல் விகுதியே -அன் விகுதியாக மாறியிருக்கலாம் என்றும் இவர் கருதுகிறார். மீனாட்சிசுந்தரன் (1977:159) சாஸ்திரியாரை ஒட்டி ஆண்பால் ஒருமை விகுதியிலிருந்து கிளைத்ததே இது எனக் கருதுவார்.[1]

இளம்பூரணர் கருத்துப்படி -அல் லே -அன் ஆயிற்று எனக் கருதுவதில் சிக்கல் ஒன்று உளது. -அல் விகுதி வருவல், காண்பல் போன்று எதிர்காலத்தில் மட்டுமே பயன்படுவதும், ஆனால் -அன் விகுதியோ எல்லாக் கால இடைநிலைகளோடும் வருவதும் நினைவுகூரத்தக்கச் செய்திகளாகும். எனவே -அல் லிலிருந்து -அன் வந்தது எனக் கூறுவது பொருந்தாததாகும்.

ஆனால் -அன் விகுதி ஒப்புமையாக்கத்தின் (analogy) காரணமாகத் தோன்றியது எனக் கருதலாம். தன்மைப் பன்மையில் காணப்படும் -அம் விகுதியே -அன் விகுதியின் தோற்றத்திற்குக் காரணம் என எண்ணலாம். -அம் விகுதி வரும் இடங்களிலெல்லாம் (செய்கம் போன்ற இடங்கள் தவிர) -அன் விகுதி வருதல் கண்கூடு.

---

1. படர்க்கை ஆண்பால் விகுதியாக 'அன்' வழங்குகிறது. பல பொருள் ஒரு சொல்லாக 'அன்' வழங்குவதன் விளைவாக, தன்மை விகுதியாக வரும் 'அன்' வழக்கிழக்கலானது (மீனாட்சிசுந்தரன், 1977:158-9)

| -அன் | -அம் |
|---|---|
| அணைத்தனன் | உண்டனம் |
| சூடினன் | ஆடினம் |
| வருவன் | வருவம் |
| சூழலன் | சூழலம் |
| துஞ்சிலன் | துஞ்சிலம் |
| இலன் | இலம் |

ஆகிய எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பினைக் காட்டும்.

மேலும் -என் என்ற விகுதி தன்மை ஒருமையில் காணப்படு வதும் -அன் விகுதியின் விரைவான வளர்ச்சிக்கு வழி வகுத்து இருக்கும்.

### 4.1.5.2 சூழல்கள்

இவ்விகுதி பழந்தமிழ் இலக்கியங்களில் பலவேறு சூழல்களில் பயின்று வரும் (பட்டியல் 6).

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. எதிர்மறை -அல்-, -இல்- இடைநிலைகளுக்குப் பின்னரும்
5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்

வரும். இச்சூழல்கள் அனைத்திலுமே (எதிர்மறை -இல்- இடை நிலையிலும், வினையாலணையும் பெயர்களிலும் தவிர) -என் விகுதியும் வருதல் இங்கு நினைவுகூரத்தக்கது. எனவே இவ்விரு விகுதிகளும் பதில்நிலை வழக்காக உள்ளமை காணலாம். பழங் கால இலக்கியங்களில் -என் விகுதி -இன்- இடைநிலையோடு பதினைந்து இடங்களில் வர, -அன் விகுதி இரண்டு இடங்களில் மட்டுமே வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு விகுதிகளும் -அன்- சாரியைக்குப் பின்னர் வரினும் -என் விகுதியே இச்சூழலில் அதிகமாகப் பயன்படுவது பழந்தமிழ் இலக்கியங்களை நோக்கின் தெரியவரும்.

| | -என் | -அன் | | -என் | -அன் |
|---|---|---|---|---|---|
| பதி | 8 | 0 | பரி | 0 | 0 |
| ஐங் | 9 | 0 | கலி | 2 | 0 |
| அகம் | 13 | 0 | குறள் | 0 | 0 |
| நற் | 5 | 2 | சிலம்பு | 0 | 4 |
| குறு | 9 | 3 | மணி | 0 | 0 |
| புறம் | 24 | 9 | | | |
| பத்து | 2 | 0 | | | |

4.1.5.2.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| செகுத்தனன் | செகுக்கப்பட்டேன் | நற் | 16-10 |
| கண்டனன் | கண்டேன் | குறு | 311-4 |
| உரைத்தனன் | சொன்னேன் | புறம் | 136-22 |
| எழுந்தனன் | எழுந்தேன் | சிலம்பு | 16-83 |

4.1.5.2.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் ஐங்குறுநூற்றிலும், மணிமேகலையிலும் மட்டுமே இவ்விகுதி இச்சூழலில் வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| தொடங்கினன் | மேற்கொண்டுவிட்டேன் | ஐங் | 428-4 |
| பற்றினன் | பற்றினேன் | மணி | 20-16 |

4.1.5.2.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு பரிபாடல், ஒழிந்த ஏனைய நூல்கள் அனைத்திலும் இச்சூழலில் இவ்விகுதி வருதல் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| அமைகுவன் | அமைந்திருப்பேன் | அகம் | 74 14 |
| மறப்பன் | மறந்தே விடுகின்றேன் | நற் | 270-11 |
| போல்வன் | போல்வேன் | குறு | 286-1 |
| பாடுவன் | பாடுவேன் | புறம் | 53-13 |
| நோக்குவன் | பார்ப்பேன் | கலி | 147-27 |
| இரப்பன் | இரவா நின்றேன் | குறள் | 1067 |
| காண்பன் | காண்பேன் | சிலம்பு | 19-10 |
| நடக்குவன் | உய்விப்பேன் | மணி | 13-36 |

முன்னர்க் குறிப்பிட்டபடி இறந்தகாலத்திலும், அல்லாக் காலத்திலும் –அன் வரினும் இறப்பில்காலத்திலேயே அதிகமாகப் பயின்று வருதல் காணலாம். இந்நிலையினைப் பழந்தமிழிலும் இடைக் காலத் தமிழிலும் காணமுடிகிறது. ஆனால் –என் விகுதியோ இறந்தகாலத்தில்தான் அதிகமாகப் பயின்று வந்துள்ளது. –அம் விகுதியும் இறப்பில்காலத்திலேயே அதிகமாக வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | |
|---|---|---|---|---|
| | -அன் | -என் | -அன் | -என் |
| பதி | 0 | 8 | 0 | 0 |
| ஐங் | 1 | 9 | 0 | 7 |
| அகம் | 0 | 17 | 2 | 11 |
| நற் | 2 | 9 | 7 | 8 |
| குறு | 3 | 11 | 1 | 4 |
| புறம் | 9 | 25 | 3 | 5 |
| பத்து | 0 | 2 | 0 | 0 |
| பரி | 0 | 0 | 0 | 0 |
| கலி | 0 | 6 | 5 | 16 |
| குறள் | 0 | 0 | 5 | 0 |
| சிலம்பு | 4 | 1 | 4 | 3 |
| மணி | 1 | 0 | 14 | 1 |

4.1.5.2.4 –அல்–, –இல்– எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| (கை)விடுகவன் | கைவிடுதலை ஆற்றேன் | அகம் | 193-14 |
| அமைகவன் | அமைகுவேன் அல்லேன் | நற் | 141-12 |
| சூழலன் | நினையேன் | குறு | 309-8 |
| துஞ்சிலன் | கண்ணுறங்கிலன் | நற் | 319-11 |
| உன்னிலன் | அறியேன் | புறம் | 310-6 |

### 4.1.5.2.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| இலன் | இலேன் | பதி | 77–7 |
| அல்லன் | அல்லன் | அகம் | 16–17 |
| அல்லன் | அல்லேன் | நற் | 3-7 |
| அல்லன் | அல்லன் | கலி | 107–29 |
| இலன் | வறியன் | குறள் | 205 |
| இலன் | இலேன் | சிலம்பு | 13–55 |

### 4.1.5.3 –அன்– விகுதியின் தோற்றம்

-ஏன், –என், –அன் ஆகிய மூன்று விகுதிகளும் தம்முள் தொடர்பு உடையன. இம்மூன்று விகுதிகளிலும் னகர ஒற்றினைக் காண்கிறோம். பொதுவாக னகர ஒற்று ஒருமையினைக் காட்டுவது. யான், தான் போன்ற மூவிடப்பெயர்களில் இத் தன்மையினைக் காணலாம். முன்னர்க் குறிப்பிட்டபடி –அன் விகுதியைப் பற்றித் தொல்காப்பியர் எதுவும் குறிப்பிடாத நிலையில், சுப்பிரமணிய சாஸ்திரி (1934:159) போன்ற அறிஞர்கள் இதனைப் பின்னர் எழுந்த ஒரு விகுதியாக இருக்கலாம் எனக் கருதுவர். பழந்தமிழ் இலக்கியங்களில் இது சரளமாகப் பயின்று வருகின்ற நிலையில் இது மிகப் பழங்காலத்திலேயே தோன்றி யிருக்க வேண்டும் என்று கருதலாம்.

மேலும் சாஸ்திரி (1934:159) ஆண்பால் ஒருமை விகுதியாக உள்ள –அன்னையும், இதனையும் பொருத்திக்காட்டி அதுவே இதனுடைய தோற்றத்திற்குக் காரணம் எனவும் கூறுவதைக் காணலாம். இரண்டும் ஒரே வடிவினையுடையதாக உள்ள நிலைதான் சாஸ்திரி இவ்வாறு கூறுவதற்குக் காரணம் இதைப் போன்றே –அல் லிலிருந்துதான் –அன் தோன்றியிருக்க வேண்டும் எனவும் எண்ணுவார் அவர். –அல் விகுதியின் தோற்றத்தை ஆராய்கின்ற அறிஞர்கள் (வீரசோழியம் உரைக்காரர் உள்பட) –அன் விகுதியிலிருந்து வந்திருக்கலாம் என்று கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது. இளம்பூரணர் உண்பல், தின்பல் ஆகிய உதாரணங்களைக் காட்டி "இப்பொழுது அதனை உண்பன், தின்பன் என –அன் ஈறாக வழங்குப என்ப" எனக் கூறுவதே

சாஸ்திரி போன்றாருக்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கவேண்டும் என்று கருதலாம். -அல் எதிர்காலத்தில் மட்டும் வர, -அன் எல்லாக் காலத்திலும் வருவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே முன்னர்க் குறிப்பிட்டபடி -அம் மிலிருந்துதான் -அன் தோன்றி யிருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறு எதுவும் இல்லை. ஒப்புமையாக்கமே இதற்குக் காரணம் என்பதும் அதன் அடிப் படையில்தான் -அன் விகுதி தோன்றியிருக்க வேண்டும் என்பதும் ஒருதலை.

| பன்மை | ஒருமை |
|---|---|
| -ஏம் | -ஏன் |
| -எம் | -என் |
| -அம் | -அன் |
| | |
| வந்தனம் | வந்தனன் |
| வருவம் | வருவன் |
| வாரலம் | வாரலன் |
| துஞ்சிலம் | துஞ்சிலன் |
| இலம் | இலன் |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இந்நிலையினை நன்கு விளக்கும். -அம் மிலிருந்து -அன் தோன்றிய நிலைமை மிகப் பழங் காலத்திலேயே நடந்திருக்க வேண்டும் என்றும் கருதலாம். எனவேதான் பழந்தமிழ் இலக்கியங்களிலேயே -அன் ஆட்சி பெற்றுள்ளது. வந்தனென் போன்ற சொற்களில் காணப்படும் -அன் சாரியை கெட, எகரம் நீண்ட நிலையில்தான் -ஏன் உருவாயிற்று என எண்ணுகின்றனர். ஆனால் யான் என்ற தன்மை ஒருமைப் பெயரில் காணப்படும் நெடிலே -ஏன் என்பதன் தோற்றத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் கருதலாம். வந்த+யான் என்ற புணர்ச்சியே வந்தேன் என்ற சொல்லாக உருவாகியிருக்கலாம் எனவும் கருதலாம்.

-ஏன், -என் ஆகிய இரு விகுதிகளில் -ஏன் விகுதியே பழந் தமிழ் இலக்கியங்களில் அதிகமாகப் பயின்று வருகிறது. புற நானூற்றில் -ஏன் ஐம்பத்தொன்பது இடங்களில் வர, -என்

முப்பத்தாறு இடங்களில் மட்டுமே வருவது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். காலப்போக்கில் -ஏன் விகுதியே பெரும்பான்மை யான இடங்களில் வந்து இறுதியில் அதுவே நிலைபெற்று நிற்கக் காணுகிறோம்.

### 4.1.6 -ø (-இசின்)

தன்மை ஒருமை காட்டும் சொற்களாகப் பல -இசின் ஈற்றுச் சொற்கள் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் நுவன்றிசின் ஆகிய சொற்கள் உள்ளன. இவை தன்மை ஒருமை காட்டுவனவாக உள்ளன. இவற்றைப் போன்றே பழந்தமிழ் இலக்கியங்களிலும் இச்சொற்கள் பல வரு வதைக் காணலாம். பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய முன்பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் இவை வந்துள்ளன.

-இசின் என்பதைத் தனியொரு தன்மை ஒருமை விகுதி யாகக் கொள்வர் சிலர் (Chithira Puthira Pillai, 1983). ஆனால் இது பொருந்துமா என்பது ஆராய்தற்குரியது.

#### 4.1.6.1 தொல்காப்பியம்

தொல்காப்பியம் தன்மை ஒருமை விகுதி பற்றி பேசும் போது இதுபற்றிக் குறிப்பிடுவதில்லை. ஆனால் இடையியலில் பலவேறு அசைநிலை பற்றிக் கூறும்போது,

> "மியா இக மோ மதி இகும் சின் என்னும்
> ஆவயின் ஆறும் முன்னிலை அசைச் சொல்" (759)

என்றும்,

> "இகுமும் சின்னும் ஏனை இடத்தொடுந்
> தகுநிலையுடைய என்மனார் புலவர்" (760)

என்றும், 'சின்' பற்றிக் குறிப்பிடுவதைக் காணலாம். தொல் காப்பியர் 'சின்' எனக் கூறுவது 'இசின்' என நாம் குறிப்பிடுவதை யேயாகும். எனவே தொல்காப்பியர் கருத்துப்படி இது ஒரு அசை என்பதும், முன்னிலையில் இது பயின்று வரும் என்பதும், எனினும் தன்மையிலும், படர்க்கையிலும் இது வருதல் உண்டு என்பதும் விளங்கும்.

### 4.1.6.2 மூன்றிடம்

பழந்தமிழ் நூல்களிலும் இது முன்னிலையிலும், தன்மையி லும், படர்க்கையிலும் வருதல் காண்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| என்றிசின் | என்கிறாய் | அகம் | 375-2 |
| கேட்டிசின் | கேட்டேன் | புறம் | 150-24 |
| பெற்றிசின் | பெற்றான் | புறம் | 11-9 |

என வருதல் காண்க. பழந்தமிழ் இலக்கியங்களில் மூன்று இடங் களில் இது வரினும் முன்னிலையிலும் (ஏவல் உட்பட), தன்மை யிலுமே அதிகமாக வந்துள்ளது. முன்னிலையில் முப்பத்தெட்டு இடங்களிலும், தன்மையில் முப்பத்தொன்பது இடங்களிலும் உள்ளன. முன்னிலையில் முப்பத்தாறு இடங்கள் ஏவலாக உள்ளன. படர்க்கையில் இது ஆறு இடங்களில் காணப்படு கின்றது.

### 4.1.6.3 அசைச்சொல்

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களிலும் இது வருவதால்தான் இதனைத் தனியொரு விகுதியாகக் கொள்ளாமல் அசை எனக் கொண்டார் தொல்காப்பியர் எனக் கருதலாம். இது பற்றிப் பேசும் மீனாட்சிசுந்தரனும் (1965:29) இதனை இசின் என்று குறிப்பிடுவதுடன் இது ஒரு அசை (expletive) என்றே குறிப்பிடுவார். இதே நிலையை இன்னும் பலரிடமும் (Balasubramanian, 1981) காணமுடியும்.

இசின் என்பதை அசையாகக் கொண்டால் நுவன்று, கண்டு போன்ற சொற்களே எஞ்சி நிற்கும். இந்நிலையில் இவை எல்லா இடங்களிலும் வருகின்ற நிலையில் மூவிடத்திற்கும் பொதுவாக வருகின்றன எனக் கொள்ளலாம்.

### 4.1.6.4 -ø

சிலர் -ø விகுதி எனக் கொள்ளுவர். இவ்வீற்றுச் சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வருவன. மேலும் முன்னிலையில் இவை ஏவலிலும் வருகின்றன. தன்மையில் இவற்றை

வந்து + Ø + இசின்

எனப் பிரிக்கலாம்.

இத்தகைய சொற்கள் அனைத்துமே இறந்தகாலம் காட்டும் இடைநிலைகளைக் கொண்டே வருகின்றன. ஒருசில இடங்களில் உரையாசிரியர்கள் எதிர்காலத்தில் பொருள் எழுதினும் அவற்றையும் இறந்தகாலமாகக் கொள்ளுவதில் தவறில்லை. ஆனால் ஏவல் வினைகளை எதிர்காலவினைகளாகவே கொள்ளவேண்டும். இதுவே இதனை ஒரு துணை வினையோ என எண்ண இடம் கொடுத்தது (வரதராசன், 1947; இஸ்ரேல், 1973) என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| வந்திசின் | வந்தேன் | பதி | 15-15 |
| தெளிந்திசின் | தெளிந்திருக்கின்றேன் | ஐங் | 466-5 |
| அயர்ந்திசின் | விரும்பியுள்ளேன் | அகம் | 147-10 |
| அறிந்திசின் | அறிந்துகொண்டேன் | நற் | 278-6 |
| உவந்திசின் | மகிழ்ந்தேன் | குறு | 351-1 |
| கேட்டிசின் | கேட்டேன் | புறம் | 150-24 |
| ஆன்றிசின் | அமைந்தேன் | பத்து | 4-34 |

இத்தகைய இசின் ஈற்றுச் சொற்கள் பின்பழந்தமிழ் நூல்கள் எதிலும் இல்லை என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

இவ்வகை நிலையை இசின் எனக் கருதுவதா அல்லது சின் எனக் கருதுவதா என்ற எண்ணம் அறிஞர்களிடையே உண்டு. முன்னிலையில் வந்தி+சின் எனவும், பிற இடங்களில் வந்து+இசின் எனவும் எடுக்கலாம் என்பது இளையபெருமாளின் (1964) முடிபு. இது பொருத்தமாகவே உள்ளது.

## 4.2 முடிபு

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்றுவரும் ஆறு தன்மை ஒருமை விகுதிகளில் -ஏன் விகுதியே மிகப் பெரும்பான்மையாகப் பயின்று வருகிறது என்பதும், -Ø (-இசின் ஈறு) முன்பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமே வந்து,

பின்பழந்தமிழ் இலக்கியங்களில் முற்றிலுமாக மறைந்துவிட்டது என்பதும், -என், -அல், -கு ஆகிய விகுதிகள் முன்பழந்தமிழில் அதிக எண்ணிக்கையிலும் பின்பழந்தமிழில் எண்ணிக்கையில் குறைந்தும் வந்து பின்னர் மறைந்துவிட்டன என்பதும் தெளிவாக விளங்கும். -அன் விகுதி பழந்தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் வரவு எண்ணிக்கையில் (frequency) கூடுதல், குறைவின்றி வந்து, இடைக்காலத் தமிழிலும் இதே நிலையினில் வரத் தற்காலத் தமிழில் மறைந்துவிட்டதைக் காண்கிறோம். -ஏன் விகுதியே இறுதியில் நின்று நிலைபெற்று இன்றையத் தமிழில் வழக்கிலிருக்கும் ஒரே விகுதியாக ஆட்சிபெற்று விட்ட நிலையைக் காண்கிறோம்.

பல்வேறு விகுதிகளின் பகிர்விலும் பல உண்மைகளைக் காணலாம். -ஏன், -என் ஆகிய விகுதிகள் பழந்தமிழில் அதிகமாக வரினும் அவற்றின் பகிர்வில் வேறுபாடுகள் உள்ளன. -ஏன், -என் ஆகியவற்றில் -ஏன் பெரும்பாலும் -ø- எதிர்மறைக்குப் பின்னரே முன்பழந்தமிழில் வருவதும், ஆனால் பின்பழந்தமிழில் கால இடைநிலைகளுக்குப் பின்னர் அதிகமாக வருவதும் குறிப்பிடத் தக்கன. இது முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ் பகுப்பிற்குத் துணை செய்வதாக உள்ளது. இதுபோன்றே -என், -அன் ஆகியவை பொதுவாகப் பதில்நிலை வழக்கில் வரினும் -அன் இறப்பில்காலத்தில் அதிகமாக வருவதும், -என் இறந்தகாலத்தில் அதிகமாக வருவதும் இவற்றிடையே உள்ள வேற்றுமையைக் காட்டும்.

## 4.3 பட்டியல்கள்

### 4.3.1 பட்டியல் 1 : தன்மை ஒருமை விகுதிகள்

| | -ஏன் | -என் | -அல் | -கு | -அன் | -ø (-இசின்) |
|---|---|---|---|---|---|---|
| பதி | 3 | 8 | 3 | 10 | 1 | 8 |
| ஐங் | 16 | 19 | 10 | 6 | 1 | 1 |
| அகம் | 37 | 38 | 12 | 13 | 8 | 6 |
| நற் | 61 | 17 | 18 | 13 | 19 | 9 |
| குறு | 32 | 28 | 9 | 10 | 5 | 5 |
| புறம் | 59 | 36 | 19 | 28 | 13 | 9 |
| பத்து | 4 | 2 | 3 | — | — | 1 |
| பரி | 8 | — | — | 4 | — | — |
| கலி | 193 | 27 | 23 | 12 | 7 | — |
| குறள் | 43 | — | 5 | 1 | 7 | — |
| சிலம்பு | 99 | 4 | 5 | 7 | 11 | — |
| மணி | 144 | 1 | 6 | 5 | 15 | — |

4.3.2 பட்டியல்; 2 -ஏன்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | | | நிகழ் காலம் | எதிர்மறை | | | | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -இ- | பிற | -(ப்)ப்- | -வ்- | -உ- | -க்- | -கின்று- | -Ø- | -அல்- | -ஆத்- | இ.கா.வி. + -இல் | வி. அடி. + -இல் | |
| பதி | — | — | 1 | — | — | — | — | 1 | — | — | — | — | 1 |
| ஐங் | — | 6 | — | — | — | — | — | 6 | — | — | — | — | 4 |
| அகம் | — | 3 | — | — | — | — | — | 23 | — | 1 | — | — | 7 |
| நற் | — | 4 | 2 | 6 | 2 | — | — | 28 | 2 | 1 | — | — | 16 |
| குறு | — | 3 | — | 9 | — | — | — | 13 | — | 1 | — | — | 6 |
| புறம் | 1 | 9 | — | 4 | — | — | — | 27 | 2 | — | — | — | 16 |
| பத்து | — | 1 | — | 4 | — | — | — | 1 | 1 | — | — | — | 1 |
| பரி | — | 4 | — | — | — | — | — | 1 | — | — | 1 | — | 2 |
| கலி | — | 50 | 17 | 45 | 3 | 1 | — | 29 | 6 | 2 | 1 | 1 | 38 |
| குறள் | — | 15 | 5 | 5 | — | — | — | 11 | — | — | — | — | 7 |
| சிலம்பு | — | 50 | 3 | 4 | — | 4 | — | 21 | — | 2 | 1 | 1 | 13 |
| மணி | — | 76 | 1 | 14 | — | 8 | 1 | 17 | — | — | 4 | 3 | 20 |

4,3.3 பட்டியல் 3 : -என்

| | இறந்தகாலம் | | | இறப்பில்காலம் | | | | | எதிர் மறை | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -த்த்- | -ப்- | -கிற்ப- | -வ்- | -கு- | -வ்+அன்- | -அல்- | |
| பதி | 8 | — | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | 9 | — | — | — | — | 3 | 4 | — | 1 | 2 |
| அகம் | 13 | 3 | 1 | 1 | — | 5 | 4 | 1 | 6 | 4 |
| நற் | 5 | 4 | — | — | — | 3 | 5 | — | — | — |
| குறு | 9 | 2 | — | 2 | — | 1 | 1 | — | 3 | 10 |
| புறம் | 24 | 1 | — | — | — | 2 | 3 | — | 3 | 3 |
| பத்து | 2 | — | — | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — | — | — | — |
| கலி | 2 | 4 | — | 9 | 1 | 4 | 2 | — | 5 | — |
| குறள் | — | — | — | — | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | 1 | — | 3 | — | — | — | — | — | — |
| மணி | — | — | — | — | — | 1 | — | — | — | — |

### 4.3.4 பட்டியல் 4 : -அல்

| | இறப்பில் காலம் |
|---|---|
| பதி | 3 |
| ஐங் | 10 |
| அகம் | 12 |
| நற் | 18 |
| குறு | 9 |
| புறம் | 19 |
| பத்து | 3 |
| பரி | — |
| கலி | 23 |
| குறள் | 5 |
| சிலம்பு | 5 |
| மணி | 6 |

### 4.3.5 பட்டியல் 5 : -கு

| | வினை அடிகள் | -அல்- |
|---|---|---|
| பதி | 10 | — |
| ஐங் | 6 | — |
| அகம் | 13 | — |
| நற் | 13 | — |
| குறு | 9 | 1 |
| புறம் | 28 | — |
| பத்து | — | — |
| பரி | 4 | — |
| கலி | 12 | — |
| குறள் | 1 | — |
| சிலம்பு | 7 | — |
| மணி | 5 | — |

4 3.6 பட்டியல் 6 : -அன்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | | எதிர்மறை | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -ப்- | -வ்- | -கு- | -அல்- | -இல்- | |
| பதி | — | — | — | — | — | — | — | 1 |
| ஐங் | — | 1 | — | — | — | — | — | — |
| அகம் | — | — | — | 1 | 1 | 2 | — | 4 |
| நற் | 2 | — | 1 | 4 | 2 | 4 | 1 | 5 |
| குறு | 3 | — | — | 1 | — | 1 | — | — |
| புறம் | 9 | — | — | 2 | 1 | — | 1 | — |
| பத்து | — | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — | — |
| கலி | — | — | 1 | 4 | — | — | — | 2 |
| குறள் | — | — | 1 | 3 | 1 | — | — | 2 |
| சிலம்பு | 4 | — | 1 | 1 | 2 | — | — | 3 |
| மணி | — | 1 | — | 2 | 12 | — | — | — |

பொதுவாக விகுதிகள் பதிலிடுபெயர்களைப் பிரதிபலித்து நிற்கின்றன என்றும், அவை காட்டும் வேறுபாடுகளை விகுதிகளும் காட்டும் என்றும் முன்னர்க் குறிப்பிடப்பட்டது.

தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்கள் திணை காட்டுவது இல்லை. இதைப் போன்றே தன்மைப் பன்மை விகுதிகளும் திணை காட்டுவதில்லை. எண் மட்டுமே காட்டி நிற்கும். யாம், யாங்கள், நாம் ஆகிய பதிலிடுபெயர்கள் திணை காட்டாதது போன்று -எம், -ஏம், -அம் போன்ற விகுதிகளும் திணை காட்டுவதில்லை.

தன்மைப் பன்மைப் பதிலிடுபெயர்களில் உளப்பாட்டுப் பன்மை, விலக்கீட்டுப் பன்மை என்ற வேறுபாடு உள்ளது. ஆனால் இவ்வேறுபாடு விகுதிகளில் உள்ளனவா என்பது ஆராய்தற்குரியது. பொதுவாக இலக்கணிகள் இவ்வேறுபாடு விகுதிகளிலும் பிரதிபலிக்கின்றது என்று கருதுகின்றனர். இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்களும், நன்னூலார் போன்ற இலக்கணிகளும் இத்தகைய வேறுபாடுகள் உள்ளன எனக் கருதுகின்றனர். நன்னூலார்,

"அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை" (332)

எனக் கூறிப்போந்தார். இத்தகைய நிலை பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லை என்றே தோன்றுகின்றது. இது பற்றிப் பின்னர்க் காண்போம்.

ஆனால் இன்றையத் தமிழில் இத்தகைய வேறுபாட்டினைக் காணமுடிவதில்லை.

நாம் வந்தோம்
நாங்கள் வந்தோம்

என ஓம் விகுதி இருவகைத் தன்மைப் பன்மைப் பதிலிடுபெயர்களையும் எடுத்து வருதல் காணத்தக்கது. இதனால்தான்

பதிலிடுபெயரில் காணப்படும் எல்லாப் பண்புகளும் விகுதிகளில் காணப்படவேண்டியது இல்லை என்று முன்னர்க் கூறப்பட்டது.

### 5.0.2 பழந்தமிழ்த் தன்மைப் பன்மை விகுதிகளும் தொல்காப்பியமும்

பழந்தமிழில் -ஏம், -அம், -ஆம், -எம், -கும், -டும், -தும் -இகும், -றும், -ஓம் ஆகிய பத்து விகுதிகள் தன்மைப் பன்மை விகுதிகளாகப் பயன்படுகின்றன (பட்டியல் 1). தன்மைப் பன்மை விகுதிகளைக் கூறவந்த தொல்காப்பியர்,

"அவைதாம்,
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வருஉங் க ட த ற என்னும்
அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே" (687)

என -அம், -ஆம், -எம், -ஏம், -கும், -டும், -தும், -றும் என எட்டு விகுதிகளை இச்சூத்திரத்தில் கூறிச் செல்லுவார். -ஓம் விகுதி இங்குக் குறிப்பிடப்படவில்லை. ஆனால்,

"அவற்றுள்,
பன்மை உரைக்குந் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கில் திரிபவை உளவே" (694)

என்ற சூத்திரத்தின் வாயிலாக இவ்விகுதி பற்றிப் பேசுவார் தொல்காப்பியர் எனத் தெய்வச்சிலையார் கருதுவார். இது பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

இவை தவிர -இகும் ஈற்றுச் சொற்கள் பற்றியும் தொல் காப்பியம் குறிப்பிடும் (சூத். 759). இச்சொற்களும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

### 5.0.3 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியத்தில் -ஆம் விகுதி மட்டுமே வந்துள்ளது.
மொழிவாம் தொல் (1610)

### 5.0.4 பெரும்பான்மை விகுதி

மேலே காட்டிய பத்து விகுதிகளில் -அம், -ஏம் ஆகிய இரு விகுதிகள் பழந்தமிழில் மிகப் பெரும்பான்மையாக வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இதனையடுத்து -தும், - ஆம் ஆகிய விகுதிகள் பயின்று வருதல் காணலாம். -ஓம் பழங்கால இலக்கியங்களில் மிகமிகக் குறைவாகவே உள்ளது (ஐங் 1, புறம் 1, சிலம்பு 10, மணி 2) என்பதும், ஆனால் காலப்போக்கில் இதுவே நிலைபெற்ற விகுதியாக மாறிவிட்டது என்பதும், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ், கல்வெட்டுத் தமிழ் ஆகியவற்றில் எல்லாம் இவ்விகுதி மிக அதிகமாகப் பயின்று வருகிறது என்பதும் தமிழ்மொழி வரலாற்றினை ஆய்வோருக்கு மிக எளிதில் தென்படும்.

இவ் விகுதிகளில் -அம், -ஆம், -கும், -டும், -தும், -றும் என்பன உளப்பாட்டுத் தன்மையினையும், -எம், -ஏம் என்பன விலக்கீட்டுத் தன்மையினையும் காட்டும் எனக் கருதுவர் பலர். இதுபற்றித் தமிழ் இலக்கண வரலாற்றில் பல்வேறு நிலையில் பல்வேறு அறிஞர்கள் பலபடக் கூறியிருக்கக் காணலாம். இது பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

பழந்தமிழில் சில இடங்களில் -ஏம், -அம் ஆகிய விகுதிகள் துணைநிலை வழக்காக வருதல் உண்டு. -ஏம் எதிர்மறையைக் காட்டும் சூனிய உருபுக்குப் (zero morph) பின்னரும் (வாரேம்), -அம் விகுதி -அன்- சாரியைக்குப் பின்னரும் வருதல் பெரும் பான்மை.

## 5.1 விகுதிகள்

### 5.1.1 -ஏம்

பழங்காலத் தமிழில் அதிகமாக வரும் விகுதிகளில் இதுவும் ஒன்றாகும். புறநானூற்றில் நாற்பத்தொரு (பன்மை 30, உயர்வு ஒருமை 11) இடங்களிலும், கலித்தொகையில் நாற்பத் தொன்பது (பன்மை 18, உயர்வு ஒருமை 31) இடங்களிலும் இது வந்துள்ளது. அதிகமாகக் கலித்தொகையிலும் (49), மிகக் குறைவாகப் பதிற்றுப்பத்திலும் (4) காணப்படுகிறது.

### 5.1.1.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் பலரும் இவற்றிற்கு உரிய சூழல்களைக் குறிப்பிட்டுக் கூறாவிடினும் பலவேறு எடுத்துக்காட்டுக்கள் மூலம் உணர்த்தியுள்ளனர் எனக் கருதலாம். இவ்விகுதிக்கு எடுத்துக் காட்டுக்கள் தர வந்த இளம்பூரணர் (சூத். 199. 210)

| | |
|---|---|
| உண்டேம் | உடையேம் |
| உண்ணா நின்றேம் | உண்பேம் |

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 202, 218)

| | | |
|---|---|---|
| நக்கனேம் | உரைத்தேம் | தின்றேம் |
| நக்கேம் | தின்றனேம் | அஞ்சினேம் |
| உண்டனேம் | உண்ணாநின்றனேம் | உரிஞினேம் |
| உண்டேம் | உண்கின்றனேம் | உண்ணாநின்றேம் |
| உரைத்தனேம் | கரியேம் | உண்கின்றேம் |

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 204, 217)

| | | |
|---|---|---|
| நக்கனேம் | உண்டிலேம் | உண்ணாநின்றனேம் |
| நக்கேம் | உரைத்திலேம் | உண்கின்றனேம் |
| உண்டனேம் | தின்றிலேம் | உண்ணாநின்றேம் |
| உண்டேம் | நக்கேமல்லேம் | உண்கின்றேம் |
| உரைத்தனேம் | உண்டேமல்லேம் | உண்ணாநின்றிலேம் |
| உரைத்தேம் | உரைத்தேமல்லேம் | உண்கின்றிலேம் |
| தின்றனேம் | தின்றேமல்லேம் | உண்பேம் |
| தின்றேம் | உண்குவேம் | உண்னேம் |
| நக்கிலேம் | கரியேம் | |

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 196, 203)

| | | |
|---|---|---|
| உண்டேம் | உண்பேம் | உண்ணேம் |
| உண்கின்றேம் | உடையேம் | |

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 205, 217)

| | | |
|---|---|---|
| உண்டனேம் | உடையேம் | உண்டேம் |
| உண்டிலேம் | நிலத்தேம் | உண்குவேம் |

| | | |
|---|---|---|
| உண்ணாநின்றேம் | பொன்னன்னேம் | உண்ணேம் |
| உண்கின்றேம் | கரியேம் | அல்லேம் |
| உண்ணாநின்றிலேம் | | |

ஆகியவற்றையும் தந்து செல்கின்றனர்.

இவற்றுள் சில பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படாதவை நிகழ்கால இடைநிலைகளுக்குப் பின்னர் -ஏம் விகுதி காணப்படவில்லை. இதுபோன்றே -அன்- சாரியைக்குப் பின்னரும் வருவதில்லை. ககரத்திற்குப் பின்னர் (பாடுகேம், சிலம்பு 17-22-2) -ஏம் விகுதி வரக் காண்கிறோம். உரையாசிரியர்கள் இச்சூழலில் எடுத்துக்காட்டுக்கள் தராமலே விட்டுச் சென்றுள்ளனர்.

### 5.1.1.2 சூழல்கள்

முன்னர்க் குறிப்பிட்டபடி இது பழந்தமிழ் இலக்கியங்களில் பலவேறு சூழல்களில் வருதல் காணலாம்,

1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3 -ø- எதிர்மறைக்குப் பின்னரும்
4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
5 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னரும் வரும்.

### 5.1.1.2.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வேட்டேம் | விரும்பி உறைந்தேம் | ஐங் 1-6 |
| அல்கியேம் | தங்கினேம் | அகம் 261-12 |
| விட்டேம் | விட்டேம் | நற் 15-10 |
| பாடினேம் | பாடினேம் | புறம் 144-3 |
| வாழ்த்தினேம் | வாழ்த்தினேம் | பரி 2-74 |
| உரைத்தேம் | கூறாநின்றேம் | பரி 3-10 |
| கண்டேம் | கண்டேம் | கலி 81-26 |
| விட்டேம் | துறந்தோம் | குறள் 1036 |
| (பதியுள்) பட்டேம் | (நகரத்தின்கண்) புகுந்தேம் | சிலம்பு 9-46 |
| உண்டேம் | தின்றேம் | மணி 16-121 |

பொதுவாக, இவ்விகுதி எல்லா இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும் வருதல் காணலாம். பிற சூழல்களை நோக்க இச்சூழல் மிகக் குறைவாகவே உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஐங்குறுநூற்றில் ஒன்பது (9பன்மை + 0 உ. ஒருமை) இடங்களிலும், அகநானூற்றில் இரண்டு (உ. பன்மை + 0 உ. ஒருமை) இடங்களிலும். நற்றிணையில் இரண்டு (1 பன்மை + 1 உ. ஒருமை) இடங்களிலும், குறுந்தொகையில் ஒரு (0 பன்மை + 1 உ. ஒருமை) இடத்திலும், புறநானூற்றில் இரண்டு (1 பன்மை + 1 உ. ஒருமை) இடங்களிலும், பரிபாடலில் பன்னிரண்டு (9பன்மை+3உ. ஒருமை) இடங்களிலும் கலித்தொகையில் ஒன்பது (2 பன்மை+7உ. ஒருமை)இடங்களிலும் திருக்குறளில் ஆறு (5 பன்மை + 1 உ. ஒருமை) இடங்களிலும் சிலப்பதிகாரத்தில் ஆறு (6 பன்மை + 0 உ. ஒருமை) இடங்களிலும், மணிமேகலையில் இரண்டு (2 பன்மை + 0 உ. ஒருமை) இடங்களிலும் இவ்விகுதி பயின்று வந்துள்ளது.

### 5 1.1.2.2 இறப்பில் கால இடைநிலைகளுக்குப் பின்னர்

-வ்-, -ப்-, -க்- ஆகிய கால இடைநிலைகளுக்குப் பின்னர் இவ்விகுதி வருதல் காணலாம்.

| | | |
|---|---|---|
| நுகர்கேம் | நுகருவேம் | பதி 38-13 |
| செல்வேம் | செல்வேம் | அகம் 319-15 |
| உறைவேம் | வாழ்வேம் | குறு 309-4 |
| சாவேம் | மடியக் கடவோம் | புறம் 68-12 |
| பொருவேம் | போர்புரியக்கடவோம் | பத்து 9-289 |
| பொருவேம் | போர் செய்வேம் | பரி 1-26 |
| தீர்க்குவேம் | போக்குவேம் | கலி 83-22 |
| கொள்வேம் | பெறுவேம் | குறள் 282 |
| பாடுகேம் | பாடுவேம் | சிலம்பு 17-22-2 |
| கொணர்கேம் | கொணர்வேம் | மணி 10-37 |
| துறப்பேம் | துறந்துவிடுவோம் | மணி 18-22 |

மேலே காட்டியவாறு வகரத்திற்குப் பின்னரும், பகரத் திற்குப் பின்னரும் பல்வேறு இலக்கியங்களில் இது வந்துள்ளது. இதைப்போன்றே பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் ககரத்திற்குப் பின்னர் வருதல் குறிப்பிடத் தக்கது. பதிற்றுப்பத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே வந்துள்ளது.

| | |
|---|---|
| நுகர்கேம் | பதி 38-13 |
| பாடுகேம் | சிலம்பு 17-22-2 |
| கொணர்கேம் | மணி 10-37 |

இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் -ஏம் வரினும் -அம் விகுதியே இச்சூழலில் அதிகமாகப் பயின்றுவரும். பழங் காலத் தமிழின் அமைப்பைத் தோராயமாகப் பார்ப்பினும் கூட இந்நிலை நன்குத் தெரியவரும். புறநானூற்றில் இச்சூழலில் -அம் விகுதி இருபத்தொரு இடங்களில் வர -ஏம் நான்கு இடங் களில் மட்டுமே வந்துள்ளது. இதே நிலையினைத்தான் குறுந் தொகை அகநானூறு ஐங்குறுநூறு, நற்றிணை போன்ற இலக் கியங்களிலும் காணுகிறோம். இதனைக் கீழ்வரும் பட்டியல் நன்றாகக் காட்டும்.

## இறப்பில்காலம்

| | -அம் (பன்மை + உ. ஒருமை) | -ஏம் (பன்மை + உ. ஒருமை) |
|---|---|---|
| பதி | 3 | 2 |
| ஐங் | 19 | 1 |
| அகம் | 32 | 6 |
| நற் | 24 | 1 |
| குறு | 10 | 2 |
| புறம் | 21 | 4 |
| பத்து | 4 | 1 |
| பரி | 1 | 2 |
| கலி | 13 | 14 |
| குறள் | 5 | 6 |
| சிலம்பு | 14 | 2 |
| மணி | 5 | 4 |

5.1.1.2.3 -ø- எதிர்மறைக்குப் பின்னர்

-ஏம், -ஏன் ஆகிய விகுதிகள் ஒரே மாதிரியான நிலையைக் கொண்டவை எனக் கருதப்பட்டபோதிலும் -ஏன் விகுதியைப் போல -ஏம் விகுதி எதிர்மறையில் அதிகமாக வருதலைக் காண முடியாது. பழங்கால இலக்கியங்களில் -ஏன் விகுதி எதிர்மறையில் மிக அதிகமாகப் பயின்றுவர -ஏம் மிகக் குறைவான இடங்களிலேயே எதிர்மறையில் வந்துள்ளது. பதிற்றுப்பத்து, பரிபாடல், மணிமேகலை ஆகிய நூல்களில் -ஏம் எதிர்மறையில் வராதநிலை கூடக் காண்கிறோம். இந்நிலையில் இவ்விரு விகுதிகளுக்குமிடையே உள்ள தொடர்பினைக் கீழே வரும் பட்டியல் காட்டும்.

| | -ø- எதிர்மறை (பன்மை + உ. ஒருமை) | | காலம் (பன்மை + உ. ஒருமை) | |
|---|---|---|---|---|
| | -ஏன் | -ஏம் | -ஏன் | -ஏம் |
| பதி | 1 | 0 | 1 | 2 |
| ஐங் | 6 | 6 | 6 | 10 |
| அகம் | 23 | 6 | 6 | 8 |
| நற் | 28 | 1 | 14 | 3 |
| குறு | 13 | 6 | 12 | 3 |
| புறம் | 27 | 8 | 14 | 6 |
| பத்து | 1 | 4 | 1 | 1 |
| பரி | 1 | 0 | 4 | 14 |
| கலி | 29 | 10 | 116 | 23 |
| குறள் | 11 | 3 | 25 | 12 |
| சிலம்பு | 21 | 6 | 61 | 8 |
| மணி | 17 | 0 | 100 | 6 |

-ஏன் விகுதி எதிர்மறையில் அதிகமாகப் பயின்று வர -ஏம் அதிலிருந்து பிறழ்ந்த நிலையில் உள்ளது. முன்னர்க் குறிப்பிட்டபடி பதிற்றுப்பத்து, பரிபாடல், மணிமேகலை ஆகிய நூல்களில் வாராமை காணத்தக்கது.

| | | |
|---|---|---|
| அறியேம் | அறியாதேம் | ஐங் 240-1 |
| கூறேம் | சொல்லேம் | அகம் 46-11 |

| | | |
|---|---|---|
| உறேம் | எய்தேம் | குறு 61 4 |
| பேணேம் | விரும்பேம் | புறம் 106-3 |
| விடேம் | விடேம் | பத்து 8-177 |
| காணேம் | காணாதிருந்தேம் | கலி 9-9 |
| ஒவ்வேம் | ஒவ்வேம் | குறள் 1114 |
| அறியேம் | அறிகின்றிலேம் | சிலம்பு 25-62 |

நற்றிணையில் உயர்வு ஒருமையாகவே வரக் காண்கிறோம்.

5.1.1.2.4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| (உண்குவம்) அல்லேம் | உணவுகொள்ளேம் | பதி | 58-7 |
| அல்லேம் | அல்லேம் | ஐங் | 240-1 |
| ஊரேம் | ஊரினேம் | நற் | 220-7 |
| அல்லேம் | அல்லேம் | குறு | 244-3 |
| நிழலேம் | நிழலின் கண் உள்ளேம் | புறம் | 397-27 |
| அல்லேம் | அல்லேம் | கலி | 9-9 |
| அல்லேம் | அல்லம் | மணி | 18-15 |

பத்துப்பாட்டிலும், பரிபாடலிலும் வினையாலணையும். பெய ராகவே வரக்காணலாம்.

பழங்காலத்தமிழில் காணப்படும் தன்மைப் பன்மை விகுதிகளில் -ஏம் முக்கிய விகுதிகளில் ஒன்றாகக் கருதப்படும். குறிப்பு வினையடிகளைப் பொறுத்தமட்டில் இது எல்லா விதமான குறிப்புவினையடிகளுக்குப் பின்னரும் வருதல் காணலாம்

இது பற்றிப் பேசும் சேனாவரையர் -ஏம் விகுதி -அன்- சாரியையோடு வரும் என்ற நிலையில் உண்டனேம், உண்ணா நின்றனேம் ஆகிய எடுத்துக்காட்டுக்களைத் தருவதோடு "-ஏன் அன் பெற்றும் பெறாதும் வரும்" (சூத். 202) எனக் கூறி நிற்பார். இவரை ஒட்டி நச்சினார்க்கினியரும் (சூத். 204) இவ்வெடுத்துக்காட்டுக்களைத் தருவார். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் முன்னர்க் கூறியபடி -ஏம் விகுதி -அன்- சாரியையோடு வருவதற்கு எடுத்துக்காட்டு எதுவும் காணப்படவில்லை.

இளம்பூரணர், தெய்வச்சிலையார் போன்ற உரையாசிரியர்களும் இவ்வித எடுத்துக்காட்டுகள் எதுவும் தரவில்லை.

#### 5.1.1.2.5 வினையாலணையும்பெயர் விகுதி -Ø க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வருவேம் | வருகின்ற எமக்கு | சிலம்பு 24-1-2 |
| ஆற்றாதேம் | இயற்றுதலில்லாத யாங்கள் | ஐங் 111-5 |
| மூதாளரேம் | முதுமையை உடையேம் | புறம் 245-14 |
| மனத்தேம் | மனத்தையுடைய யாங்கள் | பத்து 8-168 |
| நெஞ்சத்தேம் | நெஞ்சையுடையேம் | பரி 1-64 |
| அனையேம் (ஆகி) | போலவே யாமும் | மணி 18-22 |

### 5.1.2. -அம்

பழங்காலத் தமிழில் -அம் விகுதியும் முக்கிய விகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்விகுதியே -அன் விகுதியின் தோற்றத்திற்குக் காரணம் என முன்னர் (பார்க்க, 4.1.5.3) கண்டோம். இவ் விகுதியும் -ஏம் விகுதியுமே பழங்காலத் தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் மிகுதியாகக் காணப்படுகிற விகுதிகள். -எம் விகுதி பதிற்றுப்பத்து, பத்துபாட்டு, கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும், -ஆம் விகுதி ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலும் காணப்படுவதில்லை. -எம் விகுதி பின்பழந்தமிழ் இலக்கியம் என்று கருதப்படுகின்ற திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படாமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையினை இடைக்காலத் தமிழ் நூல்களிலும் காணலாம்.

#### 5.1.2.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு எடுத்துக்காட்டுகள் தரவந்த இளம்பூரணர் (சூத் 199)

உண்டனம் உண்ணா நின்றனம் உண்குவம்

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத் 202, 215)

| | | |
|---|---|---|
| நக்கனம் | உரைப்பம் | கலக்கினம் |
| உண்டனம் | செல்வம் | உண்ணாநின்றனம் |
| உரைத்தனம் | உண்குவம் | உண்கின்றனம் |
| தின்றனம் | உரிஞுவம் | உண்ணாக்கிடந்தனம் |
| அஞ்சினம் | கரியம் | உண்ணாவிருந்தனம் |
| உரிஞினம் | | |

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத்.204, 217)

| | | |
|---|---|---|
| நக்களம் | உரிஞினம் | உண்குவம் |
| உண்டனம் | எண்ணினம் | உரிஞுவம் |
| உரைத்தனம் | பொருநினம் | திருமுவம் |
| தின்றனம் | திருமினம் | உண்ணலம் |
| நக்கிலம் | பன்னினம் | கரியம் |
| உண்டிலம் | போயினம் | உடையம் |
| உரைத்திலம் | வாரினம் | நிலத்தம் |
| தின்றிலம் | சொல்லினம் | பொன்னன்னம் |
| நக்கனமல்லம் | மேவினம் | அல்லம் |
| உண்டனமல்லம் | எள்ளினம் | உண்ணாநின்றனம் |
| உரைத்தன மல்லம் | கலக்கினம் | உண்கின்றனம் |
| தின்றனமல்லம் | தெருட்டினம் | உண்ணாநின்றிலம் |
| அஞ்சினம் | அருத்தினம் | உண்கின்றிலம் |
| தப்பினம் | அரற்றினம் | உண்பம் |

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 196, 208)

| | |
|---|---|
| உண்டனம் | உடையம் |
| உண்கின்றனம் | உண்பம் |

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 205, 217)

| | | |
|---|---|---|
| உண்டனம் | உண்பம் | கரியம் |
| உண்டிலம் | உண்குவம் | அல்லம் |

| | | |
|---|---|---|
| உண்ணா நின்றனம் | உண்ணலம் | நல்லம் |
| உண்கின்றனம் | உடையம் | தீயம் |
| உண்ணா நின்றிலம் | நிலத்தம் | சேயம் |
| உண்கின்றிலம் | பொன்னன்னம் | அணியம் |
| செலவினம் | ஒரு நாளம் | ஓராட்டையம் |
| வரவினம் | ஊண்ணம் | ஒரு திங்களம் |

ஆகியவற்றையும் உதாரணங்களாகத் தந்துசெல்வர்.

உரையாசிரியர்கள் அனைவரும் நிகழ்கால உதாரணங்களைத் தந்து செல்கின்றபோதிலும் பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சூழலில் இவ்விகுதி காணப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 5.1.2.2 சூழல்கள்

இவ்விகுதி

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. இறந்தகால இடைநிலை -இன்- னிற்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. -அல்-, -இல்- எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னரும்
5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
6. வினையாலணையும் பெயர் விகுதி -ῤ- க்குப் பின்னரும் வரும்.

### 5.1.2.2.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

பழந்தமிழில் திருக்குறள் ஒழித்த ஏனைய எல்லா இலக்கியங்களிலும் இச்சூழலில் இவ்விகுதி வருதல் உண்டு. இச்சூழலில் -எம்- விகுதியும் வரும். இப் பண்பினைப் பிற சூழல்களிலும் காணமுடியும்.

| | | | |
|---|---|---|---|
| கண்டனம் | கண்டேம் | பதி | 23-11 |
| அறிந்தனம் | அறிந்திருக்கின்றேம் | ஐங் | 240-1 |
| என்றனம் | கூறினேம் | அகம் | 110-17 |
| இழந்தனம் | இழந்தேவிட்டேம் | நற் | 36-5 |

| | | |
|---|---|---|
| கேட்டனம் | கேட்டேம் | குறு 244-3 |
| உண்டனம் | உண்டேம் | புறம் 199-2 |
| சென்றனம் | சென்றேம் | பத்து 3-129 |
| அறிந்தனம் | அறிந்தோம் | பரி 3-62 |
| அறிந்தனம் | அறிந்தேம் | கலி 42-6 |
| அறிந்தனம் | அறிந்துள்ளேம் | சிலம்பு 22-105 |
| படர்ந்தனம் | வந்தேம் | மணி 29-36 |

முன்னர்க் குறிப்பிட்டபடி இச்சூழலில் -எம் விகுதியை விட -அம் விகுதியே அதிகமாகப் பயின்று வருகிறது. பழந்தமிழில் எழுபத்தைந்து இடங்களில் -அம் வர பன்னிரண்டு இடங்களிலேயே -எம் விகுதி வரக் காண்கிறோம்.

### 5.1.2.2.2 இறந்தகால இடைநிலை -இன் -னிற்குப் பின்னர்

இச்சூழல் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் இச்சூழலில் இவ்விகுதியைக் காணமுடிவதில்லை. ஐங்குறுநூறு, புறநானூறு ஆகிய நூல்களில் உயர்வு ஒருமையாகவே இது வருதல் காணலாம்.

| | | |
|---|---|---|
| கண்ணினம் | கருதியுள்ளோம் | அகம் 92-7 |
| அஞ்சினம் (அஞ்சல்) | அஞ்சாநின்றேம் (அஞ்சுதலைத்) | நற் 368-10 |
| எஞ்சினம் | தவிர்ந்தோம் | குறு 211-3 |
| ஏத்தினம் | ஏத்தாநின்றேம் | பரி 19-105 |
| குறுகினம் (கோலம்) | குறுகினேம் (கோலம்) | கலி 142-13 |
| தாங்கினம் | பூண்டேம் | மணி 18-23 |

### 5.1.2.2.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

இவ்விகுதி பல்வேறு இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் வரினும் ககரத்தை அடுத்து வருதலே மிகப்பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இப்பண்பினை நச்சினார்க்கினியர் (சொல்.204) பல்வேறு எடுத்துக்காட்டுக்களுடன் காட்டு

வார். மேலும் அவர் இக் ககரம் இறப்பில்காலத்தைக் காட்டுவது எனக் குறிப்பிடுவதும் நினைவுகூரத்தக்கது. பொதுவாகக் ககர ஒற்றினை இறப்பில்கால இடைநிலையாக இலக்கண நூல்கள் சொல்ளாவிடினும் இது ஒரு இறப்பில்கால இடைநிலையே. இது பற்றி முன்னரே (ஏன், ஏம் விகுதிகளின் கீழ்) குறிப்பிடப் பட்டுள்ளது.

அ) ககர ஒற்று

ககர ஒற்று -ஏம் விகுதியோடு வரினும் பொதுவாக -அம் விகுதியோடு இது எண்பது (63 பன்மை + 17 உ. ஒருமை) இடங் களில் வர (பாடுகம் கலி 41-1) -ஏம் விகுதியோடு ஐந்து (5 பன்மை + 0 உ. ஒருமை) இடங்களில் (நுகர்கேம் பதி 38-13) மட்டுமே காணப்படுகிறது. மேலும் -அம் விகுதியோடு மணி மேகலை ஒழிந்த எல்லா இலக்கியங்களிலும் வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

| | | |
|---|---|---|
| சேறுகம் | செல்கின்றோம் | பதி 49-1 |
| என்கம் | கூறுகேம் | ஐங் 235-4 |
| ஆடுகம் | விளையாடுவேம் | அகம் 312-8 |
| கடிகம் | வெருட்டுவேம் | நற் 288-9 |
| செல்கம் | செல்வேம் | குறு 114-3 |
| செல்கம் | போவேம் | புறம் 207-1 |
| அயர்கம் | நிகழ்த்துவோம் | பத்து 8-232 |
| ஏத்துகம் | ஏத்தித்தொழக் கடவேம் | பரி 15-18 |
| பாடுகம் | பாடுவேம் | கலி 41-1 |
| காண்கம் | காணக்கடவேம் | குறள் 1301 |
| பாடுகம் | பாடுவோம் | சிலம்பு 24-6-4 |

ஆ) வகர ஒற்று

| | | |
|---|---|---|
| அஞ்சுவம் | அஞ்சுவேம் | அகம் 72-10 |
| யாங்கு ஆகுவம் | எவ்வண்ணம் உய்யவல்லேம் | நற் 147-1 |
| அகவுவம் | பாடுவம் | கலி 42-8 |
| எண்ணுவம் | எண்ணுவோம் | குறள் 467 |

பெரும்பான்மையான எடுத்துக்காட்டுகளில் வகரம் குகரம் பெற்று வருதலைக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| செல்குவம் | செல்வோம் | பதி 46-14 |
| காண்குவம் | கண்டு மகிழ்வோம் | ஐங் 469-4 |
| அணிகுவம் | அணிவிப்பேம் | அகம் 340-18 |
| தவிர்க்குவம் | தவிர்க்கிற்போம் | நற் 79-10 |
| செய்குவம் | செய்வேம் | புறம் 214-1 |
| சூழ்குவம் | ஆராய்ந்து பார்ப்போம் | கலி 47-18 |
| செய்குவம் | செய்வோம் | சிலம்பு 28-179 |
| காண்குவம் | அறிந்துகொள்வேம் | மணி 16-82 |

மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளில் வகர ஒற்று குகரத்திற்குப் பின்னர் வருதல் கண்கூடு. செய்குவம், காண்குவம் போன்றவை இப்பண்பினைக் காட்டும். நச்சினார்க்கினியரும் (சொல். 204) இது பற்றிக் குறிப்பிடுவது காணலாம். "இவை எதிர்காலம் பற்றி வருங்கால் பகரமும் வகரமும் பெற்றுவரும். வகரம் ஏற்புழி குகரமும் உகரமும் அடுத்து நிற்கும்" என்பார் அவர்.

ககர இடைநிலை -அம் விகுதியோடு மிக அதிகமாகப் பயின்று வருகிறது எனக் கூறினோம். இந்நிலையில் இது வகர ஒற்றுடன் அதிகமான இடங்களில் வருவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதனைக் கீழ்வரும் பட்டியல் காட்டும்.

| | -அம் (பன்மை + உ.ஒருமை) | | -ஏம் (பன்மை + உ.ஒருமை) | |
|---|---|---|---|---|
| | -க்- | ஏனையவை | -க்- | ஏனையவை |
| பதி | 1 | 2 | 1 | 1 |
| ஐங் | 12 | 7 | 0 | 1 |
| அகம் | 14 | 18 | 9 | 6 |
| நற் | 17 | 7 | 0 | 1 |
| குறு | 8 | 2 | 0 | 2 |
| புறம் | 11 | 10 | 0 | 4 |

| | -அம் (பன்மை + உ ஒருமை) -க்- | ஏனையவை | -ஏம் (பன்மை + உ.ஒருமை) -க்- | ஏனையவை |
|---|---|---|---|---|
| பத்து | 1 | 3 | 0 | 1 |
| பரி | 1 | 0 | 0 | 2 |
| கலி | 7 | 6 | 0 | 14 |
| குறள் | 2 | 3 | 0 | 6 |
| சிலம்பு | 6 | 8 | 1 | 1 |
| மணி | 0 | 5 | 3 | 1 |

### 5.1.2.2.4 -அல்-, -இல்- எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னர்

(அ) -அல்-

-அம் விகுதி -அல்- எதிர்மறைக்குப் பின்னர் வருதல் உண்டு. பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை ஒழிந்த பிற இலக்கியங்கள் அனைத்திலும் இவ்விகுதி இச்சூழலில் வருதல் காணலாம். அகநானூறு, நற்றிணை, கலித்தொகை ஆகிய நூல்களில் உயர்வு ஒருமையிலேயே வரக் காண்கிறோம். நச்சினார்க்கினியரும் (சூத். 204) 'உண்ணலம்' என்ற எடுத்துக்காட்டினைத் தந்து நிற்பார். இவரையொட்டித் தெய்வச்சிலையாரும் (சூத். 196) அதே 'உண்ணலம்' என்ற உதாரணத்தைக் காட்டுவார்.

| | | |
|---|---|---|
| பிரியலம் | பிரிந்துறையேம் | ஐங் 235-4 |
| துஞ்சலம் | உறங்காதிரா நின்றோம் | குறு 138-1 |
| வேண்டலம் | விரும்பேம் | புறம் 205-2 |
| பிரியலம் | பிரியேம் | குறள் 1315 |

(ஆ) -இல்-

சிலம்பில் கண்டிலம் (உயர்வு ஒருமை) என ஒரு சொல்லும், மணிமேகலையில் கண்டிலம், அறிந்திலம் என இரண்டு சொற்களும் காணப்படுகின்றன. இவற்றை ஒரு சொல்லாகவோ

7

அல்லது இரு சொற்களாகவோ எடுத்துக் கொள்ளலாம். கண்டு + இலம் எனப் பிரித்து இரு சொல்லாகக் கருதுவதில் தவறு எதுவுமில்லை. எனினும் காலப்போக்கில் இது ஒரு சொல்லாகவே பயன்பட்டது என எண்ணலாம். மலையாளத்தில்

கண்டில்லா வந்நில்லா

போன்ற எதிர்மறைச் சொற்கள் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். முன்னர்க் குறிப்பிட்டதுபோல பழந்தமிழ் இலக்கியங்களில் சிலம்பிலும், மணிமேகலையிலும் மட்டுமே இச்சொற்கள் காணப்படுகின்றன. சிலம்பில் உயர்வு ஒருமைச் சொல்லாகவே வருகிறது.

| | | |
|---|---|---|
| கண்டிலம் | கண்டிலேம் | மணி 29-81 |
| அறிந்திலம் | அறிகின்றிலேம் | மணி 22-127 |

### 5.1.2.2.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய இரு நூல்களைத் தவிர ஏனைய இலக்கியங்கள் அனைத்திலும் இச்சூழலில் இவ்விகுதி காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| உடைமையம் | பெற்றுள்ளேம் | ஐங் 266-3 |
| உயிரம் | உயிரினம் | அகம் 12-5 |
| அளியம் | இரங்கத்தக்க தன்மையேம் | நற் 368-10 |
| கடுங்குரையம் | கடுமையினை உடையேம் | குறு 350-2 |
| உடையம் | உடையேம் | புறம் 72-5 |
| இலம் | இல்லேம் | பத்து 10-552 |
| அல்லம் | அல்லம் | கலி 62-18 |
| நுண்ணியம் | நுண்ணறிவுடையேம் | குறள் 710 |
| ஆற்றலம் | வலிமையை உடையேம் | சிலம்பு 26-154 |
| அலம் | அல்லேம் | மணி 10-36 |

### 5.1.1.2.6 வினையாலணையும் பெயர் விகுதி -ø-க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| சிறந்தனம் (ஆதல்) | சிறந்தேமாதல் | கலி 5-5 |
| மீள்குவம் | மீண்டுசெல்வேம் | நற் 313-9 |

| | | |
|---|---|---|
| இன்னம் (ஆகவும்) | இந்நிலையினமாகவும் | அகம் 85-3 |
| இனையம் | இத்தன்மையேம் | நற் 349-5 |
| நெஞ்சினம் | மனத்தேம் | நற் 58-9 |
| அரியம் | அரியேமாய் | குறு 178-6 |
| (ஆகிய காலை) | (இருந்தகாலத்தே) | |
| பெற்றியம் | பெறுந்-தன்மையை உடையேம் | மணி 26-59 |

### 5.1.3 -எம்

முன்னர்க் குறிப்பிட்டபடி -எம் விகுதி முன்பழந்தமிழ் நூல்களிலேயே பரவலாகக் காணப்படுகின்றது. இந்நூல்களிலும், பதிற்றுப்பத்திலும், பத்துப்பாட்டிலும் இவ்விகுதியின் வழக்கினைக் காணமுடிவதில்லை. ஐங்குறுநூற்றில் எட்டு இடங்களிலும், அகநானூற்றில் மூன்று இடங்களிலும், நற்றிணையில் ஒரே ஒரு இடத்திலும், குறுந்தொகையில் மூன்று இடங்களிலும், புறநானூற்றில் ஏழு இடங்களிலும் இவ்விகுதி வந்துள்ளது.

| | -அம் (பன்மை + உ. ஒருமை) | -எம் (பன்மை + உ. ஒருமை) |
|---|---|---|
| பதி | 7 | 0 |
| ஐங் | 49 | 8 |
| அகம் | 80 | 3 |
| நற் | 71 | 1 |
| குறு | 28 | 3 |
| புறம் | 53 | 7 |
| பத்து | 9 | 0 |
| பரி | 3 | 2 |
| கலி | 24 | 0 |
| குறள் | 19 | 0 |
| சிலம்பு | 19 | 0 |
| மணி | 13 | 0 |

#### 5.1.3.1 உரையாசிரியர்கள்

தொல்காப்பிய உரையாசிரியர்கள் உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்குவெம் போன்ற எடுத்துக்காட்டுக்களைத்

தருவார்கள். மேலும் இவ்விகுதி படர்க்கையாரையும் உளப்படுக்கும் என உரையாசிரியர்கள் கருதுவர்.

"எம் ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுக்கும்"

என்பது இளம்பூரணம். இவ்விகுதிக்கு எடுத்துக்காட்டுக்கள் தர வந்த இளம்பூரணர் (சூத். 199)

உண்டனெம் உண்குவெம் உண்ணாநின்றனெம்

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 202, 215)

நக்கனெம் அஞ்சினெம் தின்றனெம்
உண்டனெம் உரிஞினெம் உண்கின்றனெம்
உரைத்தனெம் உண்ணாநின்றனெம் கரியெம்

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 204, 217)

நக்கனெம் உரைத்தனெமல்லெம் நக்கனெமல்லெம்
உண்டனெம் தின்றனெமல்லெம் உண்டனெமல்லெம்
உரைத்தனெம் உண்ணாநின்றனெம் உண்குவெம்
தின்றனெம் உண்கின்றனெம் உண்ணலெம்
நக்கிலெம் உண்ணாநின்றிலெம் கரியெம்
உண்டிலெம் உண்கின்றிலெம்
உரைத்திலெம் உண்பெம்
தின்றிலெம்

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 196)

உண்டனம் உண்பெம்
உண்கின்றனெம் உண்ணலெம்

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 205, 217)

உண்டெம் உண்கின்றிலெம் நிலத்தெம்
உண்டிலெம் உண்பெம் பொன்னன்னெம்
உண்ணா நின்றெம் உண்குவெம் கரியெம்
உண்கின்றெம் உண்ணெம் அல்லெம்
உண்ணா நின்றிலெம் உடையெம்

ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தந்து செல்வர்.

-எம் விகுதிக்கு எடுத்துக்காட்டுக்கள் தரும் உரையாசிரியர்கள் நிகழ்கால எடுத்துக்காட்டுக்களையும் தந்து செல்வர். நச்சினார்க்கினியரும், கல்லாடனாரும் எதிர்மறை விகுதி -இல்- லுக்குப் பின்னரும், தெய்வச்சிலையார் -அல்- லுக்குப் பின்னரும் இவ் விகுதிக்கு எடுத்துக்காட்டுக்கள் தந்து செல்வர். கல்லாடனார் -ஏ- எதிர்மறைக்குப் பின்னரும் எடுத்துக்காட்டு தருவார். பழந் தமிழ் இலக்கியங்களில் இச்சூழல்களில் இவ்விகுதி காணப்படாமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

### 5.1.3.2 சூழல்கள்

இவ்விகுதி

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. குறிப்பு வினையமகளுக்குப் பின்னரும்

வரும். வினையாலணையும் பெயரில் இவ்விகுதி காணப்பட வில்லை. இந்நிலையில் -எம். -அம் ஆகிய விகுதிகள் பெரும் பாலும் பதில்நிலைவழக்காக இருப்பதைக் காணலாம். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் இவ்விரு விகுதிகளில் -அம் விகுதியே அதிகமாகப் பயின்று வருவது தெளிவாகும். புறநானூற்றில் ஐம்பத்துமூன்று இடங்களில் -அம் விகுதி வர ஏழு இடங்களில் மட்டுமே -எம் விகுதி வந்துள்ளது. இந்நிலை யினை எல்லா இலக்கியங்களிலும் காணமுடியும். மேலும் -எம் விகுதி பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, கலித்தொகை, திருக்குறள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் வாராமை யும் இங்குக் குறிப்பிடத்தக்கது. பன்னிரண்டு இலக்கியங்களில் ஆறு இலக்கியங்களில் மட்டுமே இதனைக் காண முடிகிறது. பின்பழந்தமிழ் இலக்கியங்கள் ஆகிய கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இது காணப் படுவதில்லை என்பது நினைவுகூரத்தக்கது. இதனையும் பின் பழந்தமிழின் ஒரு பண்பாகக் கருதலாம்.

### 5.1.3.2.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பரிபாடல் ஆகிய நூல்களில் மட்டுமே இதற்குரிய எடுத்துக்காட்டுக்கள் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கண்டனம் | கண்டுவந்தேம் | ஐங் 390-4 |
| நின்றனெம் | நின்றேம் | அகம் 48-16 |
| ஒத்தனெம் | தகுதிப்பாடு உடையேம் | நற் 380-6 |
| உற்றனெம் | அடைவேம் ஆயினோம் | குறு 61-6 |
| இருந்தனெம் | இருந்தேம் | புறம் 381-4 |
| தொழுதனெம் | கும்பிட்டேம் | பரி 13-61 |

### 5.1.3.2.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

ஒருசில இடங்களில் மட்டுமே இச்சூழலில் இவ்விகுதி காணப்படுகிறது. இதே நிலையினைத்தான் இடைக்காலத் தமிழிலும் காணுகிறோம். அகநானூறு, புறநானூறு ஆகிய இரு நூல்களில் மட்டுமே இதன் வழக்கு உள்ளது. அகநானூற்றில் உயர்வு ஒருமையிலேயே வரக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| சுருக்கினெம் | கட்டினேம் | புறம் 206-10 |

### 5.1.3.2.3 இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர்

வகரம் மட்டுமே இச்சூழலில் காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் ஐங்குறுநூறு, குறுந்தொகை ஆகியவற்றில் மட்டுமே இவ்விகுதி இச்சூழலில் காணப்படுகிறது. இவையும் உயர்வு ஒருமையாகவே உள்ளன. -எம் விகுதி பற்றிப் பேசும் இலக்கண உரையாசிரியர்கள்

| | |
|---|---|
| உண்ணாநின்றனெம் | (இளம். 199) |
| உண்கின்றனெம் | (சேனா. 202, தெய்வ. 196) |

போன்ற எடுத்துக்காட்டுக்களையும் தருவர். பழந்தமிழில் இவை காணப்படுவதில்லை.

### 5.1 3 2.4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

அகநானூற்றில் மட்டுமே ஒரு இடத்தில் இதற்குரிய எடுத்துக்காட்டு காணப்படுகிறது.

முகத்தெம் முகத்தேம் அகம் 110-15

### 5.1.4 -ஆம்

தன்மைப் பன்மை விகுதிகளில் -ஆம் விகுதி ஒன்றாகும். இது ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்கள் ஒழிந்த ஏனைய பத்து இலக்கியங்களிலும் பயின்று வருதல் காணலாம். மணிமேகலையில் உயர்வு ஒருமையாகவே வரக் காணலாம்.

### 5.1.4.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு உதாரணம் கூறவந்த இளம்பூரணர் (சூத் 199, 210)

| | |
|---|---|
| உண்டாம் | உண்பாம் |
| உண்ணாநின்றாம் | உடையாம் |

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 202, 215)

| | | |
|---|---|---|
| நக்காம் | அஞ்சினாம் | தின்றாம் |
| உண்டாம் | உண்ணநின்றாம் | கரியாம் |
| உரைத்தாம் | உண்கின்றாம் | |

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 204, 217)

| | |
|---|---|
| நக்காம் | உரைத்தாமல்லாம் |
| உண்டாம் | தின்றாமல்லாம் |
| உரைத்தாம் | உண்ணாநின்றாம் |
| தின்றாம் | உண்கின்றாம் |
| நக்கிலாம் | உண்ணாநின்றிலாம் |
| உண்டிலாம் | உண்கின்றிலாம் |
| உரைத்திலாம் | உண்பாம் |
| தின்றிலாம் | உண்குவாம் |
| நக்காமல்லாம் | உண்ணாம் |
| உண்டாமல்லாம் | கரியாம் |

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 195)

| | |
|---|---|
| உண்டாம் | உண்பாம் |
| உண்கின்றாம் | உண்ணாம் |

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 205, 216)

| | | |
|---|---|---|
| உண்ணாநின்றாம் | உண்ணாநின்றிலாம் | உடையாம் |
| உண்டாம் | உண்பாம் | நிலத்தாம் |
| உண்டிலாம் | உண்குவாம் | பொன்னன்னாம் |
| உண்கின்றாம் | உண்ணாம் | கரியாம் |

ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தருவர்.

நிகழ்கால எடுத்துக்காட்டுக்களை எல்லா உரையாசிரியர்களும், -இல்- எதிர்மறைக்குப் பின்னர் -ஆம் விகுதி வரும் எடுத்துக்காட்டுக்களை சேனாவரையரும், கல்லாடனாரும் தந்து சென்றுள்ள போதிலும் பழங்காலத் தமிழில் இவ்வகை எடுத்துக்காட்டுக்கள் காணப்படவில்லை.

5.1.4 2 சூழல்கள்

இவ்விகுதி

1. இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. -∅- எதிர்மறைக்குப் பின்னரும்
4. வினையாலணையும் பெயர் விகுதி -∅- க்குப் பின்னரும்

வருதல் உண்டு. முன்னர்க் குறிப்பிட்டபடி இவ்விகுதி பல பழந்தமிழ் இலக்கியங்களிலும், ஒருசில இடைக்காலத் தமிழ் இலக்கியங்களிலும் பயின்றுவந்து, பின்னர் வழக்கற்றுவிட்ட நிலையைக் காணலாம். இவ்விகுதி உளப்பாட்டுத் தன்மை விகுதியாக உள்ளது எனக் கருதுவர் உரையாசிரியர்கள்.

"அம் ஆம் என்பன முன்னின்றாரை யுளப்படுக்கும், தமராய வழி படர்க்கை யாரையும் உளப்படுத்தும்" என்பது இளம்பூரணம். இதே கருத்தினைச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளமை காணலாம். ஆனால் தெய்வச்சிலையாரோ இதுபற்றி ஏதும் கூறவில்லை. இதுபற்றிப் பின்னர்க் காண்போம்.

### 5.1.4.2.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

நற்றிணையிலும், கலித்தொகையிலும் இவ்விகுதி உயர்வு ஒருமையிலேயே வரக் காண்கிறோம். சிலம்பில் மட்டுமே ஒரு இடத்தில் பன்மையில் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| என்றாம் | பாராட்டினோம் | சிலம்பு 29-12-1 |

### 5.1.4.2.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| செல்லாம் | செல்வேம் | பதி 57-6 |
| காணாம் | காண்பேம் | அகம் 110-19 |
| செல்வாம் | செல்வோம் | நற் 127-9 |
| செல்வாம் | போவோம் | குறு 223-2 |
| செல்லாம் | செல்வேம் அல்லேமோ | புறம் 64-2 |
| கழியாம் | கழிக்கக்கடவேம் | பரி 12-54 |
| செய்வாம் | செய்யக்கடவேம் | கலி 60-22 |
| கேளாம் | கேளாது இருப்போமோ | கலி 146-10 |
| காண்பாம் | காண்பேம் | கலி 36-20 |
| தீர்வாம் | நீக்கக்கடவேம் | குறள் 1063 |
| ஆடாம் | ஆடுவோம் | சிலம்பு 29-23-4 |

மேலே காட்டியவற்றில் மூன்று வகை உதாரணங்கள் காணப் படுகின்றன. செய்வாம் போன்றவை வகர ஒற்றினைக் கொண்டும், காண்பாம் போன்றவை பகர ஒற்றினைக் கொண்டும், செல்லாம் போன்றவை -ø- என்பதைக் கொண்டும் காணப்படுகின்றன. செல்லாம் போன்ற சொற்கள் உடன் பாட்டிலும், எதிர்மறையிலும் வருதல் உண்டு.

### 5.1.4.2.3 -ø- எதிர்மறைக்குப் பின்னர்

முன்னர்க் குறிப்பிட்டபடி செல்லாம் போன்ற சொற்கள் எதிர்மறையிலும் வரும். பழந்தமிழில் இத்தகைய சொற்கள் அகநானூறு (1 பன்மை, 2 உ.ஒருமை), நற்றிணை (1 பன்மை, 2 உ.ஒருமை), குறுந்தொகை (8 பன்மை, 4 உ.ஒருமை) ஆகிய மூன்று இலக்கியங்களில் மட்டுமே வந்துள்ளன. ஆனால் உடன் பாட்டிலோ பதிற்றுப்பத்து (2 பன்மை), அகநானூறு (1 பன்மை) புறநானூறு (1 பன்மை), பரிபாடல் (1 பன்மை) கலித்தொகை

(3 பன்மை, 1 உ. ஒருமை), சிலப்பதிகாரம் (9 பன்மை) ஆகிய இலக்கியங்களில் வந்துள்ளன. இளம்பூரணர், சேனாவரையர் போன்றோர் இத்தகைய எடுத்துக்காட்டுகளைத் தராவிடினும், தெய்வச்சிலையார் (தொல். 196)

உண்ணாம்

என்ற எடுத்துக்காட்டினைத் தருவது இங்குக் குறிப்பிடத் தக்கது,

| | | |
|---|---|---|
| கொள்ளாம் | ஏற்காம் | அகம் 380-10 |
| உரையாம் | சொல்லாதொழிந்தோம் | நற் 263-4 |
| வினவாம் | வினவுதலைச் செய்யாம் | குறு 268-2 |

5.1.4.2.4 வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| ஏத்துவாம் | புகழ்வேம் | கலி 43-5 |
| உணராம் | உணராமாய் | கலி 60-25 |

5.1.5 -ஓம்

பழந்தமிழில் இவ்விகுதி மிக அருகியே காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் பதினான்கு இடங்களே உள்ளன. அவற்றுள்ளும் பத்து இடங்கள் சிலப்பதிகாரத்தில் உள்ளன. ஐங்குறுநூற்றில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும், மணிமேகலையில் இரண்டும் உள்ளன. இந்நிலை இவ்விகுதி பின்னர்த் தோன்றியது என்பதைக் காட்டும்.

5.1.5.1 உரையாசிரியர்கள்

சேனாவரையரும் (சொல். 211), நச்சினார்க்கினியரும் (சொல் 213), தெய்வச்சிலையாரும் (சூத். 204) -ஏம் விகுதியிலிருந்து இவ்விகுதி தோன்றியதாகக் கருதுவர். "வந்தோம், சென்றோம் என வழக்கினுள் வருவன வோவெனின் : அவை ஏமீற்றின் சிதைவென மறுக்க" என்பது சேனாவரையம். இரு விகுதிகளும் வரும் இடங்களை நோக்கினும் இந்நிலை தெளிவாகும். எனவே -ஏம் இலிருந்து -ஓம் வந்தது எனக் கருதுவதில் தவறு எதுவுமில்லை.

ஏ → ஓ / — ம்

ஆனால் சுப்பிரமணிய சாஸ்திரி (1934 : 160) -ஆம் இலிருந்து -ஓம் வந்தது எனக் கருதுவார்.

| | |
|---|---|
| வந்தான் | வந்தோன் |
| வந்தான் | வந்தோன் |
| வந்தார் | வந்தோர் |

போன்று

| | |
|---|---|
| வந்தாம் | வந்தோம் |

என மாறிற்று என்று கருதுவார். ஒப்புமையாக்கமே இதற்குக் காரணம் என்பது அவருடைய எண்ணம்.

பழங்காலத் தமிழில் -ஓம் மிகக் குறைவாக வரினும், இடைக் காலத் தமிழில் -ஓம் விகுதியே அதிகமாகப் பயின்று வருதல் காணலாம். இந்நிலையினை அப்பர் தேவாரம் போன்ற இடைக் கால நூல்கள் காட்டும். தற்காலத் தமிழில் -ஓம் விகுதி மட்டுமே வருதல் கண்கூடு.

### 5.1.5.2 சூழல்கள்

இவ்விகுதி

1. இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
4. வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னரும் வரும்.

### 5.1.5.2.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

ஐங்குறுநூற்றில் ஒன்றும் (உயர்வு ஒருமை), சிலப்பதிகாரத்தில் ஐந்தும் (பன்மை) காணப்படுகின்றன. சிலம்பில் நான்கு வினைமுற்றிலும், ஒன்று வினையாலணையும் பெயரிலும் வரக் காணலாம்.

ஆடினோம் ஆடினோம் சிலம்பு 24-3-4, 24-4-4,
25-5 4, 24-6-2

### 5.1.5.2.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

புறநானூற்றில் ஒரு இடத்திலும் (உயர்வு ஒருமை), சிலப்பதிகாரத்தில் ஐந்து இடங்களிலும், மணிமேகலையில் ஒரு இடத்திலும் இவ்விகுதி வருதலைக் காணமுடியும். சிலம்பில் நான்கு இடங்களில் இவ்விகுதி ககரம் பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| அறிகோம் | அறியவல்லு நமாவோம் | சிலம்பு 7-5-2, 7-6-2, 7-24-2, 7-30-2 |
| வாழ்த்துவோம் | வாழ்த்துவோம் | சிலம்பு 29-12-3 |
| உழல்வோம் | உழலாநிற்போம் | மணி 26-41 |

### 5.1.5.2.3 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

மணிமேகலையில் மட்டுமே இதற்குரிய எடுத்துக்காட்டு காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இலோம் | அல்லேம் | மணி 5-56 |

### 5.1.5.2.4 வினையாலணையும் பெயர் விகுதி -∅- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| இருந்தோம் | இருந்த நாம் | சிலம்பு 16 177 |

### 5.1.6 -கும்

இதுவும் முன்பழந்தமிழில் பயின்று வருகிற ஒரு விகுதியாகும். பின்பழந்தமிழ் நூல்களாகிய திருக்குறள், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமன்றிக் குறுந்தொகை, பத்துப்பாட்டு, பரிபாடல் ஆகிய நூல்களிலும் இவ்விகுதியைக் காணமுடிவதில்லை. எனவே இவ்விகுதி மிக அரிதாகப் பயின்று வந்துள்ளது என்பது இங்கு நினைவுகூரற்கு உரியதாகும். -கும், -தும் ஆகிய இரு விகுதிகளில் -தும் விகுதி மிக அதிகமாக வருதல் குறிப்பிடத்தக்கது.

இதன்கண் காணப்படும் ககர ஒற்று இறப்பில்காலத்தையும் மகர ஒற்று அல்லது -உம் தன்மைப் பன்மையினையும் காட்டுவதாகக் கருதலாம். -இகும் என்பதும் கண்டிகும் (பதி 11-20)

போன்ற சொற்களில் காணப்படுவது இங்கு நினைவு கூரற்குரியது. பதிற்றுப்பத்து (6), ஐங்குறுநூறு (9), அகநானூறு (1), நற்றிணை (1), புறநானூறு (1) ஆகிய நூல்களில் இத்தகைய சொற்கள் காணப்படுகின்றன. இச்சொற்கள் பொதுவாக இறந்தகாலத்தையே குறித்து நிற்றல் காணலாம்.

### 5.1.6.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதி பற்றிப் பேசும் இளம்பூரணர் (சொல் 199), சேனாவரையர் (சொல் 202), கல்லாடனார் (சொல். 206) ஆகியோர் -கும், -டும், -தும், -றும் என்பன இறப்பில்காலத்தைக் குறிப்பன எனக் காட்டுவர். "உம்மொடு வரூஉங் கடதற உண்கும், உண்டும், வருதும், சேறும் எனவும்; உரிஞுதும், திருமுதும் என ஏற்றவழி உகரம் பெற்றும் வரும். இவை நான்கும் எதிர்காலம் பற்றி வரும்" (சூத் 189) என்பது இளம்பூரணம். இவரைப் பின் பற்றியே சேனாவரையரும், "உம்மொடு வரூஉம் கடதற எதிர்காலம் பற்றி வரும்" (சூத் 202) என்பார். தெய்வச்சிலையார் (சொல். 195) இவை எதிர்காலமும், நிகழ்காலமும் குறித்துவரும் என்பார். ஆனால் நச்சினார்க்கினியரோ (சொல். 204) இவை பொதுவாக எதிர்காலம் பற்றி வரினும் சில நேரங்களில் பிற காலங்களிலும் வரும் எனக் குறிப்பிடுவார்.

### 5.1.6.2 சூழல்

இவ்விகுதி வினையடிகளுக்குப் பின்னர் வரும்.

#### 5.1.6 2.1 வினையடிகளுக்குப் பின்னர்

காண்கும் கண்டு மகிழ்வோம் சிலம்பு 6-13

முன்னர்க் குறிப்பிட்டபடி -கும் ஒரு சில இலக்கியங்களிலேயே வருதல் காண்கிறோம். அகம், புறம், கலித்தொகை மூன்றிலும் உயர்வு ஒருமையாக வரக் காண்கிறோம். பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, பத்துப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் இதனைக் காண இயலாது. இடைக்காலத் தமிழிலும் இது இந்நிலையிலேயே உள்ளது. தற்காலத் தமிழில் இதனைக் காணமுடிவதில்லை.

### 5.1.7 -இகும்

முன்னர்க் குறிப்பிட்டபடி பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு. அகநானூறு, நற்றிணை, புறநானூறு ஆகிய ஐந்து நூல்களிலும் -இகும் ஈற்றுச் சொற்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியர்

"மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்" (759)

என்ற சூத்திரத்தில் இதனை முன்னிலை அசைச்சொல் என்று குறிப்பிடுவார். ஆனால் இது தன்மையிலும், படர்க்கையிலும் வரும் என அடுத்த சூத்திரத்தில் குறிப்பிட்டு நிற்பார். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் இது முன்னிலையிலும், தன்மையிலும் வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இச்சொற்கள் பெரும்பான்மையான இடங்களில் இறந்தகாலம் காட்டுவனவாக உள்ளன. இதற்குக் காரணம் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் பின்னர் இது வருவதாலேயே எனக் கொள்ளலாம். எனினும் ஓரிரு இடங்களில் இறப்பில்காலத்திலும் (பதி 11-20, 84-30, ஐங் 127-1, 128-1, 198-4), இன்னும் சில இடங்களில் ஏவல் வினையிலும் (ஐங் 158-4, 194-2, 264-3, 414-3, 419-4) வரக் காண்கிறோம். -இகும் என்பது -கும் ஈறு கொண்ட ஒரு துணைவினை எனக் கருதுவர் பலர். எனினும் இத்துணைவினை எப்பொருள் உணர்த்திற்று என்பதை நம்மால் உணரமுடியவில்லை. இந்நிலையில் இது பற்றி விளக்கமாக எதுவும் கூறுவதற்கில்லை என்றே தோன்றுகிறது

#### 5.1.7.1 சூழல்

இவ்விகுதி செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் பின்னர் வரும்.

#### 5.1.7 1.1 செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| கண்டிகும் | கண்டறிந்தோம் | பதி 24-17 |
| கண்டிகும் | காண்போம் | ஐங் 198-4 |
| பெற்றிகும் | அடைந்தோம் | புறம் 378-22 |

அகத்திலும், நற்றிணையிலும் இச்சொற்கள் உயர்வு ஒருமையாகவே வந்துள்ளன.

5.1.8 -தும்

தமிழ் இலக்கண ஆசிரியர்கள் பலரும் (தொல். 687) -தும், -டும், -றும் ஆகிய விகுதிகளை வேறுபடுத்தி அவற்றை வெவ் வேறு தனித்தனி விகுதிகளாகக் கருதுவதைக் காணலாம். ஆனால் இவையனைத்தையும் இணைத்து -தும் விகுதியாகக் கொள்ளலாம். -டு, -று ஆகியவை புணர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்களே என்பது போதரும். எனினும் அவை தனித்தனியாகவே இங்கு தரப்பட்டுள்ளன. பழந்தமிழில் காணப்படும் -கும், -டும், -தும், -றும் ஆகிய விகுதிகளில் -தும் விகுதியே மிகப் பெரும்பான்மையாக வருவதும் இவ்விகுதி -எம், -ஆம் ஆகிய விகுதிகளை விட அதிகமான இடங்களில் பயின்று வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

| | -எம் (பன்மை + உ. ஒருமை) | -ஆம் (பன்மை + உ.ஒருமை) | -தும் (பன்மை + உ.ஒருமை' |
|---|---|---|---|
| பதி | 0 | 2 | 0 |
| ஐங் | 8 | 0 | 10 |
| அகம் | 3 | 6 | 21 |
| நற் | 1 | 11 | 24 |
| குறு | 3 | 25 | 11 |
| புறம் | 7 | 1 | 12 |
| பத்து | 0 | 0 | 3 |
| பரி | 2 | 1 | 16 |
| கலி | 0 | 23 | 13 |
| குறள் | 0 | 2 | 4 |
| சிலம்பு | 0 | 10 | 43 |
| மணி | 0 | 1 | 1 |

மேலே காட்டியுள்ள பட்டியல் -தும் விகுதி அதிகமாக வருதலை உணர்த்தும். தன்மைப் பன்மை விகுதிகள் எல்லா வற்றையும் ஒருசேர வைத்துப் பார்க்கும்போது -ஏம், -அம்

ஆகிய விகுதிகளை அடுத்துத் -தும் விகுதியே அதிகமாகப் பழந் தமிழ் இலக்கியங்களில் பயின்று வருகிறது.

5 1.8.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் அனைவரும் 'வருதும்' என்ற சொல்லை எடுத்துக்காட்டாகக் கூறிச் செல்வர்.

5.1.8.2 சூழல்

இவ்விகுதி வினையடிகளுக்குப் பின்னர் வரும்

5.1.8.2.1 வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உறைதும் | வாழாநின்றேம் | ஐங் 333-4 |
| உறுதும் | அடைவோம் | அகம் 18-13 |
| அறிதும் | அறியாநின்றேம் | நற் 299-6 |
| அறிதும் | அறிந்துள்ளோம் | குறு 40-3 |
| பொருதும் | பொருவேம் | புறம் 71-3 |
| வருதும் | வாராநின்றேம் | பத்து 3-143 |
| பரவுதும் | வாழ்த்துவேம் | பரி 1-64 |
| பரவுதும் | பரவுவேம் | கலி 103-76 |
| வாழ்தும் | வாழக்கடவேம் | குறள் 956 |
| ஏகுதும் | செல்கின்றோம் | சிலம்பு 26-100 |
| இசைத்தும் | கூறுவேம் | மணி 19-50 |

5.1.9 -டும்

முன்னர்க் குறிப்பிட்டபடி இவ்விகுதியினைத் -தும் விகுதியின் மாற்றுச் சொல்லாகக் கருதலாம்.

5.1.9.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் அனைவரும் 'உண்டும்' என்ற சொல்லை உதாரணமாக தருவர்.

5.1.9.2 சூழல்

இவ்விகுதி ணகர ஈற்று வினை அடிகளுக்குப் பின்னர் வரும்.

### 5.1.9 2.1 ணகர ஈற்று வினையடிக்குப் பின்னர்

இவ்விகுதிச் சொற்களாக பழந்தமிழ் இலக்கியங்களில் இரண்டு சொற்களே (1 பன்மை, 1 உயர்வு ஒருமை) உள்ளன.

| | | |
|---|---|---|
| காண்டும் | காண்பேம் | சிலம்பு 29-1-28 |

### 5.1.10 -றும்

முன்னர்க் குறிப்பிட்டபடி இதனையும் -தும் மின் மாற்றுச் சொல்லாகக் கருதலாம் பழந்தமிழ் இலக்கியங்களில் ஐங்குறுநூறு அகம், நற்றிணை, குறுந்தொகை, புறம், கலித்தொகை ஆகிய ஆறு நூல்களில் மட்டுமே காணப்படுகிறது. கலித்தொகையில் உயர்வு ஒருமையிலேயே வரக் காண்கிறோம். பின்பழந்தமிழ் நூல்களாகிய திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இவ்விகுதியைக் காணமுடிவதில்லை. இடைக்காலத் தமிழ் நூல்களிலும் கம்பராமாயணத்தில் மட்டுமே காண் கிறோம். இவ்விகுதி தற்காலத் தமிழில் வழக்கற்றுவிட்டமை கண்கூடு.

### 5.1.10.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் அனைவரும் 'சேறும்' என்ற சொல் லினையே எடுத்துக்காட்டாகத் தந்து செல்கின்றனர்.

### 5.1 10.2 சூழல்

இவ்விகுதி லகர, னகர ஈற்று வினை அடிகளுக்குப் பின்னர் வரும்.

### 5.1.10.2.1 லகர, னகர ஈற்று வினைஅடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| என்றும் | கருதா நிற்பேம் | ஐங் 110-3 |
| சேறும் | போவேம் | அகம் 143-9 |
| சேறும் | செல்லா நிற்பேம் | நற் 156-5 |
| சேறும் | செல்வேம் | குறு 80-3 |
| சேறும் | செல்லுதும் | புறம் 113-7 |

## 5.2 முடிபு

எனவே இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழில் -அம், -ஆம், -எம், -ஏம், -கும், -இகும் -டும், -தும், -றும், -ஓம் ஆகிய விகுதிகள் தன்மைப் பன்மை விகுதிகளாக உள்ளன என்பதும், இவற்றுள் -ஓம் மிகமிக அருகியே காணப்படுகிறது என்பதும், எனவே இதனைப் பிற்கால வழக்கு என எண்ணலாம் என்பதும் நன்கு விளங்கும். ஏனைய விகுதிகளில் -ஏம், -அம் ஆகிய விகுதிகளே மிகப் பெருவழக்காக உள்ளன என்பதும், -ஏம் விகுதி -ஏன் விகுதி போன்று எதிர்மறையில் அதிகமாக வருவது இல்லை என்பதும் (எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் -ஏன் விகுதி இருபத்தேழு இடங்களில் வர, -ஏம் எட்டு (7 பன்மை + 1 உ. ஒருமை) இடங்களில் மட்டுமே வருகிறது) இங்குக் குறிப்பிடத்தக்க செய்திகளாகும். -கும், -டும், -தும், -றும் ஆகிய விகுதிகளில் -தும் விகுதியே மிகப் பெருவழக்காக உள்ளது. முன்பே குறிக்கப் பெற்றுள்ளமை போல இவ்விகுதி -எம், -ஆம் ஆகிய விகுதிகளை விடவும் மிகப் பயின்று வருகின்ற நிலையைக் காணலாம். அகநானூறு, நற்றிணை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் எல்லாம் -எம், -ஏம் ஆகிய விகுதிகளை விடவும் இது கூடுதலாக வருவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் -தும், -டும், -றும் ஆகிய விகுதிகளைத் தனித்தனி விகுதிகளாகக் கொள்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இவ்வனைத்தையும் -தும் விகுதியாகவே கொண்டு

ண் + த் --> ண்ட் ன் + த் ---> ன்ற்

என்ற புணர்ச்சி விகுதிகளால் டகர, றகர ஒற்றுக்களின் தோற்றத்திற்குக் காரணம் கூறிவிட முடியும்.

மேலும் -கும், -டும், -தும் போன்றவற்றில் காணப்படும் ககர, தகர ஒற்றுக்களைப் பிரித்து அவற்றை இறப்பில்கால இடைநிலைகளாகக் கொள்ளுவதும் பொருத்தமாக இருக்கும். ஆயினும் தொல்காப்பியர் பிரித்துக் கூறியிருப்பதை அடியொற்றி இங்குப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது.

## 5.3 உளப்பாட்டுத் தன்மையும் விலக்கீட்டுத் தன்மையும்

திராவிட மொழிகளில் தன்மைப் பன்மை மூவிடப் பெயர் களில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, விலக்கீட்டுத் தன்மைப் பன்மை என இரு தன்மைப் பெயர்கள் உள்ளமையை நாம் நன்கு அறிவோம். பழந்தமிழில் யாம் என்பது விலக்கீட்டுத் தன்மைப் பன்மையையும், நாம் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையையும் குறிக்கும் சொற்களாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்வேறு பாடு கூட நன்கு பேணப்படவில்லை எனத் தெரிகிறது (Johnsy Beula, 1978). தற்காலத் தமிழில் நாங்கள் என்பது விலக்கீட்டுத் தன்மைப் பன்மையையும், நாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மையையும் குறிக்கும் சொற்களாகும். யாங்கள் என்ற சொல் லும் விலக்கீட்டுத் தன்மைப் பன்மையாக இருப்பது சிலப்பதி காரம் போன்ற நூல்களைப் பயிலுவாருக்கு நன்குத் தெரியும். தற்காலத் தமிழில்

நாம் வந்தோம் நாங்கள் வந்தோம்

எனக் குறிப்பிடும்போது இவ்விரு பதிலிடு பெயர்களும் -ஓம் என்ற ஒரே விகுதியைப் பெற்று வருவது அறிந்த ஒரு செய்தி யாகும். தற்காலத் தமிழில் -ஓம் என்ற ஒரு விகுதியே இருக்க, பழந்தமிழில் பத்து வெவ்வேறு விகுதிகள் இருக்கின்றன என்பதனை முன்னர்க் கண்டோம். இந்நிலையில் தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களில் காணப்படும் உளப்பாட்டு, விலக்கீட்டு வேற்றுமை இவ்விகுதிகளிலும் காணப்படுகின்றனவா என்பது ஆராய்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். திராவிட மொழி கள் பலவற்றில் இவ்வேற்றுமை விகுதிகளும் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். கோத்தா, தோடா, தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, கூயி, கூவி, பர்ஜி, குருக், மால்தோ ஆகிய மொழிகளில் எல்லாம் இவ்வேற்றுமை காணப்படுகிறது (Subrahmanyam, 1971). ஆனால் தற்காலத் தமிழில் இது இல்லை என்பது முன்னரே சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. ஆனால் பழந்தமிழைப் பொறுத்தமட்டில் இவ் வேற்றுமை உள்ளதா என்பதே ஆராய்ச்சிக்குரிய செய்தி.

### 5.3.1 தொல்காப்பியமும் உரையாசிரியர்களும்

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இதுபற்றி எதுவும் கூறுவதில்லை. பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறதே அன்றி வேறு எதுவும் அது பேசுவதில்லை. ஆனால் உரையாசிரியர்களோ இது பற்றிப் பலபடப் பேசுவதைக் காணலாம். முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர் (சொல் 199) "அம், ஆம் என்பன முன்னின்றாரை யுளப்படுக்கும்; தமராயவழி படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம், ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுக்கும். உம்மொடு வருஉங் க-ட-த-ற அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தலும் தனித்து உளப்படுத்தலும் உரிய'' எனக் கூறுவார். இதே நிலையினைச் சேனாவரையர் (சொல். 202)நச்சினார்க்கினியர் (சொல். 204) ஆகிய இரு உரையாசிரியர்களிடமும் காணலாம். எனவே இவர்கள் கருத்துப்படி -அம், -ஆம், -கும், -டும், -தும், -றும் என்பவை உளப்பாட்டுத் தன்மை விகுதிகள் என்பது போதரும்.

நாம் (யானும் நீயும்) வந்தனம்
நாம் (யானும் நீயும்) { வந்தோம்
வருவோம்
நாம் (யானும் நீயும் அவனும்) வருதும்
யாம் (யானும் அவனும்) வந்தேம்

என்ற எடுத்துக்காட்டுக்கள் இவர்கள் கருத்துக்கு உரியவை.

ஆனால் தெய்வச்சிலையார் (சொல். 194), கல்லாடர் (சொல். 206) ஆகிய இருவரும் இதுபற்றி எதுவும் பேசுவதில்லை.

### 5.3.2 இடைக்கால இலக்கணங்கள்

பனிரண்டாவது நூற்றாண்டில் எழுந்த நேமிநாதம் உளப்பாட்டுத் தன்மை என்ற பெயரைப் பயன்படுத்திய போதிலும் கூட (சூத் 64) இதுபற்றிக் குறிப்பிடுவதில்லை. தெய்வச்சிலையாரும் தன்மைப் பன்மையினை உளப்பாட்டுத் தன்மை வினை எனக் கூறிய போதிலும் இவ்வேற்றுமை பற்றி எதுவும் கூறினார் இல்லை. எனவே அவர் குறிப்பிடுவதெல்லாம் இரு பன்மையினை நினைத்தே என்பது போதரும். பதினொன்றாம்

நூற்றாண்டைச் சார்ந்த வீரசோழியமும் உளப்பாட்டுத் தன்மை வினை, விலக்கீட்டுத் தன்மை வினை எனப் பிரித்துக் குறிப்பிடுவதில்லை. உரையாசிரியர் தரும் உதாரணங்களிலிருந்து இவ் வேற்றுமை அவர் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

நாம் உண்டேம் (சூத். 75) நாங்கள் உண்டோம் (சூத். 76)
நாம் கண்டம் (சூத். 80) நாங்கள் கண்டம் (சூத். 80)
நாம் நிற்போம் (சூத். 80) நாங்கள் நிற்போம் (சூத். 80)

என்று அவர் தரும் எடுத்துக்காட்டுக்களை நோக்கின் வினைச் சொற்களில் இவ்வேற்றுமையை அவர் காணவில்லை என்பது நன்கு விளங்கும்.

ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுந்த நன்னூலோ வினைச்சொல்லில் உளப்பாட்டுத் தன்மை, விலக்கீட்டுத் தன்மை வேறுபாடு உள்ளது என்று ஆணித்தரமாகக் கூறிச் செல்வதைக் காணலாம். பொதுவாக நன்னூல் இளம்பூரணரைப் பின்பற்றும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. -அம், -ஆம் என்பன முன்னிலையில் உள்ளாரையும் எம், -ஓம் என்பன படர்க்கையில் உள்ளாரையும் உளப்படுத்தும்.

ஆனால் -கும், -டும், -தும் என்பன முன்னிலையில் உள்ளாரையும் படர்க்கையில் உள்ளாரையும் குறிப்பிடுகின்றன என்பது நன்னூல்.

"அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை" (சூத். 332)

நாம் (யானும் நீயும்) வந்தனம்
நாம் (யானும் நீயும்) வந்தாம்
யாம் (யானும் அவனும்) வந்தனெம்
யாம் (யானும் அவனும்) வந்தேம்
யாம் (யானும் அவனும்) வந்தோம்

நாம் (யானும், அவனும், நீயும்) உண்கும்

நாம் (யானும், அவனும், நீயும்) வருதும்

போன்ற உதாரணங்களே இவர் கருத்தினைக் காட்டும். ஆனால் நன்னூல் உரையாசிரியர்களோ

| | |
|---|---|
| யாம் உண்டனம் | யாம் உண்டனெம் |
| யாம் உண்டாம் | யானும் அவனும் உண்டனெம் |
| யானும் நீயுப் உண்டனம் | யானும் அவனும் உண்டேம் |
| யானும் நீயும் உண்டாம் | |

போன்ற உதாரணங்களைத் தருவர். இவற்றுள் யாம் உண்டனம், யாம் உண்டாம் என்ற உதாரணங்கள் தவறு என்பதும், நாம் உண்டாம், நாம் உண்டனம் என்பவையே சரியான உதாரணங்கள் என்பதும் இத்தகைய மயக்கத்திற்குக் காரணம் வேறுபாடு இல்லாமையே என்பதும் விளங்கும்.

இலக்கண விளக்கம் (சூத் 237) நன்னூல் கூறிய கருத்தினையே கூறிச் செல்கிறது. இதுபோன்றே பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய முத்துவீரியமும் நன்னூலைப் பின்பற்றிச் செல்வதைக் காணலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கணமாயினும் -ஓம் விகுதி பற்றிக் கூறாமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கண விளக்க ஆசிரியர் நன்னூலைப் பின்பற்றிக் கூறினும் நன்னூல் உரையாசிரியரைப் போலன்றிப் பொருத்தமான உதாரணங்களையே தந்து உள்ளார்.

யானும் நீயும் புக்கனம்

யானும் நீயும் புக்காம்

யானும் அவனும் { புக்கனெம் / புக்கெம்

யானும் அவனும் { புக்கனேம் / புக்கேம் / புக்கோம்

யானும் நீயும் அவனும் { உண்கும் / உண்டும் / வருதும் / சேறும்

எனவே இதுகாறும் கூறியவற்றால் இது பற்றிக் கருத்து வேறுபாடு இலக்கண ஆசிரியர்களிடையே உள்ளமை தெளிவாகும். ஒரு சாரார் இவ்வேற்றுமை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் மற்றொரு சாராரோ இவ்வேற்றுமை பற்றிக் கூறுவதோடு அதற்குரிய எடுத்துக்காட்டுக்களையும் தந்து நிற்கின்றனர். சில எடுத்துக்காட்டுக்கள் பொருத்தமாக உள்ளன. இன்னும் சில பொருத்தமின்றிக் காணப்படுகின்றன.

## 5 3.3 பழந்தமிழ் இலக்கியப் பயிற்சி

இந்நிலையில் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இவ்விகுதிகள் இவ்வேற்றுமையை காட்டுகின்றனவா என்று ஆராய்தல் நலம் பயக்கும். இவ்விகுதிபற்றி ஆராய்ந்தவர்கள் (இஸ்ரயேல், 1973; அகத்தியலிங்கம், 1976) பழந்தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் இவ்வேறுபாடு காணப்படவில்லை என்று கூறுகின்றனர். தொல்திராவிட மொழியில் அல்லது அதற்கு முந்தைய நிலையில் இவ்வேற்றுமை இருந்திருந்தாலும் கூட, காலப்போக்கில் இவ்வேறுபாடு மறைந்து விட்டது எனக் கருதலாம்.

பழந்தமிழில் விலக்கீட்டுத் தன்மையைக் காட்டும் யாம் என்ற தன்மைப் பன்மைச் சொல்லுடன் -ஏம், -எம் விகுதிகள் மட்டுமின்றி -அம், -ஆம், -கும் போன்ற விகுதிகளும் வருதல் கண்கூடு. இவற்றுள் -அம், -கும் போன்றவை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகள் என்று சிலரால் கருதப்படுபவையாகும். எனவே இவை நாம் என்ற சொல்லோடுதான் வருதல் வேண்டும்.

### 5.3.3.1 யாம் பதிலிடுபெயரும் பல்வேறு விகுதிகளும்

#### 5.3.3.1.1 யாம் ...... -ஏம்

பழந்தமிழ் இலக்கியங்களில் இந்நிலையைப் பரக்கக் காணலாம். ஐங்குறுநூறு, அகம், நற்றிணை, குறுந்தொகை, புறம் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் எல்லாம் இந்நிலையினை நன்குக் காண முடியும்.

| | |
|---|---|
| "யாம் ............வேட்டேம்" | ஐங் 1-3 |
| "யாம் ............கூறேம்" | அகம் 46-10 |
| "யாமே......... விட்டேம்" | நற் 15-5 |
| "யாம்.........பெறேம்" | குறு 169-2 |
| "யாம் அவன் கிளைஞரேம் அல்லேம்" | புறம் 144-10 |
| "யாம் கைபடுத்தேம்" | பரி 18-18 |
| "ஆய்த்தியேம் யாம்" | கலி 108-9 |
| "பாடுகேம் .........யாம்" | சிலம்பு 17-22-21 |

5.3.3.1.2 **-யாம் ... -எம்**

| | |
|---|---|
| "கண்டெனம்......... யாமே" | ஐங் 387-4 |
| "யாம் அரிசி வேண்டினெம்" | புறம் 104-4 |

யாம், -ஏம், -எம் என்பவற்றோடு வருவது மட்டுமின்றி -அம், -ஆம் என்பவற்றோடும் வருவதைப் பரக்கக் காணமுடியும். இளம்பூரணர் கருத்துப்படி -அம், -ஆம் என்பவை நாம் என்பதோடு மட்டுமே வருதல் பொருந்தும். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின், இவ்விகுதிகள் யாம் என்பதுடன் அதிகமாக வருதல் காண்கிறோம். இந்நிலையில் இளம்பூரணர் கருத்து தவறு என்பதும், மிகப் பழங்காலத்திலேயே இவ்வேறுபாடு மறைந்துவிட்டது என்பதும் போதரும்[1].

5.3 3 1 3 **யாம் ... -அம்**

இளம்பூரணர் போன்றோர் கருத்துப்படி -அம் உளப்பாட்டுத் தன்மையைக் காட்டும். ஆனால் இவ்விகுதி விலங்கீட்டுத் தன்மை பதிலிடுபெயராகிய யாம் என்பதுடன் பலவேறு இலக்கியங்களில் வருதல் காணலாம். புறநானூற்றில் மட்டும் பதினான்கு இடங்களுக்கு மேல் வந்துள்ளது. இத்தகைய

1 காண்க புறம் 68 12: 316-10; குறு 290-3, அகம் 46-10, 84-10; 261-11; ஐங் 2-3, 3-3; 4-3, 5-3, 6-3, 7-3, 8-3, 9-3; 10-3; 298 4; 429-2; 480-1; நற் 250-6; கலி 24-14; 64-9; 64-10; 66-22; 71-23; 76-10; 81-35; 88-17; 95-29; 101-42; 108-45; 108-51; 108-63; 143-30; பரி 1-64; 2-73; 2-74(3); 8-83; 20-62; குறள் 1278; சிலம்பு 7-32-4

நிலையைப் பரிபாடல் ஒழிந்த எல்லா இலக்கியங்களிலும் காண முடியும்.

| | |
|---|---|
| யாமும் சேறுகம் | பதி 49-1 |
| யாம் செய் பயந்தனம் | ஐங் 70-5 |
| இருந்தனம் யாம் | அகம் 110-8 |
| அஞ்சினம் அளியேம் யாமே | நற் 368-10 |
| யாம் நாணுகம் | குறு 14-6 |
| அஞ்சலம் யாமே | புறம் 397-25 |
| நடுங்குவனம் யாம் | பத்து 8-133 |
| யாம் சிறந்தனம் | கலி 5-5 |
| உடையம் யாம் | குறள் 844 |
| யாம் காண்குவம் | சிலம்பு 16-173 |
| யாம் வேண்டினம் | மணி 21-51 |

5.3.3 1.4 **யாம் ... -ஆம்**

-ஆம் விகுதியும் உளப்பாட்டுத் தன்மை விகுதியாகவே கருதப்படுகிறது. ஆனால் இவ்விகுதியும் யாம் என்னும் பெயருடன் வருவது காணலாம். நற்றிணை, கலித்தொகை ஆகிய இரு நூற்களிலும் இதனை காணமுடியும். இது உயர்வு ஒருமையிலேயே வருகிறது.

| | |
|---|---|
| யாமே ... அகல்வாம் | நற் 103-10 |
| யாமே மீள்வாம் | நற் 103-11 |
| யாம்.. தோலாம் | கலி 73-21 |

5.3.3.1.5 **யாம் ... -கு**

மேலும் யாம் -கு விகுதியுடனும் வருதல் காண முடியும்.

| | |
|---|---|
| யாம் காண்கு | கலி 84-21 |
| என் கோயாம் | சிலம்பு 17-23-2,4 |
| | 17-24 2,4 |
| | 17-25-2,4 |

யாம் பன்மை (உயர்வு ஒருமை) என்பதும் -கு ஒருமை என்பதும் இத்தகைய மயக்கம் இவ்விடங்களில் மட்டுமே காணப்படுகின்றது என்பதும் நினைவு கூரத்தக்கன.

5 3.3.1.6 **யாம் பதிலிடுபெயரும் -கும் -டும் -தும் -றும் விகுதிகளும்**

-கும், -டும், -தும், -றும் ஆகிய விகுதிகளும் இளம்பூரணர் போன்றோரால் உளப்பாட்டுத் தன்மை விகுதிகளாகக் கருதப் படுகின்றன.

"உம்மொடு வருஉம் க-ட-த-ற அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தலும் தனித்து உளப்படுத்தலும் உரிய"

என்பது இளம்பூரணர் (சொல். 199). சேனாவரையரும் (சொல். 202), நச்சினார்க்கினியரும் (சொல். 204) இதே கருத்தினையே கொண்டுள்ளனர். நச்சினார்க்கினியர்

நானும் நீயும் உண்கும் யானும் அவனும் நீயும் உண்கும்

என்ற உதாரணங்களைத் தருவார். ஆனால் இவ்விகுதிகள் விலக்கீட்டுத் தன்மைப் பதிலிடுபெயராகிய யாமுடனும் வரு தலைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடியும். பிற விகுதி களைப் போல அத்தனை பெருவழக்காக வராவிடினும் ஒரு சில எடுத்துக்காட்டுக்களை நாம் வெவ்வேறு இலக்கியங்களில் காண முடியும். இந்நான்கு விகுதிகளில் -டும் விகுதி யாம் என்ற பதிலிடு பெயருடன் வரவில்லை.

5.3 3.1.6.1 **யாம்..... -கும்**

| | |
|---|---|
| கண்டிகும் யாம் | ஐங் 198-4 |

5.3.3.1.6.2 **யாம்...-தும்**

| | |
|---|---|
| யாமும் வருந்துதும் | ஐங் 50-1 |
| வருதும் யாம் | அகம் 85-14 |
| யாம் அஞ்சுதும் | நற் 359-5 |
| வருந்துதும் யாம் | குறு 69-6 |
| யாம் பொருதும் | புறம் 88-2 |
| யாம்...வருதும் | பத்து 10-53 |
| யாம்...பரவுதும் | பரி 9-83 |
| யாம் ...வீழ்தும் | கலி 94-29 |
| வணங்குதும் ..யாம் | சிலம்பு 6-27 |

இத்தகைய நிலையினைப் பழந்தமிழில் பரக்கக் காணமுடியும். அகநானூற்றில் மட்டுமே நான்கு இடங்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் எட்டு இடங்கள் உள்ளன.

5.3.3.1.6.3 **யாம் ... -றும்**

| | |
|---|---|
| என்றும் யாமே | ஐங் 110-3 |
| சேறும்...யாமே | நற் 295-9 |

5.3.3.2 **யாங்கள் பதிலிடுபெயரும் பல்வேறு விகுதிகளும்**

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் யாங்கள் என்ற பதிலிடு பெயரும் -ஏம், -அம், -தும் விகுதிகளுடன் வரக் காண்கிறோம்.

5.3.3.2.1 **யாங்கள் ... -தும்**

| | | |
|---|---|---|
| யாங்களும் நீள்நெறிப் | படர்குதும் | சிலம்பு 11-61 |

5.3.3.2 2 **யாங்கள் ... -அம்**

| | | |
|---|---|---|
| காண்குவம் | யாங்கள் | மணி 16-82 |

5.3.3.2.3 **யாங்கள் ... -ஏம்**

| | | |
|---|---|---|
| யாங்கள் | அறியேம் | சிலம்பு 25-62 |

5.3.3 3 **முற்றெச்சங்கள்**

தமிழில் முற்றெச்சங்கள் பயின்று வருவதை நாம் அறிவோம். முற்றெச்சங்களாக வரும்போது பலவேறு முற்றுக்கள் ஒரே மாதிரியான விகுதிகளைக் கொண்டு வருதல் இயற்கை. பழந்தமிழ் இலக்கியங்களை நோக்கின் தன்மைப் பன்மை விகுதிகளைக் கொண்ட முற்றெச்சங்கள் பல காணப்படுகின்றன. இவற்றைக் கூர்ந்து நோக்கின் ஒரே விகுதியைக் கொண்டும் வெவ்வேறு விகுதிகளைக் கொண்டும் வரும் நிலையினைக் காணலாம். இவற்றுள்ளும் உளப்பாட்டுத் தன்மை விகுதிகளும் விலக்கீட்டுத் தன்மை விகுதிகளும் மயங்கி வருகின்ற நிலையினைக் காணலாம். யாம் என்ற விலக்கீட்டுத் தன்மைப் பெயருடன் உளப்பாட்டுத் தன்மை விகுதிகள் மயங்கி வருதல் பல இலக்கியங்களில் காணப்படுகிறது.

1. -அம் ... -அம்
2. -அம் ... -ஆம்
3. -ஏம் ... -ஏம் ... -ஏம் ... -தும்
4. -ஏம் ... -அம்
5. -ஏம் ... -ஏம் .. -அம்
6. -அம் ... -ஏம்
7. -எம் ... -தும்
8. -ஏம் ... -தும்
9. -அம் ... -றும்
10. -எம் ... -ஏம்
11. -அம் ... -தும்
12. -தும் ... -ஏம்

5.3.3.3.1 -அம் ... -அம்

பேஎ யனையமியாம் சேய் பயந்தனம் ஐங் 70-5

5.3.3.3.2 -அம் ... -ஆம்

... ... ... குறுகினம்
காண்பாம் கலி 142-13

5.3.3.3.3 -ஏம் ... -ஏம் ... -ஏம் ... -தும்

"... ... ... ... ... ... யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
... ... ... ... ... ... பரவுதும்" பரி 2-75

5,3.3.3.4 -ஏம் ... -அம்

வருவேம் கண்டனம் பதி 23-11
அனையேம் ... ... யாம் ஆயினம் குறு 164-6

5.3.3.3.5 -ஏம் ... -ஏம் ... -அம்

காயேம் அல்லேம் கண்டனம் கடத்திடை கலி 9-9
கேளேம் அல்லேம் கேட்டனம் குறு 244-3

5 3 3 3 6 **-அம் ... -ஏம்**

உண்குவம் அல்லேம் பதி 58-7

... ... ... ... ... ... யாமே

... ... ... ... ... ... மேவினம் ஆகிக்...

... ... ... ... ... மெல்ல ணையேமே குறு 270-4, 8

நடுங்குவனம் ... யாம்

இடும்பைகூர் மனத்தேம்... பத்து 8-133,134

5.3.3.3.7 **-எம் ... -அம்**

கண்டனெம் அல்லமோ ஐங் 69-1

5.3 3 3.8 **-ஏம் ... -தும்**

ஒல்லேம் போல் யாம் அது வேண்டுதுமே ஐங் 88-4

யாம் ... ... நெஞ்சத்தேம் பரவுதும் பரி 1-64

5.3.3.3.9 **-அம் ... -றும்**

யாம் ........அயர்கம் சேறும் குறு 80-3

5.3.3.3.10 **-எம் ... -ஏம்**

ஒத்தனெம் அல்லேம் நற் 380-6

5.3.3.3.11 **-அம் ... -தும்**

நாம் இலம்.........அறிதும் நற் 209-6

5.3.3 3.12 **-தும் ... -ஏம்**

......பெறுதுமோ யாம் கலி 90-28

நிறையாற்றா நெஞ்சுடையேம் கலி 90-29

எனவே மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் விலக்கீட்டுத் தன்மை விகுதிகளும் உளப்பாட்டுத் தன்மை விகுதிகளும் ஒன்றோடொன்று வருவதையும், அவை விலக்கீட்டுத் தன்மைப் பெயராகிய யாமுடன் வருவதையும் நன்குக் காட்டும். இதுவும் இவற்றிடையே வேறுபாடு எதுவும் இல்லை என்பதை நன்கு உணர்த்தும்.

### 5.3.3.4 நாம் பதிலிடுபெயரும் பல்வேறு விகுதிகளும்

நாம் என்ற பதிலிடுபெயரும் -அம், -ஆம் போன்ற விகுதி களுடன் அன்றி -ஏம் போன்ற விகுதிகளோடு வருதல் காண லாம். இந்நிலை குறைவாக இருப்பினும் பழந்தமிழ் இலக் கியங்களில் ஒரு சில இடங்களைக் காண முடிகிறது. -அம், -ஆம் போன்றவை முப்பத்தாறு இடங்களுக்குமேல் வர -ஏம் ஆறு இடங்களில் மாத்திரமே வந்துள்ளது.

#### 5.3.3.4.1 -நாம் ... -அம்

| | |
|---|---|
| நாம்... அயர்ந்தனம் | அகம் 64-7 |
| ............... நாமும் | |
| ......................... | |
| .........விடுகந் தூதே | குறு 106-4 |
| நாம்... மொழிந்தனம் | கலி 28-22 |
| நாம் அறிந்திலம் | மணி 22-127 |

#### 5.3.3.4.2 நாம் ... -ஆம்

| | |
|---|---|
| நாம் எதிர்கொள்ளாம் | அகம் 380-10 |
| யாது செய்வாம் கொல் நாமே | நற் 194-2 |
| ...மறவா நாமே | குறு 200-4 |
| பாடுவாம் நாம் | கலி 40-7 |

#### 5.3.3.4.3 நாம் ... -எம்

| | |
|---|---|
| நாம் உளேம் | குறு 273-8 |
| நாம்...ஆற்றாதேம் | ஐங் 111-4 |
| முயங்குவேம்...நாம் | கலி 94-35, 41 |

#### 5.3.3.4.4 நாம் ... -தும்

| | |
|---|---|
| நாம்...வைகுதும் | புறம் 17-29 |
| வாழ்தும் என்ப நாமே | நற் 129-6 |
| நாம்...பரவுதும் | கலி 106-48 |
| நாம் ... பாடுதும் | சிலம்பு 29-15-1 |

5.3.3 4.5 நாம் ... -றும்

சேறும் நாம் நற் 24-6

5.3.3.4.6 நாம் ... -ஓம்

நாமே மறந்தோம் ஐங் 112-3-4
வாழ்த்துவோம் நாம் சிலம்பு 29-12-3

5.3 3.4.7 நாம் ... -மோ

நாம் சென்மோ அகம் 32-17

மேலே காட்டிய எடுத்துக்காட்டுக்கள் பதிலிடுபெயர் நாம், -அம், -ஆம் போன்ற விகுதிகளோடு வருவது மட்டுமின்றி -ஏம் விகுதி யோடும் வருதலை நன்குக் காட்டும்.

5.3.3 5 இலக்கிய உரையாசிரியர்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் எத்தனையோ வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாக வராமை காணலாம். இவ்வாக்கியங் களுக்குரிய எழுவாய்களை வினைமுற்றுச் சொற்களிலிருந்து நாம் மிக எளிதாக அறிந்துகோள்ள முடியும். இந்நிலையில்தான் உரையாசிரியர்கள் பொருத்தமான எழுவாய்களை இட்டுப் பொருள் கூறிச் செல்வார்கள். பழந்தமில் இலக்கியங்களில் எத்தனையோ இடங்களில் வெளிப்படையாக எழுவாய் இல்லாது -அம், -ஆம் போன்ற வினையீற்றுச் சொற்களைக் காண்கிறோம். இச்சொற்களுக்கெல்லாம் யாம் பெயரினை இட்டு உரையாசிரியர் கள் பொருள் கூறுவதும் உளப்பாட்டுத் தன்மை, விலக்கீட்டுத் தன்மை வேறுபாடு இல்லாத நிலையினைக் காட்டும். மேலும் சில பல இடங்களில் -அம், -ஆம் வர உரையர்சிரியர்கள் பொருள் கூறும்போது அவற்றுக்குப் பதிலாக -எம், -ஏம் விகுதி களை இட்டும் பொருள் கூறுவர். இதுவும் இவ்வேறுபாடு அற்றுவிட்ட நிலையினையே உணர்த்தி நிற்கும்.

" .. ... நாம்
அழிபடர் உழக்கும் அவல நெஞ்சத்து"
யாம் பெரிதும் துன்பம் எய்துகின்ற
அவலத்திற்கு இடமான நமது
நெஞ்சத்தின் கண் குடி கொண்டுள்ள அகம் 285-1

"சேறும் நாமெனச் சொல்ல ..."
யாம் செல்லா நிற்பேமென்று தலைவர் கூறலும் நற் 24-6

"மடவம் ஆக மடந்தை நாமே"
யாம் அறிவிலேம் ஆயின் ஆகும் குறு 20-4
பைதலமல்லேம் ... ...
... ... ... ... ... ... ...
... நாம் பெறினே
யாம் துன்பமுடையேம் ஆகமாட்டேம் ஐங் 135-2

இத்தகைய இடங்கள் பலவற்றைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடியும். குறுந்தொகையில் மட்டுமே ஒன்பது இடங்களுக்கு மேல் (57-6; 106-4; 17?-5; 184-7; 285-8; 263-8; 273-8; 305-3; 360-3) காணமுடியும். இதுபோன்றே அகநானூறு, ஐங் குறுநூறு, நற்றிணை போன்ற நூல்களிலும் பல இடங்களில் உள்ளன.

இனி யாம் என இலக்கியங்களில் வர, அவற்றிற்கு நாம் என உரை எழுதும் இடமும் உள்ளது.

"... ... யாம்
இன்னமாக ... ..."
நாம் இத்தன்மையேம் ஆகி நற் 64-3

யாம் என்ற சொல் -அம் -ஆம் போன்ற பல விகுதிகளுடன் வருவதை முன்னர்க் கண்டோம்.

யாம் ... -அம்

| | | |
|---|---|---|
| கண்டனம் | யாங்கள் கண்டேம் | பதி 23-11 |
| செல்கம் | யாங்கள் செல்வேம் | குறு 114-3 |
| செப்பினம் | யாம் கூறினேம் | குறு 207-1 |
| செல்லலம் | யாம் செல்லேம் | புறம் 101-1 |
| செல்கம் | யாம் போவேமாக | புறம் 2?7-1 |

இத்தகைய இடங்கள் பலவற்றைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாம். செல்கம் போன்ற சொற்கள் -அம் விகுதியில் முடிய உரையாசிரியர்கள் 'யாம் போவேமாக' எனப் பொருள் கூறுவதில் யாம் என்ற பெயரை இணைப்பதோடு -ஏம் விகுதியிட்டுக் கூறுவதும் இங்குக் கவனித்தற்பாலது.

யாம்...-ஆம்

| | | |
|---|---|---|
| செல்வாம் | யாம் செல்வோம் | நற் 284-4 |
| செய்வாம் | யாம் எவ்வாறு செய்ய வல்லாம் | குறு 268-3 |
| செல்லாம் | யாம் போவேம் | புறம் 64-2 |

மேலும் பழந்தமிழ் இலக்கியங்களில் நாம் என்ற பெயர்ச் சொல் வர உரையாசிரியர்கள் யாம் என்ற பெயரையிட்டுப் பொருள் கூறுவதும் இங்குக் கவனித்தற்பாலது.

"மடவம் ஆக மடந்தை நாமே"
யாம் அறிவிலேம் ஆயின் ஆகும் குறு 20-4

ஒருமையில் இம்மயக்கம் இருப்பதாகக் கருதலாம். தற்காலத் தமிழிலும் இந்நிலையைக் காணுகிறோம்.

என் பையன்

என்று கூறுவதற்குப் பதிலாக

நம் பையன்

என்று கூறுவது இந்நிலையைக் காட்டும்.

## 5.3.3.6 முடிபு

இளம்பூரணர் போன்ற இலக்கண அறிஞர்கள் கருத்துப்படி யாம், -எம், -ஏம் போன்ற விகுதிகளோடும் நாம், -அம், -ஆம் போன்ற விகுதிகளோடும் மட்டுமே வருதல் முடியும். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் இத்தகைய எண்ணம் தவறு என்பதையும், யாம், -எம், -ஏம் போன்ற விகுதிகளோடு மட்டுமின்றி -அம், -ஆம் போன்ற விகுதிகளோடும், நாம், -அம், -ஆம் போன்ற விகுதிகளோடு மட்டுமின்றி -ஏம் விகுதியோடும் வருதலைக் காண்கிறோம். எனவே வினைச் சொல்லில் வினை விகுதியினைப் பொறுத்த மட்டில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, விலக்கீட்டுத் தன்மைப் பன்மை வேறுபாடு உளது என்று கூறுவது மிகப் பொருந்தாக் கூற்றாகும்.

இடைக்காலத் தமிழிலும், தற்காலத் தமிழிலும் -ஓம் விகுதி பெருவழக்காக வருதல் கண்கூடு. எனினும் பல்வேறு இலக்கண உரையாசிரியர்களும், இலக்கண ஆசிரியர்களும் இளம்பூரணரைப் பின்பற்றி அப்படியே கிளிப்பிள்ளைபோல் சொல்லிச் செல்வர் என்பது இங்கு நினைவு கூரற்கு உரியதாகும். பதின்மூன்றாவது நூற்றாண்டைச் சார்ந்த நன்னூலாரும்

''அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை'' (சூத். 332)

எனக் கூறிச் செல்வது பொருந்தாக் கூற்றாகும்.

முன்னர்க் குறிப்பிட்டபடி திராவிட மொழிகளில் சிலவற்றுள் (கோத்தா, தோடா, தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, கூயி, கூவி, பர்ஜி, குருக், மால்தோ) இவ்வேற்றுமை காணப் பட்டாலும் தமிழ் மொழியில் இவ்வேற்றுமை இல்லை என்பது உறுதியாகும். மிகப் பழங்காலத்தில் ஒருவேளை இது இருந் திருந்தாலும் பழந்தமிழில் இவ்வேற்றுமை காணப்படுவதில்லை. இதனால்தான் தொல்காப்பியர் இது பற்றி எதுவும் கூறவில்லை என உறுதியாக நம்பலாம்.

## 5.4 பட்டியல்கள்

### 5.4.1 பட்டியல் 1: தன்மைப்பன்மை + உயர்வு ஒருமை விகுதிகள்

| | -ஏம் | -அம் | -எம் | -ஆம் | -ஓம் | -கும் | -இகும் | -தும் | -டும் | -றும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | 4 | 7 | — | 2 | — | — | 6 | — | — | — |
| ஐங் | 21 | 49 | 8 | — | 1 | — | 9 | 10 | — | 2 |
| அகம் | 17 | 80 | 3 | 6 | — | 2 | 1 | 21 | — | 2 |
| நற் | 18 | 71 | 1 | 11 | — | — | 1 | 24 | — | 6 |
| குறு | 16 | 28 | 3 | 25 | — | — | — | 11 | — | 6 |
| புறம் | 41 | 53 | 7 | 1 | 1 | 1 | 1 | 12 | 1 | 1 |
| பத்து | 7 | 9 | — | — | — | — | — | 3 | — | — |
| பரி | 16 | 3 | 2 | 1 | — | — | — | 16 | — | — |
| கலி | 49 | 24 | — | 23 | — | 2 | — | 13 | — | 1 |
| குறள் | 18 | 19 | — | 2 | — | — | — | 4 | — | — |
| சிலம்பு | 14 | 19 | — | 10 | 10 | 1 | — | 43 | 1 | — |
| மணி | 9 | 13 | — | 1 | 2 | — | — | 1 | — | — |

5.4.2 பட்டியல் 2: தன்மைப் பன்மை விகுதிகள்

| | -ஏம் | -அம் | -எம் | -ஆம் | -ஓம் | -கும் | -இகும் | -தும் | -டும் | -றும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | 4 | 7 | — | 2 | — | — | 2 | — | — | — |
| ஐங் | 12 | 20 | 3 | — | — | — | 1 | 4 | — | 1 |
| அகம் | 8 | 26 | 2 | 2 | — | — | — | 15 | — | 2 |
| நற் | 11 | 53 | 1 | 6 | — | — | — | 18 | — | 2 |
| குறு | 9 | 11 | 1 | 20 | — | — | — | 8 | — | 4 |
| புறம் | 30 | 23 | 7 | 1 | — | — | 1 | 7 | — | 1 |
| பத்து | 7 | 9 | — | — | — | — | — | 3 | — | — |
| பரி | 13 | 3 | 2 | 1 | — | — | — | 16 | — | — |
| கலி | 18 | 18 | — | 17 | — | — | — | 8 | — | — |
| குறள் | 10 | 16 | — | 2 | — | — | — | 3 | — | — |
| சிலம்பு | 13 | 18 | — | 10 | 10 | 1 | — | 41 | 1 | — |
| மணி | 9 | 13 | — | — | 2 | — | — | 1 | — | — |

5.4.3 பட்டியல் 3: -ஏம்

| | இறந்தகாலம் | | | இறப்பில்காலம் | | | | எதிர்மறை -∅- | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -இன்- | -இ- | ஏனையவை | -ப்(ப்)- | -வ்- | -குவ்- | -க்- | | |
| பதி | — | — | — | — | 1 | — | 1 | — | 2 |
| ஐங் | — | — | 9 | — | — | — | — | 2 | 1 |
| அகம் | 1 | 1 | — | — | 2 | — | — | 4 | — |
| நற் | — | — | 1 | — | — | — | — | — | 10 |
| குறு | — | — | — | — | 1 | — | — | 4 | 4 |
| புறம் | 1 | — | — | 1 | 2 | 1 | — | 7 | 18 |
| பத்து | — | — | — | — | 1 | — | — | 4 | 2 |
| பரி | 5 | — | 4 | — | 1 | 1 | — | — | 2 |
| கலி | — | — | 2 | 2 | 6 | 1 | — | 2 | 5 |
| குறள் | — | — | 5 | — | 3 | — | — | 2 | — |
| சிலம்பு | — | — | 6 | — | 1 | — | 1 | 5 | — |
| மணி | — | — | 2 | — | 1 | — | 3 | — | 3 |

5.4.4 பட்டியல் 4 : -அம்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | | | | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -வ்- | -குவ்- | -க்- | -வ் + அன்- | -உந்- | -அல்- | -இல்- | |
| பதி | 4 | — | — | 2 | 1 | — | — | — | — | — |
| ஐங் | 3 | — | — | 1 | 11 | — | — | 2 | — | 3 |
| அகம் | 6 | 1 | 1 | 6 | 9 | — | — | — | — | 3 |
| நற் | 14 | 6 | 3 | 3 | 13 | — | — | — | — | 14 |
| குறு | 2 | 1 | — | — | 6 | — | — | 1 | — | 1 |
| புறம் | 2 | — | — | 3 | 9 | — | — | 3 | — | 6 |
| பத்து | 3 | — | — | — | 1 | 3 | — | — | — | 2 |
| பரி | 1 | 1 | — | — | 1 | — | — | — | — | — |
| கலி | 4 | 2 | 3 | 2 | 5 | — | — | — | — | 2 |
| குறள் | — | — | 1 | — | 1 | — | 1 | 2 | — | 11 |
| சிலம்பு | 1 | — | — | 8 | 6 | — | — | — | — | 3 |
| மணி | 1 | 2 | 1 | 4 | — | — | — | — | 2 | 3 |

5.4.5 பட்டியல் 5: -எம்

| | இறந்தகாலம் | | இறப்பில் காலம் | எதிர்மறை | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -வ்- | -அல்- | -இல்- | |
| பதி | — | — | — | — | — | — |
| ஐங் | 3 | — | — | — | — | — |
| அகம் | 1 | — | — | — | — | 1 |
| நற் | 1 | — | — | — | — | — |
| குறு | 1 | — | — | — | — | — |
| புறம் | 1 | 6 | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — |
| பரி | 2 | — | — | — | — | — |
| கலி | — | — | — | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — |
| மணி | — | — | — | — | — | — |

5.4.6 பட்டியல் 6: -ஆம்

| | இறந்த காலம் | இறப்பில்காலம் | | | எதிர்மறை | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|
| | | -∅- | -ப்(ப்)- | -வ்- | -∅- | |
| பதி | — | 2 | — | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — |
| அகம் | — | 1 | — | — | 1 | — |
| நற் | — | — | — | 5 | 1 | — |
| குறு | — | — | — | 12 | 8 | — |
| புறம் | — | 1 | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — |
| பரி | — | 1 | — | — | — | — |
| கலி | — | 3 | 2 | 12 | — | — |
| குறள் | — | — | — | 2 | — | — |
| சிலம்பு | 1 | 9 | — | — | — | — |
| மணி | — | — | — | — | — | — |

5.4.7 **பட்டியல் 7: -ஓம்**

| | இறந்தகாலம் | இறப்பில்காலம் | | | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|
| | | -க்- | -ø- | -வ்- | -ø- | -இல்- | |
| பதி | — | — | — | — | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — | — |
| அகம் | — | — | — | — | — | — | — |
| நற் | — | — | — | — | — | — | — |
| குறு | — | — | — | — | — | — | — |
| புறம் | — | — | — | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — |
| கலி | — | — | — | — | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — | — |
| சிலம்பு | 5 | 4 | — | 1 | — | — | — |
| மணி | — | — | — | 1 | — | — | 1 |

5.4.8 பட்டியல் 8: -கும்

| | இறந்தகாலம் |
|---|---|
| பதி | — |
| ஐங் | — |
| அகம் | — |
| நற் | — |
| குறு | — |
| புறம் | — |
| பத்து | — |
| பரி | — |
| கலி | — |
| குறள் | — |
| சிலம்பு | 1 |
| மணி | — |

5.4.9 பட்டியல் 9: -இகும்

| | இறப்பில்காலம் |
|---|---|
| பதி | 2 |
| ஐங் | 1 |
| அகம் | — |
| நற் | — |
| குறு | — |
| புறம் | 1 |
| பத்து | — |
| பரி | — |
| கலி | — |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

5.4.10 பட்டியல் 10: -தும்

| | வினையடிகளுக்குப்பின் |
|---|---|
| பதி | — |
| ஐங் | 4 |
| அகம் | 15 |
| நற் | 18 |
| குறு | 8 |
| புறம் | 7 |
| பத்து | 3 |
| பரி | 16 |
| கலி | 8 |
| குறள் | 3 |
| சிலம்பு | 41 |
| மணி | 1 |

5.4.11 பட்டியல் 11: -டும்

| | -ண் விகுதி வினையடிக்குப்பின் |
|---|---|
| பதி | — |
| ஐங் | — |
| அகம் | — |
| நற் | — |
| குறு | — |
| புறம் | — |
| பத்து | — |
| பரி | — |
| கலி | — |
| குறள் | — |
| சிலம்பு | 1 |
| மணி | — |

5.4.12 பட்டியல் 12: -றும்

| | வினையடிகளுக்குப்பின் |
|---|---|
| பதி | — |
| ஐங் | 1 |
| அகம் | 2 |
| நற் | 2 |
| குறு | 4 |
| புறம் | 1 |
| பத்து | — |
| பரி | — |
| கலி | — |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

5.4.13 பட்டியல் 13: யாம் பதிலிடுபெயரும், விகுதிகளும்

| | -ஏம் | -அம் | -எம் | -ஆம் | -கு | -கும் | -இகும் | -தும் | -டும் | -றும் | -ஒம் | விகுதி இன்றி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | 13 | 7 | 1 | — | — | 1 | — | 3 | — | 1 | — | 16 |
| அகம் | 4 | 16 | — | — | — | — | — | 5 | — | — | — | 17 |
| நற் | 2 | 14 | — | 2 | — | — | — | 3 | — | 1 | — | 6 |
| குறு | 2 | 9 | — | — | — | — | — | 1 | — | — | — | 5 |
| புறம் | 3 | 15 | 1 | — | — | — | — | 3 | — | — | — | 12 |
| பத்து | 4 | 1 | — | — | — | — | — | 3 | — | — | — | — |
| பரி | 5 | — | — | — | — | — | — | 5 | — | — | — | 7 |
| கலி | 15 | 4 | — | 1 | 1 | 1 | — | 5 | — | — | — | 36 |
| குறள் | 2 | 1 | — | — | — | — | — | — | — | — | — | 12 |
| சிலம்பு | 2 | 7 | — | — | — | — | — | 9 | — | — | 6 | 6 |
| மணி | — | 2 | — | — | — | — | — | — | — | — | — | 1 |

5.4.14 பட்டியல் 14: நாம் பதிலிடுபெயரும், விகுதிகளும்

| | -ஏம் | -அம் | -எம் | -ஆம் | -கு | -கும் | -இகும் | -தும் | -டும் | -றும் | -ஓம் | விகுதி இன்றி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | 2 | 5 | — | — | — | — | — | — | 1 | — | 1 | 6 |
| அகம் | — | 4 | — | 2 | — | — | — | — | 1 | — | — | 14 |
| நற் | — | 6 | — | 2 | — | — | — | — | 4 | 1 | — | 10 |
| குறு | 2 | 4 | — | 1 | — | — | — | — | — | — | — | 7 |
| புறம் | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 |
| பரி | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| கலி | 1 | 5 | — | 6 | — | — | — | — | 1 | — | — | 27 |
| குறள் | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 |
| சிலம்பு | 1 | — | — | — | — | — | — | — | 2 | — | — | 1 |
| மணி | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | 1 |

# 6. உயர்வு ஒருமை

## 6.0 உலக மொழிகளில் உயர்வு ஒருமை

மனித சமுதாயத்தில் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைக் காணுகிறோம். அரசன், ஆண்டி, தொண்டைமான், தோட்டி, கணவன், மனைவி, மரியாதைக்குரியவர், அல்லாதார் போன்ற பலவேறு வேறுபாடுகள் மனித சமுதாயத்தில் காணப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகள் மனிதன் பேசும் மொழிகள் சில வற்றிலும் பிரதிபலித்து நிற்கின்றன.

உலக மொழிகள் பலவற்றில் இப்பண்பு உள்ளதை நாம் அறிவோம். ஆங்கிலம் போன்ற மொழிகளில் இது அதிகமாகக் காணப்படாவிடினும் பிரெஞ்சு போன்ற மொழிகளில் உள்ளன. (Lyons. 1968 : 280) இது போன்றே ஜப்பானிய மொழி போன்ற கீழைநாட்டு மொழிகளிலும் உள்ளன.

## 6.1 தமிழில் உயர்வு ஒருமை

இத்தகைய நிலைக்குத் தமிழ் மொழியும் விதிவிலக்கன்று. தமிழ்ச் சமுதாயத்திலும் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளைக் காண்கிறோம். இச்சமுதாயத்தில் காணப்படும் அந்தஸ்துக் கேற்ப, உயர்வு தாழ்வுகளுக்கேற்ப தமிழ் மொழியிலும் ஒரு சில கூறுகளையும், மொழிப்பயன்ல் சில குறிப்பிட்ட போக்குகளை யும் காண்கிறோம். எல்லோரையும் பெயர் சொல்லி அழைப் பதோ அல்லது பெயரால் குறிப்பிடுவதோ இல்லை. பெருமதிப்புக் குரிய ஒருவரைப் பெயர் கூறி அழைப்பதில்லை. மதிப்பிற்குரிய ஆசிரியரைப் பெயர் கூறிக் கண்ணன் என்றோ முருகன் என்றோ கூறுவதில்லை. மாறாகக் கண்ணன் அவர்கள் என்றோ அல்லது கண்ணனார் என்றோதான் அழைக்கிறோம். இது போன்றே அவருடன் பேசும்போது நீ எனக் குறிப்பிடுவதில்லை. நீங்கள் என்றோ அல்லது தாங்கள் என்றோதான் குறிப்பிடுகிறோம்.

குறிப்பிட்ட ஒருவரையே சிலர் கண்ணன் என்றும், இன்னும் சிலர் கண்ணனார் என்றும், இன்னும் சிலரோ கண்ணன் அவர்கள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய உயர்வு காட்டிக் குறிப்பிடும் நிலை பெயர், வினை ஆகிய இரண்டிலும் காணப்படுகின்றது.

பெயரிலும் இயற்பெயர், முறைப்பெயர், தொழில் காட்டும் பெயர், பொதுப் பெயர் போன்ற பலவகைப் பெயர்களில் உயர்வு காட்டிக் குறிப்பிடும் நிலை உள்ளமை கண்கூடு.

**இயற்பெயர்**

கண்ணன் வந்தார் கண்ணனார் வந்தார்
கண்ணன் அவர்கள் வந்தார்கள்
கண்ணனார் அவர்கள் வந்தார்கள்

**முறைப்பெயர்**

அண்ணன் வந்தார் அண்ணனார் வந்தார்
அண்ணன் அவர்கள் வந்தார்கள்

**தொழில் காட்டும் பெயர்கள்**

ஆசிரியர் வந்தார் ஆசிரியர் அவர்கள் வந்தார்கள்

**பொதுப்பெயர்**

காதலர் வந்தார் காதலர் அவர்கள் வந்தார்கள்
போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பைக் காட்டும்.

**பதிலிடு பெயர்கள்**

இவற்றைப் போன்றே தன்மை, முன்னிலை, படர்க்கைப் பதிலிடு பெயர்களிலும் இப்பண்பைக் காண்கிறோம்.

**தன்மை**

நாம் போகிறோம் இது நம்முடைய வீடு

முன்னிலை

நீர் வந்தீர் நீங்கள் வந்தீர்கள்
தாங்கள் வந்தீர்கள்

படர்க்கை

அவர் வந்தார் அவர்கள் வந்தார்கள்
போன்றவை இப்பண்பைக் காட்டும்.

இத்தகைய உயர்வுச் சிறப்புப் பண்பு இன்றையத் தமிழ் மொழியில் மட்டுமே (பார்க்க. அகத்தியலிங்கம் 1979, 191-194) காணப்படுவது அன்று. இடைக்காலத் தமிழிலும், பழந்தமிழிலும் கூட இப்பண்பினை நன்கு காணமுடியும். பழங்காலத் தமிழில் இதனைப் பெயர், வினைமுற்று, வினையாலணையும் பெயர், பதிலிடுபெயர் ஆகியவற்றில் எல்லாம் காண்கிறோம். இடைக்காலத் தமிழைப் போன்று மிக அதிகமாக இல்லாவிடினும் பழந்தமிழிலும் இப்பண்பு பரவலாகக் காணப்படுகின்றது.

## 6.2 உயர்வு ஒருமை பற்றித் தொல்காப்பியம்

முதல் முழுநூல் எனக் கருதப்படும் தொல்காப்பியத்திலேயே இது பற்றிப் பேசப்படுகின்றது. கிளவியாக்கத்திலும், இடையியலிலும் முறையே

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற் கிளவி;
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல" (சூத். 510)

"இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே" (சூத். 755)

என்று உயர்வு ஒருமை பேசப்படுவதைக் காண்கிறோம். முன் சூத்திரத்திற்கு

யாம் வந்தேம்; அவர் வந்தார்; நீயிர் வந்தீர்
போன்ற உதாரணங்களையும், பின் சூத்திரத்திற்கு

அரசனார் வந்தார் பார்ப்பார் வந்தார்
யானையார் வந்தார் நரியார் வந்தார்

போன்ற உதாரணங்களையும் உரையாசிரியர்கள் தந்து நிற்பர்.

## 6.3 பழந்தமிழ் நூல்களில் உயர்வு ஒருமை

பழந்தமிழ் நூல்களிலும் உயர்வு ஒருமையைக் காண்கிறோம். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இத்தகைய பண்பைக் காணமுடியும்.

### 6.3.1 புறமும் அகமும்

புற நூல்களில் உயர்வு ஒருமை அதிகமாகக் காணப்படுவ தில்லை. எனினும் இல்லாமலும் இல்லை. புறநானூற்றில் கோவூர் கிழார் பாடியதாகக் காணப்படும் பாட்டொன்றில் (45) நலங்கிள்ளியையும், நெடுங்கிள்ளியையும் நோக்கி

"ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே"

என்றும், காரிக்கண்ணனார் பாடும் மற்றொரு பாடலில் காரிக் கண்ணனார் திருமாவளவனையும், பாண்டியன் பெருவழுதியை யும் நோக்கிப் பாடும்போது (58)

"ஒருவீ ரொருவீர்க் காற்றுதிர்"

எனவும் கூறுதல் காண்க. எனினும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் உயர்வு ஒருமை அதிகமாகக் காணப்படு கிறது. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் யசோதையைப் பற்றிக் கூறும்போது

"ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார்
தொழுதேத்த" 17-28-3

"கலக்கியகை அசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை"
17-32 3

எனவும் கூறுதல் காணத்தக்கது. இது போன்று கம்சனைக் கஞ்சனார் (சிலம்பு 17-37-1) என்றும், நாரதனை நாரதனார் (சிலம்பு 17-26-4, 17-27-4) என்றும், பூசாரியை வேலனார் (சிலம்பு 24-14-1) என்றும் கூறுவது ஆர் விகுதி உயர்வு ஒருமை காட்டும் இடங்களாகும்.

இதுபோன்றே துறவிகளை அடிகள் எனக் கூறும் வழக்கம் சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மிகுதியாக வரக் காண்கிறோம்.

இதே நிலையில்

| | | | |
|---|---|---|---|
| தவத்தீர் | சிலம்பு 10-50 | அறவணர் | மணி 24-87 |
| அருந்தவர் | மணி 6-54 | அறவணஅடிகள் | மணி 28-81 |

போன்ற சொற்களும் உயர்வு ஒருமையினைக் காட்டுவனவாகும்.

அகப்பாடல்களில் உயர்வு ஒருமை ஏராளமாகக் காணக் கிடக்கின்றது. தலைவி தலைவனைப் பற்றிக் கூறும்போதும், தோழி தலைவனைப் பற்றிக் குறிப்பிடும்போதும் மிகப் பல இடங்களில் உயர்வு ஒருமைச் சொற்களைப் பயன்படுத்துதல் காணலாம். மலைக்கிழவோர், சான்றோர், சேர்ப்பர், வன்பர், ஆளர், அறவர், அறிஞர், நாட்டர், நாடர், மருத்துவர் போன்ற பல சொற்கள் தலைவனைக் குறித்தல் காணலாம். குறுந்தொகையில் காணக்கிடக்கும் உயர்வு ஒருமை பற்றி பரக்கப் பேசுவார் சண்முகம் (1974).

### 6.3.2 பலவேறு இலக்கணக்கூறுகளில் உயர்வு ஒருமை

இத்தகைய உயர்வு ஒருமை பல இலக்கணக்கூறுகளில் காணப்படுகின்றது. பெயர்ச்சொல்லில் இது இயற்பெயர், பொதுப்பெயர், முறைப்பெயர் போன்றவற்றிலும் பதிலிடு பெயர்களிலும், வினைச்சொல்லில் ஏவல் வினை, வினையாலணையும் பெயர், முற்றுவினை ஆகியவற்றிலும் உள்ளது.

#### 6.3.2.1 இயற்பெயர்

காதலர், நாடர் போன்ற பெயர்களில் மட்டுமல்லாமல் குறிப்பிட்ட ஒருவரின் இயற்பெயரும் உயர்வு ஒருமையில் பயன்படுத்தப்படுவதைப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே காணலாம். கபிலன், பரணன் போன்ற பெயர்கள் நூற்றுக் கணக்காகச் சங்க இலக்கியங்களில் காணப்பட காமர், சாமனார்

போன்ற உயர்வு ஒருமை காட்டும் இயற்பெயர்கள் பின்பழந் தமிழ் நூல்களாகிய கலித்தொகையிலும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் காணக்கிடக்கின்றன.

| | |
|---|---|
| காமர் | கலி 94-33 |
| சாமனார் | கலி 94-34 |
| அசோதையார் | சிலம்பு 17-28-3, 17-32-3 |
| கஞ்சனார் | சிலம்பு 17-37-1 |
| நாரதனார் | சிலம்பு 17-26-4, 17-27-4 |
| வேலனார் | சிலம்பு 24-14-1 |

இவ்வாறு இயற்பெயர்களின் பின்னர் ஆர் விகுதியையும், -ரகர ஒற்றையும் இணைத்து உயர்வு ஒருமையைக் காட்டும் சொற்கள் முன்பழந்தமிழ் நூல்களில் காணப்படவில்லை. எனவே இது பின்பழந்தமிழ்க் கூறு எனக் கருதலாம். எனினும் தொல்காப்பியம் இது பற்றி

"இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே"

எனக் கூறுவது இங்கு உணரத்தக்கது. தொல்காப்பியர் காலத்திலேயே இயற்பெயர்களுக்குப் பின்னர் ஆர் விகுதி கொடுத்துக் கூறும் வழக்கம் இருந்துள்ளமை இச்சூத்திரத்தால் தெளிவு பெறும். இப்படியிருக்கத் தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றியன எனக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் கலித்தொகை ஒழிந்த பிற இலக்கியங்களில் காணப்படாதது வியப்பாகவே உள்ளது.

எனினும் இதுபற்றி எதுவும் கூறாது உரையாசிரியர்கள் அனைவரும் இதற்குரிய பலவேறு உதாரணங்களைத் தந்து செல்லுவர். இளம்பூரணர்

அரசனார் வந்தார்
பார்ப்பார் வந்தார்
யானையார் வந்தார்

ஆகிய உதாரணங்களையும், சேனாவரையர்

பெருஞ்சேந்தனார் வந்தார், முடவனார் வந்தார்
தந்தையார் வந்தார், நரியார் வந்தார்

போன்ற உதாரணங்களையும், நச்சினார்க்கினியர், சேனாவரையர் தந்த உதாரணங்களையும், தெய்வச்சிலையார், சாத்தனார், சாத்தியார், நம்பியார், நங்கையார், முடவனார், முடத்தியார், தாயார், தந்தையார், கிளியார், மயிலார் போன்ற உதாரணங் களையும் தந்து செல்வர்.

இத்தகைய சொல்லாட்சிகள் பண்டைத்தமிழ் நூல்களில் முன்பழந்தமிழ் நூல்களில் இல்லை என்பது முன்னரே கூறப் பட்டது. எனினும் தொல்காப்பியர் காலத்திலேயே ஆரீற்றுச் சொற்கள் வழக்கில் வந்துவிட்டன என்றும், ஆனால் செய்யுள் நடையில் வரவில்லையோ என்றும் எண்ணலாம். இக்கருத்து வலுப்பெறுவதற்குச் சங்கப் பாடல்களின் தொகுப்பும், அவற்றில் காணப்படும் பெயர்களும் சான்றாக உள்ளன.

ஐங்குறுநூறு சேரவரசனாகிய யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையின் காலத்திலேயே தொகுக்கப்பட்டுவிட்டது. இதுபற்றி ஐங்குறுநூற்றின் இறுதியில், "இத்தொகை தொகுத் தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை யார்" என ஆர் விகுதி கொடுத்துக் கூறியிருப்பது தொகுத்த கூடலூர் கிழார் காலத்திலேயே ஆர் விகுதி வந்துள்ளமையைப் புலப்படுத்தும்,

இதுபோன்றே அக்காலத்தில் தொகுக்கப்பட்ட நூல்களில் காணப்படும் பாடல்களின் இறுதியில் காணப்படும் பெயர்கள் மாமூலனார், எயினந்தை மகனார் இளங்கீரனார், மாங்குடி மருதனார் போன்று ஆர் ஈறு கொண்டே காணப்படுகின்றன. இத்தகைய பெயர்கள் நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்திலேயே எழுதப்பட்டிருக்கும் என எண்ணலாம்.

இதுபற்றி இரண்டு சாத்தியக் கூறுகளே இருக்க முடியும். தொகுக்கப்பட்ட காலத்திலேயே ஆர் ஈறுடன் எழுதப்படுவது

ஒன்று. இல்லையேல் பிற்காலத்தில் ஆர் ஈறு இட்டு எழுதப் பட்டிருக்கலாம் எனவும் கருதலாம். தொல்காப்பியர் காலம் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது என எண்ணின் இவை தொகுக்கப்பட்ட காலத்திலேயே எழுதப்பட்டிருக்கலாம் என எண்ணுவதில் தவறில்லை. மேலும் முன்னர் சாதாரணமாக ஆர் ஈறு இல்லாமல் எழுதப்பட்டிருந்து பின்னர் படி எடுத்தவர் எல்லாவற்றையும் ஆர் ஈறு இட்டு எழுதியிருப்பார் என எண்ணுவது திருத்தி எழுதினார் என எண்ணுவதே ஆகும். வேறு சிறப்பான சான்றுகள் எதுவும் இல்லாத நிலையில் திருத்தி எழுதினர் எனக் கொள்ளுவது முடியாத ஒன்றாகும். எனவே தொகுக்கப்பட்ட காலத்திலேயே ஆர் ஈறு இருந்தது என எண்ணுவதே பொருத்தமாகும். மேலும் சங்க இலக்கியமான கலித்தொகையிலேயே ஆர் ஈறு வந்திருப்பதும் இதற்கு அரண் செய்யும்.

எனவே பிற சங்க இலக்கியங்களில் இவ்வீறு காணப்பட வில்லையாயினும் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கில் வந்துவிட்ட நிலையில்தான் அவர் அதுபற்றிக் கூறினார் எனக் கொள்ள வேண்டும் "வழக்கும் செய்யுளும் நாடி" இலக்கணம் அமைத்த நிலையில்தான் தொல்காப்பியர் இவ்விகுதி பற்றிப் பேசுகிறார் என எண்ணலாம்.

### 6.3.2.1.1 ஆர் விகுதியும் ரகர வொற்றும்

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயும்போது ஆர் விகுதி கொண்ட சொற்கள் குறைவாகவே காணப்படு கின்றன. முன்னர்க் குறிப்பிட்டபடி ஒரு சில சொற்களே ஆர் விகுதியுடன் உள்ளன. மேலே குறிப்பிட்ட ஐந்து சொற்களும் இயற்பெயர்கள். மகனார், மகளார் என்ற இரண்டு முறைப் பெயர்களும் சிலம்பில் உள்ளன. எனவே ஆர் விகுதி இயற் பெயர்களுடன் மட்டுமன்றி முறைப்பெயர்களுடனும் வருவதாகக் கொள்ள வேண்டும். இதனால்தான் சேனாவரையரும், நச்சினார்க் கினியரும், தெய்வச்சிலையாரும் தாயார், தந்தையார் ஆகிய உதாரணங்களையும் தந்தனர் போலும்.

ஆர் விகுதியும், ரகர ஒற்றும் உயர்வு ஒருமையைக் குறிப் பவை ஆயினும் இவற்றிடையே ஒரு சில வேற்றுமைகளைக் காணமுடியும்.

ரகரவொற்று உயர்வு ஒருமையை மட்டுமன்றிப் பலர்பாலும் காட்டி நிற்கும். எடுத்துக்காட்டாக அவர் என்ற சொல் உயர்வு ஒருமையையும், பலர்பாலையும் காட்டும். குறுந்தொகையில் இச்சொல் நாற்பத்துமூன்று இடங்களில் உயர்வு ஒருமையையும், இரண்டு இடங்களில் பலர்பாலையும் காட்டி வருகின்றது. இது போன்றே அகநானூற்றில் முப்பத்தைந்து இடங்களில் உயர்வு ஒருமையாகவும் எட்டு இடங்களில் பலர்பாலாகவும் வந்துள்ளது. இதே நிலையை வேறு பல நூல்களிலும் காணலாம்.

"கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங்கலரே" குறு 21

இங்கு அவர் என்பது தலைவனைக் குறித்து வருவதும் "தலைவர் பொய் கூறுவாரல்லர்" என உரை எழுதப்படுவதும் காண்க.

அக இலக்கியங்களை நோக்க, வருகின்ற பன்மைப் பதிலிடு பெயர்களில் பெரும்பான்மையானவை உயர்வு ஒருமையில் வருவது கவனிக்கத்தக்கது. இவற்றைப் பலர்பால் எனப் பலர் தவறுதலாக எண்ணியிருக்கப் பெரும்பாலான இடங்களில் இவை உயர்வு ஒருமையாகவே வருவது ஊன்றிக் கவனித்தற்பாலது.

அவர் மட்டுமின்றி நீர், நீயிர் போன்றவையும் இந்நிலை யிலேயே உள்ளன. எடுத்துக்காட்டாகக் கலித்தொகையில் காணப்படும் நீர் என்னும் சொல் ஒன்பது இடங்களிலும் உயர்வு ஒருமையிலேயே வந்துள்ளது. நீயிர் என்ற சொல்லோ பண்டைத் தமிழில் நான்கு இடங்களில் உயர்வு ஒருமையில் வர, ஐந்து இடங்களில் பன்மையில் வந்துள்ளது.

ஆனால் ஆரீற்றுச் சொல்லோ, எப்போதும் உயர்வு ஒருமை யையே காட்டிநிற்கும். சாமனார், கஞ்சனார் போன்ற சொற் கள் எப்போதும் உயர்வு ஒருமையாகவே உள்ளன.

ரகர ஈறு பெயர்களில் மட்டுமன்றிப் பதிலிடு பெயர்களிலும் வருதல் காணலாம். இந்நிலை ஆர் விகுதிக்கு இல்லை.

| | | | |
|---|---|---|---|
| நீர் | அகம் 271-9 | இவர் | குறு 285-3 |
| நீயிர் | அகம் 26-19 | ஒருவீர் | புறம் 45-5 |
| அவர் | குறு 12-14 | | புறம் 311-5 |

ரகர வீற்றுச் சொற்கள் ஆர் ஈற்றுச் சொற்களைவிட மிக அதிகமாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் வருவதை நாம் அறிவோம். ரகர ஈற்றுச் சொற்கள் ஏராளமாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்பட ஆர் ஈற்றுச் சொற்கள் பின்பழந்தமிழ் இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன.

அதிகமாக வரும் ரகர வீற்றுச் சொற்களைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம் "ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி .................. இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல" எனக் கூறுவதும், ஆனால் சங்க இலக்கியங்களில் பயின்றுவராத 'ஆர்' ஈற்றுச் சொற்களை ஒத்துக்கொள்ளுவது போன்று கூறுவதும் பொருந்துமா என்ற வினா எழுவது இயற்கையே.

இவ்விரண்டும் உயர்சொற்கிளவிகளையே குறிக்குமாயினும் இவை இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடுகளை நாம் கண்டோம். இதனால்தான் சேனாவரையர் ஆரைக் கிளவி பற்றிப் பேசும்போது ஒருமை சிதையாமல் வருவது ஆரைக் கிளவி என்று கூறி அதனால் "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியின் வேறாதலறிக" என்றும், நச்சினார்க்கினியர் "ஒருமைப் பெயர் நின்று ஆரைக் கிளவியை ஏற்றலின், இவை ஒருவரைக் கூறும் பன்மை கிளவியின் வேறாதலறிக" (272) என்றும் கூறுவர். தெய்வச்சிலையார் ஆரீற்றுக்கிளவி இணைந்து வரும் நம்பி, நங்கை போன்ற சொற்கள் ஆண், பெண் பால் காட்டும் என்றும், ரகரவீற்றுச் சொல் பன்மைக்குரிய சொல் என்றும், ஆண், பெண் பால் காட்டாது என்றும், எனவே இரண்டும் உயர்வைக் காட்டு மாயினும் வேறு வேறு என்றும், ஒன்றில் மற்றொன்று அடங்காது என்றும் கூறுவார்.

பன்மைக்குரிய சொல்லை ஒருமைக்குச் சொல்லுதல் வழு வாயினும் நடைமுறையில் இருப்பதால் அதனை வழுவமைதி யாகக் கொள்ள வேண்டும் எனக் கருதினார் தொல்காப்பியர் என்று எண்ணியதால்தான் அவர் "ஒரு சார் பால் வழுவும் திணை வழுவும் அமைத்தலை நுதலிற்று" எனத் தலைப்பெழுது வார் அவர். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் வழுவமைதி யாகவே கொள்ளுவர்.

தொல்காப்பியர் ரகரவீற்றுச் சொற்கள் பன்மையைக் குறிப்பன என்றும், அவை ஒருமைக்கும் பயன்படுகின்றன என்றும், அந்நிலையில் அவற்றை ஒத்துக் கொள்ளலாம் என்றும் கூறுகிறாரேயன்றி, அவை தமிழ் இலக்கணத்துக்குப் பொருந்தா எனக் கூறவில்லை என்றும் கருதலாம்.

ஆனால் ஆர் ஈறே உயர்வு ஒருமைக்கு உரியது என்றும், எனவே அது இலக்கண மருங்கினது என்றும் எண்ணுவார் அவர் எனினும் அச்சொற்களும் வினைச் சொற்களில் பன்மை ஈற்றைக் கொண்டு முடிவது எவ்வாறு பொருந்தும் எனவும், அது இலக்கணமருங்கினதா என்றும் வினா எழலாம். பன்மை விகுதியைப் பற்றிக் குறிப்பிடும்போது

"அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கில் படர்க்கைச் சொல்லே" (சூத். 691)

என ஆர் பற்றிக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

### 6.3.2.1.2 பலர்பால் பெயர் விகுதிகளும், உயர்வு ஒருமையும்

பெயர்களில் அர், ஓர், அவர், போன்ற பல உருபுகள் உயர்திணை ஒருமையை மட்டுமின்றி உயர்திணைப் பலர்பால் காட்டுவனவாகவும் உள்ளன. பொதுவாகப் பலர்பால் காட்டும் விகுதிகளில் பெரும்பாலானவை உயர்வு ஒருமையும் காட்டுவன வாகக் கொள்ளலாம். இவை

"நெஞ்சமர் காதல ரழுத கண்ணீர்" புறம் 356-5
"சான்றோ ரிருந்த வவையத் துற்றோன் புறம் 266-8

"ஆன்றடங் கறிஞர் செறிந்தனர்" பத்து 6-481
போன்ற இடங்களில் பன்மை காட்டுவனவாக உள்ளன.

இத்தகைய விகுதிகள் உயர்வு ஒருமையை மட்டுமின்றி பலர் பாலையும் காட்டும் நிலையில்தான் தொல்காப்பியர் இவை பலர்பாலுக்கு உரியன என்றும், அவை ஒருவரைக்காட்டும் விகுதியாகவும் வந்துள்ளன என்றும் கருதினார். இதனால்தான் அவர் "ஒருவரைக் கூறும்......" எனக் கூறிப் போந்தார்.

பலர்பால் காட்டும் விகுதிகளில் பல உயர்வு ஒருமையைக் காட்டினும் சங்க இலக்கியங்களில் காணப்படும் -மார் விகுதி உயர்வு ஒருமையைக் காட்டுவதில்லை.

தோழிமார் தாய்மார் ஐய்மார் பாவைமார்

போன்ற சொற்கள் இப்பண்பைக் காட்டும். இதே போன்று தான் இன்றைய பேச்சுத் தமிழில் வரும்-கள் விகுதியும் உயர்வு ஒருமையைக் காட்டுவதில்லை.

மகன்கள் அண்ணன்கள்

போன்ற சொற்களில் வரும்-கள் விகுதியும் இத்தகையதே.

எனினும் -கள் விகுதி 'அவர்கள்' போன்ற பதிலிடுபெயர் களில் உயர்வு ஒருமையைக் காட்டும். 'கண்ணன் அவர்கள்' போன்ற ஆட்சி இன்று வழக்கில் உள்ளமை கண்கூடு.

### 6.3.2.2 பொதுப்பெயர்

பழந்தமிழில், காதலர், காதலோர், காதலவர், சான்றோர், சேர்ப்பர், ஆளர், அறிஞர், நாடர், மருத்துவர், கொடியர் போன்ற சொற்கள் உயர்வு ஒருமையைக் காட்டி நிற்கின்றன. இச்சொற்கள் அக இலக்கியங்களிலேயே அதிகமாகக் காணப்படு கின்றன. அதிலும் குறிப்பாகத் தலைவனைப் பற்றிய சொற் களாகவே உள்ளன. இதுபற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

இச்சொற்கள் அக இலக்கியங்கள் அனைத்திலும் பரந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் காதலர் என்ற சொல்

ஐங்குறுநூறு, அகம், நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை ஆகிய நூல்களிலும், திருக்குறளில் காமத்துப்பாலிலும் அதிகமாக வருகின்றது.

ஐங்குறுநூற்றில் தலைவி கூற்றாக வரும் பாடலொன்றில் (311)

"காடிறந் தனரே காதலர்
நீடுவர் கொல்லென நினையுமென் னெஞ்சே"

என வருவதும், அகநானூற்றில் (22)

"நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குலந்தமை கண்டே"

என வருவதும்,

"அவண ராகுக காதலர் இவண்நங்
காமம் படரட வருந்திய
நொய்மலி வருத்தங் காணன்மா ரெமரே"

என்று நற்றிணையில் (64) வருவதும் குறுந்தொகையில் (4)

"அமைவிலர் ஆகுதல் நோமென் னெஞ்சே"

என வருவதும், பாலைக்கலியில் (4)

"ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொ லறியேன்"

என வருவதும், திருக்குறளில் (1185)

"உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது"

என வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதைப்போன்றே பிற சொற்களும் உள்ளன.

"சான்றோர் அல்லர் யாம் மரீஇ யோரே" குறு 102-4

"நுண்ணியர் எம் காதலவர்" குறள் 1127

"வல்லுநர் நம் காதலோரே" ஐங் 338-5

"...........................முள்ளிலைத்
தடவ நிலைத் தாழைச் சேர்ப்பர்க்கு" குறு 219-6

"ஏதிலாளர்க்குப் பசந்தவென் கண்ணே" ஐங் 34-4

"வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை
... ... ... ... ... ... ... ... ... ...
என்றாழ் நீளிடைச் சென்றிசினோரே" நற் 314-2

"... ... ... ... ... .. காதலர்
தவச்செய் நாட்டர் ஆயினும்" நற் 115-8

"கொடியர் அல்லரெங் குன்றுகெழு நாடர்" குறு 87-3

"இன்னுயிர் போத்தரு மருத்துவராயின்" கலி 137-25

போன்றவற்றில் காணப்படும் சான்றோர், நுண்ணியர், காதலோர் போன்ற சொற்கள் உயர்வு ஒருமையைக் காட்டுவன வாக உள்ளன.

### 6.3.2.3 முறைப்பெயர்

சிலப்பதிகாரத்தில் 'மகனார்' என ஓரிடத்திலும் 'மகளார்' என இரு இடங்களிலும் வருதல் காணலாம்.

மகனார் சிலம்பு 16-17
மகளார் சிலம்பு 24-15-2, 24-16-2

### 6.3.2.4 பதிலிடுபெயர்கள்

பலவேறு பதிலிடுபெயர்களும் உயர்வு ஒருமையைக் காட்டி நிற்பதை பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது. பதிலிடு பெயர்கள் பெயர்களைப் பிரதிபலித்து நிற்பனவே. இந்நிலையில் பெயர்களில் காணப்படும் ஓரிரு கூறுகளேனும் பதிலிடு பெயர்களிலும் பிரதிபலித்து நிற்பதில் ஆச்சரியமில்லை. பெயர்களில் காணப்படும் திணை, பால் பகுப்பு பதிலிடு பெயர்களில் பிரதிபலித்து நிற்கின்றன. மேலும் பெயர்கள் உயர்வு தாழ்வு காட்டி நிற்பின் அவற்றைப் பிரதிபலிக்கும் பதிலிடு பெயர்களும் உயர்வு தாழ்வுகளைக் காட்டி நிற்கின்றன. உயர் சொற்களை

விளக்க உயர்வு காட்டும் பதிலிடுபெயர்களையே பதிலாக இட்டுப் பேசவேண்டும்.

கண்ணன், அண்ணன், தந்தை

போன்ற பெயர்கள் உயர்வு குறிக்குமாயின் அவற்றிற்குப் பதிலாக வரும் பதிலிடுபெயர்களும் உயர்வு காட்டுவனவாகவே இருத்தல் வேண்டும்.

கண்ணன் வந்தார், நான் அவரைப் பார்த்தேன்

என்பது இலக்கண வழுவில்லா வாக்கியங்கள். ஆனால்

கண்ணன் வந்தார். நான் அவனைப் பார்த்தேன்

போன்றவை இலக்கணப்பிழையான வாக்கியங்கள். இதைப் போன்றே

கண்ணன் வந்தான், அவரைப் பார்த்தேன்

என்பதும் பிழையே. எனவே பெயர்களில் பிரதிபலிக்கும் உயர்வு அவற்றிற்காக வரும் பதிலிடுபெயர்களிலும் பிரதிபலிக்க வேண்டும். முன்னிலையிலும்

நீங்கள் அங்கே போங்கள், உன்னை அங்கே பார்க்கிறேன்
நீர் அங்கு செல்லும், உன்னை அங்கே பார்க்கிறேன்

போன்றவை பிழையானவை.

உயர்விலும் ஒரு சில ஏற்றத்தாழ்வுகளைக் காண்கிறோம். இவற்றையும் பதிலிடுபெயர்கள் காட்டி நிற்றல் வேண்டும்.

கண்ணன் வந்தார். அவர் நல்லவர்.
கண்ணன் வந்தார்கள். அவர்கள் நல்லவர்.
நீங்கள் வாருங்கள். உங்களைப் பார்ப்பேன்.
நீர் வாரும். உம்மைப் பார்ப்பேன்.
நீங்கள் வாருங்கள். உங்களைப் பார்ப்பேன்.
தாங்கள் வாருங்கள். தங்களைப் பார்ப்பேன்.

போன்றவை இப்பண்பைக் காட்டும். இவ்வாக்கியங்கள் பிழை யின்றி இருக்க,

கண்ணன் வந்தார். அவர்கள் நல்லவர்கள்.
கண்ணன் அவர்கள் வந்தார்கள். அவர் நல்லவர்.
நீங்கள் வாருங்கள். உம்மைப் பார்ப்பேன்.
நீர் வாரும். உங்களைப் பார்ப்பேன்.
தாங்கள் வாருங்கள். உம்மைப்பார்ப்பேன்.

போன்றவை பிழையானவை. எனவே பதிலிடு பெயர்கள் எவற்றிற்காக நிற்கின்றனவோ அவற்றில் காணப்படும் உயர்வை அவை பிரதிபலிப்பனவாக இருத்தல் வேண்டும்.

இந்நிலையில் பதிலிடு பெயர்களும் பிற பெயர்களைப் போன்று உயர்வு ஒருமையைக் காட்டி நிற்கும் என்பது புலனாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பதிலிடுபெயர் களும் உயர்வினைக் காட்டி நிற்கின்றன. இவ்வுயர்வுப் பண்பைத் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடப் பதிலிடு பெயர்களிலும் காணலாம். இதனால்தான் "ஒருவரைக் கூறும்... .." என்ற சூத்திரத்திற்கு உதாரணம் கூறப்போந்த உரையாசிரியர்கள் மூன்று இடப் பதிலிடுபெயர்களையும் உதாரணங்களாகத் தந்து போந்தனர்.

இளம்பூரணர் தாம் வந்தார், தாம் வந்தனர் என்பவற்றை யும், சேனாவரையர் யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் என்பவற்றையும், நச்சினார்க்கினியர் யாம் வந்தேம், நீர் வந்தீர், இவர் வந்தார் என்பனவற்றையும், தெய்வச்சிலையார் அவர் வந்தார் என்பதையும் உதாரணங்களாகத் தருவர். இது போன்றே சுப்பிரமணிய சாஸ்திரியாரும், யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் என்பவற்றைத் தந்துள்ளார்.

இவர்கள் அனைவரும் பலவேறு பதிலிடுபெயர்களை மட்டுமே உதாரணங்களாகத் தந்திருப்பது பொருந்தாது என்பது கூறப்பட்டது. காதலர் போன்ற பிற பெயர்களையும் தந்து இருத்தல் வேண்டும்.

### 6.3.2.4.1 தன்மை

தன்மைப் பன்மைப் பதிலிடுபெயர்களாக யாம், நாம், யாங்கள் (சிலம்பு) ஆகியவை பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவற்றுள் யாம், நாம் ஆகியவையும் அவற்றின் வேற்றுமையடிகளாகிய எம், நம் ஆகியவையும் உயர்வு ஒருமையாக, ஒருமை குறிக்கும் பதிலிடுபெயர்களாக வந்துள்ளன. பொதுவாக உயர்வு குறிப்பனவே மிகுதியாக உள்ளன.

பழந்தமிழ் இலக்கியங்களில் 'யாம்' இருநூற்றுத்தொண்ணூற்றேழு இடங்களில் வந்துள்ளது. இவற்றுள் நூற்றுஎண்பது இடங்களில் ஒருமை காட்டி நிற்க நூற்றுப்பதினேழு இடங்களில் மாத்திரமே பன்மை காட்டி நிற்கிறது. இந்நிலையில் இது ஒருமையிலேயே அதிகமான இடங்களில் வருகின்றது என முடிவு கட்டலாம். இப்பண்பினைத் தனித்தனி இலக்கியங்களிலும் காணலாம். குறுந்தொகையில் காணப்படும் பதினேழு இடங்களில் பதினொரு இடங்கள் ஒருமையாக உள்ளன. இதே நிலைதான் ஐங்குறுநூறு, அகம் போன்ற நூல்களிலும் காணப்படுகிறது. புறநானூற்றிலும் கூட ஒருமையே அதிகமாக உள்ளது.

யாம்

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| பதி | 0 | 1 |
| ஐங் | 23 | 19 |
| அகம் | 27 | 16 |
| நற் | 16 | 12 |
| குறு | 11 | 6 |
| புறம் | 19 | 15 |
| பத்து | 3 | 1 |
| பரி | 12 | 5 |
| கலி | 49 | 14 |
| குறள் | 14 | 1 |
| சிலம்பு | 4 | 26 |
| மணி | 2 | 1 |

இதுபோன்றே நாம் என்ற பதிலிடுபெயரும் ஒருமையில் வருதல் உண்டு. பழந்தமிழ் இலக்கியங்களில் நாம் பன்மையில் ஐம்பத்துநான்கு இடங்களில் வர உயர்வு ஒருமையில் அறுபத்தைந்து இடங்களில் வந்துள்ளது

"..........அவரொடு பேணிச்
சென்றுநாம் முயங்கற் கருங்காட் சியமே" குறு 305-2-3

என்பது ஒருமையையும்,

"..........தோழிநாம் சென்மோ" அகம் 32-17

என்பது பன்மையையும் காட்டும்.

6.3.2.4.2 முன்னிலை

இதேநிலையைத்தான் பிற பதிலிடுபெயர்களிலும் காண்கிறோம். நீர் என்ற சொல்

"...................... நீர்
...................... ஒளித்த காடே" நற் 48-8

"...................... நீர் ... ...
...................... நினைந்தனி ரெனினே" அகம் 271-9

"......................நீர் போறிர்" கலி 9-11

என வருதல் காண்க.

இன்றையத் தமிழில் நீர் என்பது உயர்வு ஒருமையிலேயே வரக்காண்கிறோம். ஆனால் நீங்கள் என்பதோ பன்மையிலும் உயர்வு ஒருமையிலும் வரும்.

இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் முப்பத்திரண்டு இடங்களில் இருபத்துநான்கு இடங்கள் உயர்வு ஒருமையே. இது போன்றதே நீயிர் என்பதும். மொத்த இடங்கள் ஒன்பதில் நான்கு இடங்கள் உயர்வு ஒருமையே.

"நல்லோர்க் கொத்தனிர் நீயிர்" அகம் 26-19

"..............................இரவல
..............................

……………………நீயிரும்
…………………செல்குவி ராயின்
…………………பெறுகுவிர்'' பத்து 3.40-143, 145,163

6.3.2.4.3 படர்க்கை

படர்க்கைப் பதிலிடுபெயரும் இந்நிலையிலேயே உள்ளது. அவர், இவர் ஆகிய இரு பதிலிடு பெயர்களில் அவர் என்பது உயர்வு ஒருமையில் நூற்றுத்தொண்ணூற்றுஐந்து இடங்களிலும் பன்மையில் நூற்றுஎழுபத்தைந்து இடங்களிலும் வந்துள்ளது.

"… … … … … அவரொடு பேணிச்
சென்றுநாம் முயங்கற் கருங்காட் சியமே" குறு 305 2

இவர் என்பதும் உயர்வு ஒருமையில் மூன்று இடங்களில் வரப் பன்மையில் முப்பத்தொரு இடங்களில் வந்துள்ளது.

"… … … … … ஈண்டிவர்
சொல்லிய பருவமோ இதுவே …" குறு 285-3

போன்றவை இப்பண்பைக் காட்டும்.

பண்டைத் தமிழில் அவர், இவர் போன்றவை உயர்வு ஒருமையிலும் பன்மையிலும் வரத் தற்காலத் தமிழிலும் இவை உயர்வு ஒருமையிலேயே வருதல் குறிப்பிடத்தக்கது. அவர்கள் போன்ற இரட்டைப் பன்மைச் சொற்களே உயர்வு ஒருமையிலும் வருகின்றன.

6.3.2.5 வினைமுற்று

வினைமுற்றுக்களிலும் இத்தகைய உயர்வு ஒருமையைக் காண்கிறோம். வினைமுற்றுக்களில் வரும் விகுதிகள் அவற்றின் எழுவாய்களாக வரும் பெயர்கள், பதிலிடுபெயர்கள் ஆகிய வற்றைப் பிரதிபலித்து நிற்பன என்பதை முன்னரே கண்டோம். இந்நிலையில் அவற்றில் காணப்படும் உயர்வு ஒருமையும் விகுதி களில் பிரதிபலித்து நிற்பதில் வியப்பில்லை. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிட விகுதிகளும் உயர்வு ஒருமையைக்

காட்டி நிற்கின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் இவற்றிற்குரிய எடுத்துக்காட்டுக்கள் பலவற்றைக் காணமுடியும். தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் வரும் உயர்வு ஒருமை இந்நூலில் (பிரிவு 7, 10) விரிவாக ஆராயப்படுகின்றன.

இவற்றைப் போன்றே படர்க்கையிலும் உயர்வு ஒருமை உள்ளது.

"செல்வார் அல்லரென் றியானிகழ்ந் தனனே" குறு 43-1

"அவரோ வாரார்தான் வந்தன்றே" ஐங் 342-1

படர்க்கை உயர்வு ஒருமை பற்றிப் பின்னர் (அகத்தியலிங்கம் 1983c) பரக்க ஆராயப்படும்.

### 6.3.2.6 வினையாலணையும் பெயர்

வினைமுற்றுக்களைப் போன்று வினையாலணையும் பெயர்களும் உயர்வு ஒருமை காட்டி நிற்கும். தன்மை, முன்னிலை, படர்க்கை வினையாலணையும் பெயர்கள் இப்பண்பைக் கொண்டு உள்ளன. தன்மை, முன்னிலை பற்றி இந்நூலில் (பிரிவு 7, 10) பரக்கக் காணலாம்.

"செறிவளை நெகிழ செய்பொருட் ககன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி ... ... ..." குறு 196-2

"... ... ... ... ... ... ... பிரிவோர்
அதனினும் கொடிய செய்குவ ரன்னாய்" ஐங் 215-5

இது பற்றிப் பின்னர் (மேற்படி 1983c) பரக்க ஆராயப்படுகின்றது.

### 6.3.2.7 ஏவல்வினை

ஏவல் வினையிலும் இத்தகைய உயர்வு ஒருமையைக் காண்கிறோம்.

"வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ" அகம் 387-3

"நின்னளந் தறிமதி பெரும வென்றும்" புறம் 161-25

போன்ற இடங்கள் இப்பண்பைக் காட்டும். இதுபற்றி முன்னரே (அகத்தியலிங்கம், 1979, 1981) பரக்க ஆராயப்பட்டுள்ளது.

# 7. தன்மை உயர்வு ஒருமை

## 7.0 பழந்தமிழில் தன்மை உயர்வு ஒருமை

### 7.0.1 பதிலிடுபெயர்கள்

உயர்வு ஒருமை, தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று வகைப் பதிலிடுபெயர்களிலும் காணப்படுகின்றது என்பது முன்னரே கூறப்பட்டது. பழந்தமிழில் இம்மூன்று வகைப் பதிலிடுபெயர்களிலும் அவற்றைப் பிரதிபலித்து நிற்கும் விகுதிகளிலும் வினையாலணையும் பெயர்களிலும் பிற பெயர்களிலும் இப்பண்பினைக் காணலாம். தன்மையில் தன்மை காட்டும் பதிலிடுபெயர்களிலும் விகுதிகளிலும் உயர்வு ஒருமை காணப் படுகின்றது. பழந்தமிழ் நூல்கள் என்று கருதப்படும் எல்லா நூல்களிலும் இப்பண்பு உள்ளது. யாம் (எம்), நாம் (நம்) ஆகிய இரு தன்மைப் பன்மைப் பதிலிடுபெயர்களும் ஒருமையைக் காட்டி நிற்கின்ற இடங்கள் பல உள்ளன.

"......................... நீயெமக்
கியாரை ............................" — பதி 52-23

"................................ உரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே" — ஐங் 478-3

"முயங்கல் யாம்வேண் டினம்" — அகம் 26-15

"................................யாந் தன்
முயங்கல் விருப்போடு குறுகினே மாக" — நற் 250-5

"இறப்பருங் குன்ற மிறந்த யாம்" — குறு 209-3

"எய்தவந் தனம்யா மேத்துகம் பலவே" — புறம் 10-13

"யாம வணின்றும் வருதும்" — பத்து 3-143

"யாங் கைப்படுத்தேம்" — பரி 18-18

"யா முள்ளத் துறந்தவள்" — கலி 19-8

"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா" — குறள் 1329

"மன்னவர்க்கியாம் உரைத்து மென" — சிலம்பு 20-12

"யாமே லுரைத்த பொருள்கட்கு" மணி 30-252

போன்ற இடங்களில் யாம், எமக்கு போன்றவை ஒருமையையே காட்டி நிற்கின்றன. இதே பண்பினை நாம், நம் ஆகிய பெயர்களிலும் காண்கிறோம்.

"இதுவே மடந்தை நா மேவிய பொழுது" ஐங் 415-1
"முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே" அகம் 244-14
"அந்தீம் கிளவி கேட்க நாமே" நற் 221-13
"... ... அவரோடு பேணிச்
சென்று நாம் முயங்க" குறு 365-2-3
"நாங் கொண்ட குறிப்பு" கலி 78-12
"நாம் காதல் கொண்டார்" குறள் 1195

போன்ற இடங்களில் நாம் உயர்வு ஒருமை காட்டுவதாக உள்ளது.

பழந்தமிழ் இலக்கியங்களில் நாம், யாம் ஆகியவை ஒருமையில் வரும் இடங்களைக் கீழ்க்காணும் பட்டியல் நன்றாகக் காட்டும்.

**பன்மை பதிலிடுபெயர்கள் ஒருமையில் வரும் இடங்கள்**

| | நாம் | யாம் | யாஅம் | நம் | எம் |
|---|---|---|---|---|---|
| பதி | — | — | — | — | 4 |
| ஐங் | 10 | 22 | — | 17 | 39 |
| அகம் | 16 | 27 | — | 21 | 46 |
| நற் | 11 | 24 | — | 28 | 32 |
| குறு | 9 | 12 | — | 38 | 18 |
| புறம் | — | 19 | — | — | 73 |
| பத்து | 1 | 3 | — | 4 | 4 |
| பரி | — | 11 | 1 | — | 11 |
| கலி | 16 | 48 | 1 | 24 | 103 |
| குறள் | 1 | 14 | — | 4 | 15 |
| சிலம்பு | 1 | 4 | — | 6 | 29 |
| மணி | — | 2 | — | — | 17 |

### 7.0.2 வினை முற்று

இந்நிலையினை வினை முற்றுக்களிலும் காண முடிகிறது. தன்மைப் பன்மை விகுதி எனக் கருதப்படும் -ஏம், -அம், -எம், -ஆம், -கும், -இகும், -டும், -தும், -றும், -ஓம் ஆகிய பத்து விகுதிகளும் உயர்வு ஒருமையைக் காட்டுவனவாகவும் உள்ளன.

புலவர்கள் அரசனிடம் பேசும்போதும், பிற புலவர்களிடம் பேசும் போதும், தலைவி தோழியிடம் பேசும் போதும், தலைவி தலைவனிடம் பேசும்போதும், இன்னோரன்ன பிற இடங்களிலும் இந்நிலையைக் காணமுடிகிறது.

புறநானூற்றில் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு சான்றோரைப் பார்த்துக் கூறும் பாடலில் (246)

"உயவற் பெண்டிரே மல்லேம்"

எனக் கூறுதல் காணத்தக்கது.

மலையமான் திருமுடிக்காரியைப் பாடும் பாடலில் (புறம் 126)

"... ... ... ... மருக
வல்லே மல்லே மாயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவமாயிற் ... ..."

எனக் கூறும்போது தன்னைக் குறிக்கப் பன்மையில் 'வல்லேம் அல்லேம்' எனவும், 'கிளக்குவம்' எனவும் கூறுதல் காணத் தக்கது.

இத்தகைய நிலையினை அகப்பாடல்கள் பலவற்றில் காண முடியும். அகநானூற்றில் (261) தலைவன் கூற்றாக வரும் பாடல் ஒன்றில்

"யாமுந் துறுதல் செல்லேம் ஆயிடை
அருஞ்சுரத் தல்கி யேம் ... ... ... ... ..."

என்பதில் 'செல்லேம்' எனக் கூறுவதும், தலைவி தோழியிடம் கூறும் குறுந்தொகைப் பாடல் (313) ஒன்றில்

"... ... ... ... துறைவனோடு
யாத்தேம் ... ... ... ...."

எனவும் கூறுதல் காண்க. இவையெல்லாம் தன்மை ஒருமையில் பன்மை விகுதிகள் வருகின்றன என்பதைக் காட்டும். இவ் உயர்வு ஒருமை விகுதிகள் வரும் இடங்களைப் பட்டியலில் (7.4) காணலாம்.

## 7.1 விகுதிகள்

தன்மையில் உயர்வு ஒருமை காட்டும் விகுதிகளாக -ஏம், -அம், -எம், -ஆம், -கும், -இகும், -டும், -தும், -றும், -ஓம் ஆகியவை உள்ளன (பட்டியல் 1).

பன்மை விகுதிகளைப் போலவே இங்கும் -அம் விகுதியே அதிகமாக வந்துள்ளது. -ஏம், -தும் ஆகியவை பிற விகுதிகளை விட அதிகமாக உள்ளன.

### 7.1.1 -ஏம்

### 7,1.1.1 சூழல்கள்

இவ்விகுதி பழந்தமிழ் இலக்கிய நூல்களில்

1, இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. -ற்- எதிர்மறைக்குப் பின்னரும்
4. குறிப்புவினையடிகளுக்குப் பின்னரும்
5. வினையாலணையும் பெயர் விகுதி -ற்- க்குப் பின்னரும் வரும். இவ்விகுதி எதிர்மறையிலும், குறிப்பு வினையடிகளிலுமே அதிகமாக வந்துள்ளது.

#### 7.1.1.1.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| குறுகினேம் | அருகில் சென்றேம் | நற் 250-6 |
| யாத்தேம் | கட்டினேம் | குறு 313-4 |
| ஆயினேம் | ஆயினேம் | புறம் 141-9 |
| தொடர்ந்தேம் | தொடராநின்றேம் | பரி 20-62 |
| பெற்றேம் | பெற்றேம் | கலி 66-22 |
| ஒன்றினேம் | ஒரு மனமாயினேம் | கலி 86-15 |
| இருந்தேம் | இருந்தேம் | குறள் 1312 |

### 7.1.1.1.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வருவேம் | வருதும் | அகம் 317-17 |
| அறிவிப்பேம் | தெரிவிப்பேம் | அகம் 52-10 |
| வருவேம் | வருவேம் | குறு 358-4 |
| கொள்வேம் | கொள்ளுவேம் | கலி 81-35 |
| பழிப்பேம் | குறை கூறுவேம் | கலி 68-17 |
| தளிர்க்குவேம் | மனமகிழுவேம் | கலி 143-30 |
| நிற்பேம் | நிற்கக் கடவேம் | குறள் 1260 |

### 7.1.1,1.3 -ø- எதிர்மறைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| நேரேம் | எதிர்ப்படுகின்றிலேம் | ஐங் 114-2 |
| அறிவியேம் | தெரிவியாதொழிவேம் | அகம் 52-10 |
| (நீங்கல்) செல்லேம் | நீங்கமாட்டுகிலேம் | நற் 52-5 |
| காணேம் | காணேம் | குறு 290-3 |
| வேண்டேம் | விரும்பேம் | புறம் 146-2 |
| விடேம் | விடேம் | கலி 89-14 |
| எழுதேம் | எழுதுவதும் செய்யேம் | குறள் 1127 |
| மறக்கமாட்டேம் | மறந்தமைகிலேம் | சிலம்பு 7-32 4 |

### 7.1.1.1.4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| அல்லேம் | அல்லேம் | ஐங் 80-1 |
| அல்லேம் | அல்லேம் | அகம் 186-18 |
| பாசறையேம் | பாசறையின்கண் இராநின்றேம் | நற் 341-10 |
| அனையேம் | தன்மையேம் | குறு 164-6 |
| காட்டுநாட்டேம் | காட்டுநாட்டின் கண்ணேம் | புறம் 150-19 |
| நெஞ்சினேம் | நெஞ்சினையுடையேம் | கலி 35-19 |
| எழுநாளேம் | ஏழுநாளுடைய மாயினேம் | குறள் 1278 |

### 7.1.1.1.5 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர்

இச்சூழலில் குறிப்பு வினையடிகள் மட்டுமே பயின்று வரக் காணலாம்.

| | | |
|---|---|---|
| உவகையேம் | மகிழ்ச்சி உடையேம் | அகம் 262-13 |
| இன்னேம் | இத்தன்மையேம் | புறம் 141-9 |
| நெஞ்சத்தேம் | நெஞ்சினையுடைய யாங்கள் | கலி 68-11 |

## 7.1.2 -அம்

### 7.1.2.1 சூழல்கள்

இவ்விகுதி

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. -அல்-, -இல்- எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னரும்
5. குறிப்புவினையடிகளுக்குப் பின்னரும்
6. வினையாலணையும் பெயர் விகுதி -ʃ- க்குப் பின்னரும்

வரும். இவ்விகுதியே எல்லா விகுதிகளையும் விட அதிகமான இடங்களில் வருகின்றது. எனினும் பதிற்றுப்பத்து, பத்துப் பாட்டு, பரிபாடல், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்பட வில்லை. சிலம்பில் ஒரே ஒரு இடத்தில்தான் காணப்படுகின்றது.

#### 7.1.2.1.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| மருள் உற்றனம் | மயங்கி விட்டேம் | ஐங் 340-2 |
| இறந்தனம் | கடந்து வந்தனேம் | அகம் 361-16 |
| கண்டனம் | கண்டு மகிழ்ந்தேம் | நற் 384-8 |
| கண்டனம் | கண்டேம் | புறம் 196-9 |

எல்லா நூல்களிலும் இச்சூழலைக் காண முடிவதில்லை. இதே நிலையைத்தான் -இன்- சூழலிலும் காண்கிறோம்.

#### 7.1.2.1.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| நீடினம் | காலம் தாழ்த்தேம் | ஐங் 478-1 |
| மருவினம் | அடைந்துள்ளேம் | அகம் 301-26 |
| எய்தினம் | அடைந்தனம் | நற் 9-4 |
| ஆயினம் | ஆயினோம் | குறு 164-6 |
| அஞ்சினம் | அஞ்சினேம் | புறம் 229-17 |

### 7.1.2.1.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| காண்கம் | கண்டு மகிழ்வேம் | ஐங் 447-4 |
| செய்குவம் | செய்யவல்லேம் | ஐங் 288-2 |
| காண்கம் | காண்பேம் | அகம் 261-7 |
| காண்குவம் | காண்போம் | அகம் 54-6 |
| கூறுவம் | கூறுவேம் | அகம் 198-1 |
| காண்கம் | கண்டு மகிழ்வோம் | நற் 81-9 |
| வருவம் | வருகின்றோம் | நற் 169-2 |
| அயர்கம் | செய்வேம் | குறு 80-3 |
| உய்குவம் | தப்புவேம் | குறு 11-3 |
| ஏத்துகம் | புகழ்வேம் | புறம் 10-13 |
| காண்குவம் | காண்குவம் | புறம் 40-8 |
| அருளுகம் | அருளுவேம் | கலி 95-29 |
| அமைகுவம் | ஆற்றியிருப்பேம் | கலி 71-23 |
| அயர்கம் | அயர்வேம் | குறள் 1268 |
| பெறுகுவம் | பெறவல்லேம் | குறள் 1328 |

### 7.1.2.1.4 -அல்-, -இல்- எதிர்மறை விகுதிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| துன்னலம் | முயங்குவேம் அல்லேம் | ஐங் 63-4 |
| கூறலம் | கூறாது விடுவேம் | அகம் 198-1 |
| பிரியலம் | பிரியகில்லோம் | நற் 224-7 |
| உள்ளலம் | நினைத்தேம் அல்லேம் | குறு 209-4 |
| செல்லலம் | செல்லேம் | புறம் 101-1 |
| நீங்கலம் | நீங்கேம் | கலி 40-29 |
| அறியலம் | அறிய மாட்டேமா யிருந்தேம் | குறள் 1257 |
| கண்டிலம் | கண்டிலேம் | சிலம்பு 15-144 |

-இல்- எதிர்மறைக்குப் பின்னர் சிலம்பில் மட்டுமே ஒரே ஒரு இடத்தில் இவ்விகுதி காணப்படுகிறது.

### 7.1.2.1.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| அனையம் | போன்று காணப்படுகின்றோம் | ஐங் 70-5 |
| காதலம் | காதலுடையேம் | அகம் 26-22 |

| | | |
|---|---|---|
| உடையம் | உடையேம் | நற் 374-5 |
| இன்னம் | இத்தகையேம் ஆயினம் | குறு 223-7 |
| இளையம் | இளையேம் | புறம் 248-2 |
| இலம் | அல்லேம் | கலி 87-14 |

7.1.2.1.6 வினையாலணையும் பெயர் விகுதி -Ø-க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வேட்கையம் | அவாவுடையேம் | ஐங் 359-1 |
| அசையினம் | தங்கினேம் | அகம் 287-12 |
| இனையம் | இத்தன்மையேம் | நற் 349-5 |
| மேவினம் | பொருந்தினேம் | குறு 270-6 |

7.1.3 -எம்

7.1.3.1 சூழல்கள்

இவ்விகுதி

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னரும்
4. வினையாலணையும் பெயர் விகுதி -Ø-க்குப் பின்னரும்

வரும்.

7.1.3.1.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வந்தனெம் | வந்தேம் | ஐங் 491-3 |
| கண்டனெம் | கண்டேம் | ஐங் 69-1 |
| செய்தனெம் | செய்துகொண்டேம் | குறு 304-8 |

7.1.3.1.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| ஆயினெம் | ஆயினம் | அகம் 262-13 |

7.1.3.1.3 இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| காண்குவெம் | கண்டு மகிழ்வேம் | ஐங் 443-3 |
| புலக்குவெம் | புலப்பேம் | ஐங் 80-1 |
| என்குவெம் | கூறாநிற்பேம் | குறு 191-7 |

### 7.1.4 -ஆம்

#### 7.1.4.1 சூழல்கள்

இவ்விகுதி

1. இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. -ø- எதிர்மறைக்குப் பின்னரும்

வரும்.

##### 7.1.4.1.1 இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| தலைப்பட்டாம் | பட்டேமாகின்றேம் | கலி 112-22 |
| கோட்பட்டாம் | பிடித்துக்கொள்ளப்பட்டேம் | கலி 115-3 |

##### 7.1.4.1.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| செய்வாம் | செய்வாம் | அகம் 252-9 |
| அகல்வாம் | செல்வோம் | நற் 103-10 |
| செய்வாம் | செய்யமாட்டுவேம் | குறு 197-1 |
| தோலாம் | தோலாதிருப்பேமோ, தோற்பேம் | கலி 73-22 |
| கூறுவாம் | கூறுவேம் | கலி 55-5 |
| காண்பாம் | காண்பேம் | கலி 36-20 |
| அறிவாம் | அறிந்துகொள்ளக் கடவேம் | மணி 19-16 |

##### 7.1.4.1.3 -ø- எதிர்மறைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| செய்யாம் | செய்யாம் | அகம் 106-7 |
| துஞ்சாம் | தூங்காதிருந்தனம் | நற் 281-10 |
| உள்ளாம் | நினைத்தலும் செய்யேம் | குறு 218-4 |
| ஓராம் | ஆராயேம் | குறு 218-3 |

### 7.1.5 -கும்

#### 7.1.5.1 சூழல்

இவ்விகுதி வினையடிகளுக்குப் பின்னர் வரும்.

7.1.5.1.1 வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உண்கும் | உண்பேம் | புறம் 125-4 |
| காண்கும் | காண்போம் | கலி 80-26 |

7.1.6 -இகும்

7.1.6.1 சூழல்

இவ்விகுதி செய்து என்னும் வாய்பாட்டுப் வினையெச்சத் திற்குப் பின்னர் வரும்.

7.1.6.1.1 செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத் திற்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| கண்டிகும் | காண்கின்றோம் | பதி 11-20 |
| கண்டிகும் | கண்டேம் | ஐங் 121-1 |
| கண்டிகும் | கண்டேம் | நற் 20-1 |

7.1.7 -தும்

7.1.7.1 சூழல்

இவ்விகுதி வினையடிகளுக்குப் பின்னர் வரும்.

7.1.7.1.1 வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வருதும் | வருகின்றோம் | ஐங் 420-4 |
| வருந்துதும் | வருந்துகின்றேம் | அகம் 287-14 |
| வருதும் | வருகின்றோம் | நற் 214-5 |
| ஆகுதும் | ஆகின்றேம் | குறு 290-6 |
| உள்ளுதும் | நினைப்பேம் | புறம் 197-18 |
| வருதும் | வருவேம் | கலி 35-16 |
| இழத்தும் | இழப்பேம் | குறள் 1250 |
| சூடுதும் | சூடுவேம் | சிலம்பு 25-149 |

7.1.8 -டும்

7.1.8.1 சூழல்

இவ்விகுதி வினையடிகளுக்குப் பின்னர் வரும். இவ்விகுதி புறநானூற்றில் மட்டும் ஒரு இடத்தில் வரக் காணலாம்.

7.1.8.1.1 **வினையடிகளுக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| காண்டும் | காண்பேம் | புறம் 173-9 |

7.1.9 **-றும்**

7.1.9.1 **சூழல்**

இவ்விகுதி வினையடிகளுக்குப் பின்னர் வரும்.

7.1.9.1.1 **வினையடிகளுக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| என்றும் | புகழாநின்றேம் | ஐங் 11-3 |
| சேறும் | செல்லாநிற்பேம் | நற் 24-6 |
| சேறும் | செல்வேம் | குறு 325-1 |
| சேறும் | போவேம் | கலி 110-23 |

7.1.10 **-ஒம்**

இவ் விகுதி ஐங்குறுநூற்றிலும், புறநானூற்றிலும் ஒவ்வொரு இடத்தில் வரக் காண்கிறோம்.

7.1.10.1 **சூழல்**

இது

1. இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னரும்

வரும்.

7.1.10.1.1 **இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| மறந்தோம் | மறந்தே போயினேம் | ஐங் 112-4 |

7.1.10.1.2. **இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| தீர்க்குவோம் | போக்குவோம் | புறம் 381-16 |

7 2 **முடிபு**

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழில் யாம், நாம் ஆகிய இரு பதிலிடுபெயர்களும், எல்லாத் தன்மைப் பன்மை விகுதிகளும் வேறுபாடின்றி உயர்வு ஒருமை காட்டும் பண்பினைக் கொண்டு விளங்குகின்றன என்பது புலனாகும்.

## 7 3 பட்டியல்கள்

### 7.3.1 பட்டியல் 1: தன்மை உயர்வு ஒருமை விகுதிகள்

| | -ஏம்- | -அம் | -எம் | -ஆம் | -ஓம் | -கும் | -இகும் | -தும் | -டும் | -றும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | — | — | — | — | — | — | 4 | — | — | — |
| ஐங் | 9 | 29 | 5 | — | 1 | — | 8 | 6 | — | 1 |
| அகம் | 9 | 54 | 1 | 4 | — | 2 | 1 | 6 | — | — |
| நற் | 7 | 18 | — | 5 | — | — | 1 | 6 | — | 4 |
| குறு | 7 | 17 | 2 | 5 | — | — | — | 3 | — | 2 |
| புறம் | 11 | 30 | — | — | 1 | 1 | — | 5 | 1 | — |
| பத்து | — | — | — | — | — | — | — | — | — | — |
| பரி | 3 | — | — | — | — | — | — | — | — | — |
| கலி | 31 | 6 | — | 6 | — | 2 | — | 5 | — | 1 |
| குறள் | 8 | 3 | — | — | — | — | — | 1 | — | — |
| சிலம்பு | 1 | 1 | — | — | — | — | — | 2 | — | — |
| மணி | — | — | — | 1 | — | — | — | — | — | — |

7.3.2 பட்டியல் 2: -ஏம்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | | | எதிர்மறை | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | -இன்- | ஏனையவை | -ப்(ப்)- | -வ்- | -குவ்- | -க்- | -∅- | |
| பதி | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | — | — | — | 1 | — | — | 4 | 4 |
| அகம் | — | — | 1 | 3 | — | — | 2 | 3 |
| நற் | 1 | — | — | 1 | — | — | 1 | 4 |
| குறு | — | 1 | — | 1 | — | — | 2 | 3 |
| புறம் | 1 | — | — | — | — | — | 1 | 9 |
| பத்து | — | — | — | — | — | — | — | — |
| பரி | — | 3 | — | — | — | — | — | — |
| கலி | 1 | 6 | 1 | 3 | 1 | — | 8 | 11 |
| குறள் | — | 1 | 2 | 1 | — | — | 1 | 3 |
| சிலம்பு | — | — | — | — | — | — | 1 | — |
| மணி | — | — | — | — | — | — | — | — |

7.3.3 பட்டியல் 3: -அம்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -வ்- | -குவ்- | -க்- | -அல்- | -இல்- | |
| பதி | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | 6 | 2 | — | 6 | 1 | 3 | — | 11 |
| அகம் | 17 | 7 | 5 | 6 | 5 | 4 | — | 10 |
| நற் | 4 | 2 | 1 | — | 4 | 3 | — | 4 |
| குறு | — | 6 | — | 2 | 2 | 2 | — | 5 |
| புறம் | 7 | 2 | — | 7 | 2 | 3 | — | 9 |
| பத்து | — | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — | — |
| கலி | — | — | — | 1 | 2 | 2 | — | 1 |
| குறள் | — | — | — | 1 | 1 | 1 | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — | 1 | — |
| மணி | — | — | — | — | — | — | — | — |

7.3.4 பட்டியல் 4: -எம்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -குவ்- | -அல்- | -இல்- | |
| பதி | — | — | — | — | — | — |
| ஐங் | 2 | — | 3 | — | — | — |
| அகம் | — | 1 | — | — | — | — |
| நற் | — | — | — | — | — | — |
| குறு | 1 | — | 1 | — | — | — |
| புறம் | — | — | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — |
| கலி | — | — | — | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — |
| மணி | — | — | — | — | — | — |

7.3.5 பட்டியல் 5: -ஆம்

| | இறந்தகாலம் | இறப்பில்காலம் | | | | எதிர்மறை | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|
| | | -ø- | -ப்(ப்)- | -வ்- | -குவ்- | -ø- | |
| பதி | — | — | — | — | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — | — |
| அகம் | — | — | — | — | 2 | 2 | — |
| நற் | 1 | — | — | 3 | — | 1 | — |
| குறு | — | — | — | 1 | — | 4 | — |
| புறம் | — | — | — | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — |
| கலி | 2 | 1 | 2 | 1 | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — | — |
| மணி | — | — | — | 1 | — | — | — |

### 7.3.6 பட்டியல் 6: -கும்

| | இறப்பில்காலம் |
|---|---|
| பதி | — |
| ஐங் | — |
| அகம் | 2 |
| நற் | — |
| குறு | — |
| புறம் | 1 |
| பத்து | — |
| பரி | — |
| கலி | 2 |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

### 7.3.7 பட்டியல் 7: -இகும்

| | இறந்தகாலம் |
|---|---|
| பதி | 4 |
| ஐங் | 8 |
| அகம் | 1 |
| நற் | 1 |
| குறு | — |
| புறம் | — |
| பத்து | — |
| பரி | — |
| கலி | — |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

### 7.3.8 பட்டியல் 8: -தும்

| | வினையடிகளுக்குப்பின் |
|---|---|
| பதி | — |
| ஐங் | 6 |
| அகம் | 6 |
| நற் | 6 |
| குறு | 3 |
| புறம் | 5 |
| பத்து | — |
| பரி | — |
| கலி | 5 |
| குறள் | 1 |
| சிலம்பு | 2 |
| மணி | — |

### 7.3.9 பட்டியல் 9: -டும்

| | -ண் இறுதி வினையடிக்குப் பின் |
|---|---|
| பதி | — |
| ஐங் | — |
| அகம் | — |
| நற் | — |
| குறு | — |
| புறம் | 1 |
| பத்து | — |
| பரி | — |
| கலி | — |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

### 7.3.10 பட்டியல் 10: -றும்

| | -ல், -ன் இறுதி வினையடிக்குப் பின் |
|---|---|
| பதி | — |
| ஐங் | 1 |
| அகம் | — |
| நற் | 4 |
| குறு | — |
| புறம் | — |
| பத்து | — |
| பரி | — |
| கலி | 1 |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

## 7.3.11 பட்டியல் 11: -ஓம்

| | இறந்தகாலம் | இறப்பில்காலம் | | | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|
| | | -குவ்- | -க்- | -Ø- | -Ø- | -இல்- | |
| பதி | — | — | — | — | — | — | — |
| ஐங் | 1 | — | — | — | — | — | — |
| அகம் | — | — | — | — | — | — | — |
| நற் | — | — | — | — | — | — | — |
| குறு | — | — | — | — | — | — | — |
| புறம் | — | 1 | — | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — |
| கலி | — | — | — | — | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — | — |
| மணி | — | — | — | — | — | — | — |

## 7.4 உயர்வு ஒருமை வரும் இடங்கள்

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| 1) -ஏம் | | |
| புலவர் | அரசன் | புறம் 126-5, 5, 16, 141-8, 9, 9, 142-4, 145-4 |
| புலவர் | பறம்புநாடு | புறம் 113-6 |
| அரசி | சான்றோர் | புறம் 246-10 |
| வேட்டுவன் | புலவர் | புறம் 150 19 |
| தலைவன் | வானம் | குறு 270-8 |
| தலைவி | தோழி | அகம் 52-10, 10 |
| | | நற் 146-8 |
| | | குறு 280-3, 313-4, 358-4, |
| | | கலி 24-14, 35-19, 76-10, 118-14, 18 |
| | | குறள் 1127, 1148, 1204, 1312 |
| | | சிலம்பு 24-3-1, 4-1, 5-1 |
| தலைவி | தலைவன் | ஐங் 48-4, 80-1 |
| | | அகம் 319-16 |
| | | குறு 79-7 |
| | | கலி 66-22, 68-9, 11, 15, 17, 69-21, 72-23, 82-18, 88-17, 89-7, 90-28, 29, 108-45, 63, 111-10, 116-1 |
| | | பரி 8-83 |
| தலைவி | ஊரார் | குறு 290-3 |
| | | கலி 143-30 |
| பரத்தை | தலைமகட்குப் பாங்காயினார் | ஐங் 88-4 |
| | | அகம் 186-18, 18 |
| | | குறு 164-6 |
| தலைவன் | தோழி | அகம் 261-11 |
| கூனி | குறளன் | கலி 94-32 |

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| தலைவன் | நெஞ்சு | அகம் 199-14, 262-13 |
| | | நற் 52-5, 341-10, 10, 10 |
| தலைவன் | பாணன் | ஐங் 135-1 |
| | | பரி 18-18 |
| பாணன் | தலைவன் | ஐங் 135-1, 480-1, 1 |
| தலைவன் | தலைவி | ஐங் 429-2 |
| | | அகம் 317-17 |
| | | நற் 316-4 |
| | | கலி 31-8, 81-35, 142-26 |
| தலைவி | நெஞ்சு | கலி 89-14 |
| | | குறள் 1250, 1260 |
| தலைவி | பரத்தை | பரி 20-62 |
| மாதவி | அன்னங்கள் | சிலம்பு 7-32-4 |
| தலைவி | மாலைப் பொழுது | கலி 118-14, 18 |

2) -அம்

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| புலவர் | (தன்னோடு) | புறம் 229-17, 271-4,7 |
| தலைவி | (தன்னோடு) | புறம் 248-2 |
| அரசன் | (தன்னோடு) | புறம் 75-3 |
| புலவர் | அரசன் | புறம் 10-13, 13, 40-8, 61-19, 67-17, 76-3, 126-6,18, 145-4, 166-6, 196-9, 368-1, 4, 7, 18, 372-13 |
| புலவர் | நெஞ்சு | புறம் 101-1, 1 |
| அரசன் | புலவர் | புறம் 48-9 |
| புலவர் | சான்றோர் | புறம் 192-5, 6, 8, 11, 12, 13 |
| பரத்தை | தலைவிக்குப் | அகம் 216-7 |
| | பாங்காயினார் | குறு 80-3, 164-6, 370-3, 5 |
| தலைவன் | நெஞ்சு | ஐங் 288-2, 330-2, 416-5, 446-2, 447-4, 448-4, 449-4 |

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| | | அகம் 5-26, 27, 21-8, 43-12, 47-2,19, 93-7,16, 121-1, 167-4, 198-1,1 225-4,14, 230-13, 258-4, 279-9, 280-10, 10, 10, 334-3, 339-10, 361-16, 372-6, 390-12 |
| | | நற் 6-11, 204-4, 284-4, 312-6, 349-5, 377-4,5, 384-8, |
| | | குறு 168-6,7, 207-1, 274-8 |
| | | குறள் 1268 |
| தலைவி | தோழி | ஐங் 36-3, 112-3, 114-4, 340-2 |
| | | அகம் 26-15, 22, 32-21, 66-6, 101-18, 113-23, 128-5, 165-5, 183-15, 15, 301-26, 328-8, 11, 345-3, 355-11, 388-9 |
| | | நற் 64-3 |
| | | குறு 223-7, 320-5, 368-8, 387-3 |
| | | குறள் 1257 |
| தலைவி | நெஞ்சு | அகம் 287-12 |
| | | குறு 11-3 |
| | | கலி 87-14 |
| தலைவன் | பாகன் | ஐங் 484-4 |
| | | அகம் 54-6, 114-15, 154-15, 204-4, 254-11 |
| | | நற் 81-8 |
| | | குறு 189-7, 400-2 |
| தலைவன் | மழை | குறு 270-6 |
| தலைவன் | தோழி | ஐங் 227-3 |
| | | அகம் 261-7 |
| | | குறு 209-4 |

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| தலைவி | பாணன் | ஐங் 135-1 |
| | | அகம் 14-13 |
| | | குறு 75-2 |
| தலைவன் | பாணன் | ஐங் 478-1 |
| | | நற் 250-1, 370-1 |
| தலைவன் | தலைவி | ஐங் 359-1, 494-4 |
| | | அகம் 1-6, 39-19, 205-3 |
| | | நற் 9-4, 169-1, 2, 224-7 |
| | | கலி 40-29 |
| | | குறள் 1328 |
| பரத்தை | பாணன் | நற் 150-6 |
| பரத்தை | விறலி | நற் 176-2 |
| தலைவி | தலைவன் | ஐங் 63-4, 69-1, 70-5, 5, 121-1, 122-1, 123-1, 124-1, 125-1, 126-1, 127-1, 128-1 |
| | | அகம் 196-8 |
| | | கலி 14-9, 71-23, 77-21, 95-26 |
| கவுந்தி அடிகள் | மாதவி | சிலம்பு 15-144 |
| தோழி | தலைவன் | அகம்112-18 |

3) -எம்

| | | |
|---|---|---|
| தலைவன் | நெஞ்சு | ஐங் 444-1 |
| | | அகம் 262-13 |
| தலைவன் | தலைவி | ஐங் 491-3 |
| தலைவி | தோழி | குறு 191-7, 304-8 |
| தலைவி | தலைவன் | ஐங் 80-1 |
| தலைவி | நெஞ்சு | ஐங் 443-3 |

4) -ஆம்

| | | |
|---|---|---|
| தலைவி | தோழி | அகம் 252-9, 364-12 |

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| | | குறு 197-1, 200-4, 218-3, 4, 302-2 |
| | | கலி 36-20, 137-1 |
| தலைவன் | நெஞ்சு | அகம் 390-11 |
| | | நற் 103-10, 11, 284-4, 349-4 |
| பரத்தை | தலைவிக்குப் பாங்காயினார் | அகம் 106-7 |
| தலைவன் | தலைவி | நற் 281-10 |
| | | கலி 55-5 |
| தலைவி | தலைவன் | கலி 73-22, 115-3 |
| தலைவி | நெஞ்சு | கலி 112-22 |
| உதயகுமாரன் (தன்னோடு) | | மணி 19-16 |

5) -கும்

| | | |
|---|---|---|
| தலைவி | தலைவன் | அகம் 6-15, 133-11 |
| | | கலி 80-26 |
| தலைவன் | தலைவி | கலி 112-20 |
| புலவர் | அரசன் | புறம் 125-4 |

6) -இகும்

| | | |
|---|---|---|
| புலவர் | அரசன் | பதி 11-20, 43-31, 52-12, 84-20 |
| தலைவி | தலைவன் | ஐங் 121-1, 122-1, 123-1, 124-1 125-1, 126-1, 127-1, 128-1 |
| | | அகம் 102-16 |
| | | நற் 20-1 |

7) -டும்

| | | |
|---|---|---|
| பாணன் | பாணர்களிடம் | புறம் 173-9 |

8) -தும்

| | | |
|---|---|---|
| தலைவி | தோழி | ஐங் 111-4 |
| | | அகம் 217-20, 282-18, 293-13 |
| | | நற் 296-9 |
| | | குறு 290-6, 302-3 |

| பேசுபவர் | கேட்பவர் | நூல்கள் |
|---|---|---|
| தலைவன் | தலைவி | ஐங் 92-3 |
| | | நற் 46-1, 109-2, 155-4, 214-5 |
| | | குறு 256-4 |
| | | கலி 35-12, 16,20 |
| தோழி | தலைவி | நற் 79-7 |
| தலைவன் | நெஞ்சு | அகம் 5-28, 79-10, 287-14 |
| பரத்தை | தலைவன் | ஐங் 77-3 |
| தலைவி | தலைவன் | கலி 90-28, 111-18 |
| தலைவன் | முல்லைநிலம் | ஐங் 420-4 |
| தலைவி | நெஞ்சு | குறள் 1250 |
| புலவர் | அரசன் | புறம் 104-1, 197-18 |
| புலவர் | (தன்னோடு) | புறம் 399-13 |
| பரத்தை | பாங்காயினார் | ஐங் 88-3, 4 |
| சேரன் செங் குட்டுவன் | அமைச்சர்கள் | சிலம்பு 25-149 |
| அரசன் | மக்கள் | புறம் 9-5 |
| பாணன் | பாணர்களிடம் | புறம் 173-10 |
| கோப்பெருந் தேவி | தோழி | சிலம்பு 20-12 |

9) -றும்

| | | |
|---|---|---|
| தலைவி | தலைவன் | கலி 110-23 |
| தலைவன் | தலைவி | நற் 24-6, 113-6, 229-1, 1 |
| | | குறு 325-1, 1 |
| தலைவி | பாணன் | ஐங் 11-3 |

10) -ஓம்

| | | |
|---|---|---|
| தலைவி | தோழி | ஐங் 112-4 |
| அரசன் | புலவர் | புறம் 381-16 |

# 8. முன்னிலை ஒருமை

## 8.0 முன்னிலையும் முன்னிலை ஒருமையும்

யாரிடம் பேசுகிறோமோ அவர்களைப் பற்றிக் கூறுவதே முன்னிலை எனப்படும். யாரிடம் பேசுகிறோமோ அவர் ஒருவராக இருந்தால் முன்னிலை ஒருமை என்றும், ஒருவருக்கு மேற்பட்டவராக இருந்தால் முன்னிலைப் பன்மை என்றும் அழைக்கப் படும். ஆங்கிலத்தில் இதனை ''Second Person'' என்றழைப்பர். தன்மைக்கு அடுத்து முக்கியத்துவம் உள்ள நிலையில்தான் இதனை இப்பெயரால் அழைக்கின்றனர் என எண்ணலாம். முன் நிற்பவரைக் குறித்தலின் இது முன்னிலை எனப்படுகிறது.

## 8.0.1 முன்னிலை ஒருமைப் பதிலிடுபெயர்கள்

முன்னிலைப் பண்பைப் பதிலிடுபெயர்களிலும் காண்கிறோம். முன்னிலை ஒருமைப் பதிலிடுபெயராக 'நீ' என்ற சொல் காணப் படுகிறது. இதுவும் தன்மையைப் போல பால் காட்டுவதில்லை. எண் மட்டுமே காட்டி நிற்கும். எனவேதான் இதைப் பிரதி பலித்து நிற்கும் முன்னிலை விகுதிகளும் பால் காட்டாது எண் மட்டுமே காட்டி நிற்கின்றன.

நீ என்ற சொல் எழுவாயாக நிற்க அதைப் பிரதிபலித்து தான் முன்னிலை ஒருமை விகுதிகளும் வருகின்றன.

''தஞ்ச மருளாய் நீயே ...'' ஐங் 50-3
''நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ'' குறு 75-1

போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம். சில இடங்களில் வெளிப்படையாக 'நீ' என்ற பதிலிடுபெயர் இல்லாவிடினும் அதனைக் கொணர்ந்து கூட்டிக் கொள்ளலாம். இந்த நிலை யினைப் பன்மையிலும் காணலாம்.

முன்னிலை உயர்திணையிலும், அஃறிணையிலும் வரும் என்பது தொல்காப்பியம். சங்க இலக்கியங்களில் மிக அதிக மான இடங்களில் உயர்திணையிலேயே வருகிறது, எனினும் சில இடங்கள் அஃறிணையிலும் வருதல் காணலாம். நற்றிணை யில் நாரையைப் பார்த்துக் கூறும் தலைவி

"அது நீ அறியின் அன்புமார் உடையை" நற்-54

எனக் கூறுதல் காண்க. இதுபோன்றே கிளிகளை நோக்கித் தலைவி

"வறும்புனங் காவல் விடாமை
அறிந்தனிர் அல்லிரோ அறனில் யாயே" நற்-376

என்று கூறுவதையும் காணலாம்.

### 8.0.2 முன்னிலை ஒருமை விகுதிகளும் தொல்காப்பியமும்

பழந்தமிழில் -ஐ, -ஆய், -ஓய், -இ ஆகிய விகுதிகள் முன்னிலை ஒருமையைக் காட்டுவனவாக உள்ளன. இவை தவிர -ஈ -மோ, -மதி போன்ற அசைச் சொற்களும் முன்னிலையில் வருதல் உண்டு. இவை அசைச் சொற்கள் எனக் கருதியதால் இவற்றை முன்னிலை விகுதி பற்றிக் குறிப்பிடும்போது தொல் காப்பியர் கூறவில்லை என்பதும், இவை ஏவலில்தான் அதிகமாக வருகின்றன என்பதும், இந்நிலையில் இவை இங்கு முன்னிலை விகுதியாகக் கருதப்படவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கன.

மேலே கூறிய நான்கு விகுதிகள் மட்டுமின்றி -இர், -ஈர் போன்ற முன்னிலைப் பன்மை விகுதிகளும் ஒருவரைக் குறிக்கும் உயர் வழக்குச் சொல்லாகப் பல இடங்களில் வருகின்றன. இவ்வுயர் வழக்குச் சொல் பற்றிப் பின்னர்க் காண்போம்.

### 8.0.3 முன்னிலையும் ஏவலும்

தொல்காப்பியம் ஏவல்வினையையும் முன்னிலையாகக் கருதியது என்பதும், அதனால்தான் இவற்றை முன்னிலை அசைச் சொல் என்று குறித்துள்ளது என்பதும், இளம்பூரணர் "இனி ஒரு காலத்திற்கேயேற்கும் இகரம் முற் கூறினமையின்

உண், தின், திட, நட, வா, போ என்னுந் தொடக்கத்தனவும் கொள்க" என ஏவல் வினைகளையும் முன்னிலையாகக் கொண் டுள்ளார் என்பதும் நினைவு கூரத்தக்கன. ஏவல் எல்லாம் முன்னிலை. ஆனால் முன்னிலை எல்லாம் ஏவல் அல்ல. முன் னிலையில் முன்னிலை காட்டும் விகுதிகள் உண்டு. ஆனால் ஏவலில் கிடையாது. ஏவலில் காலம் காட்டும் இடைநிலைகள் இரா. முன்னிலையில் அவை உண்டு. ஏவல் -ஏன் ஏற்று 'வாயேன், வாருங்களேன்' போன்று வரும். ஏவல்வினைகளுக்குப் பின்னர் அடா, (வாடா, போடா) போன்ற வினைச் சொற்களைச் சேர்க்கலாம். ஆனால் முன்னிலை ஏவல்களில் இவற்றைச் சேர்க்க முடியாது (இவை பற்றிய விளக்கத்தை அகத்தியலிங்கம், 1982 வினையியல் நூலில் காண்க). முன்னிலைகளும் ஏவலாக வரும் இடங்கள் உண்டு. எனவே அவற்றை முன்னிலை ஏவல் என்றும் வா, போ போன்றவற்றைச் செவ்வன் ஏவல் என்றும் கூறலாம்.

முன்னிலை ஒருமை விகுதி பற்றிக் கூறப்போந்த தொல் காப்பியர்,

"அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இஐ ஆயென வருஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும்"

(தொல். சொல் 708)

என மூன்று விகுதிகள் பற்றிக் குறிப்பிடுவார். -மோ, -மதி போன்றவற்றை

"மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச் சொல்"

(தொல். சொல் 759)

எனவும் குறிப்பிடுவார். இவை ஏவலில் வருவதால் இங்கு அவை பற்றிக் குறிப்பிடவில்லை. (ஏவல் பற்றிய விளக்கத்திற்கு பார்க்க Agesthialingom, 1979, 1980)

-ஓய் விகுதியைத் தொல்காப்பியர்

"பால் அறி மரபின் அம்மூ ஈற்றும்
ஆ ஓ ஆகும் செய்யுளுள்ளே"
'ஆய் என் கிளவியும் அவற்றோடு கொள்ளும்'
தொல். சொல் 696, 697

என்ற சூத்திரங்களில் கூறுவதாகக் கொள்ளலாம். இதற்கு உரைகூறப் போந்த இளம்பூரணர் "ஆய் என்னும் சொல்லின் ஆகாரமும், ஓ வாகும் செய்யுளுள்" எனக் குறிப்பிடுவார் (சொல் 209). இந்நிலையினைச் சேனாவரையர் (சொல் 212) போன்ற உரையாசிரியர்களிடமும் காணலாம். மேலே கூறிய நான்கு விகுதிகளில் இகரம் தகர ஒற்றுடன் மட்டுமே வருதலும், இத்தகர ஒற்று பொதுவாக் இறப்பில்காலம் காட்டுவதாக உள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடப்பட வேண்டும்.

### 8.0.4 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியத்தில் -ஐ, -ஆய் ஆகிய இரு விகுதிகள் காணப்படுகின்றன. இவற்றுள் -ஐ இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும் வருகின்றது.

| | |
|---|---|
| கண்டை | தொல். 909-2 |
| நின்றை | தொல். 909-1 |
| இலை | தொல். 1104-3 |
| கொடியை | தொல். 1104-3 |

-ஆய் உடன்பாட்டு ஏவலில் மட்டுமே காணப்படுகின்றது.

| | |
|---|---|
| செய்யாய் | தொல். 933-1 |

### 8.0.5 பெரும்பான்மை விகுதி

-ஐ, -ஆய் போன்ற நான்கு விகுதிகளில் -ஐ விகுதியே பழந்தமிழில் மிக அதிகமாக வருகின்றது. பதிற்றுப்பத்தில் அறுபத்தாறு இடங்களில் -ஐ விகுதி வர, மூன்று இடங்களில் மட்டுமே -ஆய் விகுதி வருகிறது. இதே நிலையினைப் புறநானூறு போன்ற பிற முன்பழந்தமிழ் நூல்களிலும் காண்கிறோம். ஆனால் கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்

களில் -ஆய் விகுதியே அதிகமாக வந்துள்ளமை இங்குக் குறிப் பிடத்தக்கதாகும். கலித்தொகையில் -ஐ விகுதி தொண்ணுற் றேழு இடங்களில் வர -ஆய் நூற்று அறுபது இடங்களில் வருவ தும், சிலப்பதிகாரத்தில் -ஐ விகுதி பதினைந்து இடங்களில் வர, -ஆய் விகுதி அறுபத்து எட்டு இடங்களில் வருவதும் கவனித்தற் பாலன. எனவே இந்நிலையும் கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களின் பிந்திய காலத்தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

## 8.1. விகுதிகள்

### 8.1.1 -ஐ

இவ்விகுதி முன்னர் குறிப்பிட்டபடி பழந்தமிழில் அதிகமாக வரும் விகுதியாகும். பதிற்றுப்பத்து, புறநானூறு போன்ற முன்பழந்தமிழ் நூல்களில் ஏராளமாக உள்ளமையும் பின் பழந்தமிழ் நூல்களாகிய கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகிய வற்றில் குறைவாக வருவதையும் கீழே உள்ள பட்டியல் நன்கு காட்டும். திருக்குறளில் வரும் ஏழு இடங்களும் குறிப்புவினை யாகவே வந்துள்ளன.

| | -ஐ | -ஆய் |
|---|---|---|
| பதி | 66 | 3 |
| ஐங் | 42 | 13 |
| அகம் | 96 | 32 |
| நற் | 61 | 32 |
| குறு | 33 | 1 |
| புறம் | 134 | 23 |
| பத்து | 11 | 2 |
| பரி | 9 | 10 |
| கலி | 97 | 160 |
| குறள் | 7 | 5 |
| சிலம்பு | 15 | 68 |
| மணி | 66 | 35 |

8.1.1.1 உரையாசிரியர்கள்

ஐகார விகுதிக்கு உதாரணம் தர வந்த இளம்பூரணர் (சூத். 218)

| | |
|---|---|
| உண்டனை | உண்குவை |
| உண்ணாநின்றனை | |

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 223)

| | |
|---|---|
| உண்டனை | உண்பை |
| உண்ணாநின்றனை | |

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 225)

| | |
|---|---|
| உண்டனை | உண்டிலை |
| உண்ணாநின்றனை | உண்ணாநின்றிலை |
| உண்பை | உண்ணலை |
| உண்குவை | கரியை |

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 216)

| | |
|---|---|
| உண்டனை | உண்குவை |
| உண்ணாநின்றனை | கரியை |

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 225)

| | |
|---|---|
| உண்டனை | உண்டிலை |
| உண்ணாநின்றனை | உண்ணாநின்றிலை |
| உண்குவை | உண்ணலை |
| உண்பை | கரியை |

ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தந்து செல்வர்

உரையாசிரியர்கள் அனைவரும் நிகழ்கால எடுத்துக்காட்டுக் களைத் தந்து சென்றுள்ள போதிலும் சங்க இலக்கியங்களில் நிகழ்கால இடைநிலை இவ்விகுதியோடு வரவில்லை. இது போன்றே நச்சினார்க்கினியர், கல்லாடனார் இருவரும் -இல்- எதிர்மறைக்குப் பின்னர் இவ்விகுதி வரும் எடுத்துக்காட்டுக் களைத் தந்து சென்றுள்ளனர். இச்சூழலிலும் சங்க இலக்கியங்

களில் இவ்விகுதி காணப்படவில்லை. பத்துப்பாட்டு, திருக்குறள் ஒழிந்த ஏனைய நூல்களில் -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் இவ்விகுதி வரக்காணலாம். உரையாசிரியர்கள் யாரும் இவ்வகை எடுத்துக்காட்டுக்களைத் தரவில்லை.

### 8 1.1.2 சூழல்கள்

இவ்விகுதி பழந்தமிழ் இலக்கியங்களில்

1. இறந்தகால இடைநிலைகளையொட்டி வரும் -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. -அல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னரும்
5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
6. வினையாலணையும் பெயர் விகுதி -Ø-க்குப் பின்னரும்

வரும்.

### 8.1.1.2.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

பழந்தமிழ் இலக்கியங்களில் பரிபாடல், திருக்குறள் ஒழிந்த பிற எல்லாவற்றிலும் பலவேறு எடுத்துக்காட்டுகள் காணப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| பெற்றனை | பெற்றுள்ளாய் | பதி 74-21 |
| இழைத்தனை | செய்தனை | ஐங் 445-5 |
| அறிந்தனை | அறிந்துளாய் | அகம் 245-4 |
| ஒழிந்தனை | போக்கிக் கொண்டனை | நற் 147-12 |
| கேட்டனை | கேட்டனை | குறு 75-1 |
| மலைத்தனை | பொருதாய் | புறம் 36-13 |
| நயந்தனை | விரும்பியே விட்டாய் | பத்து 1-64 |
| அளித்தனை | அளித்தாய் | கலி 49-14 |
| கண்டனை | கண்டாய் | சிலம்பு 28-154 |
| அறிந்தனை | அறிந்துள்ளனை | மணி 10-75 |

8.1.1.2.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

இச்சூழலில் பத்துப்பாட்டு, திருக்குறள் தவிர்ந்த பிற எல்லா நூல்களிலும் ஐகாரம் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சீறினை | சினம் கொண்டனை | பதி 22-31 |
| அருளினை | அருள் செய்தனை | ஐங் 175-1 |
| ஆடினை | புனலாடினை | அகம் 6-11 |
| அல்கினை | தங்கினை | நற் 232-9 |
| வணங்கினை | வணங்கி (பலியாகக் கொடுப்பாய்) | குறு 362-5 |
| தோன்றினை | தோன்றினாய் | புறம் 174-23 |
| வைகினை | தங்காநின்றனை | பரி 6-81 |
| ஆயினை | ஆயினாய் | கலி 3-7 |
| கலக்கினை | கலக்கினாய் | சிலம்பு 17-32-2 |
| எய்தினை (புலத்தகை) | ஊடல் கொண்டு முகங்கொடா ஆயினை | மணி 10-21 |

இச்சூழலின்கண் -ஆய், விகுதியும் வரும் நிலையில் இவ்விரண்டையும் பதில்நிலை வழக்காகக் கொள்ளலாம். எனினும் -ஆய் விகுதி இச்சூழலின்கண் கலித்தொகையில் மட்டுமே காணப் படுகிறது.

8.1.1.2.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

இச்சூழலிலும் பரிபாடல், திருக்குறள் ஒழிந்த பிற இலக்கியங்கள் அனைத்திலும் இவ்விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சில வினையடிச் சொற்கள் தன்மை ஒருமை விகுதியைப் போன்று குகரத்தை (வருகுவை) ஏற்று நிற்கின்றன. இந்நிலை தன்மையிலும். முன்னிலையிலும் காணப்படினும் தன்மையிலேயே பரவலாகக் காணப்படுகிறது. மேலும் முன்னிலையில் ககர (கு) ஒற்றை அடுத்து வகரமும் வருதல் (கேட்குவை) குறிப்பிடத்தக்கது.

'களைகேன்' என சிலப்பதிகாரத்தில் (15-68) காணப்படுவது போல முன்னிலையில்

'களைகை' எனக் காணப்படாததும், கேட்குவை (மணி10-76) எனக் காணப்படுவதும் குறித்தற்பாலன.

| | | |
|---|---|---|
| செல்குவை | செல்வாய் | பதி 53-5 |
| இறக்குவை | செல்குவை | ஐங் 301-3 |
| பெறுகுவாய் | அடைவாய் | அகம் 92-12 |
| வருகுவை | வருவாய் | குறு 379-5 |
| காண்குவை | காண்பை | புறம் 227-3 |
| உயர்க்குவை | உயர்த்தலைச் செய்வை | பத்து 6-131 |
| தருகுவை | தருவை | கலி 142-39 |
| கேட்குவை | கேட்டறிகுவை | மணி 11-52 |
| வருவை | வருவாய் | ஐங் 233-1 |
| எய்துவை | அடைவாய் | அகம் 33-20 |
| கூறுவை | கூறாநிற்பை | |
| அறிவை | அறியும் ஆற்றலுடையை | நற் 309-8 குறு 259-6 |
| பழி எஞ்சுவை | பழியை நிறுத்துவை | புறம் 213-16 |
| ஆகுவை | ஆகுவை | கலி 96-20 |
| கொல்வை | கொல்லாநிற்பை | சிலம்பு 7-18-2 |
| ஆகுவை | ஆகுவை | மணி 251-15 |
| கேட்பை | கேட்டறிகுவை | மணி 25-212 |

8.1.1.2.4 -அல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர்

இவ்விகுதி -அல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னரும் வருகிறது.

| | | |
|---|---|---|
| பண்பு அறியலை | பணிதல் இல்லாய் | பதி 63-1 |
| காணலை | காண்பாயல்லை | குறு 355-1 |
| அறியலை | அறியாய் | புறம் 133-2 |
| ஒழுகலை | ஒழுகுதலைச் செய்யாய் | பத்து 6-201 |
| துஞ்சலை | துயில் கொள்ளாய் | கலி 146-36 |

எதிர்மறைக்கு உதாரணம் கூறவந்த நச்சினார்க்கினியர்

உண்டிலை உண்ணாநின்றிலை

என்பவற்றையும் இணைத்துத் தருவது குறிப்பிடத்தக்க தாகும்.

8.1.1.2.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

இவ்விகுதி குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர் எல்லா நூல்களிலும் வருதல் உண்டு.

| | | |
|---|---|---|
| வல்லுநை | வல்லையாயினை | பதி 52-27 |
| வல்லுநை | வன்கண்மை உடையை | ஐங் 285-5 |
| அல்லை | அல்லை | அகம் 7-6 |
| அன்பினை | அன்பினை உடையை | நற் 70-6 |
| அல்லை | அல்லை | குறு 47-4 |
| உடையை | உடையை | புறம் 176-8 |
| அனையை | ஒப்பாய் | பத்து 6-63 |
| உள்ளத்தினை | திருவுள்ளத்தினை யுடையை | பரி 13-49 |
| அன்னை | அத்தன்மையை | கலி 97-1 |
| கண்ணை | கண்ணுடையை | குறள் 1222 |
| காட்சியை | காட்சியுடையை | சிலம்பு 26-73 |
| அல்லை | அல்லை | மணி 25-174 |

8.1.1.2.6 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உணர்ந்தனை போலாய் | உணராதாய் போன்றாய் | ஐங் 471-4 |
| பற்றினை | பிடித்தவனாகிய நீ | கலி 116-2 |
| நயந்தனை | விரும்பினவனாகிய நீ | கலி 21-6 |
| தொழாதனை | தொழாயாகிய நீ | புறம் 263-30 |
| புரவலை நீயும் அல்லை | பாதுகாப்பாய் நீயுமல்லை | புறம் 162-1 |
| இனையை | இத்தன்மையினை | அகம் 163-13 |
| கண்ணினை | கண்களையுடையை | அகம் 59-2 |
| இன்னை | இத்தன்மையை உடையை | நற் 283-5 |
| நலத்தை | நலத்தினையுடையாய் | நற் 155-5 |
| நோயை | வருத்தமுடையை | குறு 128-5 |
| அன்பினை | அன்பினையுடையை | கலி 49-15 |

## 8.1.2 -ஆய்

இவ்விகுதி மிக ஒரு முக்கியமான விகுதியாக கருதப்பட்டாலும் சங்க இலக்கியங்களைப் பொறுத்த மட்டில் -ஐ விகுதியே அதிகமாகக் காணப்படுகிறது. குறுந்தொகையில் -ஆய் விகுதி ஒரே ஒரு இடத்தில் மட்டும் காணப்பட, -இ பதினைந்து இடங்களில் உள்ளது. ஆனால் பின்பழந்தமிழ் நூல்களில் —ஆய் விகுதி அதிகமாக உள்ளது. ஒரு சில இடங்களைத் தவிர -ஐ, -ஆய் ஆகிய விகுதிகள் துணைநிலை வழக்கில் உள்ளன. முன் பழந்தமிழ் நூல்களில் -ஆய் விகுதி எதிர்மறையில் அதிகமாக வர உடன்பாட்டில் குறைவாகவே காணப்படுகிறது. பின்பழந்தமிழ் நூல்களில் (குறள் நீங்கலாக) உடன்பாட்டிலேயே அதிகமாக உள்ளது.

-ஆய்

| | எதிர்மறை | உடன்பாடு |
|---|---|---|
| பதி | 3 | 0 |
| ஐங் | 12 | 0 |
| அகம் | 32 | 0 |
| நற் | 32 | 0 |
| குறு | 1 | 0 |
| புறம் | 20 | 3 |
| பத்து | 1 | 0 |
| பரி | 1 | 4 |
| கலி | 44 | 104 |
| குறள் | 3 | 2 |
| சிலம்பு | 13 | 44 |
| மணி | 13 | 19 |

எல். வி. ராமஸ்வாமி ஐயர் (1938 : 757) -ஆய் விகுதி கலித்தொகை, நற்றிணை, பரிபாடல் ஆகியவற்றில் அதிகமாகக் காணப்படுகின்றது என்பார். ஆனால் நற்றிணையில் -ஐ விகுதியே கூடுதலாக உள்ளது.

### 8.1.2.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு உதாரணம் கூறவந்த இளம்பூரணர் (சூத்.218)

உண்டாய் உண்பாய்
உண்ணாநின்றாய்

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 223)

உண்டாய் உண்பாய்
உண்ணாநின்றாய்

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 225)

உண்டாய் உண்டிலாய்
உண்ணாநின்றாய் உண்ணாநின்றிலாய்
உண்பாய் உண்ணலாய்
கரியாய்

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 225)

உண்பாய் கரியாய்
உண்ணாய்

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 225)

உண்டாய் பொல்லாய்
உண்ணாநின்றாய் உண்டிலாய்
உண்பாய் உண்ணாநின்றிலாய்
கரியாய் உண்ணலாய்
செய்யாய்

ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தந்து சென்றுள்ளனர்.

தெய்வச்சிலையார் தவிர்த்துப் பிற எல்லா உரையாசிரியர்களும் நிகழ்கால எடுத்துக்காட்டுக்களைத் தந்து சென்றுள்ளனர். சங்க இலக்கியங்களில் இவ்விகுதி இச்சூழலில் வருவதில்லை. தெய்வச்சிலையார் தவிர்த்து ஏனைய உரையாசிரியர்களில் யாரும் -ᴓ- இறப்பில்கால இடைநிலைக்கு உதாரணம் தருவதில்லை. தெய்வச்சிலையார் 'உண்ணாய்' என்னும் உதாரணத்தைத் தருவதோடு 'செய்யாய்' என்னும் முன்னிலை வினைச்சொல், 'செய்யென் கிளவி யாகிடன் உடைத்தே' என்றும் குறிப்பிடுகிறார் (216). -இல்-, -அல்- எதிர்மறை எடுத்துக்

காட்டுக்களைத் தராமலேயே விட்டுச் சென்றுள்ள உரையாசிரியர்கள் -ʃ- எதிர்மறை எடுத்துக்காட்டுக்களைத் தராமலேயே விட்டுச் சென்றுள்ளனர்.

### 8.1.2.2 சூழல்கள்

இவ்விகுதி

1. -இன்- இறந்தகால இடைநிலைக்குப்பின்னரும் (இது இச்சூழலில் அதிகமாகக் காணப்படுதில்லை. கலித் தொகையில் மட்டுமே இச்சூழலில் காணமுடியும்.)
2. பிற இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. -ʃ- எதிர்மறைக்குப் பின்னரும்
5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்

வரும்.

#### 8.1.2.2.1 –இன்– இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

முன்னர்க் குறிப்பிட்டபடி கலித்தொகையில் மட்டுமே இச்சூழலில் இவ்விகுதியைக் காணமுடியும். -ஆய் விகுதி கலித் தொகையில் நூற்று அறுபது இடங்களில் காணப்பட, ஏழு இடங்களில் மட்டுமே இச்சூழலில் காணப்படுகிறது. அதிலும் குறிப்பிட்ட மூன்று பாடல்களில்தான் இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஆடினாய் | ஆடினாய் | கலி 98–13, 98–18 |
| ஒழுகினாய் | நடந்தாய் | கலி 98-22 |
| கண்ணோடினாய் | கண்ணோட்டம் செய்து தேடிப் போகின்றாய் | கலி 144–26 |
| பாராட்டினாய் | பாராட்டிவிட்டாய் | கலி 22–10, 22–13, 22–16 |

#### 8.1.2.2.2. பிற இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் ஆகிய நூல்களில் இதற்கு உரிய எடுத்துக்காட்டுகள் எதுவும் காணப்படவில்லை. இதற்குக் காரணம் –ஐ விகுதியின் பெரும்பான்மை ஆட்சியே

எனக் கருதலாம். பின் பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சூழலில் இவ்விகுதி (திருக்குறள் தவிர) காணப்படுகிறது. கலித்தொகையில் அறுபத்து இரண்டு இடங்களிலும், சிலப்பதிகாரத்தில் இருபத்தேழு இடங்களிலும், மணிமேகலையில் பன்னிரண்டு இடங்களிலும் காணப்பட, புறநானூற்றில் ஒரே ஒரு இடத்தில்தான் வந்துள்ளது. மற்றொரு நூலாகிய பரிபாடலிலும் இது மூன்று இடங்களில்தான் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பிழைத்தாய் | தவறு செய்தாய் | புறம் 43-17 |
| என்றாய் | என்று கூறாநின்றாய் | பரி 8-83 |
| உழுதாய் | உழுதாய் | கலி 64-11 |
| கொண்டாய் | எடுத்தாய் | கலி 99-8 |
| இறுத்தாய் | தங்கினை | சிலம்பு7-48-3 |
| கொன்றாய் | கொன்றொழிந்தாய் | மணி 25-172 |
| சொன்னாய் | கூறினை | மணி 16-112 |

8.1.2.2.3 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

இச்சூழலிலும் இவ்விகுதி காணப்படுகிறது. பகர, வகர இடைநிலைகளுக்குப் பின்னரும் -Ø- இடைநிலைக்குப் பின்னரும் பயின்று வருகிறது.

| | -Ø- | -வ்- | -குவ்- | -ப்(ப்)- |
|---|---|---|---|---|
| பதி | 0 | 0 | 0 | 0 |
| ஐங் | 0 | 0 | 0 | 0 |
| அகம் | 0 | 0 | 0 | 0 |
| நற் | 0 | 0 | 0 | 0 |
| குறு | 0 | 0 | 0 | 0 |
| புறம் | 2 | 0 | 0 | 0 |
| பத்து | 0 | 0 | 0 | 0 |
| பரி | 0 | 0 | 0 | 1 |
| கலி | 0 | 14 | 1 | 19 |
| குறள் | 0 | 1 | 0 | 1 |
| சிலம்பு | 2 | 5 | 5 | 5 |
| மணி | 0 | 2 | 0 | 5 |

| | | |
|---|---|---|
| போலாய் | போல்கின்றாய் | புறம் 300-2 |
| என்பாய் | ஆணையே இடாநின்றாய் | பரி 8-62 |
| தருகிற்பாய் | தருவை | கலி 144-49 |
| சொல்லுவாய் | சொல்லுவாய் | கலி 110-21 |
| காண்பாய் | காண்பாய் | கலி 114-10 |
| உரைப்பாய் | உரைப்பாய் | குறள் 1248 |
| செல்வாய் | செல்லுவாய் | குறள் 1248 |
| காணாய் | காண்பாய் | சிலம்பு 9-27 |
| காண்குறுவாய் | காண்பாய் | சிலம்பு 21-38 |
| களைவாய் | அகற்றுவாய் | மணி 14-20 |
| காப்பாய் | காக்கும் பேரருள் உடையாய் | மணி 6-137 |

முன்னரே கூறியபடி இவ்விகுதிக்கு உதாரணம் கூறவந்த உரையாசிரியர்களில் பலர் -ஜ- இறப்பில் கால இடைநிலைக்கு உதாரணம் தருவதில்லை. ஆனால் தெய்வச்சிலையார் (சொல் 217).

உண்ணாய்

என்ற உதாரணத்தைத் தருவதோடு இவற்றுள் -ஆய் என்பது 'மறையினும் ஏவலினும் வரும்' (216) எனக் குறிப்பிடுவது நினைவு கூரத்தக்கது. சங்க இலக்கியங்களில்

| | | |
|---|---|---|
| செல்லாய் | செல்வாயாக | பதி 40-21 |
| வாராய் | வருவாயாக | அகம் 285-15 |
| காட்டாய் | காட்டுவாயாக | நற் 196-6 |
| நினையாய் | எண்ணுவாயாக | குறு 343-1 |
| அருளாய் | அருளாய் | கலி 60-18 |

ஆகிய எடுத்துக்காட்டுகள் ஏவலில் வரும் நிலையைக் காட்டும்.

### 8.1.2.2.4 -ஜ- எதிர்மறைக்குப் பின்னர்

எல்லாச் சங்ககால இலக்கியங்களும் இதற்குரிய எடுத்துக் காட்டுகளைக் கொண்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அருளாய் | அருளாதொழிகுவை | பதி 71-26 |
| செல்லாய் | செல்லாய் | ஐங் 302-3 |
| அறிவாய் | அறிந்துகொள்ளாய் | அகம் 33-18 |

| | | |
|---|---|---|
| செல்லாய் | சென்றிலை | நற் 134-8 |
| என்னாய் | கருதாய் | குறு 327-6 |
| அஞ்சாய் | அஞ்சாய் | புறம் 139 12 |
| என்னாய் | என்று கருதாய் | பத்து 6-204 |
| காணாய் | கண்டிலை | பரி 18-17 |
| அஞ்சாய் | அஞ்சாய் | கலி 38-10 |
| (புலந்து) உயராய் | புலந்து பின் அதனை நீங்க மாட்டாய் | குறள் 1246 |
| உரையாய் | உரையாய் | சிலம்பு 7-46-3 |
| தேனாய் | தெளியாய் | மணி 21-61 |

பழந்தமிழில் முன்னிலையில் எதிர்மறையில் பெரும்பாலும் -ø-இடைநிலையே காணப்படுகிறது. மேலே கூறிய எடுத்துக் காட்டுகள் அனைத்தும் இந்நிலையைக் எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன. மேலும் ஒரே வடிவத்தையுடைய சொற்கள் உடன்பாட்டினையும், எதிர்மறையையும் காட்டுவனவாகவும் உள்ளன. செல்லாய் என்ற சொல் போ என்றும், (பதி 40-21) போகாதே என்றும் (நற் 134-8) ஏவல் பொருள்படக் காண லாம். முன்னிலைச் சொல்லினும் எதிர்மறையே அதிகமாக உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

-ø-

| | எதிர்மறை | உடன்பாடு |
|---|---|---|
| பதி | 3 | 0 |
| ஐங் | 12 | 0 |
| அகம் | 32 | 0 |
| நற் | 32 | 0 |
| குறு | 1 | 0 |
| புறம் | 20 | 2 |
| பத்து | 1 | 0 |
| பரி | 1 | 0 |
| கலி | 36 | 0 |
| குறள் | 3 | 0 |
| சிலம்பு | 13 | 2 |
| மணி | 13 | 0 |

8.1.2.2.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வல்லாய் | வல்லாய் | ஐங் 287-4 |
| கூந்தலாய் | கூந்தலையுடையாய் | கலி 64-6 |
| மாலையாய் | மாலையையுடையாய் | சிலம்பு 17-33-4 |
| அல்லாய் | அல்லை | மணி 13-62 |

8.1.2.2.6 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| நின்றாய் | நின்ற நீ | கலி 69-9 |
| பண்ணியாய் | பண்ணின நீ | கலி 69-17 |
| கைத்தாய் | கைவிடப்பட்டாய் | சிலம்பு 9-55 |
| விலக்குவாய் | விலக்குகின்ற நீ | கலி 113-4 |
| படுகுவாய் | உறுகின்றவனே | கலி 116-15 |
| பொய்ப்பாய்(நீ) | பொய்க்குமவன்(நீ) | கலி 108-57 |
| அருள் செய்குவாய் | அருள் வழங்கும் அன்னையே ! | சிலம்பு 12-22-4 |
| நிற்பாய் | நிற்கும் நீ | சிலம்பு 12-9-4 |
| அறியாய் | அறியாய் | கலி 10-10 |
| அறிகல்லாய் | அறியாய் | கலி 95-26 |
| அறியாதாய் | அறியாதவளே ! | கலி 58-16 |
| அன்னாய் | அத்தன்மையுடைய நின்னோடு | பத்து 6-206 |
| இலங்கிழாய் | விளங்குகின்ற அணிகலன்களை உடையவளே ! | குறள் 1262 |
| காதலாய் | காதலுடையோயே! | பரி 18-11 |
| தோளாய் | தோளிணையுடையாய்! | கலி 20-15 |
| கண்ணாய் | கண்ணையுடைய காவிரி நங்காய்! | சிலம்பு 7-2-3 |
| நல்லாய் | நல்லாய்! | மணி 21-72 |

முன்வர்க் குறிப்பிட்டபடி ஆய் விகுதி பெரும்பாலும் எதிர் மறையிலேயே முன்பழந்தமிழில் பயன்படுத்தப்படுகிறது. இந்

நிலையில் இதனையும் ஏன் விகுதியையும் ஒப்பிட்டு நோக்கலாம். அகநானூற்றில் முப்பத்திரண்டு இடங்களில் எதிர்மறையிலேயே இது பயின்று வருகிறது. ஆனால் கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இந்நிலை மாறி யுள்ளது.

## 8.1.3 -இ

### 8.1.3.1 தகர ஒற்றும் காலமும்

இவ்விகுதி பழந்தமிழ் நூல்களில் நூற்றுக்கும் மேலான இடங்களில் பயின்று வந்துள்ளது, எல்லா இடங்களிலும் தகர ஒற்றையடுத்தே வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தகர ஒற்று பொதுவாக இறப்பில்காலத்தையும் ஓரிரு இடங் களில் இறந்தகாலத்தையும் காட்டுதல் காணலாம். தொல் காப்பியம் முன்னிலை விகுதி பற்றி கூறும் சூத்திரத்தில் இகரத்தையே முதன் முதலில் கூறும். இதற்குக் காரணம் கூறப் போந்த இளம்பூரணர் (சொல் 218) "ஒரு காலத்திற்கே ஏற்கும்" நிலையில் இதனை முற்கூறினார் எனக் குறிப்பிடுவார். ஆனால் பிற உரையாசிரியர்கள் இதுபற்றிக் கூறுவதில்லை. எனினும் இவ் விகுதி இறந்தகாலத்திலும் வருதல் குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் தகர விகுதி பற்றி எங்கும் குறிப்பிடாமையும், உரையாசிரியர்கள் இதுபற்றிக் குறிப்பிடுவதும் நினைவுகூரத் தக்கன. இளம்பூரணர் (சொல் 218) தகரஒற்று ஏற்று இவ்விகுதி இறந்தகாலத்திலேயே வரும் எனக் குறிப்பிடுவார். 'உண்டி, தின்றி என இறந்த காலத்திற்கே பொருத்த முடைத்தாய் இகரம் வரும்' எனக் குறிப்பிடுவது காண்க, நச்சினார்க்கினியர் (சொல் 225), சேனாவரையர் (சொல் 223), கல்லாடர் (சொல் 225) ஆகியோர் இது எதிர்காலம் பற்றியே வரும் எனக் குறிப் பிடுவர் 'இகரம் தடற வூர்ந்து எதிர்காலம்பற்றி வரும்' என்பது சேனாவரையம் (சொல் 223). ஆனால் இகர இறுதி எதிர் காலத்திலும், .இறந்த காலத்திலும் வருவது காணத்தக்கது. எனவேதான் தெய்வச்சிலையார் இதுபற்றி எதுவும் கூறவில்லை போலும்.

பழந்தமிழில் மூன்று இடங்களில் இகரம் தகர ஒற்றோடு வந்து இறந்தகாலம் காட்டும். எனினும் மிக அதிகமான இடங்களில் இறப்பில் காலமே காட்டி நிற்கும். கன்னடம், தெலுங்கு, கோண்டி, கூயி, கோலாமி, நாயக்கி, பர்ஜி, கதபா, குருக் ஆகிய மொழிகளில் (Subrahmanyan, 1971 : 313) தகரம் இறப்பில் கால இடைநிலையாகப் பயன்படுதல் காணலாம். இன்றையத் தமிழிலும் ஒருசில கிளைமொழிகளில் தகரம் இறப்பில்காலம் காட்டி நிற்கும். திருநெல்வேலித் தமிழில் (கமில் சுவலபில் 1961).

வருதான் வருதேன்

போன்ற சொற்களில் காணப்படும் தகரம் நிகழ்காலத்தைக் காட்டுவதும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பேசப்படும் விளவங் கோட்டுத் தமிழிலும் பெண்களின் பேச்சில் (சி. ஏசுதாசன், 1977 : 263)

வருதான் தருதான்

எனக் காணப்படுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இன்னும் பலருடைய பேச்சு வழக்கில் தகரம் காணப்படுகிறது.

| | இறப்பில்காலம் | இறந்தகாலம் |
|---|---|---|
| பதி | 5 | 0 |
| ஐங் | 12 | 0 |
| அகம் | 21 | 2 |
| நற் | 7 | 0 |
| குறு | 15 | 0 |
| புறம் | 23 | 0 |
| பத்து | 2 | 0 |
| பரி | 5 | 1 |
| கலி | 52 | 0 |
| குறள் | 4 | 0 |
| சிலம்பு | 4 | 0 |
| மணி | 2 | 0 |

8.1.3.2 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு உதாரணம் கூற வந்த இளம்பூரணர் (சூத். 218)

| | |
|---|---|
| உண்டி | தின்றி |

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 223)

| | |
|---|---|
| உரைத்தி | தின்றி |
| உண்டி | |

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 225)

| | |
|---|---|
| உண்டி | உரைக்கின்றி |
| உரைத்தி | உண்ணாநிற்றி |
| தின்றி | |

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 217)

| | |
|---|---|
| உண்டி | கருத்தி |
| உண்கிற்றி | |

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத் 225)

| | |
|---|---|
| உண்டி | உண்ணாதி |

ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தருவர்.

8.1.3.3 சூழல்கள்

1. தகர இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னரும்
2. தகர இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்

வரும்.

8.1.3.3.1 தகர இறப்பில்கால இடைநிலைக்குப் பின்னர்

பழந்தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் இதற்குரிய எடுத்துக்காட்டுகளைக் காணமுடியும்.

| | | |
|---|---|---|
| வாழ்தி | வாழ்கின்றாய் | பதி 38-16 |
| அருளுதி | அருள்வாய் | ஐங் 275-5 |
| அஞ்சுதி | அஞ்சாநின்றாய் | அகம் 123-7 |
| அறிதி | அறிந்திருத்தலை உடையன் | நற் 106-11 |

| | | |
|---|---|---|
| என்றி | என்பாய் | குறு 277-7 |
| அறிதி | அறிவை | புறம் 36-2 |
| பெறுதி | பெறுவாய் | பத்து 1-66 |
| நோக்குதி | கருதுகின்றனை | பரி 18-13 |
| அஞ்சுதி | அஞ்சியிரா நின்றாய் | கலி 107-26 |
| காய்தி | காயாநின்றாய் | குறள் 1246 |
| அறிதி | அறிவாய் | சிலம்பு 7-13-4 |
| அறிதி | அறிந்திருப்பாய் | மணி 21-117 |

8.1.3.3.2 தகர இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| கேட்டி | கேட்டாய் | அகம் 68-4 |
| செய்தி | செய்து ஒழிதி | அகம் 183-8 |
| என்றி | என்று கூறி இகழா நின்றனை | பரி 8-73 |

இகரம் எதிர்மறையில் வருவதில்லை. 'உண்ணாதி' போன்றவை ஏவல் வினை. எனவே இங்கு அவைப் பற்றிக் கூறப்படவில்லை.

8.1.4 -ஓய்

8.1.4.1 தொல்காப்பியம்

தொல்காப்பியர் -ஓய் பற்றி -ஐ, -இ, -ஆய் விகுதிகள் பற்றிக் குறிப்பிடும்போது கூறவில்லை என்பதை முன்னரே கண்டோம். எனினும் 697-ம் சூத்திரத்தில் -ஆ, -ஓ ஆகும் எனக் குறிப்பிடுவது இதற்கும் பொருந்தும் என்று கொள்ளலாம். சங்க கால இலக்கியங்களில் -ஓய் மிகக் குறைவாகவே உள்ளது. இதனால்தான் அவர் இதனைப் பிற விகுதிகளோடு இணைத்துக் கூறவில்லை எனவும் கருதலாம்.

தொல்காப்பியத்தில் இவ்விகுதி காணப்படவில்லை.

8.1.4.2 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் அனைவரும் (இளம். சூத். 299, சேனா சூத். 212, நச். சூத். 214, தெய்வ. சூத். 205, கல் சூத். 215)

"வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப"

என்ற எடுத்துக்காட்டினையே தந்து செல்கின்றனர்.

### 8.1.4.3 சூழல்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்விகுதி

1. இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. -ஆத்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னரும்
4. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
5. வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னரும்

வரும்.

### 8.1.4.3.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

-இன்- இடைநிலை இச்சூழலில் காணப்படாமையும் அதற்கு பதில் இகரமே காணப்படுகிறது என்பதும், அதுவும் குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்களிலேயே வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள். மேலும் வினைமுற்றாக சில இலக்கியங்களில் காணப்படாமையும் வினையாலணையும் பெயராகவே பல இலக்கியங்களில் வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கன.

| | | |
|---|---|---|
| வென்றோய் | வென்றி சிறந்தாய் | பதி 63-15 |
| அணிந்தோய் | அணிந்தனை | ஐங் 294-5 |
| நயந்தோய் | விரும்பி ஏற்றனை | அகம் 382-13 |
| புணர்ந்தோய் | கூட்டிவைத்தனை | அகம் 352-10 |
| வந்தோய் | வந்தோய் | நற் 34-9 |
| எடுப்பியோய் | எழுப்பினை | குறு 107-7 |
| வீசியோய் | வீசினாய் | புறம் 50-13 |
| பிறந்தோய் | பிறந்தோய் | புறம் 164-13 |
| கொய்தோய் | கொய்தனை | பரி 6-61 . |
| உணர்ந்தோய் | அறிந்தனை | சிலம்பு 28-150 |
| இருந்தோய் | இருக்கின்றாய் | மணி 4-59 |

### 8.1.4.3.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

இச்சூழலில் இவ்விகுதி நற்றிணையிலும், கலித்தொகையிலும் மட்டுமே ஒவ்வொரு இடத்தில் காணப்படுகிறது. சிலம்பில் வினையாலணையும் பெயராகவே வந்துள்ளது. கலித்தொகையி

லும் மற்றொரு இடத்தில் வினையாலணையும் பெயராக வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| காண்போய் | கண்டிருக்கின்றாய் | நற் 251-6 |
| பிரிவோய் | பிரிந்திருப்பாய் | கலி 21-12 |

### 8.1.4.3.3 -ஆத்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர்

ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் மட்டுமே பயின்றுவந்துள்ளது. நற்றிணையில் வினையாலணையும் பெயராகவே உள்ளது.

| | | |
|---|---|---|
| அருளாதோய் | இரங்குகின்றிலை | ஐங் 480-5 |
| அறியாதோய் | அறியாய் ஆயினை | குறு 120-4 |

### 8.1.4.3.4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

குறுந்தொகை ஒழிந்த ஏனைய சங்க நூல்கள் அனைத்திலும் குறிப்பு வினையாலணையும் பெயராகவே பயின்றுவரக் காணலாம்.

நோய்ப்பாலோய் துன்பத்துக்குக் காரணமாகிய
ஊழ்வினையை உடையை குறு 128-5

### 8.1.4.3.5 வினையாலணையும் பெயர் விகுதி -Ø- க்குப் பின்னர்

அனைத்து முன்னிலை ஒருமை விகுதிகளிலும் -ஓய் விகுதியே வினையாலணையும் பெயராக அதிலும் குறிப்பாக, விளி வேற்றுமையில் அதிகமாகப் பயின்று வரக் காணலாம். குறள் தவிர்ந்த எல்லாப் பழந்தமிழ் நூல்களிலும் இந்நிலையினைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| புதைத்தோய் | புதைத்த நங்காய் ! | ஐங் 293-2 |
| முயங்கியோய் | தழுவிக்கொண்ட காதற்பாவையே ! | ஐங் 418-4 |
| தந்தோய் | சேர்த்தியுள்ள நீ | அகம் 212-23 |
| அணங்கியோய் | வருத்தினவளே ! | அகம் 32-8 |
| நின்றோய் | நின்றமாதே ! | நற் 155-3 |
| தந்தோய்போல | தருகின்றாய்போல | குறு 147-3 |

| | | |
|---|---|---|
| கொடுத்தோய் | வழங்கினோய்! | புறம் 2-16 |
| கொன்றோய் | கொன்றவனே! | பரி 3-32 |
| கூடியோய் | மணந்தருளிய பெருமானே ! | பரி 19-95 |
| உவந்தோய் | மகிழ்ந்தவனே ! | கலி 85-32 |
| வந்தோய் | வந்த இளமகளே ! | சிலம்பு 20-48 |
| அட்டோய் | அழித்தவனே ! | மணி 24-67 |
| வினவுவோய் | வினவாநின்ற பெருமாட்டியே! | ஐங் 390-2 |
| சொல் உகுப்போய் | பிதற்றுகின்றவனாகிய நீ | ஐங் 136-2 |
| என்போய் | சொல்லும் தலைவியே ! | அகம் 27-5 |
| போவோய் ஆகி | செல்வாயாகி | நற் 200-7 |
| அறிவோய் | அறிவோய் | புறம் 213-12 |
| உறுவோய் | உறுகின்றவளே | கலி 75-13 |
| செய்வோய் ஆயினை | செய்பவன் ஆயினை | சிலம்பு 28-132 |
| உரைப்போய் | அறிவுறுத்துகின்ற நீ | மணி 9-15 |
| ஆள்வோய் | ஆளும் தகுதி மிக்கோய்! | மணி 5-31 |
| சூழாதோய் | நினையாத நீ | நற் 183-11 |
| புகழோய் | புகழையுடையோனே! | பதி 90-40 |
| காதலோய் | காதல் கெழுமிய பெருமாட்டி! | ஐங் 148-3 |
| அன்பு உடையோய் | அன்புடைய தோழி ! | நற் 342-5 |
| கழலோய் | கழலினை உடையோய் ! | புறம் 259-7 |
| புலமையோய் | மெய்யறிவுடையோனே! | பத்து 1-280 |
| மார்பினோய் | மார்பினை உடையோனே ! | பரி 13-60 |
| இடையோய் | இடையையுடையோனே ! | சிலம்பு 6-26 |
| செவியோய் | செவிகளையுடையோனே ! | மணி 17-67 |

## 8.3 பட்டியல்கள்

### 8.3.1 பட்டியல் 1: முன்னிலை ஒருமை விகுதிகள்

| | -ஐ | -ஆய் | -இ | -ஓய் |
|---|---|---|---|---|
| பதி | 66 | 3 | 5 | 3 |
| ஐங் | 42 | 13 | 12 | 10 |
| அகம் | 96 | 32 | 23 | 10 |
| நற் | 61 | 32 | 7 | 14 |
| குறு | 33 | 1 | 15 | 6 |
| புறம் | 134 | 23 | 23 | 7 |
| பத்து | 11 | 2 | 2 | 1 |
| பரி | 9 | 10 | 9 | 14 |
| கலி | 97 | 160 | 52 | 3 |
| குறள் | 7 | 6 | 4 | — |
| சிலம்பு | 15 | 68 | 4 | 14 |
| மணி | 66 | 35 | 2 | 26 |

8.3 2 பட்டியல் 2: -ஐ

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | -வ்- | -குவ்- | -ப்- | -அல்- | -ஆத் + அன்- | |
| பதி | 7 | 10 | — | 5 | — | 7 | — | 37 |
| ஐங் | 22 | 3 | 3 | 4 | — | — | — | 10 |
| அகம் | 33 | 20 | 5 | 7 | — | — | — | 31 |
| நற் | 21 | 13 | 1 | — | — | — | — | 26 |
| குறு | 15 | 1 | 6 | 1 | — | 3 | — | 7 |
| புறம் | 23 | 16 | 5 | 14 | — | 5 | 1 | 70 |
| பத்து | 1 | — | — | 3 | — | 1 | — | 6 |
| பரி | — | 1 | — | — | — | — | — | 8 |
| கலி | 21 | 21 | 6 | 5 | — | 2 | — | 42 |
| குறள் | — | — | — | — | — | — | — | 7 |
| சிலம்பு | 6 | 2 | 2 | — | — | — | — | 5 |
| மணி | 37 | 10 | 3 | 12 | 1 | — | — | 3 |

8.3.3 பட்டியல் 3: -ஆய்

| | இறந்தகாலம் | | | | இறப்பில்காலம் | | | | எதிர்மறை | | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -இன்- | -த்- | ற் | -Ø- | -வ்- | -குவ்- | -ப்(ப்)- | -குற்ப்- | -Ø- | -ஆவ்- | -ஆக்- | |
| பதி | — | — | — | — | — | — | — | — | 3 | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — | — | — | 12 | — | — | 1 |
| அகம் | — | — | — | — | — | — | — | — | 32 | — | — | — |
| நற் | — | — | — | — | — | — | — | — | 32 | — | — | — |
| குறு | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — |
| புறம் | — | — | 1 | 2 | — | — | — | — | 20 | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | 1 |
| பரி | — | — | 3 | — | — | — | 1 | — | 1 | — | — | 5 |
| கலி | 7 | — | 62 | — | 14 | 1 | 19 | 1 | 36 | 5 | 3 | 12 |
| குறள் | — | — | — | — | 1 | — | 1 | — | 3 | — | — | 1 |
| சிலம்பு | — | — | 27 | 2 | 5 | 5 | 5 | — | 13 | — | — | 11 |
| மணி | — | 1 | 11 | — | 2 | — | 5 | — | 13 | — | — | 3 |

8.3.4 பட்டியல் 4: -இ

| | இறந்தகாலம் | இறப்பில்காலம் | |
|---|---|---|---|
| | -த்- | -த்- | |
| பதி | — | 5 | |
| ஐங் | — | 12 | |
| அகம் | 2 | 21 | |
| நற் | — | 7 | |
| குறு | — | 15 | |
| புறம் | — | 23 | |
| பத்து | — | 2 | |
| பரி | 1 | 5 | |
| கலி | — | 52 | |
| குறள் | — | 4 | |
| சிலம்பு | — | 4 | |
| மணி | — | 2 | |

8.3.5 பட்டியல் 5: -ஒய்

| | இறந்தகாலம் | | இறப்பில்காலம் | | எதிர்மறை | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|
| | -இ- | பிற | -வ்- | -ப்(ப்)- | -ஆத்- | |
| பதி | — | 1 | — | — | — | 2 |
| ஐங் | 1 | 4 | 1 | 1 | 1 | 2 |
| அகம் | 1 | 8 | — | 1 | — | — |
| நற் | — | 6 | 1 | 1 | 2 | 4 |
| குறு | 2 | 1 | — | — | 1 | 2 |
| புறம் | 1 | 3 | 1 | — | — | 2 |
| பத்து | — | — | — | — | — | 1 |
| பரி | 1 | 7 | — | — | — | 6 |
| கலி | — | 1 | 2 | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | 6 | 2 | — | — | 6 |
| மணி | — | 8 | 4 | 3 | — | 11 |

# 9. முன்னிலைப் பன்மை

## 9.0 முன்னிலையும் முன்னிலைப் பன்மையும்

நாம் பேசுவதைக் கேட்போர் ஒன்றுக்கு மேற்பட்டோராயின் அவர்களைக் குறித்து நிற்பதே முன்னிலைப் பன்மை எனப்படும். மட்டுமின்றிக் கேட்போன் ஒருவனாக இருக்க, படர்க்கையில் உள்ளவர்களையும் இணைத்து நிற்பதும் முன்னிலைப் பன்மை எனலாம். இந்நிலையில்தான் இது குறித்து நிற்கும் பதிலிடு பெயர்கள் இவற்றைச்சுட்டி நிற்பது காணலாம் (இராஜா, 1975).

### 9.0.1 முன்னிலைப் பன்மைப் பதிலிடுபெயர்கள்

முன்னிலைப் பன்மையைக் குறிக்கும் பதிலிடு பெயர்களாக நீர், நீயிர் ஆகிய இரு பதிலிடு பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நீயிர் வரலாற்று அடிப்படையில் முந்தியது என்றும், நீர் பிந்தியது என்றும் கூறுவர். இவையும் தன்மைப் பன்மைப் பதிலிடுபெயர்களைப் போன்றே எண் மட்டுமே காட்டி நிற்கும். பால் காட்டுவதில்லை. இவற்றைப் பிரதிபலித்து நிற்கும் முன்னிலைப் பன்மை விகுதிகளும் இவ்வாறே உள்ளன.

நீர், நீயிர் ஆகியவை எழுவாயாக நிற்க அவற்றைப் பிரதி பலித்துத்தான் முன்னிலைப் பன்மை விகுதிகள் வருகின்றன.

> "நீர் பாடினிர் செலினே" — புறம் 110-6
>
> "... ... ... ... ... ... ... நீயிர் இச்சுரம்
> அறிதலும் அறிதிரோ ... ... ... ... ... ..." — அகம் 8-17

போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம். பலவிடங்களில் இப் பதிலிடுபெயர்கள் வராவிடினும் பலவேறு பெயர்கள் நிற்கவும் காண்கிறோம்.

> "என்றனி ராயி னாறுசெல் வம்பலிர்" — பதி 77-1

"... ... ... ... ... ... ... ... அந்தணீர்
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
அன்னா ரிருவரைக் காணிரோ ... ... ..." கலி 9-4

மேலும் இதுபோன்ற பெயர்கள் மறைந்து நிற்கவும் இவ்விகுதி வரக்காணலாம்.

"யாங்கா கியரென வினவுதி ராயின்" புறம் 191-2

போன்ற இடங்கள் இப்பண்பைக் காட்டும்.

சங்க இலக்கியங்களில் முன்னிலைப் பன்மை காட்டும் பதிலிடு பெயர்களும், விகுதிகளும் பன்மையைக் காட்டுவதோடு உயர்வு ஒருமையையும் காட்டி நிற்கின்றன. இது பற்றிப் பின்னர்க் காண்போம்.

## 9.0.2 முன்னிலைப் பன்மை விகுதிகளும் தொல்காப்பியமும்

பழந்தமிழில் -இர், -ஈர் என்பன முன்னிலைப்பன்மை விகுதிகளாகப் பயன்படுகின்றன. -மின், -மின்கள், -உம், -ஈம் ஆகியவை ஏவல் வினைகளில் வருவன. இவற்றுள் -மின் மிக அதிகமான இடங்களில் வருதல் காணலாம். -இர் தகர ஒற்றோடு வருதல் உண்டு. இத்தகர ஒற்றை ஒரு எதிர்காலம் காட்டும் இடைநிலையாகக் கருதலாம். தொல்காப்பியர் (சொல். 218)

"இர் ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்"

என்னும் சூத்திரத்தில் -இர், -ஈர், -மின் ஆகிய மூன்றும் உயர்திணைப் பன்மை விகுதியாக வரும் எனக் கூறிப் போந்தார்.

## 9.0.3. முன்னிலையும் ஏவலும்

இவற்றுள் -இர், -ஈர் இரண்டும் முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களிலும் -மின் முன்னிலைப் பன்மை ஏவலிலும் வருவது நன்கு அறிந்த செய்திகள் ஆகும். தொல்காப்பியர்

முன்னிலையை ஏவலிலிருந்து பிரித்துக் கூறவில்லை என்பதையும், ஏவலையும் முன்னிலையோடு இணைத்தே கூறினார் என்பதையும் இங்கு உணரவேண்டும். ஏவல் முன்னிலையில் வரும் என்பதும், முன்னிலை வினைமுற்றுக்கள் (வருவீர்) சில நேரங்களில் ஏவலை உணர்த்தும் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கச் செய்திகள். எனினும் முன்னிலை எல்லாம் ஏவல் இல்லை என்பதும், ஏவல் அனைத்தும் முன்னிலை விகுதியோடு வருவதில்லை என்பதும் (வா) ஒருதலை.

தொல்காப்பியர் இதனைப் பிரித்துக் கூறாவிடினும் இளம்பூரணர் (சொல். 219), சேனாவரையர் (சொல். 224), நச்சினார்க்கினியர் (சொல். 226) ஆகிய உரையாசிரியர்கள் -இர், -ஈர் ஆகிய இவ்விரண்டும் எல்லாக் காலங்களிலும் வர -மின் எதிர் காலத்தில் மட்டும்தான் வரும் எனவும் கூறுவர். இவற்றுக்கு உதாரணம் தரும் நிலையில் உண்டனிர், உண்டீர் போன்ற உதாரணங்களைத் தருவதோடு -மின் விகுதிக்கு உண்மின், தின்மின் என ஏவல் வினையினையே தந்து நிற்பர். எனவே -மின் ஏவலில்தான் வரும் என்பது உறுதி. எனினும் அவர்கள் -மின் ஏவலில்தான் வரும் எனக் கூறவில்லை. சில இடங்களில் -மின் வியங்கோள் பொருளிலும் வரலாம். எனவே -மின், -மின்கள் போன்றவற்றை ஏவல் வினையின்கண் அடக்குவதே பொருத்தம். எனினும் தொல்காப்பியரையொட்டிப் பிற இலக்கண ஆசிரியர்களும் -மின் விகுதியினை இணைத்தே கூறிச் செல்வதைக் காணலாம். ஆனால் நன்னூலார் (337)

"இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை மின் அவற்றுள் ஏவல்"

என விதந்து கூறுவது இங்கு உணரத்தக்கது.

தொல்காப்பிய சூத்திரத்திற்கு உரைகூறப் போந்த நச்சினார்க்கினியர் (சொல். 228) உண்மின்களே என்ற உதாரணத்தைத் தந்து நிற்பார். இந்நிலையில் -மின்களையும் அவர் ஒரு விகுதியாகக் கொண்டமை தெரிய வரும். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் சிலம்பு தவிர வேறு எதிலும் -மின்கள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 9.0.4 உயர்திணையும் அஃறிணையும்

தொல்காப்பியர் (சொல். 709) 'பல்லோர் மருங்கிலும் பல வற்று மருங்கினும்' எனக் குறிப்பிடுவதால் உயர்திணையிலும் அஃறிணையிலும் இவை வரும் என்பதும் எனவே இவை எண் மட்டுமே காட்டி நிற்கும் என்பதும் திணை வேற்றுமை அற்றன என்பதும் குறிப்பிடத்தக்கன.

பன்மையில் உயர்திணையில் மட்டுமன்றி அஃறிணையிலும் முன்னிலைப் பன்மையைக் காணலாம். நற்றிணையில் கிளி களைப் பார்த்துக் கூறியதாக வரும் பாடல் ஒன்றில்

"கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்
... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
நன்கவற்கு அரிய உரைமின் பிற்றை
... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
அறிந்தனிர் அல்லிரோ அறனில் யாயே"

அறிந்தனிர் அல்லிரோ எனக் கூறுதல் காணத்தக்கது.

### 9.0.5 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியத்தில் -ஈர் விகுதி மட்டுமே இரு இடங்களில் காணப்படுகின்றது. இதுவும் இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் வருதல் காணலாம்.

கொண்டீர் சொல் 419-1

### 9.0.6. பெரும்பான்மை விகுதி

-இர், -ஈர் ஆகிய இரண்டு விகுதிகளில் -இர் விகுதியே முன் பழந்தமிழில் அதிகமாக உள்ளது. ஆனால் பின்பழந்தமிழிலோ -ஈர் விகுதி அதிகமாகக் காணப்படுகிறது.

| | -இர் (பன்மை + உ. ஒருமை) | -ஈர் (பன்மை + உ. ஒருமை) |
|---|---|---|
| பதி | 2 | 0 |
| ஐங் | 1 | 0 |
| அகம் | 23 | 5 |
| நற் | 12 | 8 |
| குறு | 8 | 3 |
| புறம் | 16 | 8 |
| பத்து | 54 | 4 |
| பரி | 1 | 2 |
| கலி | 22 | 36 |
| குறள் | 2 | 4 |
| சிலம்பு | 15 | 9 |
| மணி | 4 | 14 |

## 9.1 விகுதிகள்

### 9.1.1 -இர்

#### 9.1.1.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு எடுத்துக்காட்டுக்கள் தரவந்த இளம்பூரணர் (சூத். 219)

உண்டனிர் உண்குவிர்
உண்ணாநின்றனிர்

ஆகிய எடுத்துக்காட்டுக்களையும், சேனாவரையர் (சூத். 224)

உண்டனிர் நாட்டினிர்
உண்ணாநின்றனிர் பொன்னன்னிர்
உண்குவிர் கரியிர்
கழலினிர்

ஆகிய எடுத்துக்காட்டுக்களையும், நச்சினார்க்கினியர் (சூத். 226)

உண்டனிர் கழலினிர் பொன்னன்னிர்
உண்ணாநின்றனிர் நாட்டினிர் கரியிர்

| | | |
|---|---|---|
| உண்பிர் | உண்ணாநின்றிலிர் | உண்டிலிர் |
| உண்குவிர் | உண்ணலிர் | |

ஆகிய எடுத்துக்காட்டுக்களையும் தெய்வச்சிலையார் (சூத். 218)

| | |
|---|---|
| உண்டனிர் | உண்பிர் |
| உண்ணாநின்றனிர் | உண்ணலிர் |

ஆகிய எடுத்துக்காட்டுக்களையும், கல்லாடனார் (சூத். 226)

| | | |
|---|---|---|
| உண்டிர் | கரியிர் | உண்டிலிர் |
| உண்ணாநின்றிர் | உண்ணலிர் | உண்ணாநின்றிலிர் |
| உண்பிர் | | |

ஆகிய எடுத்துக்காட்டுக்களையும் தந்து சென்றுள்ளனர்.

எல்லா உரையாசிரியர்களும் நிகழ்கால எடுத்துக்காட்டுக்களைத் தந்து சென்றுள்ளனர். நிகழ்கால எடுத்துக்காட்டுக்கள் சங்கத் தமிழில் காணப்படவில்லை. இதுபோன்றே இவ்விகுதி சங்க இலக்கியங்களில் -இன்- இடைநிலைக்குப் பின்னர் பல சொற்களில் வரக் காணலாம். இவ்வகை எடுத்துக்காட்டுக்களை உரையாசிரியர்கள் தராமலேயே விட்டுச் சென்றுள்ளனர்.

தொல்காப்பியத்தில் -இர் விகுதி காணப்படவில்லை என்பதும், -ஈர் விகுதி மட்டுமே உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கன.

### 9.1.1.2 சூழல்கள்

இது பழந்தமிழ் இலக்கியங்களில்

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
5. -அல்-, -ஆஅல்- ஆகிய எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னரும்
6. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்

7. வினையாலணையும் பெயர் விகுதி -ர்-க்குப் பின்னரும் வரும்.

9.1.1.2.1 -அன் சாரியைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| என்றனிர் | கூறினீர் | பதி 77-2 |
| கண்டனிர் | கண்டீர் | அகம் 130-1 |
| அறிந்தனிர் | அறிந்தீர் | நற் 376-12 |
| உடன்றனிர் | பொருதீர் | புறம் 110-2 |
| கொண்டனிர் | கொண்டு போகக் கடவீர் | பத்து 10-224 |
| தொழுதனிர் | கும்பிட்டீர் | பரி 15-48 |
| அறிந்தனிர் | அறிந்தீர் | கலி 139-33 |
| பட்டனிர் | சாபத்தினைப் பெற்றீர்கள் | சிலம்பு 23-170 |
| உற்றனிர் | எய்தினிர் | மணி 5-62 |

9.1.1.2.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| ஆடினிர் | ஆடினிர் | புறம் 109-17 |
| அசையினிர் | இளைப்பாறினிர் | பத்து 10-443 |
| எய்தினிர் | அடைந்தீர் | சிலம்பு 11-67 |
| காட்டினிர் | காட்டலானீர் | மணி 22-164 |

9.1.1.2.3 வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

இவ்விகுதி -அன்- சாரியைக்குப் பின்னர் வருதல் மட்டுமின்றி -அன்- சாரியை பெறாது பிற இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும் வருதல் உண்டு இந்நிலையில் -இர், -ஈர் ஆகியவை துணைநிலை வழக்காக உள்ளமை கண்கூடு.

| | | |
|---|---|---|
| காண்டிர் | கண்டீரோ | அகம் 76-9 |
| என்றிர் | கூறினீர் | ஐங் 389-4 |

மேலே காட்டிய உதாரணங்களில் அகநானூற்றில் காணப்படும் காண்டிர் என்ற சொல்லில் உள்ள தகரம் இறந்தகாலம் காட்டி நிற்றல் குறிப்பிடத்தக்கது. பொதுவாக இவ்வாறு வரும் தகரம்

இறப்பில்காலம் காட்டுதலே பெரும்பான்மை. இதுபோன்றே அகநானூற்றில் வரும் அறிதிர் (39-2, 78-14) என்ற சொல்லும் போறிர் (29-12) என்ற சொல்லும் (இவை உயர்வு ஒருமை சொற்கள்) இறந்தகாலத்தில் வருதல் குறிப்பிடத்தக்கது

9.1.1.2.4 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

வகரத்திற்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| இரங்குவிர் | இரங்குவிர் | புறம் 195-5 |
| கருதுவிர் | சீர் தூக்குவீர் | நற் 234-6 |
| ஆகுவிர் | ஆவீர் | பத்து 10-286 |
| கேட்குவிர் | கேட்பீர் | பத்து 10-291 |
| படர்குவிர் | செல்குவிர் | சிலம்பு 27-239 |
| எய்துவிர் | பெறுகுவீர் | சிலம்பு 11-103 |

தகரத்திற்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| என்றிர் | கூறாநின்றீர் | நற் 184-4 |
| வினவுதிர் | கேட்பீர் | புறம் 191-2 |
| சேறிர் | செல்வீர் | பத்து 10-65 |
| அறிதிர்* | அறியமாட்டீர் | கலி 147-26 |
| பெறுதிர் | பெறுவீர் | சிலம்பு 11-123 |
| ஆகுதிர் | எய்துவீர் | மணி 25-43 |

வகரத்துக்குப் பிறகு வருதலேயன்றி தகர ஒற்றுக்குப் பின்னரும் -இர் விகுதி வரக் காணலாம். சங்ககால இலக்கியங்களில் இச்சூழலில் தகரமும் அதிகமாகப்பயன்படுதல் உண்டு. இருந்தும் தொல்காப்பிய உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியர் (226) ஒருவரே இது பற்றிக் குறிப்பிடுகிறார். ''கானங் கடத்திர் எனக் கேட்பின் என்புழி கடவா நின்றீர் என நிகழ்காலத்து தகரம் வந்தது. த் எதிர்காலத்தும் வரும்'' எனக் குறிப்பிடுவார். மேலும் இவர் 'போறி' என்ற உதாரணத்தைத் தந்து இது போன்றனன், போன்றான் என்பது போல வந்த தெரிநிலை வினை எனவும் கூறுவார்.

* 'அறிதிர்' என்றது அறியமாட்டீர் என்ற இகழ்ச்சிக் குறிப்பு

தகரம் இறப்பில்காலத்தில் வருதல் பற்றி ஒரு சில அறிஞர்கள் கூறிச் சென்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இன்றைய பேச்சு வழக்கிலும் தகரம் சில கிளை மொழிகளில் நிகழ்காலம் காட்டும். (Zvelebil 1961; Yesudhasan, 1977: 262)

வருதான்

என்பது வருகிறான் என்ற பொருளைத் தரும்.

### 9.1.1.2.5 -அல்-, -ஆஅல்- எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர்

பழந்தமிழ் நூல்களில் மூன்று எடுத்துக்காட்டுகளே உள்ளன.

| | | |
|---|---|---|
| கழறலிர் | கழறிக் கூறீர் | அகம் 130-2 |
| கொள்ளலிர் | கொள்ள மாட்டீர் | புறம் 109-3 |
| நகாஅலிர் | இகழ்கின்றீர் | கலி 142-16 |

-இர் விகுதிக்கு உதாரணம் தரும் இளம்பூரணரும், சேனாவரையரும் எதிர்மறை எடுத்துக்காட்டுகளே தந்திலர். தெய்வச்சிலையார் உள்ளலிர் என -அல்- இடைநிலைக்குப் பின்னர் வரும் உதாரணத்தைத் தருவார். ஆனால் நச்சினார்க்கினியரோ உண்டிலர், உண்ணாநின்றிலிர், உண்ணலிர் ஆகிய எடுத்துக்காட்டுக்களைத் தருவார். -இல்- எதிர்மறைக்குப் பின்னர் இவ்விகுதி பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுவதில்லை.

### 9.1.1.2.6 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

-இர் பல்வேறு குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும் வரும். இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் இதற்குரிய எடுத்துக்காட்டினைத் தராவிடினும் பிற உரையாசிரியர்கள் பல உதாரணங்கள் தந்து நிற்பர். சேனாவரையரும் (சொல். 224) நச்சினார்க்கினியரும் (சொல். 226) கழலினிர், நாட்டினிர், பொன்னன்னிர், கரியிர் ஆகியவற்றை உதாரணங்களாகத் தந்து நிற்பர்.

| | | |
|---|---|---|
| அறிந்தினிர் | | |
| அல்லிர் | அறிந்தீரன்றே | நற 376-12 |
| களிற்றினிர் | யானையை உடையீர் | புறம் 109-11 |
| அளியிர் | இரங்கத்தக்கீர் | புறம் 280-9 |

| | | |
|---|---|---|
| கிழவிர் | கிழமையுடையீர் | பத்து 10-166 |
| புள்ளினிர் | நன்னிமித்தம் உடையீர் | பத்து 10-66 |

9.1.1.2.7 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| விரும்பினிர் | ஆர்வமுடையீர் | சிலம்பு 11-131 |
| வம்பலிர் | புதுவோர்களே | பதி 77-2 |
| இல்லிர் | இல்லில் உறைகின்றவர்களே | கலி 51-5 |

9.1.2 -ஈர்

முன்னர்க் குறிப்பிட்டது போன்று -ஈர் விகுதியும் பழந்தமிழ் இலக்கியங்களில் முன்னிலைப் பன்மை விகுதியாக வந்துள்ளது.

9.1,2.1 உரையாசிரியர்கள்

இவ்விகுதிக்கு எடுத்துக்காட்டுக்கள் தரவந்த இளம்பூரணர் (சூத். 219)

உண்டீர் உண்பீர்
உண்ணாநின்றீர்

ஆகியவற்றையும், சேனாவரையர் (சூத். 224)

உண்டீர் நாட்டினீர்
உண்ணாநின்றீர் பொன்னன்னீர்
உண்குவீர் கரியீர்
கழலினீர்

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (சூத். 226)

உண்டீர் பொன்னன்னீர்
உண்ணாநின்றீர் கரியீர்
உண்பீர் உண்டிலீர்
உண்குவீர் உண்ணாநின்றிலீர்
கழலினீர் உண்ணலீர்
நாட்டீர்

ஆகியவற்றையும், தெய்வச்சிலையார் (சூத். 218)

| | |
|---|---|
| உண்டீர் | உண்பீர் |
| உண்ணாநின்றீர் | உண்ணீர் |

ஆகியவற்றையும், கல்லாடனார் (சூத். 226)

| | |
|---|---|
| உண்டீர் | உண்டிலீர் |
| உண்ணாநின்றிர் | உண்ணாநின்றிலீர் |
| உண்பீர் | உண்ணீர் |
| கரியீர் | |

ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுக்களாகத் தந்து சென்றுள்ளனர்.

எல்லா உரையாசிரியர்களும் நிகழ்கால எடுத்துக்காட்டுக்கள் தந்து சென்றுள்ள போதிலும் சங்ககாலத் தமிழில் இச்சூழலில் இவ்விகுதி காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 9.1.2 2 சூழல்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் இது

1. இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
2. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. -அல்-, -ø- ஆகிய எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
5. வினையாலணையும் பெயர் விகுதி -ø-க்குப் பின்னரும்

வரும். இவற்றுள் பல இடங்களில் –இர், -ஈர் ஆகியவை துணை நிலை வழக்கில் உள்ளன.

### 9.1.2.2.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| செய்தீர் | செய்தீர் | கலி 142-15 |
| உற்றீர் | எய்தினிர் | மணி 6-15 |
| ஆயினீர் | ஆயினீர் | மணி 11-137 |
| நின்றீர் | நிற்கின்றீர் | மணி 6-15 |

### 9.1.2.2.2 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| நோக்குவீர் | பாரா நின்றீர் | கலி 140-2 |
| படர்கிற்பீர் | நடப்பீர் | கலி 39-38 |

| | | |
|---|---|---|
| மருள்தீர் | மருளாநின்றீர் | கலி 143-19 |

### 9.1.2.2.3 -அல்-, -∅- எதிர்மறை இடைநிலைகளுக்குப் பின்னர்

-ஈர்- விகுதி -∅- எதிர்மறைக்குப் பின்னர் வருதலே பெரும்பான்மை. எனினும் இதுபற்றி தெய்வச்சிலையார் தவிர வேறு உரையாசிரியர்கள் எவரும் குறிப்பிடவோ அன்றி உதாரணங்கள் தரவோ இல்லை. தெய்வச்சிலையார் உண்ணீர் என்பதை எடுத்துக்காட்டாகத் தருவார். நச்சினார்க்கினியர் உண்டிலீர், உண்ணாநின்றிலீர், உண்ணலீர் ஆகியவற்றை எதிர்மறைக்கு உதாரணமாகத் தருவார்.

-∅-

| | | |
|---|---|---|
| காணீர் | கண்டீரல்லீரோ | அகம் 236-16 |
| சொல்லீர் | சொல்லுதலையுஞ் செய்திலீர் | நற் 213-7 |
| திரியீர் | வேறுபடீர் | புறம் 58-16 |
| ஆற்றீர் | மாட்டீர் | புறம் 195-6 |
| விடீர் | காட்டித்தாரீர் | பத்து 8-144 |
| காணீர் | காணாதிருந்தீர் | கலி 9-8 |
| படரீர் | செல்லீர் | சிலம்பு 11-87 |

அல்-

| | | |
|---|---|---|
| தொழுகல்லீர் | வழிபடமாட்டாதீர் | பரி 15-34 |

### 9.1.2.2.4 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உளீர் | இருக்கின்றனிர் | குறு 118-4 |
| இன்னீர் | இத்தன்மையீர் | புறம் 58-18 |
| இயலீர் | சாயலுடையீர் | பத்து 8-145 |
| ஒழுக்கத்தீர் | ஒழுக்கத்தினையுடையீர் | கலி 9-5 |

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் குறிப்பு வினைகளுக்கும் எடுத்துக்காட்டுக்கள் தருவர். கழலினீர், நாட்டினீர், பொன்னன்னீர், கரியீர் என்ற உதாரணங்களைத் தருவர்.

### 9.1.2.2.5 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| புணர்ந்தீர் | புணர்ந்துடையீர் ! | நற் 224-4 |
| புணர்ந்தீர் | புணர்ந்தீர் ! | கலி 92-61 |
| வந்தீர் | வந்த நுமக்கு | சிலம்பு 16-11 |
| ஊடினீர் | ஊடினவர்களே | சிலம்பு 8-2-1 |
| அறிந்தீர் | அறிந்த மாந்தர்களே | மணி 1-67 |
| வருவீர் | வர வேண்டுவீர் | குறு 118-4 |
| அறிவீர் | அறிந்த சான்றோர் | மணி 1-59 |
| துணை உடையீர் | துணையாக உள்ள நுமக்கு | அகம் 217-15 |
| உடையீர் | அறிவுடைய அயலிலாட்டியரே! | நற் 184-5 |
| இயலீர் | சாயலுடையீரே! | பத்து 8-145 |
| மாந்தீர் | மாந்தர்களே ! | பரி 15-29 |
| இலீர் | அல்லீர் | கலி 147-13 |
| திருத்தக்கீர் | பாக்கியமுடைய நுமக்கு | சிலம்பு 11-117 |
| நல்லீர் | மகளிர் | மணி 24-141 |

## 9.2 பட்டியல்கள்

### 9.2.1 பட்டியல் 1: முன்னிலைப் பன்மை + உயர்வு ஒருமை விகுதிகள்

| | -இர் | -ஈர் |
|---|---|---|
| பதி | 2 | — |
| ஐங் | 1 | — |
| அகம் | 23 | 5 |
| நற் | 12 | 8 |
| குறு | 8 | 3 |
| புறம் | 16 | 8 |
| பத்து | 54 | 4 |
| பரி | 1 | 2 |
| கலி | 22 | 36 |
| குறள் | 2 | 4 |
| சிலம்பு | 15 | 9 |
| மணி | 4 | 14 |

### 9.2.2 பட்டியல் 2: முன்னிலைப் பன்மை விகுதிகள்

| | -இர் | -ஈர் |
|---|---|---|
| பதி | 2 | — |
| ஐங் | 1 | — |
| அகம் | 7 | 2 |
| நற் | 5 | 5 |
| குறு | — | 2 |
| புறம் | 14 | 7 |
| பத்து | 50 | 4 |
| பரி | 1 | 2 |
| கலி | 12 | 31 |
| குறள் | — | — |
| சிலம்பு | 14 | 5 |
| மணி | 3 | 13 |

9.2.3 பட்டியல் 3: -இர்

| | இறந்தகாலம் | | | இறப்பில்காலம் | | | | எதிர்மறை | | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -இன்- | -அன்- | ஏற | -வ்- | -குவ்- | -ப்- | -க்- | -அல்- | -ஆல்- | -இல்- | |
| பதி | — | 1 | — | — | — | — | — | — | — | — | 1 |
| ஐங் | — | — | 1 | — | — | — | — | — | — | — | — |
| அகம் | — | 4 | 2 | — | — | — | — | 1 | — | — | — |
| நற் | — | 1 | — | 2 | — | — | 1 | — | — | — | 1 |
| குறு | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| புறம் | 5 | 1 | — | 2 | — | — | 2 | 1 | — | — | 3 |
| பத்து | 14 | 7 | — | 2 | 23 | — | 1 | — | — | — | 3 |
| பரி | — | 1 | — | — | — | — | — | — | — | — | — |
| கலி | — | 1 | — | — | — | — | 7 | — | 1 | — | 3 |
| குறள் | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| சிலம்பு | 2 | 1 | — | 6 | 2 | — | 3 | — | — | — | — |
| மணி | 1 | 1 | — | — | — | — | 1 | — | — | — | — |

9 2.4 **பட்டியல் 4: -ஈர்**

| | இறந்தகாலம் | | | இறப்பில்காலம் | | | | எதிர்மறை | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | பிற | -வ்- | -கிற்ப்- | -ப்- | -த் | -அல்- | -∅- | |
| பதி | — | — | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — | — | — | — | — |
| அகம் | — | — | — | — | — | — | — | — | — | 1 |
| நற் | — | — | — | — | — | — | — | — | 2 | 3 |
| குறு | — | — | — | 1 | — | — | — | — | — | 1 |
| புறம் | — | — | — | — | — | — | — | — | 3 | 4 |
| பத்து | — | — | — | — | — | — | — | — | 1 | 3 |
| பரி | — | — | — | — | — | — | — | 1 | — | 1 |
| கலி | — | — | 8 | 2 | 1 | — | 1 | — | 3 | 16 |
| குறள் | — | — | — | — | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | 1 | — | — | — | — | — | — | 3 | 1 |
| மணி | — | 1 | 4 | 1 | — | — | — | — | — | 7 |

# 10. முன்னிலை உயர்வு ஒருமை

## 10.0 பழந்தமிழில் முன்னிலை உயர்வு ஒருமை

### 10.0.1 பெயர்களும் பதிலிடுபெயர்களும்

தன்மை, படர்க்கையைப் போலவே முன்னிலையிலும் உயர்வு ஒருமையைக் காணுகிறோம். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இப்பண்பினை நம்மால் காண முடிகிறது. பெயர்கள், பதிலிடுபெயர்கள், வினைமுற்றுக்கள் ஆகியவற்றில் இப்பண்பினைக் காணலாம். ஏவல் வினையிலும் உயர்வு ஒருமை வருவது பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது.

"சேறும் சேறும் என்றலின் பலபுலந்து
செல்மின் என்றல் யானஞ் சுவலே
செல்லா தீமெனச் செப்பிற் பல்லோர்
நிறத்தெறி புன்சொலின் திறத்தஞ் சுவலே
அதனாற் சென்மின் சென்றுவினை முடிமின் சென்றாங்கு
அவண்நீ டாதல் ஓம்புமின் யாமத்து
இழையணி ஆகம் வடுக்கொள முயங்கி
உழையீராகவும் பனிப்போள்; தமியே
குழைவான் கண்ணிடத்து ஈண்டித் தண்ணென
வாடிய இளமழைப் பின்றை
வாடையுங் கண்டிரோ வந்துநின் றதுவே" நற் 229

போன்ற பாடல்களில் செல்மின், செல்லாதீம், ஓம்புமின் போன்றவை ஏவல் உயர்வு ஒருமை காட்டுவனவாக உள்ளன. எனினும் அது பற்றி இங்குப் பேசப்படவில்லை.

#### 10.0.1.1 பெயர்கள்

முன்னிலையாக வரும் விளி வேற்றுமைப் பெயர்களில் பல இடங்களில் உயர்வு ஒருமையைக் காணுகிறோம். பொதுவாகப் பெயர்கள் முன்னிலையில் விளி வேற்றுமையாக வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

"உள்ளியும் அறிதிரோ ஓங்கு மலைநாட" அகம் 78-14

"வொய்ய உவர்க்கும் என்றனிர்

ஐய ... ... ... ... ... ... ... ..." குறு 196-6

"நீட்டுவிர் அல்லிரோ நெடுந்தகையீர்" அகம் 239-12

இத்தகைய இடங்கள் பலவற்றைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடியும்.

### 10.0.1.2 பதிலிடுபெயர்கள்

முன்னிலைப் பன்மைப் பதிலிடுபெயர்களாக வரும் நீயிர், நீர் ஆகிய இரு பெயர்களும் பன்மையைக் குறிப்பிடுவதோடு மட்டுமின்றி உயர்வு ஒருமையையும் குறிப்பிடுவதாக உள்ளன. இப் பண்பினை அகநானூறு, நற்றிணை, பத்துப்பாட்டு, பரி பாடல், கலித்தொகை, குறள், சிலம்பு ஆகிய நூல்களில் காண முடிகிறது.

| | நீர் | | நீயிர் | |
|---|---|---|---|---|
| | பன்மை | உயர்வு ஒருமை | பன்மை | உயர்வு ஒருமை |
| பதி | — | — | 1 | — |
| ஐங் | 1 | — | — | — |
| அகம் | — | 1 | 1 | 1 |
| நற் | — | 1 | — | — |
| குறு | — | — | — | — |
| புறம் | 2 | — | — | — |
| பத்து | — | 1 | — | 3 |
| பரி | — | 1 | — | — |
| கலி | — | 9 | — | — |
| குறள் | — | 2 | — | — |
| சிலம்பு | 3 | 9 | 1 | — |
| மணி | 2 | — | 2 | — |

1) நீர்

அகநானூற்றில் தலைவி கூற்றாக வரும் பாடல் ஒன்றில் நீர் உயர்வு ஒருமையாகப் பயன்படுதல் காணலாம்.

''சென்றுநீர் அவணி ராகி நின்றுதரும்
நிலையரும் பொருட்பிணி நினைந்தனி ரெனினே''
அகம் 271-9

இந்நிலையை வேறு பல இலக்கியங்களிலும் காண முடிகிறது.

''... ... ... ... ... ... ... ... நீர்
... ... ... ... ... ஒளித்த காடே'' நற் 48-8
''... ... ... ... ... நீர் போறிர்'' கலி 9-11
''தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று'' குறள் 1319

2) நீயிர்

நீயிர் என்ற பதிலிடுபெயரும் அகம் (1), பத்து (3) ஆகிய நூல்களில் உயர்வு ஒருமை காட்டுவதாக உள்ளது.

''நல்லோர்க் கொத்தனிர் நீயிர்'' அகம் 26-19
''... ... ... ... ... ... ... இரவல
... ... ... ... ... ... ... 'நீயிரும்
... ... ... ... ... ... ... செல்குவிர் ஆயின்
... ... ... ... ... ... ... பெறுகுவிர்'' பத்து 3-40, 163

### 10.0.2 வினைமுற்றுக்கள்

வினைமுற்றுக்களிலும் முன்னிலைப் பன்மை விகுதிகளான -இர், -ஈர் ஆகியவை உயர்வு ஒருமையைக் காட்டி நிற்கின்றன. பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் இப்பண்பினைக் காண முடியும். எனினும் அகநூல்களில் இவை அதிகமாகக் காணப் படுகின்றன. எடுத்துக்காட்டாகக், குறுந்தொகையில் காணப்படும் எட்டு -இர் ஈற்று வினைச்சொற்களும் உயர்வு ஒருமை காட்டும் சொற்களாகவே உள்ளன. புறநானூற்றில் ஒரு புலவர் மற்றொரு புலவரிடம் பேசும்போது ஒரு சில இடங்களில் உயர்வு ஒருமை பயன்படக் காண்கிறோம்.

''ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென ... ... ... ... ... ...'' புறம் 141-4

இதைப் போன்றே தலைவி தலைவனிடம் பேசும்போது (அகம் 239-12, 39-2, 5-16, 26-19, 29-12; கலி 20-63; குறள் 1318) உயர்வு ஒருமையைக் காண முடிகிறது.

"எம்மை மறைத்திரோ" குறள் 1318

கார்ப்பருவம் தலைவியிடம் சொல்லுவது போலக் கூறும் தலைமகள் கூற்றில் கார்ப்பருவம் தலைவியிடம் சொல்லுதல் போல வருமிடத்திலும் தலைவி உயர்வு ஒருமையாகக் கூறப்படுகிறாள்.

"வன்பரல் தெள்ளறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவந் துகளத்
தான் வந்தன்றே தளிதரு தண்கார்
வாரா துறையுநர் வரனசைஇ
வருந்திநொந் துறைய இருந்திரோ எனவே" குறு 65

இவ்வாறு பழந்தமிழில் புலவர்கள், முனிவர்கள், தலைவன் போன்ற பலரிடம் பேசும் பலவேறு மக்கள் உயர்வு காட்டி நிற்கின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களில் முன்னிலை உயர்வு ஒருமை வரும் இடங்களைப் பிரிவு 10.3-ல் காணலாம்.

## 10.1 விகுதிகள்

### 10.1.1 -இர்

#### 10.1.1.1 சூழல்கள்

இவ்விகுதி

1. -அன்- சாரியைக்குப் பின்னரும்
2. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
3. வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
6. வினையாலணையும் பெயர் விகுதி -ர்- க்குப் பின்னரும்

வரும்.

##### 10.1.1.1.1 -அன்- சாரியைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| ஒத்தனிர் | பொருத்தியவர் ஆவீர் | அகம் 26-19 |
| நோன்றனிர் | பொறுத்தமைந்தனிர் | குறு 178-7 |
| இருந்தனிர் | இருந்தீர் | புறம் 141-4 |
| அறிந்தனிர் | அறிந்தீர் | கலி 5-5 |

### 10.1.1.1.2 -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| எண்ணினிர் | எண்ணினீர் | அகம் 161-8 |
| தங்கினிர் | தங்குவீர் | குறு 345-3 |
| உள்ளினிர் | நினைந்தீர் | கலி 4-8 |
| விளம்பினிர் | கூறி அருளினீர் | மணி 25-53 |

### 10 1.1.1.3 வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| அறிதிர் | அறிந்தீர் | அகம் 78-14 |
| கண்டிர் | கண்டீர் | நற் 229-11 |
| இருந்திர் | உளராயினீர் | குறு 65-5 |

### 10.1.1.1.4 இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| செல்குவிர் | செல்லுவீர் | அகம் 200-12 |
| நீட்டுவிர் | காலம் தாழ்ப்பீர் | அகம் 239-12 |
| வருவிர் | வருவீர் | குறு 268-6 |
| நிற்குவிர் | நிற்பீர் | பத்து 2-150 |
| எண்ணுதிர் | எண்ணுவீர் | அகம் 5-16 |
| அகறிர் | பிரிந்து செல்லுவீர் | நற் 37-7 |
| சேறிர் | செல்கின்றீர் | குறு 268-5 |
| அகறிர் | போகின்றீர் | பத்து 2-123 |
| அறிதிர் | அறிவீர் | கலி 19-9 |
| ஆகுதிர் | ஆகுதிர் | குறள் 1319 |

### 10.1.1.1.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| அல்லிர் | அல்லிர் | அகம் 239—12 |
| வல்லிர் | வன்மையுடையீர் | நற் 71-6 |
| நீரிர் | தன்மையீர் | குறு 219-7 |

### 10.1.1.1.6 வினையாலணையும் பெயர் விகுதி -ø- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| அவணிர் | அவ்விடத்திர் | அகம் 271-9 |
| அன்பிலிர் | அன்பில்லாதிராய் | நற் 37-7 |
| ஒருவிர் | ஒருவிர் | பத்து 10-218 |

| | | |
|---|---|---|
| மாந்திர் | மாந்திர் | கலி 22-4 |
| குருதியிர் | குருதியை உடையீர் | சிலம்பு 19-48 |

10.1.2 -ஈர்

10.1.2.1 **சூழல்கள்**

இவ்விகுதி

1. -இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னரும்
2. வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்
3. இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னரும்
4. -ழ- எதிர்மறைக்குப் பின்னரும்
5. குறிப்பு வினையடிகளுக்குப் பின்னரும்
6. வினையாலணையும் பெயர் விகுதி -ழ- க்குப் பின்னரும்

வரும்.

10.1.2.1.1 **-இன்- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| தும்மினீர் | தும்மினீர் | குறள் 1317 |
| நோக்கினீர் | நோக்கினீர் | குறள் 1320 |

10.1.2.1.2 **வேறு சில இறந்தகால இடைநிலைகளுக்கும் பின்னர்**

| | | |
|---|---|---|
| ஆனீர் | நடுங்குதலை ஒழிகின்றிலீர் | குறு 178-4 |
| மறந்தீர் | மறந்தீர் | குறள் 1316 |
| புரிந்தீர் | ஒழுகினீர் | சிலம்பு 16-81 |
| அறைந்தீர் | முழக்கினீர் | மணி 25-51 |

10.1.2.1.3 **இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர்**

அகம், கலித்தொகை ஆகியவற்றில் **வினையாலணையும்** பெயராகவே வரக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| போல்வீர் | போல்கின்றீர் | சிலம்பு 24-1-3 |

# உதவிய நூல்களும் கட்டுரைகளும்


அகத்தியலிங்கம், ச. 1972 "வினையெச்சம் பற்றித் தொல்காப்பியர்" தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலை நகர்.

——— 1976 "உளப்பாட்டுத் தன்மைப் பன்மையும் வேறுபாட்டுத் தன்மைப் பன்மையும்" எட்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, மைசூர்.

——— 1978 "தன்மைப் பன்மை" மொழியியல் 2.2, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1979 சொல்லியல் - 1 பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1979 "சங்கத் தமிழில் தன்மை ஒருமை" மொழியியல் 3.1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1980 "சங்கத் தமிழில் ஏவல்வினை" மொழியியல் 3.2 & 3, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1981 "சங்கத் தமிழில் பலர்பால்" மொழியியல் 4 3, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1982 சொல்லியல்-2 வினையியல்-1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1983a சங்கத்தமிழ் I அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1983c சங்கத்தமிழ் III அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

இசரயேல், மோ. 1976 **இலக்கண ஆய்வு - வினைச்சொல்,** மதுரை பப்ளிஷிங் ஹௌஸ், மதுரை.

இளையபெருமாள், மா. 1964 **தமிழ்மொழிச் சிந்தனைகள்,** தமிழ் ஆராய்ச்சித்துறை, கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

சண்முகம், செ.வை. 1982 "விரவுப்பெயர்கள் பால் உணர்த்தும் முறை" **மொழியியல்** 5. 3, அனைந்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

மீனாட்சிசுந்தரன், தெ. பொ. 1977 **தமிழ்மொழி வரலாறு,** சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

முத்துச்சண்முகன், 1974 "மூவிடப்பெயர்களும், அகத்திணைத் துறைகளும்", **வையை,** மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

வரதராசன், மு. 1983 **மொழிநூல்,** சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை (முதல் பதிப்பு 1947).

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1954 **காவியகாலம்,** பாரிநிலையம், சென்னை.

Agesthialingom, S. 1961 *Description of the Language of Patirruppattu with Translation, Transliteration and Index, Ph.D.* Dissertation, University of Kerala, Trivandrum.

—— 1968 "On Verbal Participles in Tamil", *Indian Linguistics* Vol. 52, Deccan College, Poona.

—— 1970 "On Vinai -y- eccam" *Seminar on Tolkappiam* Annamalai University, Annamalainagar.

—— 1977 "First Person Plural Terminations in Old Tamil" *Journal of Tamil Studies 11* Madras.

—— 1978 "Second Person Plural Terminations in Old Tamil" *A:yvukko:vai Vol.*2, Coimbatore.

—— 1978 "Participial Noun in Old Tamil" Journal of Annamalai University. (Humanities), Vol. XXX, Annamalainagar.

——— 1978 "Second Person Singular Terminations in Old Tamil" *Pulamai* Vol. 4. No.1, Madras.

——— 1979 "First Person markers from Old Tamil to Middle Tamil" *Pakhasanjam*, Patiala.

——— 1979 *A Grammar of Old Tamil with special reference to Patiṟṟupattu*, Annamalai University, Annamalainagar.

——— 1980 "Imperatives in Old Tamil", Indian Linguistics Vol.41, Deccan College, Poona.

Andiappa Pillai, D. 1970 *Descriptive Grammar of Kalittokai*, Ph.D. Dissertation, University of Kerala, Trivandrum.

Balasubramaniyan, K. 1981 *A Descriptive Grammar of Tolkappiyam*, Ph.D. Dissertation, Department of Linguistics, Annamalai University, Annamalainagar.

Caldwell, Robert 1856 *A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages* (Reprinted in 1956) Madras University, Madras.

Chithira Puthira Pillai, H. 1983 *Historical Study of Tamil Verbal Suffiixes from Early to Middle Tamil*, Ph.D. Dissertation, Department of Linguistics, Annamalai University, Annamalainagar.

Elayaperumal, M. 1958 "The-ma:r suffix in Early Tamil Literature", *Indian Linguistics Vol. 19*, Deccan College, Poona.

——— 1975 *Grammar of Ainkuṟunu:ṟu with Index*, University of Kerala, Trivandrum.

Ilakkuvanar, S. 1963 *Tolkappiyam in English with critical studies* Kuralneri Publishing House, Madurai.

Israel, M. 1973 *The Treatment of Morphology in Tolkappiyam*, Madurai University, Madurai.

Jesperson, Otto 1955 *A Modern English Grammar on Historical Principles*, George Allen & Unwin Ltd. London.

Johnsy Beula, W. 1978 "First person plural pronoun — Changes from Old Tamil to Middle Tamil" *A:yvukko:vai*, Coimbatore.

Kamatchinathan, A. 1964 *Grammatical Study of Naṟṟinai with Translation, Transliteration and Index* Ph D. Dissertation, University of Kerala, Trivandrum.

Kandaswamy, S.N. 1962 *Paripa:ṭal — A Linguistic Study — Part I Phonology, Part II Morphology and Syntax, Part III Dictionary*, M. Litt. Dissertation, Annamalai University, Annamalainagar.

Kothandaraman, P. 1972 *Studies in Tamil Linguistics*, Tamil Nuulagam, Madras.

Krishnambal, S. R. 1974 *Grammar of Kuṟuntokai with Index*, University of Kerala, Trivandrum.

Kumaraswami Raja, N. 1975 "The so - called First and Second Person Plurals" *7th A:yvukko:vai*, Nagercoil.

Lyons, John 1968 *Introduction to Theoretical Linguistics*, Cambridge University Press, Cambridge.

Meenakshisundaran, T.P. 1965 *A History of Tamil Language*, Poona.

Natarajan, R. 1959 *Manime:kalai as an Epic, Appendix — Akar:ati in Tamil*, M.Litt. Dissertation, Annamalai University, Annamalainagar.

Natarajan, T. 1976 *The Language of Sangam Literature and Tolka:ppiyam*, Madurai Publishing House, Madurai.

Parameswari, A. 1967 *Language of Tirukkuṟal* M. Litt. Dissertation, Annamalai University, Annamalainagar.

Ramaswami Aier, L.V. 1938 "The Morphology of Old Tamil Verbs" *Anthropos*, Vol.33, Wien.

Subrahmanyam, P.S. 1971 *Dravidian Verb Morphology* (A comparative study), Annamalai University Annamalainagar.

Subrahmanya Sastri, P.S. 1934 *History of Grammatical Theories in Tamil and their relations to the grammatical literature in Sanskrit*, The Journal of oriental Research, Madras.

—— 1945 *Tolka:ppiyam Collatika:ram with an English commentary*, Annamalai University, Annamalainagar.

Subramaniyam, S.V. 1965 *Grammar of Cilappatikaram*, University of Kerala, Trivandrum.

—— 1972 *Grammar of Akana:nuru with Index*, University of Kerala, Trivandrum.

Subramaniyam, V.I. 1962 *Index of Purana:nuru*, University of Kerala, Trivandrum.

Sundram, R.M. 1967 *Grammatical Study of pattuppa:ttu with Index and Translation*, Ph.D. Dissertation, University of Kerala, Trivandrum.

Vaiyapuri Pillai, S. 1956 *History of Tamil Language and Literature*, New Century Book House, Madras.

Yesudhasan, C. 1977 Tamil Dialects of Kanyakumari District (with special reference to Vilavanko:du Tamil) Ph.D. Dissertation, Annamalai University, Annamalainagar.

Zvelebil, K. 1961 *Lectures on Historical Grammar of Tamil*, Madras University, Madras.

# பொருளடைவு

அஃறிணை 20, 22, 26, 27, 28, 32, 189, 220
அகத்தியலிங்கம் 9, 30, 57, 62, 119, 145, 162, 190
அக அமைப்பு 1, 2
அசை 71, 72, 110, 189
அடிச்சொற்கள் 9
அண்மை 13
அமைப்பு 1, 2
அமைப்பு அடிப்படை 4, 8
அமைப்பு மொழியியல் 2
ஆண்பால் 11, 13, 16, 19, 20, 26, 30, 32, 65, 69
இஸ்ரயேல் 73, 119
இடை 2
இடைக்காலத் தமிழ் 30, 36, 41, 45, 74, 84, 91, 107, 109, 113, 130, 145
இடைமை 13
இயற்பெயர் 144, 147, 148, 150
இரட்டைப் பன்மைச் சொற்கள் 81, 161
இராமஸ்வாமி ஐயர் 56, 59, 198
இலக்கணக் கூறுகள் 9, 17, 28, 147
இலக்கணக் கொள்கைகள் 29, 30, 40
இலக்கணவிளக்கம் 3, 8, 60, 118
இளம்பூரணர் 7, 13, 24, 25, 26, 37, 48, 53, 54, 56, 58, 63, 64, 65, 69, 82, 85, 91, 103-106, 109, 116, 117, 120, 122, 129, 130, 148, 158, 189, 193, 199, 205, 207, 208, 209, 219, 221, 222, 223, 225, 226
இளையபெருமாள் 73
இறந்தகால இடைநிலைகள் 38, 39, 47, 49, 50, 66, 67, 86, 93, 94, 101, 102, 104, 105, 107, 166, 168, 170, 171, 173, 194, 195, 200, 227, 236, 237, 238
இறந்தகால எதிர்மறை 43, 44
இறந்தகால வினையெச்சம் 43
இறப்பில்கால இடைநிலைகள் 38, 39, 40, 47, 51, 53, 54, 66, 67, 86, 87, 88, 93, 94, 101, 102, 104, 105, 107, 108, 116 167 - 171, 173, 194, 195, 199, 200, 201, 207, 209, 222, 223, 224, 227, 236, 237, 238
ஈரெண் 31
உயர்திணை 20, 22, 26, 32, 153, 189, 220
உயர்வு ஒருமை 12, 21, 34, 87, 90, 97, 98, 103, 111, 113, 143, 145,-148, 151, 153, 154, 156, 158 - 164, 166, 218, 233, 234, 235, 236

உரி 2,
உருபன் 16
உருபன் இயல் 1, 2
உருபு 16
உளப்பாட்டுத் தன்மைப்பன்மை 10, 11, 81, 82, 84, 115 - 117 119, 122, 123, 125, 129
எச்சங்கள் 7, 9
எண் 32, 35, 81, 82
எண் வேற்றுமை 11
எண்ணுப்பெயர்கள் 27
எதிர்ப்பதம் 55
எதிர்மறை 37-39, 41, 42, 45, 47, 52, 55, 66, 68, 74, 84, 86, 93, 97, 104, 105, 114, 166, 168, 169, 171, 194, 196, 199, 200, 202, 203, 209, 210, 222, 238, 239
எதிர்மறை இடைநிலைகள் 38, 42, 49, 57, 225, 227, 228
எழுவாய் 10, 13 14, 15, 16, 18, 19, 35, 188
ஏசுதாசன் 206, 225
ஏவல் வினை 73, 110, 147, 162, 189, 190, 218, 219, 233
ஐம்பால் 32
ஒட்டுக்கள் 9, 17, 18, 55
ஒட்டு மொழி 9
ஒப்புமையாக்கம் 65, 70, 107
ஒருமை 11, 27, 28, 31, 69, 121, 153, 159, 163, 164
ஒலி இயல் 1
ஒலியன் இயல் 1
ஒன்றன்பால் 11, 13, 20, 27, 30, 32
ககரஇடைநிலை 40, 96
கமில் சுவலபில் 206, 225
கல்லாடனார் 24, 25, 38, 49, 53, 56, 59, 60, 64, 85, 92, 100, 101, 104, 109, 116, 193, 199, 205, 207, 222, 227
கால இடைநிலை 17, 19, 41, 42, 47, 51, 53, 65, 74
காலக்கிளவி 72
காலம் 4, 9, 60
குமாரஸ்வாமி இராஜா 81, 217
குறிப்பு வினையடிகள் 38, 45, 50, 52, 66, 69, 86, 90, 93, 98, 101, 103, 107, 108, 166, 167, 168, 169, 194, 197, 200, 204, 209, 210, 222, 225, 227, 228, 236, 237, 238, 239
கோதண்டராமன் 6, 7
சண்முகம் 27, 32
சித்திரபுத்திரப் பிள்ளை 71
சுப்ரமணியம் 115, 206
சுப்ரமணிய சாஸ்திரி 54, 59, 60, 65, 69, 107, 158
சூனிய உருபு 84
செய்மை 13
சேனாவரையர் 5, 22, 24, 25, 37, 48, 53, 56, 59, 60, 63, 85, 90, 92, 100, 103, 104, 106, 109, 116, 122, 148, 149, 152, 153, 158, 193, 199, 205, 207, 219, 221, 225, 226, 229

சொல்லியல் 2, 17
சொல்வகைகள் 9
தற்காலத் தமிழ் 30, 44, 45, 74, 84, 107, 109, 113, 115, 130
தன்மை 4, 10, 11, 18, 20, 21, 22, 27, 31, 32, 34, 35, 65, 72, 81, 110, 144, 159, 161, 162, 163, 166, 233
தன்மை உயர்வு ஒருமை 30, 71, 163
தன்மை ஒருமை 10, 11, 16, 28, 30, 35, 36, 55, 56, 58, 59, 61, 62, 64, 66, 70, 71, 81, 166
தன்மைப் பன்மை 10, 11, 16, 30, 40, 61, 65, 81, 82, 83, 90, 103, 114, 115, 163, 165, 217
தனித் தன்மைப் பெயர் 11
தனிநிலைமொழிகள் 4
திணை 32, 82
திணை, பால் பகுப்பு 12, 20, 156
திரேக்ஸ் 5
துணைநிலை வழக்கு 37, 50, 84, 198
துணைவினை 73, 110
தெய்வச்சிலையார் 3, 6, 7, 21, 23, 25, 27, 35, 37, 49, 53, 56, 59, 60, 63, 64, 83, 85, 91, 92, 97, 100, 101, 104, 106, 109, 116, 152, 158, 193, 199, 202, 205, 207, 219, 224, 225, 226
தெரிநிலைவினை 224
தொடர் இயல் 1, 17
தொடர்பு இயைபு 22
தொல்காப்பியம் 11, 20, 25, 28, 30, 57, 71, 83, 116, 145, 148, 152, 189, 208, 218, 220
தொல்காப்பியர் 2, 5, 6, 7, 8, 22, 23, 25, 57, 58, 61, 62, 64, 69, 71, 72, 83, 110, 130, 150, 153, 154, 190, 208, 218, 219,220
தொல் பழந்தமிழ் 30
தொழில் 3
தொழிற்சொல் 3
நச்சினார்க்கினியர் 5, 6, 8, 11, 24, 25, 37, 41, 48, 53 - 56, 59, 60, 63, 85, 90, 92, 94, 96, 97, 100, 101, 103, 104, 106, 109, 116, 122, 149, 152, 153, 158, 193, 199, 205, 207, 219, 221, 224, 225, 226, 229
நன்னூல் 6, 7, 8, 60, 82, 117, 118, 130, 219
நிகழ்கால இடைநிலை 38, 41, 86
நிபந்தனை 9
நேமிநாதம் 8
நேரக்கிளவி 17
படர்க்கை 4, 10, 11, 20, 21, 22, 27, 28, 31, 32, 34, 65, 71, 72, 110, 145, 161, 163, 233
படர்க்கை உயர்வு ஒருமை 30, 162,163

படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப் பெயர் 11
பண்டைத் தமிழ் 1, 10, 12, 13, 15, 16, 30, 31, 161
பதில்நிலை வழக்கு 37, 47, 50, 66, 74
பதிலிடுபெயர் 10, 11, 12, 22, 23, 31, 35, 81, 82, 115, 119, 122, 123, 126, 144, 145, 151, 152, 154, 156, 157, 158, 159, 160, 161, 163, 164, 188, 217, 218, 233, 234, 235
பயனிலை 4, 6
பலர்பால் 11, 13, 16, 20, 30, 32, 153, 154
பலவின்பால் 11, 13, 20, 30, 32
பழந்தமிழ் 30, 36, 37, 38, 39, 40, 130, 145
பழந்திராவிட மொழி 11
பன்மை 11, 27, 28, 31, 56, 87, 121, 151, 153, 154, 159, 160, 161, 165, 166, 188, 218, 220
பால் 9, 32, 35, 81
பாலசுப்ரமணியன் 72
பிராமிக் கல்வெட்டுக்கள் 30
பிளேட்டோ 2, 4
பின்பழந்தமிழ் 30, 42, 47, 60, 73, 74, 91, 108, 113, 148, 152, 198, 220
புதைநிலைக் கூறு 14, 15
புறநிலைக் கூறு 13, 14, 15
பெண்பால் 11, 13, 14, 16, 19, 20, 26, 30, 32
பெயர் 2, 144
பெயர்ச் சொல் 2, 12, 20, 22, 26
பெயர்ப் பயனிலை 4
பெயரெச்சம் 7
பொதுப் பெயர் 144, 147, 154
பொருட்புடை பெயர்ச்சி 4
பொருள் அடிப்படை 2, 6, 8
மாற்றுவிதி 18
மீனாட்சிசுந்தரன் 56, 61, 65, 72
முத்துச்சண்முகன் 147
முத்து வீரியம் 118
முற்றெச்சம் 17, 123
முறைப் பெயர் 144, 147, 150, 156
முன் பழந்தமிழ் 30, 73, 74, 99, 108, 148, 149, 204
முன்னிலை 4, 10, 11, 18, 20, 21, 22, 27, 28 37, 32, 34, 71, 72, 81, 110, 145, 160, 161, 162, 188, 189, 190, 203, 217, 218, 219, 234
முன்னிலை உயர்வு ஒருமை 30, 233
முன்னிலை ஒருமை 10, 30, 188
முன்னிலைப் பன்மை 10, 30, 217, 218, 220, 234, 235
மெல்வினைகள் 51
வரதராசன் 31, 73
வல்வினைகள் 51
விகுதிகள் 1, 9, 28, 34, 35, 36, 56, 82, 83

விரவுத்திணை 20
விலக்கீட்டுத் தன்மைப் பன்மை 10, 11, 81, 82, 84, 115, 117, 119, 122, 123, 125, 129
விளிவேற்றுமை 233
வினைச்சொல் 1-12 16, 24, 34
வினைமுற்று 9, 17, 18, 34, 43, 145, 161, 162, 165, 235
வினையடிகள் 56, 57, 109, 112, 113, 171, 172, 173
வினையாலணையும் பெயர் 9, 17, 18, 38, 46, 50, 52, 86, 91, 93, 98, 104, 106, 107, 108, 145, 147, 162, 166, 167, 168, 170, 194, 197. 204, 209, 210, 223, 225, 227, 228, 236, 237, 238, 239
வினையியல் 2
வினையெச்சம் 61, 62, 63, 110, 172
வீரசோழியம் 53, 56, 69, 117
வேற்றுமை 5, 6, 7
வேற்றுமை அடிகள் 159
வையாபுரிப்பிள்ளை 64
ஜான்ஸி ப்யூலா 115
ஜெஸ்பர்ஸன் 3

### 10.1.2.1.4 -∅- எதிர்மறைக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| காணீர் | கண்டிலீர் | நற் 46-3 |
| என்னீர் | என்று இரங்குகின்றிலீர் | சிலம்பு 19-38 |

### 10.1.5.1.5 குறிப்பு வினையடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உரியீர் | உரியிராவிர் | அகம் 200-12 |
| உழையீர் | அருகிருப்பீர் | நற் 229-8 |

### 10.1.2.1.6 வினையாலணையும் பெயர் விகுதி -∅- க்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| வருவீர் | வருவீர்(ஆகுதல்) | அகம் 387-3 |
| கூறுவீர் | கூறுகின்றவரே | கலி 20-8 |
| பேணீர் ஆகுவீர் | பிரியிராய் உறைவீராக | நற் 46-4 |
| ஒருவீர் | ஒருவீர் | புறம் 45-5 |
| அந்தணீர் | அந்தணீர் | கலி 9-4 |

## 10.2 பட்டியல்கள்

### 10.2.1 உயர்வு ஒருமை விகுதிகள்

| | -இர்- | -ஈர்- |
|---|---|---|
| பதி | — | — |
| ஐங் | — | — |
| அகம் | 16 | 3 |
| நற் | 7 | 3 |
| குறு | 8 | 1 |
| புறம் | 2 | 1 |
| பத்து | 4 | — |
| பரி | — | — |
| கலி | 10 | 5 |
| குறள் | 2 | 4 |
| சிலம்பு | 1 | 4 |
| மணி | 1 | 1 |

10.2.2 **பட்டியல் 2: -இர்**

| | இறந்தகாலம் | | | இறப்பில்காலம் | | | | எதிர்மறை | | குறிப்புவினை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -இன்- | -அன்- | ø | -வ்- | -கு- | -ப்- | -த்- | -அல்- | -ஆத்- | -இன்- | ø |
| பதி | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| அகம் | 2 | 5 | 4 | 1 | 1 | — | 2 | — | — | — | 1 |
| நற் | — | — | 2 | — | — | — | 3 | — | — | — | 2 |
| குறு | 1 | 3 | 1 | 1 | — | — | 1 | — | — | — | 1 |
| புறம் | — | 1 | 1 | — | — | — | — | — | — | — | — |
| பத்து | — | — | — | — | 1 | — | 2 | — | — | — | 1 |
| பரி | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| கலி | 1 | 3 | — | — | — | — | 4 | — | — | — | 2 |
| குறள் | — | — | — | — | — | — | 2 | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — | — | — | — | — | 1 |
| மணி | 1 | — | — | — | — | — | — | — | — | — | — |

10.2.3 பட்டியல் 3: -ளர்

| | இறந்தகாலம் | | | இறப்பில்காலம் | | | எதிர்மறை | | குறிப்புவினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | -அன்- | -இன்- | பிற | -வ்- | -ப்- | -த்- | -அல்- | -ø-! | |
| பதி | — | — | — | — | — | — | — | — | — |
| ஐங் | — | — | — | — | — | — | — | — | — |
| அகம் | — | — | — | 2 | — | — | .. | — | 1 |
| நற் | — | — | — | — | — | — | — | 2 | 1 |
| குறு | — | — | 1 | — | — | — | — | — | — |
| புறம் | — | — | — | — | — | — | — | — | 1 |
| பத்து | — | — | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — | — | — |
| கலி | — | — | — | 4 | — | — | — | — | 1 |
| குறள் | — | 3 | 1 | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | 2 | 1 | — | — | — | 1 | — |
| மணி | — | — | 1 | — | — | — | — | — | — |

## 10.3 முன்னிலை உயர்வு ஒருமை வரும் இடங்கள்

| அழைப்பவர் | அழைக்கப் படுபவர் | நூல்கள் |
|---|---|---|
| 1) -இர் | | |
| புலவர் | புலவர் | புறம் 141-4 |
| | | பத்து 2-150, 2-175 |
| அரசன் | புலவர் | புறம் 203-5, பத்து 2-123 |
| தலைவி | தலைவன் | அகம் 239-12, 239-12, 39-2 5-16, 26-19, 29-12, 29-12 |
| | | கலி 20-63 |
| | | குறள் 1318, 1319 |
| தோழி | தலைவன் | அகம் 78-14, 161-8, 200-12, 200-12, 81-15, 271-9, 10, 319-11, 179-10 |
| | | நற் 37-7, 37-7, 229-11, 318-1, 71-6 |
| | | குறு 196-2, 196-5, 268-6, 345-3, 175-4, 219-7 |
| | | கலி 22-4, 5-5, 4-8, 25-12, 4-7, 133-15 |
| கார்ப் பருவம் | தலைவி | குறு 65-5, 65-5 |
| அந்தணன் | செவிலித்தாய் | கலி 9-11 |
| தலைவன் | தோழி | கலி 19-9 |
| மணி மேகலை | முனிவன் | மணி 25-53 |
| தலைவன் | தலைவி | குறு 219-7 |
| கண்ணகி | கோவலன் | சிலம்பு 19-48 |

| அழைப்பவர் | அழைக்கப் படுபவர் | நூல்கள் |
|---|---|---|
| 2) -ளர் | | |
| புலவர் | அரசன் | புறம் 45-5 |
| தோழி | தலைவன் | அகம் 200-12, 387-2, 3 |
| | | நற் 229-8, 46-3, 46-4 |
| | | குறு 178-3 |
| தலைவி | தலைவன் | கலி 20-8, 12, 16, 20 |
| | | குறள் 1313, 1316, 1317, 1320 |
| செவிலித்தாய் | அந்தணன் | கலி 9-4 |
| கண்ணகி | கோவலன் | சிலம்பு 16-81, 19-39 |
| மணிமேகலை | முனிவன் | மணி 25-57 |
| மகளிர் | கண்ணகி | சிலம்பு 24-3, 24-4 |

—X—

# பயன்படுத்திய இலக்கிய, இலக்கண நூல்கள்


அகநானூறு, 1968 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

இலக்கண விளக்கம், 1972 சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

ஐங்குறுநூறு, 1957 ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1903).

——— 1966 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

கலித்தொகை, 1969 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

குறுந்தொகை, 1962 ஸ்ரீ தியாகராச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1937).

சிலப்பதிகாரம், 1968 ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1892).

——— 1972 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

திருக்குறள், 1967 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தொல்காப்பியம் மூலம், 1967 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் — இளம்பூரணர் உரை, 1973 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (முதற்பதிப்பு 1963).

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — கல்லாடனார் உரை, 1964 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — சேனாவரையர் உரை, 1963 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (முதற் பதிப்பு 1923).

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - தெய்வச்சிலையார் உரை, 1974 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியர் உரை, 1962 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

நற்றிணை, 1976 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

நன்னூல் காண்டிகையுரை, 1972 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

நன்னூல் விருத்தியுரை, 1974 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

நேமிநாதம், 1973 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

பத்துப்பாட்டு, 1961 ஸ்ரீ தியாகராச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1889).

—— — 1971 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

பதிற்றுப்பத்து, 1957 ஸ்ரீ தியாகராச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1904).

——— 1968 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை (முதற்பதிப்பு 1950).

பரிபாடல், 1980 டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை (முதல் பதிப்பு 1918).

——— 1969 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

பிரயோக விவேகம், 1973 சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

புறநானூறு, 1956 ஸ்ரீ தியாகராச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1894).

——— 1972 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (முதல் பதிப்பு 1951).

மணிமேகலை, 1965 ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1898).

——— 1972 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

முத்துவீரியம், 1972 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

வீரசோழியம், 1970 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.